14552

உ

திருச்சிற்றம்பலம்.

அகண்டபரிபூரணசச்சிதானந்த ஸாக்ஷாத்காரமாகிய

பரமசிவனார் பார்வதியாருக்கு

உபதேசித்தருளிய

# நிஷ்டாநுபூதிமூலம்.

திருக்கோவலூர்

## ஆறுமுகசுவாமிகள்

அருளிச்செய்தது.

இதற்குச் சுத்தாத்வைத வேதாந்தாசாரியராகிய

திருமூலர் மரபிலெழுந்தருளிய

முத்துராமப்பிரம்மதேசிகரது

மருகரும் அவரது திருக்கூட்டத்துத் தலைவரில்

இளவரசுபட்டம் பெற்றவருமாகிய

## முத்துக்கிருஷ்ணப்பிரம்மத்தினால்

அவதாரிகைமுதலிய வைந்திலக்கணமாகப்பகுத்து

நூதனமாக அருளிச்செய்யப்பட்ட வுரையுடன்

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

பார்வையிட்டுத்தர,

சென்னை

ஜீவகாருண்ய விலாசசம்பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை]. 1910. [அணா-10

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

# உரைச்சிறப்புப்பாயிரம்.

அஷ்டாவதானம்
வீராசாமிசெட்டியாரவர்கள்
இயற்றியது.

நேரிசை - ஆசிரியப்பா.

பணிகிளர்பஃறலை வாளராப்பொறுத்த
அணிகிளர்வசுந்தரை யயர்ந்தமன்பதை
பலவிருள்கூர்ந்து மன்னுவேதாந்த
நிலவுசித்தாந்த நிகழ்சமரசநிலை
ஆயசுத்தசொரூப நிலையறிந்துய்வான்
வயவாதுளைத் தினிதெடுத்தமைக்கன்
றருளியதும்பின் னண்டமூன்றுவப்
பொருவறநிவந்த புபெருகுருமி
அண்ணாமலையி னகத்தெழுந்தருளும்
நண்ணுவினைக்குகை நமச்சிவாய
குருபரற்காளாய்க் கோவலூர்வரு
முருகனோரா றுமுகதேசிகனார்
வெண்ணெய்பாநவழும் பெண்ணைமாநதியின்
பாக்கரோவியம்போற் படிவமமைவுறு

தோங்குநிட்டையி னுறுமளவையிற்றம்
பிரம்பொடுவெண்பொடி பெய்யும்பொக்கணம்
கரந்திட லுணர்ந்து கலங்குபுனெஞ்சம்
அயராவெண்டின மவனகலாது
வயிராகமொடு வதிகலகண னுற்றி
ஆரணம்பரசிய காரணக்கடவுள்
வெள்ளிவரைபுரை விடைமேற்றோன்றி
உள்ளநனியுவந் துதவப்பெற்றவர்
முதிருந்தமிழின் மொழிபெயர்த்ததுமாம்
நிதிலைப்பனைய நிட்டா னுபூதி
சாத்திரமூல மாதிரையனைத்திக
ளரையமைகாவதற் குறையிலாமையோரு
தாதியீறில தா யருவாயுருவாய்ச்
சோதியாயகண்டத் துரியாதீதமாய்
ஞாதுருஞான ஞேயங்ஞேத்தாய்
நாதவிந்துவாய் நான்மறையந்தமாய்த்
தற்பதந்தொம்பதந் தழுவசிபதமாம்
முப்பதமுடிவாய் முக்குணாதீதமாய்ச்
செப்புதற்கரிதாய்க் கற்பனைகடந்த
கயிலைவாழ்பரமனை கருணைகூர்ந்து
பலவுறுத்தாளவான் மானிடவுருக்கொடு
வந்தெனவணிகர் மரபிடையுதித்துச்
சிந்தைபுலன்வழிச் செல்லாதொழுகுநாள்
ஆதிபுரிவடி வம்பிகையோடுறும்
ஞேறுதியதெண்ணியாய போதயனைத்துதி

மைந்தநால்வர்க்கும் வடநிழற்கண்ணிருந்
துண்மைதெரித்த வண்ணலடியார்
எழுவருளொருவ ரெனுந்திருமூலர்
வழுவறுமரபினோர் தொழுதகுமாண்டகை
குருமூர்த்தமதாய்த் தெரிவுறப்போந்து
சச்சிதானந்தத் தனிநிலைபகர
நிச்சயந்தெளிந்து நிருவிகற்பமாம
வாய்மைசான்முத்து ராமப்பிரமம்
தொண்டர்கடன்னைத் தோத்கரித்துரைக்க
கொண்டசுவைகெழு குருகோத்திரத்திற்
குரையெழுதியதன் மருகனைநோக்கிப்
புந்தியுவகைப் புணரிதிளைப்ப
முந்துறப்பிரம நிட்டைமுயன்றோர்
பற்பலர்களுக்கு மினிப்பயில்பவாக்கும்
அற்புதந்தரநல லஞ்சனமேய்ப்பத்
தெளிவாயோருரை செய்திடுகென்று
அளியாலறையுரை சிரமேற்றாங்கி
நவையிலோர்மொழியா லெவையுமொழிவுறம
வகையுமதுகை வயஞ்செயற்குரிய
தனைகொளாதனமுதற் சாதனங்களுமெய்ச்
சாதகசாத்தியர் தந்நெறிகளுமவர்
ஏதமறவுறு காதரானந்தமும்
அதனைச்சிந்தியா தந்நிலைகடந்தாம்
சிகையிலத்துவித வநுபவசித்தி

அடைவுமைந்தெழுத்து மவற்றைச்செவித்தோர்
படருமலபரி பாகமபெறுகையும்
பிறவுங்கைக்கனி யுறழப்புலப்படப்
போற்றுறுகருத்துப் பொழிப்பொடகலம்
தாற்பரியத்தமு தாரணமமைய
உணர்வுடையவர்க ளுரையும்பதியினை
அணுகியுமறியா வாதர்கடாமும்
தத்துவஞானந் தலைசிறா திடவும்
மித்தையாம்வாழ்க்கைப் பெத்தத்தழுந்துநா
முற்றத்துறக்குபு முத்தராகவும்
பற்றறுத்தவரெலாம வியந்துபழிச்சவும்
அறம்பொருளின்ப முற்றியதற்பின்
சிறந்தவீடென்னுஞ் செலவமபெட்ட
அதிகாரிக ளுமையந்திரிபறச்
சதிராத்தந்நிலை கண்டுசாரவும்
வாசிட்டம்முதல் வருவேதாந்தநூல்
ஆசில்சித்தியா ராஞ்சித்தாந்தநூல்
பலவற்றிற்கு மலைவொன்றிலதா
உன்னுஞ்சுருதி யுத்தியநுபவம்
என்னுமிம்மூன்றந் தழீஇ இருக்குத்தனை
ஆறிரண்டகவையி னருடானந்தப்
பேற்றுவேட்டுப் பேதமின்ஞான
சாத்திரம்பயின்று தன்மாதுலனும்
வத்துனன்முத்து ராமப்பிரமம்

ஞானாசிரியனாய் விளங்குதனாடி
ஆனாகடுப்ப வவனுளமிரங்கி
அருளுறப்பெறாதே யப்பரம்பரையை
இருளறவோர்க்க விளவரசாகி
மருவுநாளினி மதிவளர்க்குரவன்
ஒருவிததென்றிசை யொல்லையிற்செல்லக்
கறவைபிரிதத கன்றெனக்கவன்று
துறவுபூண்டு துவீ இப்படர்ங்கே
வினையதலமெலாங் கேடென்றிழித்து
மாநிலசசார மீதெனமதித்துச்
சாரககரிற் றன்குருவைக்கமாய்
ஆரவிளங்கிய சந்நிதானமாம்
பொதியநாயகர் பொதிவிற்கந்தப்
பதிவருஞான்றோர் முதலியோர்தம்மால்
முதற்படடத்தின் முனைவனென்று
விதிக்கப்பட்டு விறியவுரவோன்
மாயைத்திமிர மாற்றுஞ்சிற்சுடர்
ஏயப்பவக்கடல் கடத்துமிரும்புணை
அஞ்ஞானப்பிணி யகற்றுமருந்து
மெய்ஞ்ஞானக்கடி வீசுநாண்மலர்
இருவினைக்காடற வெறிகூர்ங்குடாரம்
மருவுபக்குவர்க்குப் பயன்சொரிவான்டக
மானாகங்காரங் கடந்துமாண்புகூர்
மோனவைப்பின் முளைத்தசுரதரு
ஆதாரத்திட ராறுந்தாண்டி
மீதானத்தொளிர் வெயின்மணிவிளங்கு
தாவக்கோடை தணிக்குங்கொண்மூ
ஆவிக்குறு துணை யன்பிற்கனினை

நித்தியநிமல நிருவிகார
சத்தியநிராமய சமயாதீதம்
மனாதிகெய்தொணா வகாதிகாரணம்
பினாபின்ன முனாவொருபொருள்
மூலப்பகுதி முகைத்தலாங்கெழுந்து
காலப்பகுதி கொடாந்துகாணவரு
பிரமனாதி பிபீலிகாந்தமாம
சரமசரத்துள சகலாண்டத்தும்
கமலத்தடைபுனற றுவலைகுப்ப
அமைவுறத்தோய்ந்துந் தோயாதாகி
ஒட்டியஃதெனச சுட்டப்படாத
சாலசாட்சி தானேதானாம
பிரமவாரிதிபடிந் தாங்கமெற்றியோன்
இழுக்கறுபல்லைத் தானைகொணடெயதி
ஒழுக்கவமைச்சன் குட்சியினான்றிக
காமமாதிக் கடும்பகைவிரியத்
தோமிலாவேர்மொழி வாளிற்றுமித்துத்
துவாதசாந்தவப் பெருநகர்துனனித்
தவாதசாந்தவத் தாணியிவர்ந்து
திருவருளென்னு மொருமுடிகவித்துப்
பணைபுடையபேத வெணகுடைநிழற்ற
நிறைவுறநிட்கள நேமியுருட்டிக்
குறைவில்பேரின்ப முறைபுரிகுரிசில்
சத்தினிபாதஞ்சார்ந்த
முத்துகிருஷ்ணப் பிரமமொய்தவனே.

# கடவுள்வணக்கம்.

## கலி விருத்தம்.

உலகினுயிர் பரமுடையவனெவனவன்
கலைபுகழுயர்க்கனமதுளனெவனவன்
நிலவியமுனிவருணிகழ்பவனெவனவன்
தலநிறையிறைபவனடிதொழுதனமே.

—*—

## அருளிறையடிகள் வணக்கம்.

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஞானமாமலவடிவுகொணடெழுந்தருளி
நாட்டமூன்றுடையநாயகன்
மோனமாமவிழியையளித்தெனையாண்டு
முத்தியிற்சேர்த்திடுமுதல்வ
தானமார்பூலர்மரபுறமுத்தி
ராமசற்குரவனின்சரணை
மானகோகனகத்தெனதுளச்சுரும்ப
ரடுத்துறவரமருள்குவையே.

—*—

## அவையடக்கம்.

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திகழுமெனதுளத்திலகுமுத்திராம
தேசிகனம்பிருவருளாண்மாக்தர்பிள்ளைத்

துகளறுக்குநிட்டானுபூதிக்கென்னுட்
டோன்றியவாறுரைசெய்தேனதனைக்காணு
மகிமைகொள்பல்கலைதேர்ந்தோர்சூத்ரதாரி
மருவுதிரைமறைவுறகைவசத்தாயாட்டும்
வகைகொள்மரப்பாவைநடிப்பதனைக்கண்டு
மகிழுலகோர்போலவியந்துமகிழ்வர்மாதோ.

—*—

இதுவுமது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொருவரியமெய்ஞ்ஞான நிட்டானுபூதியினைப்
பொருளையோர்தற்
குரியனலேனுயினுமென்புன்மதியாலச்சமகன்
றுரைசெய்தேனல்
அருமைபெறுமுத்தமிழைமுறையாகத்தெரிந்திருக்கு
மறிவுசான்றோர்
வருகுழவிசொலுமொழியான்மகிழ்வுறல்போ
லிவ்வுரைக்குமகிழ்வாரன்றே.

இந்நான்கும்

இந்நூல் உரையாசிரியரால்

இயற்றப்பட்டன.

—(o)—

உ

# சாத்துகவிகள்.

புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்களா லியற்றப்பட்டது.

---

நேரிசை ஆசிரியப்பா.

பூமிசைநான்முகப் புனிதனாதியருந்
தோமறவுணர்ந்து சொலற்கருமாமறை
முடிவுநூலின் முன்னிய துணிவும
வடிவுறத்தெரிந்து மன்னுவிஞ்ஞான
பூரணத்திசையிற் பொருந்துபுயோக
க்ரணசமாதி நிட்டைடாககண்டருள்
குரவுக்காட்சிக் குறிபிறழாது
திரமுறவுட்கொளீஇத் திகழ்முத்திரமப்
பிரமமென்னும் பெயரினோன்மருகனென்
றிருவிலமகிழ்சிறப் பெய்தவனோன்பா
லான்மாமுயற்சி யாவுமொழியாத்
தன்மாத்திரமாய்த் தருசுகாதீதத்
துட்டமோமயம்போற் போதமென்றயர்ந்து
விட்டகேவல வீடிவர்ந்தெளிதி
னடைவுறச்சோபா னம்மெனுஞ்சாதனக்

திடனுறப்பயின்று சிரவணாதிகளிற்
கைம்மிக்கனுபவக் களிப்பிலோங்கிய
விம்மிதமில்லா விம்மிதமிஃதெனப்
புலமையோர்க்கைக்கனி போனனிகாணக்
கிளர்வுறுமுத்து கிருஷ்ணப்பிரம
மென்னுநாமத் திருந்தவத்தோன்றல்
புன்மையிலநிட்டானு பூதியா நூற்குச்
சிந்தாமணிமுதற் செப்புமிலக்கிய
நந்தாவரும்பொரு ளனைவயிலவாக
வகைநுட்ப மாதியவனையா
னிகலறப்புலப்படுத் தியுமுதறிஞர்
தாம்புரிந்திட்டவை தருமவ்வைக்குரித்
தாம்பரிசென்ன வறிவெனுமளப்பரு
நயனகோசரத்தாறுநந்தன்னின்
முயலுமனுபவ முறையஞ்சனங்கொ
டெவ்வப்புலத்தி னெவ்வப்பொருளுள
வவ்வப்படியெலா மாராய்ந்தொருங்கினி
தியற்றியவுரையி னினிமையும்வண்மையு
மயக்கறுதிட்பமும் வாய்மைசானுட்பமு
நோக்கிலந்நூலா நோன்மைசான்மதியின்
றூக்கற்றெருளிர்சந் திரிகைப்பரப்பின்
பண்பினைமாறு மெனலாங்
கண்கொடுதங்கிலை காண்பவர்தமக்கே

MAHAMAHOPADHYAYA U.V. SWAMINATHA IYER LIBRARY. TIRUVANMIYUR, MADRAS 41



சிதம்பரம்

ராமலிங்கம்பிள்ளையவர்களா லியற்றப்பட்டது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நலங்கொள்சிவயோகமண நாற்றிசையுமணக்கும்
ஞானமணங்கந்திக்கு மோனமணநாறும்
விலங்கலில்சித்தாந்த மணம்பரிமளிக்குமின்பா
வேதாந்தமணங்கமழும் வேதமணமவீசும்
தலங்கொளுமெய்யத்துவிதத் திருமணமும்பரவும்
தனிமுத்துக்கிருட்டினப்பேர் தங்கியநம்பிரமம்
வலங்கொளுநன்னிட்டாநு பூதியெனுநூற்கே
வாய்மலர்ந்தவுரையெனுமோர் மாமலரினிடத்தே.(௨)

---

[illegible]ான்

நாராயணமுதலியார்பாடியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பரமசிவனுமையவளுக் குபதேசஞ்செய்யப்
பரவியசீர்நிட்டாநு பூதிதனைப்பார்மேல்
திரமருவுகுகைநமசிவாய ரருட்டொண்டர்
திருக்கோவலாறுமுக தேசிகச்செந்தமிழால்
வரமலிபாட லினெழுதத் திருமூலர்மரபில்
வருமுத்திராமப்ரமம் மருகரிளவரசாம்
உரமிலகுமுத்துகிருஷ்ணப் பிரமமதற்கவதா
ரிகைமுதலாமுரையெழுதி யுலகிலச்சிட்டதுவே. (௩)

---

## திருநீர்மலை

## கோபாலகிருஷ்ணகவிராஜசேகரர் பாடியது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

குருவடிவாயுமைக்கரன்சொ னிஷ்டானுபூதிதனைக் கோ
லூர்வாழ், தருஞானவாறுமுகதேசிகன் செந்தமிழினிற் செ
தானதறகுத், தெருளுறநல்லுரைசெய்தான் றிருமூலர்வழிம
முத்திராமப்ரம்மம், மருகனிளவரசானோன் முத்துகிருஷ்ண
பிரமமெனுமவள்ளியோனே. (

---

## தில்லையமபூர்

## சந்திரசேகரகவிராஜபண்டிதர் பாடியது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

சத்திதனக்கிறையருளுநிட்டானு பூதிதனைத்தமிழ்ப்பாவா
எத்திசையும்புகழ்கோவ லாறுமுகதேசிகனு ரியம்பினாரச், த
தமிகுஞ்செய்யுளுக்குத் திருமூலர்மரபிலிள வரசாய்த்தோ
றம், முத்துகிருஷ்ணப்பிரம முரைவகுத்துரைத்தான் றலை
யறியுமுறையிற்றானே. (

---

## நரசிங்கபுரம்-தமிழ்ப்புலமை

## விராசாமிமுதலியாரவர்களாலியற்றப்பட்டன.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

அருகுறுமாமலைமகளை யரனோக்கியருளிய னிட்டானுபூதி
கொருகுவலயத்துள்ளோ ரஞ்ஞானமொழித்துய்ய வுரைசெ

றனல், திருகுமலமறவேதற் சேர்ந்தோர்க்குச்சிவானுபவந்தெ ரியக்காட்டும், பெருகுபுகழ்த்திருமூலர் மரபில்வருமுத்துகிரு ஷ்ணப்பபிரமமாதோ. (சு)

மட்டாருங்கனிநுகர்வார் சுவைத்திறத்தைத்தாமறிதன் மட் டயன்றி, நட்டாருமுணரவெளிப் படுக்குநாமற் றில்லையிந்த நாலத்தோர்க்கு, சிட்டானுபூதியெனுங் கனிச்சுவைதானறிந் தனை நியதியாக, உட்டாவவெளியிட்டான் முத்துகிருஷ்ண பிரமமெனும் யோகிதானே. (எ)

தாயுமானசுவாமிகள் மரபிலெழுந்தருளிய
எடுத்துக் கூட்டி
அருணாசலசுவாமிகளா லியற்றப்பட்டது.
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

அரனுமையாட்குபதேசித் தருளியநன்னிட்டானு பூதிநூ லுக்,கிரவினிலத்திருணீகிப் பொருள்விளக்கலெனத்தெளி வாயுரையிட்டானல், திரிமலமுஞ் கரேசட்பாவமு மொழித்த திருமூலநாயனார்தம், மரபில்வருமுத்துகிருஷ்ணப் பிரமமென திசைபுகழ்மா தவத்தினனே. (அ)

திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் ஆதீனம்
ஒன்பதாவதுபட்டம்
முத்துக்குமார சுவாமிகளா லியற்றப்பட்டது.
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

மருமலிந்தகொன்றையணி பரனுமையான்மகிழவருள் வா ளத்திற், பொருண்மலிந்த நிட்டானுபூதிதனக் கோருரை

யைப்புகன்றிட்டானல், இருண்மலிந்தயலப்புணரி இலோககுமா
னவரின் பசசலதிரோயத, தெருணமூலர் மரபிலுவரு முத்து
கிருட்ணப பிரமமெனுநதேவனமாதோ. (௯)

---

## குளத்தூர் கரதலமூர்த்தியாகிய
## சட்டநாதசுவாமிகளா லியற்றப்பட்டது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

நீர்நிறைநதவணடமெலலா னின்றபரிபூரணத்தி னிலைமை
நோக்கி, ஆர்னிறைநதசிவனுமையாட கருளியநன்னிட்டானு
பூதிநூலுக், கோனிறைந்த முத்துகிருட்ணப்பிரமமெனு மெம்
பெருமானிரஙகியனபாய்ப், பார்நிறைநதவடியாாகளுளங்களித்
துப் பரவவுரைபகர்ந்தான்மன்றோ. (௧0)

---

## திருவாரூர்ச்சிவனடியார் திருக்கூட்டத்தில்
## ஒருவராகிய சேங்காலிபுரம்
## கோயிற் பத்து
## குழந்தைவேலு ஓதுவாரவர்களாலியற்றப்பட்டது.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நிட்டானுபூதியுரை முத்துகிருட்ணப்பிரமனிகழ்த்தமோன,
மெட்டாத தேவாமுதன் முனிவர்சித்தர் மானிடாமற் றேனை
யோாக்குஞ, சுட்டாமற்றுனனுதற்குச் சமரசவானந்தவெள்ளந்
தொடர்நததோஙகிக், கட்டானதொடர்பெல்லாங் கரைந்தத்து
விதநிலையுங் கலந்ததமமா. (௧௧)

---

ஸ்ரீ. இ-கரபாத்திர சுவாமிகள் ஆதீனத்திற்குரிய

பிறைசை-அருணாசலசுவாமிகள்மாணாக்கராகிய

கா முருகேசநாயகரவர்களா லியற்றப்பட்டது.

பதினாறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நீர்மருவுமேவணிதிக ழெந்தையா நமையம்மை நெஞ்சமகிழ்
வுறவுரைத்த, சிட்டாநுபூதிநல் விளக்கமெனுமெய்ஞ்ஞான நெறி
நூற்பயன்றெரிக்கிப், பார்மருவுமறிவினரு மறியாதமெளிதி
னிற் பகர்சரசமலைகமானப், பரிவினிலுணர்ந்தவாய் ஞானதே
சிப பெரும்பரசிட்டையடைபவெண்ணிப், பேர்மருவுமேற்
கோளிமேறு டிரைவருந்ததாற் பெருமைபெறு முற்றிடமப்,
பிரம்மமொரு குருவினடி நீழலுறுநினம்பிரியாது நின்றிலர்
ரும், சீர்மருவு தகைத்துறைபுர்த்தமறை முனிவர்புகழ் திருப்புரா
மரபில்வந்த, திவ்யமூர்த்துக்கிருஷ்ணபிரமமென் றொசர்ஞான
அகதிக்குருபரரிடிகளே. (கஉ)

இந்நூலுரையாசிரியரது.

## திருக்கூட்டத்தாரால் மகிழ்ந்துரைக்கப்பட்டன.

சென்னைமாநகரத்துள்ள திருக்கூட்டத்தாரி லொருவராகிய
இங்கிலீஷ் உபாத்தியாயர்
மயிலை–குருசாமிமுதலியாரவர்களா லியற்றியது.

பதினன்குசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வாதவூரர்க்குப்பெருந் துறையினிற்குருந் தமரவடியிற்றேசிக
வடிவாகி வந்தருளி, மகிமைபெறு சிவஞான போதமெனு
முறைவழங்கும், ஆதியே யருளொடிந்நாள் சென்னைமுத்து
கிருஷ்ணப்பிரமமென வவதரித், தவனிதனிலெவருங் கடைத்
தேறும்வண்ண நிட்டானுபூதிப் பெயர்பெறும், கோதிலா
ஞானநூற்குரையெழுதி மேற்கோளுடன் கொடுத்தருளி யத்
தன், குலவைதிகதரிசன ப்ரமாணமாயிலகுறுங் குறைவிலாப் பெ
ருமைதனையும், ஆதனேனையுமுற்று முட்கொண்டு தனியக்
கைதானந்தமேற் சேர்த்திடு, மதனிரக்கத்தையுஞ்சொல வரக.
ஊர்குபரிதாகில் யானென்சொல்கேனே. (கந)

### தஞ்சைமாநகரத்துள்ள திருக்கூட்டத்தில்
### இளவரசுபட்டம்பெற்ற
## ஆறுமுகப்பிரமந்திரனா லியற்றப்பட்டது.

பதினான்குசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அலகில்வேதாந்த சித்தாந்தநிலைகட்கெலா மமருநிலை யிதெ
ன்னவேயருளுமென் றுமைகேட்க, வண்ணலுங்களிகொண்
டறைந்த நிட்டாநுபூதிக், கிலகுஞ்சுவானு பூதிக்கிசையவின்ப
வுரையிட்டனன் புலவரேத்த, வேயமுதன்றூவாசையும் மொ
ழித்திவ் வடிவிலெனையாளவந்த பெருமான், நிலவுமேலோர்
கள் புகழ்திருமூலர் மரபிலெழுநிமலன்மன வாக்கினெட்டா,
நிகரிலாச்சிவயோக நிட்டையைப்புனிதர்க்கு நெறியோடுணர்
த்துபெரியோன், உலகினிலனைத்தையும கண்டபரிபூரண சொ
ரூபமாயுன் னுகின்ற, வொப்பற்ற முத்துகிருஷ்ணப்பிரம குரு
வனுமுணர்வரிய மானுபவனே. (௧௪)

---

### ஜெ யூரில் பரம்பரைச்சீடரி லொருவராகிய
## இ. குப்புசாமிநாயக ரவர்களா லியற்றப்பட்டது.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

அத்தனார் தமைப்பணிந்து மலைமகள் கேட்கப் புகன்றிட்
டானுபூதிக்; கித்தரணியோர்க ளடை யிருண்மயக்க மகல

வவர்க் கிரவிபோன்று, முத்திநிலையருண்மூலர் மரபிலெழு
முத்துகிருஷ்ணப் பிரமவள்ளல், முத்தமிழுதேர்முதறிவோர்
பரவவுரைப் பயனெடுத்து மொழிந்தான் மன்னோ. (கரு)

---

கொங்குறைப்பட்டிஉள்ள திருக்கூட்டத்துத்தலைவராகிய
தமிழ்ப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்
அ-சேஷப்பிள்ளை அவர்களா லியற்றப்பட்டது.

பதினான்குசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அத்தனடியிற்றொழுது முத்திபெறுநெறிவினவு மப்பிகைக்
ககமகிழ்ந்தே, யவனருளுநிட்டையைக் குகைநமசிவாயருக்
கன்பனென் றுலகுபுகழும், பத்தியுளவாறுமுக தேசிகன்செந்
தமிழ்ப் பாவினாலருள்புரிந்தான், பண்டுபயவாரிமை மதித்த
முறுகண்ணன்ப பகிர்ந்ததெனவிந்நாளிலே, இத்தலத்தியாவர்
க்கு மந்நூலினுரையமுத மின்புறமதித்தளித்தா, னெழின்
மூலர்மரபினுயர் தக்ஷிணாமூர்த்தமென வெனதுசற்குருவாகி
யே, நித்தநிட்களரகித சிற்பரவமலநிலையருள் புரிந்தமோன,
நிமலநிர்க்குணவகண்டாகார முத்துகிருஷ்ணப் பிரமமென்னு
நிதியே. (கசு)

ஷை யூரில் திருக்கூட்டத்தி லொருவராகிய தமிழ்ப்
பள்ளிக்கூடம்

## கோவிந்தஉபாத்தியாயரவர்களாலியற்றப்பட்டது.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

எட்டாதபேரின்ப வீட்டினுக்கேறுதுறை யிஃதென்று பெ
ரியோரெலாங், கட்டாகமொழிகின்ற கிட்டாநுபூதிக்கோர்
கதிரவன்கங்குலெல்லா, மட்டானெனப்புவியி லொப்பிலாமுத்
துகிருஷ்ணப்பிரம வள்ளல்விளைவந், தொட்டாம லெனையா
ண்ட சின்மயதயாநிதி யுராத்தவுரை யுரைகளரசே. (கஎ)

---

ஷை யூரில் திருக்கூட்டத்தி லொருவராகிய

## ஞானப்பகவுணரவர்களா லியற்றப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

அருளானவீசனுமம்பிகைக்கோதுமரியமிட்டை
பரிவாகவாறுமுகதேவன்செந் தமிழ்ப்பாவிற்செய்தான்
குருவாயெழுந்தருண்முத்துகிருஷ்ணானந்தகோதில்குணன்
விரிவாயதற்குரையிட்டானெவருவியப்புறவே. (கஅ)

சாரத்திலுள்ள திருக்கூடத்துத் தலைவராயும் பொதியநாயகர் சபையின் பூசாவிதியை நடாத்துகின்றவராயும் விளங்கிய சின்னப்பாவுமூர்த்தியாரவர்களாலியற்றப்பட்டது

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நண்ணலருங்கயிலையுறை பரமனங்நா ணகமகட்குத் தான
ருணிட்டானுபூதித், தண்ணளிபாட் டயர்வாவிசூழுங்கோவ
லாறுமுகத் தக்கோனென் றியற்பேர்தாங்கிக், கண்ணியவான்
றமிழ்க்கவியாற் கரைத்திங்காளிற் கைக்கனிபோற் சிவநிட்டை
கற்போர்காணப், புண்ணியஞ்சேர் சென்னைவளர் முத்துகிரு
ஷ்ணப் பிரமமெனப் போந்துரையைப் புகன்றானம்மா.(௧௯)

ஷை யூரில் பொதியநாயகர்சபைக்குத் தருமகர்த்தா நாராயணப்பிரமத்தினாலியற்றப்பட்டது.

நேரிசை வெண்பா.

இத்தரணியோரெல்லா மின்பவீடெய்துவான்
முத்துகிருஷ்ணப்பிரம முன்னோனே—சத்தான
நிட்டானுபூதியெனு நேரினூலானக்குரையைத்
திட்டாந்தத்தோடுரைத்தான் றேர்ந்து. (௨௦)

சாத்துகவிகள் - முற்றிற்று.

உ

ஸ்ரீ ஸத்குரவே நம:.

# நிஷ்டாநுபூதி.

## காப்பு.

## அவதாரிகை.

சிவஞானநிஷ்டையில் வல்லமையுடைய இந்நூலாசிரியர் தத்வமஸி என்னும் - சாமவேத மகாவாக்யார்த்தமாகிய உத்தரவாதுளம் என்கிற - ஆகமத்திலுள்ள நிஷ்டானுபூதியினால் தாமடைந்த சுவானுபவத்தை ஆத்மகோடிகள் எளிதில் உணர்ந்தடைந்து ஆனந்தாதீதமாகும்பொருட்டு - அருளினால் தமிழ்ச்செய்யுளில் சொல்லப்புகுந்து - இது நிறைவேறும்படி எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயுள்ள - ப்ரணவஸ்வரூபத்தைச் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் துதிசெய்கின்றார்.

அத்திமுகனடி நித்தநினைபவர்
சித்திதிருவோடு முத்திபெறுவரே.

(**இதன் பொருள்.**) யானைமுகத்தையுடைய விநாயகமூர்த்தியினது. பாதத்தைத் தினந்தோறும் திரிகரணசுத்தியாய்

அகத்தின் கண்ணே தியானிக்கின்றவர்கள் இலக்ஷ்மீகரத்துடன் விளங்கிய சித்திகளும் ஞானவாழ்வாகிய மோக்ஷசெல்வமும் அடைவார்கள்.— என்றவாறு. ஏகாரம் - ஈற்றசை.

## பதசாரம்.

எதிரில்லாமல் சகலமுந் தன்மயமாக விளங்கும் ப்ரணவஸ்வரூபத்தை மதங்கொண்டு சஞ்சரிக்கும் ஆண்யானையென்பார் அத்திமுகனென்றும், அப்பிரணவரூபத்தின் சாலோச்சதா நிஷ்டராகக்கூடிவிளங்கும் மஹாத்துக்களென்பார் அடிநித்தநினைபவரென்றும், சகலராம்பராஜ்யத்தோடும் விளங்கிய அஷ்டமாசித்திகளென்பார் சித்திதிருவொடு என்றும், இரண்டறக்கலக்கின்ற முத்திக்கதிகாரிகளென்பார் முத்திபெறுவரென்றுங் கூறினார்.

## இதுவுமது.

சகலமுங் தானாகிய ப்ரணவஸ்வரூபம் பரிபாகருடைய குறிப்பின் வழியே செல்லத்தக்கதாகையால் பாகருடைய குறிப்பின்வழிச் செல்லும்யானையென்பார் அத்திமுகனென்றார் எனவும், ஆணவாதி மதங்களைப்பொழியும் கஜமுகாசுரனை அழிப்பதற்கு வேழவதனங்கொண்டு எழுந்தருளிய கணேசரென்பார் அத்திமுகனென்பார் எனவும் சித்திமுத்திகள் விளைகின்ற சிவானந்த பூமியாகிய பரணவ ஸ்வரூபத்தைச் சுருதியுக்தி அனுபவத்தாற் காணக்கூடாமையால் சுருதிகுருசுவானுபவத்தாற் கண்டறிந்து அடைகின்ற மேலானசத்து

க்களென்பார் சித்திதிருவொடு முத்திபெறுவரென்றூர் எனவும் கூறுவாருமுளர்.

## இதன் தாத்பரியம்.

அக்ஷர ஸ்வரூபங்களில் முதலெழுத்தென்றும், சர்வ ஆன்மாக்களுள்ளும் ப்ரகாசிக்கின்ற சித்ரூபமென்றும், சுஷு முனேயென்றும், ப்ரம்ம ரந்திரமென்றும், திர்க்ரூபமென்றும், பஞ்சவர்னத் தழகுள்ளதென்றும், மாணிக்க வொளிபோன்றதென்றும், சின்மாத்ர சொரூபமென்றும், ஞானசூரிய னுதிப்பதற்கு மேருவென்றும், ப்ரம்ம சந்நிதானத்தில் தோன்றிய மாயாவினேதமான சகத்விளையாட்டைப் பார்ப்பதற்கும் அவ்விளையாட் டொடுங்கினவிடத்தில் கேவலநிலையைப் பார்ப்பதற்கும் புருஷாகாரியைப்போலநின்ற ரூபாரூபமென்றும், சத்துச்சித்து ஆனந்தமென்றும், இன்னும்பலவாறுக வேதாகமங்களினுற் கூறப்பட்டதென்றும் சொல்ல விளங்கிய, ப்ரணவஸ்வரூபத்தை ஞானுசிரியரால் விசாரித்தடைந்தவர்கள்சர்வசித்தி முத்திகளைப்பெற்றுச் சாக்ஷாத்கார மாவரென்பதாம்.

## அஷ்டமாசித்தியும் அவற்றின்விபரமுமாவன.

**அணிமா** - மிகவுஞ்சிறிய வுயிர்தோறும் பரமகாஷ்டையாய்ச் சென்றிருத்தல், மகிமா-மிகவும்உயர்ந்த மகமேருவைப்போல ஆகவேண்டுமெனில் ஆதல், இலகிமா மேருபாரத்

தையொத்த யோகியை எடுத்தால் இலேசாயிருத்தல், கரிமா-அணுப்போலிருக்கும் யோகியை எடுத்தால் மேருபாரமாயிருத்தல், பிராப்தி - எவ்வுலகத்தினுந் தடையறச் சஞ்சரித்தல், பிராகாமியம்-பரகாயப் பிரவேசம்பண்ணுதலும் அந்தர சஞ்சாரஞ்செய்தலும் இச்சித்தபோகம் அனுபவித்தலும் மண்ணில் விண்ணில் உள்ள பொருள்களையும் முக்காலங்களையுந் தனது தேககாந்தியால் அறிதலுமாம், ஈசத்துவம்-ஸர்வேஸ்வரனைப்போலத் தன்னிச்சை வழியில் முத்தொழிலுஞ்செய்து சூரியன்முதலியகோள்கள் தன் ஏவல்கேட்கவிளங்குதல், வசித்துவம்-தேவர்முதலிய உயிர்களையும் எல்லாவுலகங்களையும் தன்வசமாகக் கொள்ளுதல்.

இரண்டறக் கலத்தலாவது - சுருதிகுரு சத்யுக்திகளால் தன்னைச் சாக்ஷிமாத்ரமாய் அறிந்தபடியே ஏகமான தன்ஸ்வரூபத்தைச் சுத்த ப்ரம்மமாகச் சுவானுபவத்தாற்கண்டு தனக்கு அன்னியமாய்த்தோற்றிய தேகாதிகளைத் தன்னைவிட வேறே இல்லையென்றும், அப்படித்தோற்றுகிறது பொய்யென்றும், அறிந்தசித்தவிர்த்தியைச் சின்மாத்ரத்தில் ஐக்யம்பண்ணி அவ்வைக்யமென்கிற கிஞ்சித்இருப்பாகிய அறிவுந்தானே என்று அறிந்து கேவலரூபமாய்த் துவிதமறக் கலந்து விளங்குவதாம்.

## அஷ்டமாசித்தியென்பதற்குப் பிரமாணம்.

### திருவிளையாடல்.

அறவுஞ்சிறியவுயிர்தொறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்செ
றுறையுஞ்சிறுமையணிமாவாமுவரிஞாலமுதன்மேலென் [ன்
றறையுஞ்சிவாந்தமாறாறுமுள்ளும்புறனுமகலாதே
நிறையும்பெருமைதனையன்றே மகிமாவென்னுவிரம்பியநூல்.

இலகுமேருபாரம்போலிருக்கும்யோகிதனையெடுத்தால்
இலகுவானதூலமெனவிருப்பதிலகிமாவாகும்
இலகுவானபரவணுப்போலிருக்கும்யோகிதனையெடுத்தால்
இலகுமேருபாரமெனவிருப்பதன்றேகரிமாவாம்.

பிலத்திலிருந்தோனயனுலகிற்புகுதன்மீண்டுபிலமடைதல்
பலத்தின்மிகுந்தபிராத்தியதாம்பரகாயத்தினண்ணுதல்வான்
புலத்தினியங்கலிச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந்
தலத்தினினைந்தபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர்.

விண்ணிலிரவி தன்னுடம்பின் வெயிலாலனைத்தும் விளங்குதல்போல், மண்ணிலுளவாம் பொருள்பலவுங் காலமூன்றும் வானத்தின், கண்ணிலுளவாம் பொருளுந்தன்காயத் தொளியாலிருந்தறிதல், எண்ணிலிதுவு மறையொருசார்பிரா காமியமென் றியம்புமால்.

ஈசனெனமுத்தொழிலுந் தன்னிச்சைவழிசெய்தெழுபுரவித்
தேசன்முதற்கோள்பணிகேட்பத்திகழ்வதீசத்துவமாகும்

பூசலவுணர்புள்விலங்குபூதமனிதர்முதலுலகும்
வாசவாதியெண்மருந்தன்வசமாக்கொள்கைவசித்துவமாம்.

என்று வரும் மற்றும்வருவனவற்றுற் காண்க.

---

## இரண்டறக்கலத்தலென்பதற்குப் பிரமாணம்.

### மஹாவாக்கியம்.

இவையுணருமிடத்தைக்யமூன்றுவிதமுறைப்ப
ரேதென்றுலவ்வறிவேபூரணமாயிருத்தல்
அவையவமாங்கடபடவுபாதிகளை நீக்கு
மாகாயமெனவறிதலப்பொருளைத்தானே
சுவைபடவேதியானித்தலிவைமூன்றுவிதமாந்
துவந்துவங்கள்பலவுமற்றுச்சுயம்பிரகாசமதாய்
நவையிறந்துசொல்லிறந்துநானுமிறந்திறவா
ஞானமிறந்திராசியமாய்நவின்றதத்துவிதமே. எ-ம்.

### திருவாய்மொழி.

நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்[ணர்ந்து
தொன்றாய்க்கிடந்தவரும் பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்து
சென்றாங்கின்பதுன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீடதுவேவீடுவீடாமே. எ-ம்.

### சசிவர்னபோதம்.

செறிந்தகாரணகாரியங்கள்சிதைந்துமேலுறுசித்ததாய்
அறிந்தவாதனை தானுமற்றது அசிபதப்பொருளாவதே. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

எனதென்பதும்போயானெனல்போயெல்லாமிறந்தவிடங்கா
நினதென்பதும்போய்நீயெனல்போய்நிற்குநிலை. [ட்டு

அன்றியும்.

பொருளேநின்பூரணமேலிட்டகாலம்
போக்குவரவுண்டோதற்போதமுண்டோ
விருட்டானுண்டோவல்லால்வெளிதானுண்டோ
வின்பமுண்டோதுன்பமுண்டோயாமங்குண்டோ. எ-ம்.

கந்தரநுபூதி.

ஆனாமுதேயயில்வேலரசே
ஞானாகரனேநவிலத்தகுமோ
யானாகியவென்னைவிழுங்கிவெறுந்
தானாய்நிலைநின்றதுதற்பரமே.

அன்றியும்.

வானோபுனல்பார்கனன்மாருதமோ
ஞானோதயமோநவினான்மறையோ
யானோமனமோவெனையாண்டவிடந்
தானோபொருளாவதுசண்முகனே. எ-ம்.

பகவற்கீதை.

யாதொன்றிந்தப்புலனறியாவளவிலின்பமாயிருக்கும், யாதொ
ன்றினைச்சென்றடைந்தோர்கள்பின்னையதனி னிரண்டாகார்,

யாதொன்றினைப்பெற்றவரிதனின்மிக்க கோப்புண்டென்னார்கள், யாதொன்றிந்தவறிவிற்கேயறிவாய்நிற்குமதினின்றோர்.

கைவல்லியநவநீதம்.

தஞ்சமாங்குருவுஞ்சொன்ன தத்துவவழிதப்பாமல்
பஞ்சகோசமுங்கடந்து பாழையுந்தள்ளியுள்ளிற்
கொஞ்சமாமிருப்பும்விட்டுக் கூடஸ்தபிரமமென்னு
நெஞ்சமுநழுவியொன்றாய் நின்றபூரணத்தைக்கண்டான்.

அன்றியும்.

அநுபவானந்தவெள்ளத் தழுந்தியேயகண்டமாகித்
தநுகரணங்களாதிச் சகலமுமிறந்துசித்தாய்
மனதுபூரணமாய்த்தேக மானசற்குருவுங்காண
நனவினிற்சுழுத்தியாகி நன்மகன்சுபாவமானான். எ-ம்.

ஞானவாசிட்டம்.

அவ்வறிவுசங்கற்பத்தாற்கட்டுண்ணு
மதுவிடில்விடுறுமந்தவறிவுதன்னைச்
செவ்விதிநீயறிந்தனையாற்போகத்திச்சை
செகக்காட்சியனைத்தினையுந்தீர்தியானாய்
எவ்வமறநிறைமனத்தாலடையற்பால
யாவுமடைந்தாய்காக்ஷிக்கெட்டாதொன்றிற்
கவ்வையறவடைகின்றாய்முத்தனானாய்
கருத்திலுறுமயக்கமெனுங்கவலைதீர்வாய். எ-ம்.

ஞானசுகாதீதவெண்பா.

உற்றுணர்ந்ததெல்லாமுணர்வாகுமுண்மைதனிற்
பெற்றிருப்பதற்றவிடம்பேறுகும் - கற்றநூல்
பேசவினிவேண்டாம்பிறிதில்லையத்துவிதம்
ஆசையறநின்றவிடமாம். எ-ம்.

திருவாசகம்.

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணமோடுசெலித்திடுமாகாதே
அங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
ஆசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
எங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
ஈறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. எ-ம்.

சிவானந்தமாலை.

மித்தையுடல்கட்டறுத்துமெய்யருளாய்மெய்யொழிக்குந்
தத்துவமுங்கேவலமுஞ்சார்வகற்றிச் - சுத்தத்
தனியாகித்தானும்போய்த்தற்பரமாய்விட்டாற்
சனியானிதுசத்தியம். எ-ம்.

ஒழிவிலொடுக்கம்.

என்னுனையென்னுனையென்னுனையேகமிரண்
டென்னுமற்சும்மாவிருவென்று - சொன்னான்

திருஞானசம்பந்தன்சீகாழிநாடன்
அருளாளன்ஞானவிநோதன் எ-ம்.

### சொரூபசாரம்.

ஞானநூல்கற்றானுநற்றுறவுபூண்டானு
மோனசமாதிமுயன்றானுந் - தானாகி
எல்லாக்கவலையுமற்றின்புற்றிருப்பதுவே
சொல்லாருமுத்திச்சுகம். எ-ம்.

### சிவஞானசித்தியார்.

அறியாமையறிவகற்றியறிவினுள்ளே
யறிவுதனையருளினாலறியாதேயறிந்து
குறியாதேகுறித்தந்தக்கரணங்களோடுங்
கூடாதேவாடாதேகுழைந்திருப்பையாகிற்
பிறியாதசிவன்றானேபிரிந்துதோன்றிப்
பிரபஞ்சபேதமெல்லாந்தானாய்த்தோன்றி
நெறியாலேயவையெல்லாமல்லவாகி
நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனாயே. எ-ம்.

### கண்ணுடையவள்ளல்.

தம்மாலறிந்தனயாவையுந்தாமலவென்றறிந்து
மும்மாயைமும்மலமுக்குணநீங்கிமுழுதறிவாற்
சும்மாவிருக்கத்துரியங்கடந்தசுகமுதிக்குஞ்
சன்மார்க்கமுத்தியிதென்றான்றடங்கச்சியேகம்பனே. எ-ம்.

### அகஸ்தியமுனிவர்.

முடிந்திடம்பேச்சற்றமோனமெய்ஞ்ஞானமுதல்வனின்னைப்
படிந்திடமேபதிபாசம்பசுவிருட்பற்றற்றதும்
விடிந்திடந்தானென்னுநானென்னுமாயையும்விட்டிடையுங்
கடிந்திடத்தப்புறத்தப்புறத்தாநந்தங்காணுமதே. எ-ம்.

### பட்டணத்துப்பிள்ளையார்.

வான்றேடுமறையேயோமறைதேடும்பொருளேயோ
ஊன்றேடுமுயிரேயோவுயிர்தேடுமுணர்வேயோ
தான்றேடநான்றேடச்சகமெலாந்தனைத்தேட
நான்றேடிநான்காணாநானாரோநானாரோ. எ-ம்.

### பத்திரகிரியார்.

என்னையென்னிலேமறந்தே
யிருந்தபதியும்மறந்து
தன்னையுந்தானேமறந்து
தனித்திருப்பதெக்காலம். எ-ம்.

### உண்மைவிளக்கஞ் சிந்தனை.

முத்திதனையடைந்தோர்முந்துபழம்போருங்கி
வித்தகமாம்வீணையிசைவயிற்றி - னொத்த
விரதமணம்வெம்மையெழினுதம்போல
விரவுமென்றோதும்விதி,

அன்றியும்,

தத்துவங்களெல்லாஞ்சகசமாயான்மாவிற்
பெற்றதனினிற்கின்றபெற்றிபோல் - முத்திதனில்
சிந்தமலமற்றார்செறிந்திடுவரென் றுமறை
சத்தியமாயோதியிருந்தான். எ-ம்.

## அத்துவிதஉண்மை.

தன்னையறிபாவியற்கையினிற் சத்தேபோலவிளங்கியிடுந்
தன்னையறிந்தவுடன்சத்தாய்த் தானேவிளங்கும்வலங்க
தன்னையறிபுமனவற்றிணை தன்னைவிடவேறில்லையெனவே
தன்னைநோக்கியிடினவையுந்தானாய்விளங்குமுடிவதனில் எ-ம்.
வருநம் மற்றும் வருவனவற்றாற் காண்க.

அத்துவித அபரோக்ஷானுபவத்தில் வேறாய்த்தோன்றாமல் பரிபூரணஞானந்தபோதமுறச் சகலமுந் தன்மயப்படுத்திக்கொள்ளுஞ் சுயஞ் சைதன்யத்தை அடைந்தவர்கள் சித்திமுத்திகள் பெறுவரென்றமையால் யாமும் நிர்விக்னமாய் இந்நூல் நிறைவேறப்பெறவே மென்றதாயிற்று.

காப்பு - முற்றிற்று.

சிவமயம்.

# நிஷ்டாநுபூதி.

## பாயிரம்.

### பரசிவவணக்கம்.

*சீர்பூத்தசெஞ்சடையிற்சுரநதியுங் கரமதியுஞ்செறிந்திலங்க, வார்பூத்தகுயவனிதை யொருபுறத்திற்பசந்தொளிர வாரியுண்ட, கார்பூத்தமணிவண்ணன் கட்கமலமிணைக்கமலக் கழலின்மேவ, ஏர்பூத்தகோவவில்வாழ் வீரட்டத்தொருமுதலையிறைஞ்சுவோமே.*

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய செவந்தசடையில் தெய்வகங்கையும், அமுதகிரணங்களையுடைய இளம்பிறையும் நெருங்கிப் பிரகாசிக்கவுங் கச்சுப்பொருந்திய ஸ்தனங்களையுடைய தேவியார் இடப்பாகத்தில் மரகதரத்தினம்போலப் பசுமையாய் விளங்கவும், நீருண்டமேகத்தையொத்த மகாவிஷ்ணுவின் கண்ணாகிய தாமரைப்புஷ்பம் இரண்டாகிய பங்கஜத்தைப்போன்ற திருவடிகளிற் ப்ரகாசிக்கவும் அழகுபொருந்

திய திருக்கோவலூரில் எழுந்தருளியிருக்கும் திருவீரட்டேஸ்வரரை வணங்குவாம்.—எ-று. ஏ-அசை. க

## பரதேவதைவணக்கம்.

அரியநாயகியளவைக்கனுதினமுநெக்குருகுமடியரன்புக்
குரியநாயகியெங்குந்தானாகிநீங்காமலொளிராநின்ற
கரியநாயகிகோவற்பிரானிடத்திலெப்போதுங்கலந்துவாழும்
பெரியநாயகியுபயபதமலரையனுதினமும்பேணுவோமே.

(இ-ள்.) மனத்தினாலும் வாக்கினாலும் நினைத்தலுஞ் சொல்லலுமாகிய அளவைக்கடங்காத ஈஸ்வரியாயுந் தினந்தோறும மனம்நெக்குவிட்டுருகும் அடியார்களுடைய அன்புக்குச் சுதந்தரயான பரதேவதையாயும், எவ்விடத்திலுந் தானே அகண்டாகாரமாய் நீங்காமல் பிரகாசிக்கின்ற சர்வ சாக்ஷிக்குரிய உமையாயுந், திருக்கோவலூரில் எழுந்தருளியிருக்குந் திருவீரட்டேஸ்வரருடைய இடப்பாகத்தில் அனவரதமுஞ்சேர்ந்து வாழ்கின்றவராயும் விளங்குகின்ற பெரியநாயகியம்மனது உபயசரணாரவிந்தங்களைத் தினந்தோறுந் தியானிப்பாய்—எ-று. அகரம சாரியை, ஏ-அசை. ௨

## கணபதிவணக்கம்.

### வேறு.

அரியானையயன்மாலுக்ககண்டபேரொளியானைத்
தெரியானையன்பிலர்க்குத்தேகமனவாக்கதனுக்

குறியானையன்பர்தமக்குபர்பெரியாளீன்றெடுத்த
பெரியானைக்கணபதியின்பிறங்கியபொற்பதம்பணிவாம்.

(இ-ள்.) பிர்ம்ம விஷ்ணுக்களாலுங்காண அரியவராயும் அகண்டாகாரமாகிய ஞானப்பிரகாசராயும், அன்பில்லாதவர்களுடைய மனோவாக்குங் காயமென்னுந் திரிகரணங்களாலும் அளவுதெரியக்கூடாதவராயும், அடியார்களுக் குரியவராயும், உயர்ந்த பெரியநாயகியம்மன் பெற்றெடுத்த மூத்தபுத்திரராயுமிராநின்ற * பெரியானைக் கணபதியினுடைய விளங்குகின்ற அழகிய திருவடிகளை வணங்குவாம்—எ-று. ௩

சுப்பிரமணியர்வணக்கம்.

வேறு.

கடல்சுவற நெடுமாயக்கிரிவீழச் சூரனுரங்கலங்கச் செம்பொன், மடலவிழ்கற்பகநிழலில்வலாரியும்வந் தரசிருப்பமகங்களோங்க, விடலரியவிபுதர்சிறை விடமுனிவர் செய்தவங்கண் மேலுமோங்க, அடல்கெழுவேலேவியவோ ராறுமுகனடியிணையை யகத்துள்வைப்பாம்.

(இ-ள்.) சமுத்திரஜலம் ஸோஷித்துப்போகவும் உயர்ந்த வஞ்சனையாகிய கிரவுஞ்சமென்னும் மலைபிளந்து விழவுஞ் சூரபன்மனுடையமார்பு கலங்கவுந் தேவேந்திரனுஞ் செம்பொன்

* பெரியானைக்கணபதி என்பது திருக்கோவலூரிலிருக்கும் விநாயகருக்குப்பெயராம்.

(இ-ள்.) அன்போடுங் கீர்த்திகளைத் துதித்துப் பார்வதியாருடைய ஸ்தனத்தின் பாலையுண்டு இனிமைதங்கிய செந்தமிழ்ப்பாடலாகிய அமுதத்தைத்தந்தருளிய திருஞானசம்பந்தஸ்வாமிகளுடைய திருவடிகளை வணங்குவேன். பிரவிக்கடலையும் உப்புக்கடலையும் நீந்திய அப்பர்சுவாமிகளுடைய சிவந்த நிறம்பொருந்திய திருவடிகளை வணங்குவேன். பரவைநாச்சியாரிடத்திற் பரமசிவத்தைத் தூதாகஅனுப்பிவித்த சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவேன். மாணிக்கவாசகசுவாமிகளுடைய திருவடிகளைவணங்குவேன் எ - று. தான் சாரியை ஏ-அசை. அன்போடுங் கீர்த்திகளைத்துதித்து என்றது நால்வருக்குங்கூட்டுக. சஎ

வசவேசர் சென்னவசவேசர் வணக்கம்.

சிவசமயப்பயிர்தழையப்பரசமயக்களைநீங்கத் திகழ்வேதத்தோ, டுவமையிலாகமநீதி யோங்கவருமசணர்தா ளுவந்து போற்றி, அவமறுமாறங்கலிங்கங் கலைமுகஞ்சதாக்கியம்பத்தியந்தஞ்சத்தி, இவைகளொருவடிவாயசென்னவச வேசர்பதமிறைஞ்சுவோமே.

(இ-ள்.) சைவசமயமாகிய பயிர்கள் விர்த்தியடையவும் அன்னியசமயமாகிய களைகள்கெடவும் பிரகாசமுள்ள வேதங்களுடனே ஒப்பில்லாத வீரசைவாகமமலுழுங்கு பிரபலத்தையடையவும் அவதாரஞ்செய்து வசவண்ணரென்னுந் திருநாமத்தைக்கொண்ட சுவாமிகளது திருவடியைக் களிப்புடனே வணங்கிக் குற்றமற்றிராநின்ற பீடம்-படி-நிதம்பும்-கோமுகம்

மேல்வட்டம் நாளத்தடி என்னும் ஆறங்கத்தினையுமுடைய லிங்கமூர்த்தியும் சாந்தியாதீதகலை-சாந்திகலை-வித்யாகலை-பிரதிஷ்டாகலை-நிவர்த்திகலை என்னும் ஐந்துகலைகளும் ஈசானம் தற்புருஷம்-அகோரம் - வாமதேவம்-சத்தியோஜாதம் என்னும்ஐந்துமுகங்களும்,சிவசாதாக்கியம்-அமூர்த்திசதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் - கத்துருசாதாக்கியம்-கர்மசாதாக்கியம் என்னும் ஐந்துசாதாக்கியங்களும், சத்தி-மௌநாங்கம்-அத்திதலம்-கந்தம் - சுவை என்னும் ஆறுபத்திகளும், கரதலகமலமென்னும் அஸ்தமும், பராசத்தி-ஆதிசத்தி-இச்சாசத்தி-ஞானசத்தி-கிரியாசத்திஎன்னும் ஐந்துசத்திகளும், ஆகிய இவைகளெல்லாம் ஏகரூபமாய்விளங்கிய சென்னவசவேசர் என்னும் அங்கிதத்தையுடைய எமதுசுவாமிகளது உபயசரணங்களை வணங்குவாம் எ-று. ஏ-அசை.

இலிங்கமாவது இஷ்டலிங்கம் - பிராணலிங்கம்-பாவலிங்கம்-ஆசாரலிங்கம்-குருலிங்கம்-சிவலிங்கம்-சரலிங்கம்-பிரசாதலிங்கம்-மகாலிங்கம் என வீராகம சித்தாந்தப்படி ஒன்பது வகையாமெனக்கொள்க.

பஞ்சசத்திகளின் விபரமாவன.— சிவத்தின் அம்சத்தில் ஆயிரத்தொன்று பராசத்தியும், அப்பராசத்தியின் அம்சத்தில் ஆயிரத்தொன்று ஆதிசத்தியும், அவ்வாதிசத்தியின் அம்சத்தில் ஆயிரத்தொன்று இச்சாசத்தியும், அவ்விச்சாசத்தியின் அம்சத்தில் ஆயிரத்தொன்று ஞானசத்தியும், அந்தஞா

ஞசத்தியின் அம்சத்தில் ஆயிரத்தொன்று கிரியாசத்தியுமா மென்பது சைவாகம சித்தாந்தமெனக் காண்க. எ

## குகைநமசிவாயர்வணக்கம்.

### வேறு.

அன்னமயம்பிராணமயமனோமயம் விஞ்ஞானமானந்தமப த்தினு டனைங்கோசமூாய், இனனன்மயநீங்கிய மெஞ்ஞானி யுளங்குகையாமெப்போதுநீங்காமலிசைந்துமிகவாழ்வோன், பன்னரியவிரிவுபரஞ்சமநதிகமிவைகள் பகர்வரிதாய்ப்பிரமன் முதற்பண்ணவர்தம்முளத்தில், உன்னரிய ஓநமசிவாயகுருரா யனுபயசரணமதுளத்துமுச்சியினும் வைப்பாம்.

(இ-ள்.) அன்னமயம் - பிராணமயம் - மனோமயம் - விஞ் ஞானமயம்-ஆனந்தமயம் என்னும் பஞ்சகோசமாகிய துன் பத்துடனே இன்பத்தையும் நீங்கிய உண்மைஞானியின் இரு தயத்தையே குகையாகக்கொண்டு அனவரதமும நீங்காமல் ஒத்து வாழ்கின்றவராயும், சொல்லுதற்கரிய விஸ்தாரமும்- உயர்வும் - சமமும் - விசேஷமும் ஆகிய இவைகளில் வேறு சொல்வதற் கிலலாதவராயும், பிரமன்முதலிய தேவராலும் மனத்தின்கண் நினைத்தற்கரியவராயும், ப்ரணவஸ்ரூபராயும் விளங்குகின்ற குகைநமசிவாயகுருராயருடைய உபயசரணங் களை எமதுஅகத்திலுஞ் சிரத்திலுமவைத்து வாழ்வாம் எ-று. தம்-சாரியை.

அன்னமயமாவது, தோலும் - இரத்தமும் - தசையும்- நரம்பும்-எலும்பும் - மூளையும் ஆகிய ஷட்பாவ விகாரமாகத்

தோற்றுகின்ற ஸ்தூலதேகமாயிருத்தல் ப்ராணமயமாவது, ப்ராணாதியாகிய சமஷ்டிவாயு ஒன்றுடனே வாக்காதி கர்மேந்திரியம் ஐந்துங் கூடியிருத்தல், மனோமயமாவது-புத்திநீங்கலாய் மனமாதியாகிய சமஷ்டி அந்தக்கரணம் ஒன்றுடனே வாக்காதி கர்மேந்திரியம் ஐந்துங் கூடியிருத்தல், விஞ்ஞானமயமாவது - புத்தி ஒன்றுடனே சுரோத்திராதி ஞானேந்திரியம் ஐந்துங் கூடியிருத்தல் ஆனந்தமயமாவது, மனோமயமும் விஞ்ஞானமயமும் அஞ்ஞானத்திலழுந்திய காரணதேகமாயிருத்தல். அ

குருநமசிவாயர் வணக்கம்.

வேறு.

சீலமிகுங்குகைநமசிவாயர்கரசாதனராய்த்திகழுமன்பாற்
பாலினுறுசுவைபோலப்பனுவலவர்மீதுமம்பலவர்மீதுங் [றித்
கோலமுடனேசெப்புங்குருநமசிவாயர்பதங் குழைந்துபோற்
தாலமிசைநிலவவருசிவசரணரனைவரையுந்தாழ்ந்துய்வாமே.

(இ-ள்.) ஞானமாகிய நல்லொழுக்க மிகுந்திருக்கின்ற குகைநமசிவாயர் கையினுற்காட்டிய சின்முத்திரையைச் சாதனமாகக்கொண்டவராய்ப் பிரகாசிக்கின்ற அன்பினாலே அவ்வாசிரியர்மீதும் - சிதாகாசத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளின்மீதும் - பாலிலுள்ள சுவையைப்போலும் இனிமைதங்கிய தமிழ்ப்பாடல்களை அழகாகச்செய்த குருநமசிவாயருடைய திருவடிகளை மனமுருகித் துதிசெய்து பூமியின்கண்

ணே லொளிவிளங்க அவதரித்த சிவசரணர்கள் யாவரையும் வணங்கிவாழ்வாம் எ-று. ஏ-ஏ-அசைகள். கூ

## அவையடக்கம்.

பத்தியங்கங்கொடுசெய்யும் பூசனையுமறையாதிபகரும்வண்ணம, இத்தரணிமிசைசெய்யும்பூசனையும் யானைமுதலினைசக்குமைந்து, சுத்தியின்றிச்செயும்பூசைபலதறியா நீசிதான்சுழற்றிவீசும், அத்தனிக்கூவிளப்பூசைக்கிரங்கலினல் யான்பாடவகமுற்றேனே.

(இ-ள்.) பரமசிவனர் இப்பூமியினிடத்தில் பக்தியாகிய அங்கத்தைக்கொண்டு செய்த பூசைக்கும், வேதாகமங்களிற் கூறியிருக்கும் விதிபின்படி செய்த பூசைக்கும் சொல்லுகின்ற யானைமுதலாகப் பாம்பு சிலந்தி-எறும்பு-நண்டு ஆகிய ஐந்தும் பஞ்சசுத்தியில்லாமல் செய்த பூசைக்கும் அனுக்கிரகித்ததல்லாமல் மூடத்தன்மையை யுடைய சண்டாள ஸ்ரீயானவள் சுழற்றியெறிந்த வில்வம் தன்மேற்பட அதையும் பூசையாகக் கொண்டு கிருபைசெய்தபடியால் அடியேனுடைய சொல்லையும்அங்கீகரிப்பாரென்று இந்நூல்செய்ய நான்மனதில் துணிவுகொண்டேன் எ-று. தான்-இ-சாரியைகள்-ஏ-அசை.

பஞ்சசுத்தியாவன, ஆத்மசுத்தி - பூசுத்தி - திரவியசுத்தி-மந்திர சுத்தி-இலிங்கசுத்தி என்பனவாம்.

# நீசிக்கு அருள்செய்தவரலாறு.

## பிரமோத்ரகாண்டம்.

சேகயதேசத்தில் ஒருப்ராமணனுடைய புதல்வி சௌமினியென்பவள் தன்பிதாவினால் வேதவிதியின்படி மற்றொரு ப்ராமணனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுக்கப்பட்டவளாய்ப் புருஷனுடனே இஷ்டத்தை யனுபவித்துக் கொண்டு இருக்கிறநாளில், அந்தப்புருஷன் தான்செய்த தீவினையினால் பலவியாதிகள் மேலிட்டு இறந்துபோக அந்தச்சௌமினியானவள் அதிகதுக்கமுடையவளாகிப் பின்னர் அதிகவிரகத்தை யடைந்தவளாய்ச் சகியாமல் முறைதவறிச் சோரத்தனமாய்ப் பலபுருஷரைச்சேர்ந்து பந்துக்களும் அன்னியர்களுமாகிய பெரியோர்களும் வாசித்தவர்களுஞ் சொல்லிய நன்மையைக் கேளாமல் காமசுகத்தை யனுபவித்துக் கர்ப்பமடைந்தாள். அதையறிந்த தாய்தந்தை முதலானவர்கள் இவளை வைத்துக் கொண்டிருப்பது இனி நமக்குத்தகாதென்று ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அப்போது சௌமினியானவள் அதிக துக்கத்தோடுங் காட்டிற்போக ஒரு வேளாளன்கண்டு அழைத்துக்கொண்டுபோய்த் தன்வீட்டில் வைத்திருந்தான். அவனைச்சேர்ந்து மாம்சபுக்தமும் மத்தியபானமும்பண்ணிப் பிள்ளையைப்பெற்றுக்கொண்டிருக்கிற நாளையில் ஒருநாள் அந்த வேளாளன் அசலூருக்குப்போகத் தனித்திருந்த சௌமினியென்பவள் மாம்சந்தின்ன ஆசைகொண்டு தொழுவத்திற்

புகுந்து கள்ளுண்டமயக்கத்தினாலே பசுவின் கன்றைப்பிடித்து வெள்ளாடென்று நினைத்துக் கழுத்தையறுத்து வீட்டுக்குக்கொண்டுவந்து விளக்கின்முன்னே அரியும்போது பசுவின் கன்றென்று அறிந்து சிவ சிவா? கள்ளின்மயக்கத்தினா லல்லவா இப்படி நேரிட்டதென்று இரண்டுநாழிகை வரையினுந் துக்கித்திருந்து பின்பு மாம்சஅபேக்ஷையினாலே அந்தப் பசுவின்கன்றின் மாம்சத்தைப் பாகம்பண்ணிப்புசித்துத் தோல் எலும்புகளைத் தெருவிற்போட்டுப் புலிவந்துகொன்றதென்று சொல்லி அழுதுகொண்டிருந்தாள். பொழுதுவிடிந்தவுடனே புருஷனாகிய வேளாளன்வந்து பசுவின்கன்று இறந்துபோனதைக்கேள்விப்பட்டு வியசனமுற்றுச் சௌமினியுடன்சேர்ந்து இருக்கிறநாளில் சௌமினியானவள் வாழ்நாள்கழிந்திறந்து இரண்டு கண்ணும் பார்வையில்லாமற் புலைமகளாய்ப் பிறந்தாள். நாயுண்ட எச்சிலையும் மிருதியாகிய பசுவிறைச்சி முதலாகிய மாம்சங்களுடனே கள்ளையும் உண்பித்து வளர்த்துத் தாய்தந்தைகள் இறந்துபோக, இப்புலைமகள் கருங்காக்கையைப்போல நிறமும், தேகமுழுதும் புழுநெளிய, அதிகரித்த ரணமும், அதிகமான குஷ்டமும், புண்வழியில் அதிக நாற்றமும், சுரமும்-சூலையும்-க்ஷயமும் இன்னும் பலவித வியாதிகளுங்கொண்டிருந்ததால் ஒருவரும் விவாகஞ்செய்யாமற்போனார்கள். இவள் பசிமுதலாகிய நோய்களைத் தாங்கமாட்டாமல் புலைச்சேரிதோறும் பிச்சையெடுத்துண்டு இருக்குநாளையில் தேகமிளைத்து மூப்படைந்து அதிகதுன்பமுற்றுப் பசி

வருத்தம் மேலிட நடை தளர்ந்து சிவராத்திரி புண்ணிய காலத்தில் கோகர்ணத்துக்குப் போவார்களுடன் சென்று ஒரு வீதியிற்போய்க் கண்ணில்லாதவளுக்குப் பிச்சைபோ டுங்களெனக்கூவித் திரிவதைக்கண்டு ஒரு சிறுவன் தன் கை யிற்போட்ட வில்வத்தை உணவென்று வாயிலிட, உண்ணத் தகாததாயிருந்தபடியால் அதைச்சுழற்றி வீசினாள். அவ்வில் வம் காளிக்குச சமீபத்திலிருந்த பழைய சிவலிங்கத்தின் முடி மேல் விழுந்தது, அன்று இரவு நீங்கிச் சூரியோதயமான பின்பு வருத்தத்தோடும் ஒரு புலைமகள் கையைப்பிடித்துத் தடியையூன்றிக்கொண்டு கால்சோர அவ்வூரைவிட்டுப் போ கும்போது பாலைநிலத்தில் இருமலினால தவறிவிழுந்து மர ணத்தை அடைந்தனள். சிவராத்திரி முழுதும் ஆகாரமில் லாம லிருந்ததே விரதம், பசியினால் துயில் நீங்கியதே சாக ரம், அப்பொழுது தங்கவிடமில்லாமல் பனியில் நனைந்ததே ஸ்நாநம், வில்வம் எண்ணாதெறிந்ததாயினுந் தன்மேற்பட்ட படியால் அதுவே அர்ச்சனையெனத் திருவுளங்கொண்டு பரம சிவனருள்செய்ய நவரத்நகசிதாலங்கார விமானத்துடன் பல சிவகணநாதர்கள் பூமியினிடத்துவந்து இவள்உயிரைத திவ்ய ரூபத்திற்சேர்த்து விமானத்திலேற்றி வித்தியாதரர் பாடவும் அரம்பையராடவுங் கொண்டுபோய் முக்குணவசததராய் அஞ ஞானவிருளிற் புக்கவர்பொருந்துதற்கு அரிதாயுஞ் சூரிய னொளியை மின்மினிபோலச் செய்யுங் காந்தியையுடையதா யும் வேதவித்தாயும், அரியயன்பெறுதற்கு அரிதாயும், அடை

நவர் மீளக்கூடாததாயும், யாவர்க்குஞ் சேர்தற்கரிதாயும் விளங்குகின்ற மோக்ஷத்தின்கண்ணே சுவாமியுந் தேவியுங் காணவிட்டார்கள் என்பதாம். ௬௦

## இதுவுமது.

வாருங்கோள்வையத்தீர் பொன்கோவாரிதியை வள்ளத்தாலே, பாருங்கோளளந்தியேனிக்களு தன்றாயருந்திப் பாவிறுமை, தீருங்கோளென்றொருவன் செப்புதல்போற் சிவயோக நிட்டைதன்னை, நீருங்கோளரவணியு மண்ணன்மொழிபபடி யேயா நிகழ்த்தறுனே.

(இ-ள்.) கங்கையையுந்தீமையைச்செய்கின்றசர்ப்பத்தை யுந்தரித்த பரமசிவனுர் உமைக்கு அநுக்கிரகித்தபடியே சிவ யோக நிஷ்டையை நிஷ்டானுபூதியென்னும் பெயரையுடைய நூலாக யாம் தமிழினுற்செய்வது எதுபோலுமெனில் உலகத் தாரே? வாருங்கள்! நான் பாற்கடலைக் கிண்ணத்தினுலேயளந் துதருவேன் பாருங்கள் நீங்களுஞ் செவ்வையாக வுண்டு பா. விறுமையைத் தீர்த்துவிடுங்களென்று ஒருவன் சொல்வதை யொக்கும் எ-று. தான்-சாரியை-ஏ-ஏ. அசைகள்.

எனவே பூலோகத்தார் நூலாசையை விட்டொழிந்து அந்நூற்பயனுகிய ப்ரம்மநிஷ்டையை அடையும்பொருட்டு உமைக்குப் பரமசிவனுர் அநுக்கிரகித்ததென்பது தோன்ற அண்ணல்மொழிப்படி யெனவும், இந்நூல் பார்க்கத்தக்க

நுட்பபுத்தியையுடைய புண்ணியோத்தமர்களாகிய இவ்வுல கத்தாரே வரக்கடவீர்க ளென்பதுதோன்ற வாருங்கோள் வையகத்தீரெனவும், ஆத்மகோடிகளுக்கு ப்ரம்மநிஷ்டையை யெடுத்துப் போதிக்கின்ற [illegible]லுண்டாகிய அஷ் டோத்தரசத வுபநிஷத்[illegible] மேன்மேலுந் தெ ளிவாகச் சொல்லுகின்[illegible] அளவிலென்பதுதோ ன்ற கீரவாரிதியையென[illegible]ளவிறந்த சுருதிகளாகிய பாற்கடலையதிந்து அவற்[illegible]ருளாகிய பாலகுடித்தற்கு ஆபுளின்மையால் வரிசைக்கிரமமாக நிஷ்டையை யாமெடுத் துப் போதிப்போமென்பது தோன்ற யான் கிண்ணத்தால ளந்தேனெனவும், உங்களுடைய அறிவின்கண்ணைக்கொண்டு அந்தநிஷ்டையைச் சாதித்துப் பரிபூரணமான ஆநந்தபதத் தை யிரவிலடைந்து நூலாசையை ஒழித்துவிடுங்க ளென்பது தோன்ற பாருங்கோள் நீங்களுநன்றா யருந்திப் பாலினுசை தீருங்கோளெனவும், சர்வானந்த வல்லமையுள்ள இந்நூலா சிரியர் தாம பிரமானந்தத்தை நிஷ்டானுபூதியெனும் பெ யரையுடைய தமிழ்நூலாகச் செய்வதற்குக் கற்றுவல்ல சான் றோர் முன் பற்றுதவரெனத் தாழ்ந்து கூறுதல் முறைமையெ ன்பது தோன்ற எனைநிறுவன செப்புதலைபோற சிவயோக நிஷ்டைதனை யானிகழ்த்துகின்றேன் எனவுங் கூறினாரென்ப பெறும். ௧௧

## நூல்வரலாறு.

அர்த்தனார் சணமக்கயிலை யிடத்துமையாள் வணங்கி மகிழ்ந் தன்பிற கேட்ப, உத்தரவாதுளந்தன்னி லுமேலுராம் படைச[illegible]

## மூலமும் உரையும்.

[illegible], முத்திதனையுதவுநிட் டானுபூதியை யெடுத்து மொழிந்த வதனை, இத்தலத்தி லியான்றமிழாற் புல்லறிவு கொடுபாடல விசைந்தனனால்.

(இ-ள்.) கயிலாசத்தி லெழுந்தருளி யிருக்கின்ற கடவுளைத் தேவியானவர் வணங்கிச் சந்தோஷித்து அன்புடனே ஆத்மஞானநிஷ்டையை அனுக்கிரகம்பண்ணவேண்டுமென்று கேட்ப, அக்கடவுள் வாதுளமென்னும் ஆகமத்தில் உத்தர பாகத்தில் இருபத்தெட்டாம் படலத்தில் தாம்சொல்லியிருக்கின்ற மெய்யறிவாலடைகின்ற மோக்ஷத்தைத்தருகின்ற நிஷ்டானுபூதியை யெடுத்து வுபதேசித்தார். அதனை யிப்பூமியின்கண் நான் என்னுடைய சிற்றறிவைக்கொண்டு நிஷ்டானுபூதியென்னும் பெயரையுடைய நூலாகத் தமிழினாற்பாட மனமிசைந்தேனா என்றவாறு. ஆல்-அசை. கஉ

பாயிரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஉ.

உ

ஸ்ரீஸத்குருவேநம:.

# நிஷ்டாநுபூதி.

## நூல்.

### அவதாரிகை.

தேவியார் பரமசிவத்தை வணங்கி ஞானநிஷ்டாசாதனையை அடியேற்குக் கிருபைசெய்யவேண்டுமென அக்கடவுளுஞ் சொல்லுவோங் கேட்கக்கடவாயெனல்.

நித்தனையுமையா ளடிபணிந்தெனக்கு நிட்டைசாதனை நிகழ்த்தெனவே, அத்தனு மகிழ்ந்தே யீவினுவிடுத லாருயிர்த் தொகைகண் மெய்யுணர்வான், முத்தியையடையுங் காரணமாமான் மொய்குழற்செய்ய வாய்பாகந்தோள், வித்தகிசாதனமாய்க்கேட்டி யென்றிறைவிளம்பிடுமென்றே.

(இ-ள்.) என்றைக்கும் அழியாத நித்யராகிய பரமசிவத்தை நோக்கிப் பார்வதியார் திருவடிகளிற் பணிந்துநின்று அடியேனுக்குத் தேவரீர் ப்ரம்ம நிஷ்டாசாதனத்தை அநுக்ர

கஞ்செய்தருள வேண்டுமென்று கேட்க, சகத்துக் கெல்லாம் பிதாவாய் விளங்குகின்ற அப்பரமசிவமும் அதற்கு ஆனந்தத் தையடைந்து நெருங்கிய கூந்தலையுஞ் சிவந்தவாயையையும் பசுமைபொருந்திய தோள்களையுங் கியானத்தையு முடைய உமையவளே! நீகேட்டது வுலகத்தில் நிறைந்திருக்கின்ற ஆத் மகோடிகள் பழிசேர்முத்திகளை நீக்கி உண்மையறிவால் மோ க்ஷத்தையடைவதற்குக் காரணமாக இருக்கின்றது, அகை யால் நீ சாவதானமாய்க் கேட்பாயாகவென்று சொல்லுகின் றார் சுவாமி எ-று. ஏ - ஏ-ஆல் - அன்று - ஏ இவ்வைந்தும் அசைகள். மெய்யுணர்வா லென்றதனால் பழிசேர்முத்தி வரு விக்கப்பட்டது.

(ப - ம்.) அண்ட சராசரங்க ளெல்லாந் தம்மிடத்தில் தோன்றித்தோன்றி அழிந்தாலுந் தாமெப்பொழுதும் அழி யாமல் சமஸ்தமுந் தாமாயுந் தாமல்லவராயும் விளங்குகின்ற கடவு ளென்பார். பிதாவெனவும், மெழுக்குண்டையில் மறைப்புண்ட இரத்தினம்போல் ஆணவத்தால்மறைப்புண்டு கிடந்த சர்வாத்மாக் களுக்குந் தனுவாதிகளைக் கொடுத்து அவற்றின் கன்மே முன்னர்வினைகளை யூட்டுவித்துப பின் னர் சுருதிகுரு சுவானுபவங்களினுல் ஆத்மஞானத்தை விளை வித்துப் பாதுகாக்குந் தந்தையென்பார். அத்தனெனவும், பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்கின்ற ஒப்பற்ற தேவநாயக னென்பார். இறையெனவும், எவ்வண்டங்களும் அவைக ளுள் உள்ள வுயிர்த்தொகைகளும் உண்டாவதற்கு விதையா

கவும் அகமாகவு மிருக்கின்ற சிற்சத்தியென்பார். வித்தகி யெனவுங் கூறினர்.

[இ-ம்.] தேவியானவர் லோகநாயகரைப்பார்த்து ஆத்மகோடிகளின் பொருட்டு ப்ரம்மநிஷ்டா சாதனத்தை வினவினதாம்.

## பழிசேர் முத்திகளாவன.

உலகாயுதன் மகளிரிடத்துண்டான போகமே முத்தியென்பான். புத்தனுகிய சவுந்தராநதிகன், உருவம-வேதனை-குறிப்பு - பாவனை விஞ்ஞானமென்கிற பஞ்சகந்தங் கெடுகிறதே முத்தியென்பான். அமணனுகிய நிகண்டாவாதி, முக்குணங்களுங்கெடுகிறதே முந்தியென்பான். ப்ரபாகரன், எங்கும்விரிந்த காரிய கன்மங் கெடுகிறதே முத்தியென்பான். அகச்சமயத்தில் பேதவாதி, ஆணவமலங்கெடுகிறதே முத்தியென்பான். அகச்சமயத்தில் சமவாதி, சுத்தமாயாசரீரமழியாது நித்தியமாயிருக்கிறதே முத்தியென்பான். மாயாவாதி, சரீரதொந்தனைப்பட்டு நிற்கிற ஜீவாத்மாவுக்கு விவேகஞான முண்டாகிறதே முந்தியென்பான். மாயாவாதத்தில் பாற்கரியன், ஆத்மா கெடுகிறதே முத்தியென்பான். அகச்சமயத்தில் சங்கிராந்தவாதி, பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகிறதே முத்தியென்பான், இதற்கு அஷ்டமாசித்தியுமென்பான். பாஷாணவாதி, ஆத்மா கேவலத்திற் கிடக்குந்தன்மைபோல் முத்தியிலும் ஒன்றுமறியாமல் பாஷாணம்போலக் கிடக்கிறதே முத்தியென்பான். இவை பத்துமாம்.— இவையன்றி இன்னுமனந்தமுள, அவை பலநூலாலறிக. மெய்யுணர்வால் முத்தி

யை அடைவதாவது, ஆணவம்-மாயை-காமியம் ஆகிய மும் மலங்களும் நீங்கி ஆத்மா அருளோடு கூடி நிற்பதேயாம். பத்துவகை முத்தியென்பதற்குப் பிரமாணம்.

சிவப்பிரகாசம்.

அரிவையரின் புறமுத்திகந்தமைந்த மறுமுத்திதிரிகுணமு மடங்குமுத்தி, விரிவுவினைகெடுமுத்தி மலம்போமுத்தி விக்கி ரகசித்தமுத்தி விவேகமுத்தி, பரவுமுயிர்கெடுமுத்தி சித்தி முத்தி பாடாணமுத்தி யிவைபழிசேர்முத்தி, திரிமலமு மகல வுயி ரருள்சேர்முத்தி திகழ்முத்தியிதுமுத்திக் திறத்ததாமே.

என்பதனாற் காண்க. க

(அ-கை.) சிவஞான தேசிகரால் அநுக்ரகிக்கப் பட்ட மஹாவாக்யத்தா லன்றி யேனையவற்றால் முத்திகிடையாதெ ன்று கூறுவான் தொடங்கி ஓர் மொழியினால் சர்வமுமொ ழிந்து விடடையலாமெனல்.

ஒருமொழியாலே சுருதியாகமநூ லியர்புராணமு மெலா மொழியும், ஒருமொழியாலே சரிதைநற்கிரியா யோகபாவ னைமெலா மொழியும், ஒருமொழியாலே யண்டபூதங்க ளொ டுங்கிடுந் தன்னிலேதோன்றும், ஒருமொழிசும்மா விருத்தலா மதனா லொப்பிலாச்சிவபத மடைவார்.

(இ-ள்.) சற்குருவருளால்பெறப்பட்ட ஒருசொல்லினால் நான்கு வேதங்களும் நான்கு உபவேதங்களும் ஆறங்கங்க

ளும் முப்பத்திரண்டு உபநிஷத்துகளும் இருபத்தெட்டு ஆகமங்களும் ஒன்பது உபாகமங்களும் சப்தகோடி மஹாமந்திரங்களும் ஆறு சாஸ்திரங்களும் பதினெண்புராணங்களும் பதினெட்டு உப புராணங்களும் இரண்டு இதிகாசங்களும் என்று சொல்லுகின்றவைகளெல்லாம் ஒழிந்துபோம். ஒரு சொல்லினால் சரிதையாகிய தொழிலுங் கிரியையாகிய பூசையும் அஷ்டாங்கயோகமுமாகிய எல்லாம் ஒழிந்துபோம். ஒரு சொல்லினால், அண்டங்களும் பிருதுவிமுதலாகிய பஞ்சபூதங்களும் ஒடுங்கிப்போம். பின்னர் தமது ஆத்மஸ்வரூபமான உண்மைநிலை உதயமாம் ஒருசொல்லானது அசைவற நிற்றுத் தன்மையை யுடையதாம். அந்த ஒருசொல்லினால் எவையாலும் ஒப்பிட்டுக்கூறப்படாத சிவசாயுஜ்ய பதத்தை அடைவார்கள் எ-று. ஏ-ஏ-ஏ-அசைகள். ஒருமொழி சும்மா விருத்தலா மென்றது, ஒருசொல்லினால் அசைவறநிற்குந் தன்மையாமென்ப் பொருள்கூறினும் அமையும். சுருதியென்றமையால், உபவேதங்களும் ஆறங்கங்களும் உபநிஷத்துகளும் ஆகமமென்றதனால், உபாமங்களும் சப்தகோடி மஹாமந்திரங்களும், உயர்புராணமென்றதனால் உபபுராணங்களும் எல்லாமென்றதனால் இதிகாசங்களும் வருவிக்கப்பட்டன.

(ப-ம்.) அகண்ட பரமானந்த சின்மய சிவா அனன்னிய விசுத்த விக்யான கன சச்சிதானந்த ப்ரம்மத்தினிடத்தில் சமஸ்தமும் உற்பவித்த க்ரமத்தையும் லயத்தையும் விதித்தாநாக்கின்ற அறுபத்துநாலு கலைக்கியானங்களுக்கும் மூலகாரண

மாயுள்ளதாயும், ஞானாசிரியரால் சர்வமும் ஒழித்துவந்தஅதி தீவிரபக்குவரது * அத்துவாக்களை நியதிகளைந்து நீயே அது அதுவே நீயென்று காட்டப்பட்டதாயும் விளங்குகின்ற பொருளென்பார். ஒருமொழியெனவும், பிருதிவி தத்துவமுதல் நாததத்துவம் ஈறாகச்சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களுந் தானல்லவென்றும், அகர்த்தன்-அபோக்தன்-அபரிச்சின்னன்-அவிகாரன்-அமலன்-அசடன்-அசரீரன்-அசலன்-அனாதியன்-அனந்தன்-அதுலன்-அவிநாசன்-அத்துவிதன்-அனாமயன்-அரூபன்-அசங்கன்-அகண்டன் என்றும் இன்னும்பலவாறாகவுஞ் சொல்லப்படுகின்ற சொச்சொரூபமே தானென்றுமறிந்த சித்தவிர்த்தியான கிஞ்சித் நினைவையும் அறவே விட்டு நிற்றலென்பார். சும்மாவிருத்தலாமெனவுங்கூறினார்.

(இ - து.) ஏகமான மஹாவாக்யமே ப்ரம்மசொரூபமென்பார். ஒருமொழியென்றோரெனவும், ஒப்பற்ற ப்ரணவஸ்வரூபமாகிய மூலமந்திரமென்பார். ஒருமொழியென்றோரெனவும், பேசுதற்கரிய வாசியினாற் காட்டுதலே பேரின்பவுண்மையென்பார். ஒருமொழியென்றோரெனவும், சமானரகிதமாகிய சின் முத்திரையாற் காட்டுகின்ற அர்த்தமென்பார். ஒருமொழியென்றோரெனவுங் கூறுவாருமுளர். சிவ

---

* அத்துவாக்களென்பன, மந்திரம் - ௧௧. பதம்-௮௰௧, வர்ணம் - ௫௰௧. புவனம் - ௨௱௨௰௪. தத்துவம் - ௩௰௬. கலை-௫ ஆம். இவைகட்கு ஷடத்துவாக்களென்றும் பெயர்.

ஞான தேசிகரானவர் தமது திருக்கண்ணோக்கத்தினால் நிகரற்ற மோனமாய்க் காட்டுவதே சொல்லாமற் சொன்னதென்பார். ஒருமொழியெனுறரெனப் பொருள்கூறுதலே சிறப்புடைத்தாம். தற்போதமிழந்து அறிவுமயமாகிய ததாகாரமாவ தென்பார். சும்மாவிருத்தலா மென்று ரென்பாருமுளர். தேகேந்திரியங்களுடைய பேதரூபங்களான விகாரவிருத்திகளுக்கும் அவ்விருத்திகள் ஒடுங்கின கேவல ஸ்வரூபசமாதிக்குஞ் சர்வசாக்ஷியாய் விளங்குதலென்பார். சும்மாவிருத்தலாமென்றுரெனப் பொருள் கூறுதலே சிறப்புடைத்தாம்.

[இ - ம்.] ப்ரம்ம ஸ்வரூபமாகிய ஞான தேசிகராலே அநுக்கிரகிக்கின்ற ப்ரக்யானம் ப்ரம்ம அகம்ப்ரம்மாஸ்மி தத்வமஸி அயமாத்மா ப்ரம்ம என்னும் சதுர்வேதாந்தரங்க மஹாவாக்யமாகிய ஓர் மொழியினால் சந்தஸ்வரூபமா யிராநின்ற அறுபத்துநான்கு கலைக்கியானங்களும் ப்ரத்யக்ஷ ஸ்வரூபமாய்ப் பரிணமிக்கின்ற சரிதை கிரியைகளும தியான ஸ்வரூபமாகிய யோகமும், பூதபௌதிகமாய்ப் பிரகாசிக்கின்ற அண்டபூதங்களுமாகிய இவைகளெல்லாந் தனது வடிவமேயன்றி வேறல்லவென் றறிந்த சித்தவிர்த்தியைச் சின்மாத்திரத்தில் ஐக்கியம்பண்ணி அவ்வைக்யமென்கிற இடத்தில் நிலைபொருந்திய நிரதிசயாநந்தமுந் தானேயென் றறிந்தது நழுவிக் கேவலரூபமாய் விளங்குவதாம்.

## ஒருமொழியென்பதற்குப்பிரமாணம்.

### திருவாசகம்.

புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே யுண்டியா யண்டவா ணருப்பிறரும், வற்றியாருநின்மலரடிகாணு மன்னவென்னை யோர் வார்த்தையுட்படுத்துப், பற்றினுய்பதையேன் மனமிக வுருகேன் பரிகிலேன்பரியாவுடறன்னைச், செற்றிலேனின்னுந் திரிதருகின்றேன் றிருப்பெருந்துறைமேவிய சிவனே எ-ம்.

### திருமந்திரம்.

ஓமென்னுமோங்காரத் துள்ளேயொருமொழி
ஓமென்னுமோங்காரத் துள்ளேயுளபேதம்
ஓமென்னுமோங்காரத் துள்ளேயுருவரு
ஓமென்னுமோங்கார மொண்முத்திசித்தியே. எ-ம்.

### கடவுளந்தாதி.

பாதத்திலேமனம்பற்றுவர் முற்றுவர்பாசமற்றோர்
நீதத்திலேநிலைபேராமற் சாதிப்பர்சித்துவித்தை
வாதத்திலேபொருளொன் றாகக்காண்பர்மனதுநெறி
நீதத்திலேகுருசொல்லாமற் சொன்னநிறையிதுவே. எ-ம்.

### பஞ்சாக்ஷரப் பசுபதிபாசவிளக்கம்.

தாரணியவர்க்குநாலாஞ் சத்திநிபாதமெய்த
ஊருணிபோலத்தோன்றி யொருமொழியாலெனக்குக்

கோரணிகாட்டுமாறு சமயத்தின்கோளைநீக்கிப்
பூரணசொரூபங்காட்டும்புண்ணியன்பொற்றாள்போற்றிஎ-ம்.

நிகழ்காலத்திரங்கல்.

சீராமறையுஞ்சிவாகமமுஞ்செய்நூலும்
வேராவுணர்வு மொருமொழியாய்த்தந்தவா. எ-ம்.

தத்துவராயசுவாமிகள்.

சொல்லுமெல்லைகண்முடிந்துதுரி சொன்றுமிலதா
யெல்லையின்றியவகண்டபர வின்பமிதென
வல்லவன்புதல்வன்வாழ வொருமோனமொழியா
லொல்லைகண்டுதிளையா யெனவுவந்தருளினான். எ-ம்.

ஞானிகள்நிலைமை.

குருபதத்தஞ்சலிகூப்பியாதனத்தினுறைந்து கூறுமற்கூறிய வோர்மொழி யுள்ளத்திருத்திக், கருவியெலா மொழித்துக் காண்பான்காட்சியொழிந்து காணுதுகண்டுகளியாது களித்துவப்பாற், பொருவருநிட்களசுத்த மேகமென விளங்கும் போக்குவரவில்லாத புனிதபூரணத்தை, இருவகைவாசனையு மிழந்திருக்குமவன்ஞானி யினியவற்குப் பிறவியுமுண்டென விளம்பலாமோ. எ-ம்.

பட்டணத்துப்பிள்ளையார்.

வெட்டாதசக்கரம் பேசாதமந்திர மேலொருவர்க்
கெட்டாதபுஷ்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து

கட்டாதலிங்கங் கருதாதனெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசை யன்றேகுருநாதன் மொழிந்ததுவே. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

அங்கைகொடுமலர்தூவி யங்கமதுபுளகிப்ப வன்பினாலுருகி விழிநீ, ராறாகவாறாத முத்தியினதாவேச வாசைக்கடற்குண் மூழ்கிச், சங்கரசுயம்புவே சம்புவேயெனவுமொழி தழுதழுத் திடவணங்குஞ், சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கனேனையுந் தண்ணருள்கொடுத்தாள்வையோ, துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க டொழுதருகில் வீற்றிருப்பச், சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே சொரு பானுபூதிகாட்டிச், செங்கமலபீடமேற் கல்லாலடிக்குள்வளர் சித்தாந்தமுத்திமுதலே, சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே. எ-ம்.

வரும் மற்றும் வருவன வற்றாற் காண்க.

## சும்மாவிருத்தலாமென்பதற்குப் பிரமாணம்.

கந்தரனுபூதி.

செம்மான்மகளைத் திருடுந்திருடன்
பெம்மான்முருகன் பிறவானிறவான்
சும்மாவிருசொல் லறவென்றலுமே
யம்மாபொருளொன்று மறிந்திலனே. எ-ம்.

## அத்துவிதக்கலிவெண்பா.

மும்மாயைக்கப்பாலா முப்பாழுங்கண்டேநீ
சும்மாவிருவென்று சொன்ன - னம்மானை
வேறுபொருளில்லை யென்றான். எ-ம்.

## ஒழிவிலொடுக்கம்.

சும்மாவிருக்கவைத்த சூத்திரமாஞ்சாத்திரத்தை
விம்மாக்கதறுவரும் வேலைகளும் - தம்மறிவா
னீட்டிப்பிடித்திருக்கு நிட்டைகளுஞானிகள்முன்
காட்டும்பரியாசகம். எ-ம்.

## சந்நிதிமுறை.

சும்மாவிருவெனநீ சொல்லப்பொருளொன்றும்
அம்மாவறிந்திலமென் றன்றுணைத்த - எம்மான்
அருணகிரிநாத னனுபவநாயேற்குக்
கருணைபொழி போருராகாட்டு. எ-ம்.

## ஞானசுகாதீதவெண்பா.

உன்னதேயோடாதே யூன்றியொருமந்திரத்தைப்
பன்னதேசாத்திரங்கள் பாடாதே - என்னனை
அப்பாலுமொப்புவமை யற்றசுகாதீதத்தில்
எப்போதுஞ் சும்மாவிரு. எ-ம்.

பட்டணத்துப்பிள்ளையார்.

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதென வடையவிழுங்கினண்டி. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

நானெனவுநீயெனவு மிருதன்மைநாடாமா னடுவேசும்மா
தானயருநிலையிதுவே சத்தியஞ்சத்தியம்.

அன்றியும்.

சும்மாவிருக்கச் சுகஞ்சுகமென்று சுருதியெல்லாம்
அம்மாநிரந்தரஞ் சொல்லவுங்கேட்டு மறிவின்றியே
பெம்மான்மவுன மொழியையுந்தப்பி யென்பேதமையால்
வெம்மாயக்காட்டி லலைந்தேனந்தோ வென்விதிவசமே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஞானாசிரியரால் பக்குவரது அத்துவாக்களை நீக்கி
அதுவேநீயென்று காட்டுவதென்பதற்குப்பிரமாணம்.

தாயுமானசுவாமிகள்.

வந்தெனுடல்பொரு ளாவிமூன்றுந் தன்கை வசமெனவே யத்துவா மார்க்கநோக்கி, ஐந்துபுல னைம்பூதங் கரணமாதி யடுத்தகுணமத்தனையு மல்லையல்லை, இந்தவுடலறிவறியாமையு நீயல்லையொன்று பற்றினதனியல்பாய்நின்று, பந்தமறும்

ளிங்களைய சித்தநீயுன்பக்குவங் கண்டறிவிக்கும்பான்மை யம்யாம் என்பதனாற் காண்க.

முப்பத்தாறு தத்துவங்களுங்கடந்துபோய்த் தான் சும்மாவிருந்த தென்பதற்குப்

## பிரமாணம்.

அன்றியும்.

ஐந்துவகையாகின்ற பூதமுதலனைத்து மடங்கவெளியாக வெளிசெய், தறியாமையறிவாதி பிரிவாகவறிவார்க ளறிவாக நின்றநிலையிற், சிந்தையறநில்லென்று சும்மாவிருத்தி என்பதனாற்காண்க.

சிவஞானதேசிகர் தமது திருநோக்கத்தாற் காட்டுவ தென்பதற்குப் பிரமாணம்.

சிற்றம்பலநாடிகள்.

மொழியா துரைக்கிற் குறிக்கப்படுமென்று மூதறிவால்
ஒழியாநிறைவையு மானந்தவாழ்வையு மொண்புகலின்
அழியாவிரதஞ் சிற்றம்பலநாடி யகமகிழ்ந்து
விழியாலெனக்களித் தான்விழுந் தேனினை மேவிட்டதே எ-ம்.

சசிவர்ணபோதம்.

வமொப்பின்ஞானி விழிபட்டு முன்னை வினைவிட்டு முத்தி யுலகிற், றவமற்று வெய்ய வினையேபுரிந்த சிவஞானனெய்து கதையே. எ-ம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

## மஹாவாக்கியம்.

இருவிழிகளுலகறிந்துந் தன்னையறியாததுபோல
யானறியும்பொருளெல்லாதிங் கென்னையறியாமையினுஞ்
கருவிடைபுக்கின்பதுன்பக் கடலிடையேசுழன்ற
கண்கலக்கப்படுவேனைக் கருணைவிழியதனால்
அருவினைகளறநோக்கி யாணவமேபோக்கி
யகமகமெனநிருந்தசெல்லா மறிவுகொண்டேநீக்கிப்
பருவமதிறபதந்தாக்கிக கறபனைகளியாவும்
பாழாக்கித்தானாக்கும பரகுருவைப்பணிவாம். எ-ம்.

## சிவானந்தமாலை.

வீடெழியப்பேறில்லை யென்றென் றும்வேதங்கள்
நாடியறையுமபொருளை ஞானகுரு - நீடுமருட்
சண்ணுலேகாட்டுங் கருணைபபிரான்றனை
னென்றுதே யுண்டிருப்பதென். எ-ம.

## தேவாரம்.

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தாயருணோக்கிற்றீர்த்த
நீராட்டிக் கொண்டாய், எத்தனையுமரியைநீ யெளியையானாய்
யெனையாண்டுகொண் டிரங்கியேன் றுகொண்டாய், பித்த
னேன்பேதையேன் பேயேனாயேன், பிழைத்தனகளெத்தனையும்
பொறுத்தாயன்றே, இத்தனையுமெம்பரமோவையவையோ வெம்
பெருமான் றிருக்கருணையிருந்தவாறே. எ-ம்.

## தத்துவராயசுவாமிகள்.

பிள்ளை தனக்கொருவர் பேதித்தும் பேதிபா
வுள்ளபொருளெல்லா முணர்த்துவிக்கத்-தெள்ளும்
விழியைக்கொடுத்தருளி வேதாந்தந்தன்னை
மொழியபபுகுந்தான் முனி. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

## தேகேந்திரிய விருத்திகளுக்குங் கேவல சமாதிக்குஞ் சாட்சிதானே யென்பதற்குப்

## பிரமாணம்.

### கைவல்லியநவநீதம்.

செய்கையுஞ்செய்விக்கையுமற் றிருக்குங்காந்தச் சிலைமலை முன்னிரும்புகள்சேட் டிக்குமாபோற், செய்கையுஞ செய் விக்கையுமற் றிருக்குமெனைமுன் சடமானவுலகமெலாஞ்சேட் டைசெய்யு, மெய்கலந்தவிந்திரிய விகாரரூபவிவகாரவிருத்தி க்கு விருத்திதானு, மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சியேநான் வெயில்போலென் றுரைத்தவனே விபுமாகாத்தன் என்பத னாற் காண்க.

நான்கு வேதங்களாவன, இருக்கு-தைத்திரியம்-சாமம் அதர்வணமாம். நான்குஉபவேதங்களாவன, ஆயுள்-அர்த்தம்-தனுர்-காந்தர்வமாம். ஆறங்கங்களாவன, மந்திரம் - வியாகர

ணம்-நிகண்டு-சந்தோபிசிதம்-நிருத்தம்-சோதிஷமாம் முப்பத்திரண்டு உபநிஷத்துகளாவன, ஸ்ரீருத்ரம் - ப்ரகதாரண்யம்-ஸ்வேதாசுவதரம்-கைவல்யம்-காலாக்னி-கடவல்லி-காத்தியாயனம்-பிரமம் - நாராயணம்-அங்கிஸம்- பரமாங்கிஸம் - பாற்கரம்-பிரமபிந்து-ஆருணி - அமிர்தபிந்து-பகுவபஞ்சம்-பிரமசாபாலம் - தேஜோபிந்து - வார்சியாநீயம் - போதாயநீயம்-ஆஸ்வலாயநீயம்-சாங்கியாயநீயம்- வாஸிராயநீயம்-சௌனகீயம் சிவசங்கற்பம் சிரவணம்-பாராகம்-கிம்புரோடியம்-மாண்டூகம்-முண்டிரம் - மௌண்டிரம் - ஜாபாலோபநிஷத்து ஆம். இருபத்தெட் டாகமங்களாவன, காமிகம் - யோகஜம் - சிந்தியம் காரணம்-அஜிதம்-தீப்தம்-சூக்ஷமம்-ஸகஸ்திரம்-அஞ்சுமான்-சுப்பிரபேதசம் விஜயம்-நிசுவாசம் ஸ்வாயம்புவம் அனலம்-வீரம்-இரௌரவம் - மகுடம்-விமலம்-சந்திரஞானம்-பிம்பம்-புரோற்கீதம் - இலளிதம்-சித்தம்-சந்தானஸர்வோத்தம்-பாரமேச்சுரம்-கிரணம்-பேதம் வாதுளமாம்.

ஒன்பது உபாகமங்களாவன, பாதற்பாரகம் - பரம் - சிவம்-சரி-சமே-ப்ரகாசம் - பாரதந்திரம்-சிவாக்கியம் சொற்பிரகாசம். ஷட்கோடி மஹாமந்திரங்களின் பெயர்களைக் கற்றுவல்லசான்றோர்களாலும் நூலாந்தரங்களாலும் உணர்க. ஆறு சாஸ்திரங்களாவன, வேதாந்தம் - வைசேஷிகம் - பாட்டம்-ப்ரபாசரம்-பூர்வமீமாம்ஸை-உத்தரமீமாம்ஸையாம். பதினெண்புராணங்களாவன, சைவம்-ஸ்காந்தம்-இலிங்கம்-கூர்மம்-வாமனம்-வராகம் பௌஷிகம்-மச்சியம்- மார்க்கண்டே

யம்-பிரமாண்டம் இவை பத்துஞ் சிவபுராணமாம். நாரதீயம் பாகவதம-காருடம்-வைணவம் இவை நான்கும் விஷ்ணுபுராணமாம். பிரமம்-பதுமம் இவை யிரண்டும் பிரமபுராணமாம். பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம். ஆக்கினேயம் அக்கினிபுராணமாம். பதினெட்டு உபபுராணங்களாவன, உசனம்-கபிலம்-காளி-சநற்குமாரம் - சாம்பவம் சிவதர்மம் - சௌரவம்-தூருவாசம்-நந்தி நாரசிங்கம்-நாரதீயம்-பராசரம்-பார்க்கவம்-ஆங்கிரம்-மாரீசம்-மானவம-வாசிட்டலிங்கம் - வாருணமாம். இதிகாசங்களாவன, பாரதம் - இராமாயணமாம்.

சரிதையாவது, சிவாலயங்களில் அதிகாலமே திருவலகிடல்-திருமெழுக்கால் மெழுகல் - திருவிளக்கிடல்-சுத்தனுகநந்தவனத்திற்சென்று தெரிந்து புஷ்பமெடுத்தல்-தேமாலையாதிகட்டி ஈசன்திருமேனியி லணிவித்தல் - தேவாரம்-திருவாசகம்-பக்தவிலாசம் - ஆகமம-புராணம் ஆகிய இவைமுதலானவைகளைப் பாராயணஞ்செய்தல் வில்வம்முதலான புஷ்பசெடிகளை வைத்துப் பரிபாலனஞ்செய்தல் விபூதி ருத்திராக்ஷம்-காஷாயம்-இலிங்கம் பஞ்சாக்ஷரம என்னும் இப்பஞ்சமுத்திரையில் ஒருமுத்திரையையாவது தரித்த சிவனடியார்களைக்கண்டால் பரமசிவத்தை வழிபடுதல்போல் வணங்கிவந்தனவழிபாடுசெய்தல் சிவாலயம் - விஷ்ணுவாலயம்-ப்ரம்மாலயம்-சாவடி - சத்திரம் ஆகிய இவைகளை நூதனமாகச் செப்வித்தல் ஜீர்ணித்த ஆலயங்களை நூதனமாகக் கட்டுவித்தல்-தினந்தோறுங் கங்கைமுதலாகிய புண்ணியநதியில் ஸ்நானஞ

செய்தல் ஆலயங்களில் அங்கப்பிரதக்ஷணஞ் செய்தல் அடியளந்துநடத்தல் நூற்றெட்டு ஆயிரத்தெட்டென்னுந் தொகைப்படி ப்ரதக்ஷணஞ்செய்தலாம்.

கிரியையாவது, சந்தனம்-புஷ்பம்-தூபம்-தீபம்-நைவேத்தியம் ஆகிய ரு-ம். கோசலம்-கோமயம் - பால்-தயிர்-நெய் ஆகிய ரு-ம். வாழைப்பழம்-எலுமிச்சம்பழம்-நாரத்தம்பழம்-நெல்லிப்பருப்பு-இளநீர் ஆகிய ரு-ம் மற்றும் உபகரணமான பூசாதிரவியங்களும் சேர்த்து ஆக்மசுத்தி-பூசுத்தி-திரவியசுத்தி-மந்திரசுத்தி-இலிங்கசுத்தி ஆகிய பஞ்சசுத்தியும சவுரபூசையுஞ்செய்து சிவத்தியானம்பண்ணிப் பஞ்சப்ரம்மஷடங்கபஞ்சாக்ஷர மந்திர உச்சாடனத்தால் ஆவாகன-ஆஸ்தாபன-சந்நிதாபன-சந்நிரோதன-சகளீகரண-பரிமீகரண- அவகுண்டன-தேனு - யோனி - அமுர்தீகரண - லிங்கமுத்திராம் பரதரிஸ என்று திக்பந்தனுதி மந்திரகிரியாபாவனைகளைக் குறைவில்லாமற்செய்து ஆதன மூர்த்தியை மூலத்தினுலும் அஷ்டபுஷ்பத்தினுலும் அர்ச்சித்துப் பீடத்துவார குருபூசைகளும - ஈசானுதிமுதலானவரணமும் அனந்தாதி இரண்டாமாவரணமும் - நந்தியாதிமூன்றுமாவரணமும்- இந்திராதி நான்காமாவரணமும் - வஜ்ராதி ஐந்தாமாவரணமும் அந்தந்த தேவதாபாவனையுஞ்செய்து வில்வத்தினுல் நூற்றெட்டு ஆயிரத்தெட்டு என்னும் நாமங்களை உச்சரித்து அர்ச்சித்து ஆனந்தத்துடனே தோத்திரமும் இன்பமாகஓமமுஞ்செய்து முறைப்படி செய்த பூசையில் தனக்கொரு போகத்தையுங் குறியாமல்

நிஷ்காமமாகச் சிவார்ப்பிதஞ்செய்து சண்டேஸ்வரபூசையுஞ் செய்தலாம்.

அஷ்டாங்கயோகமாவன, இயமம் - நியமம் - ஆதனம்- ப்ராணாயாமம்- ப்ரத்தியாகாரம் - தாரணை-தியானம் - சமாதி ஆம். இவற்றுள் இயமம் பத்துவகைப்படும் அவையாவன, அஹிம்ஸை - சத்தியம் - அஸ்தேயம் - ப்ரம்மசரியம் - தயை ஆர்ஜவம் - க்ஷமை - திரிதி - மிதாஹாரம் - சவுசம் ஆம். அஹிம்ஸையாவது, யோகார்த்தம் திரிகரணத்தாலும் அன்னிய பிராணிகளுக்குத் துக்கத்தைச் செய்யாம லிருத்தல். ஞானார்த்தம், ஆத்மா அறுக்கப்படாதது - தகிக்கப்படாதது நனைக்கப்படாதது - உலர்த்தப்படாதது எனவறிதல். சத்திய மாவது யோகம், எதார்த்த கேள்வியினாலும் ப்ரத்தியக்ஷப் பார்வையினாலும் அறிந்ததைச்சொல்லுதல். ஞானம் எவற் றையும் சத்திய ப்ரம்மமயமாய்ப்பார்த்தல். அஸ்தேயமாவது யோ - ம். அன்னியருடைய சொத்துகளைக் கிரகிக்கவேண்டு மென்று மனத்தாலும் நினையாதிருத்தல். ஞா - ம். ஆத்மா வை அனாத்மாவாக உச்சரியாம லிருத்தல். ப்ரம்மசரியமா வது, யோ - ம் ருதுகாலமன்றி மற்றகாலத்தில் சுவ ஸ்திரீயை யும் விரும்பா திருத்தல். ஞா - ம். மனத்தினால் தன்னை ப்ர ம்ம சொரூபமாகத் தானே எண்ணிக்கொள்ளுதல். தயை யாவது, தன்னைப்போல் யாவரும் மோக்ஷத்தை அடைய மனத்திற்கொள்ளுதல். ஆர்ஜவமாவது, பெண்டீர்முதல் சத் துருவளரியினுஞ் சமமாயிருத்தல். க்ஷமையாவது, சத்துருக்

கள் தங்கள் திரிகரணங்களாலுஞ் செய்யாநின்ற துக்கங்களை மனத்தில் தரியாமலுங் கலங்காமலு மிருத்தல். திரிதியாவது, யோ-ம் வேதவிசாரணையினால் சமுசாரத்திலிருந்து விடுபடுத லே சுகமன்றி வேறில்லையென்றறிதல். ஞா - ம் நான் ப்ரம்ம மேயன்றித் தேகமல்லன் என்று நிச்சயித்தறிதல். மிதாஹார மாவது, அதிகமுங் கொஞ்சமுமில்லாமல் சமமாகப்புசித்தல். சவுசமாவது, யோ - ம் காயத்தை மண்ணினாலும் சலத்தினா லுங் கழுவுதல். இதுபகிஸ்சவுசம், ஞா-ம் சொரூபத்தைமன னஞ்செய்தல், இது அந்தஸ்சவுசம். நியமம் பத்துவகைப்ப டும். அவையாவன, தபசு-சந்தோஷம் - ஆஸ்திக்யம் தானம்-ஈஸ்வரபூசை-சித்தாந்தசிரவணம்-லஜ்ஜை-மதி செபம்-விரதம் ஆம். தபசாவது, யோ - ம் உபாசனத்தினால் தேகத்தை சுஷ் கப்பண்ணுதல். ஞா-ம் ஆத்மவிசாரம்பண்ணுதல். சந்தோஷ மாவது, யோ-ம் அற்பசிரமையினாலாவது பரலிச்சையினாலா வது கிடைக்கின்ற புசிப்பினிடத்திலே போதுமென்று திரு ப்தியடைதல். ஞா-ம் இகத்திலும் பரத்திலும் அடையாநின்ற போகங்களில் உபேக்ஷைபண்ணி ஆத்மாவினிடத்தில் பிரீதி வைத்திருத்தல் இதற்குப் பரமசந்தோஷமென்றும் பெயர். ஆஸ்திக்யமாவது, சுருதி ஸ்மிருதி வாக்யார்த்தத்தில் விசுவா சம் வைத்தல். தானமாவது, நீதியில்நின்று சம்பாதிக்கின்ற தனது பொருளைப் பிரமநிஷ்டர்களுக்குங் கர்மிகளுக்குங் கொடுத்தல். ஈஸ்வரபூசையாவது, திரிமூர்த்திகளையும் வர்ணத் திரயத்தாரும் தங்கள் சக்திக்குத்தக்கபடி பூசித்தல் சித்தாந்த

ச்ரவணமாவது, வேதசித்தாந்தத்தைக் குருமுகத்தில் நிச்சயித்தல். லஜ்ஜையாவது, லவுகீகத்திலாவது வைதீகத்திலாவது பொல்லாங்கானகாரியத்தில் வெட்கமடைதல். மதியாவது, வேதத்திற்சொல்லிய புண்ணியங்களை விசுவாசித்தல் வேதசாஸ்திரத்தின் அர்த்தம் விசாரித்தல். செபமாவது, வேதஞ்சொன்னபடி மந்திரங்களை உறுவேற்றுதல். இதைப்பாசுபத விரதமென்றும் - சிரோவிரதமென்றும்-அத்தியாசிரமவிரதமென்றுஞ் சொல்லுவார்கள். விரதமாவது, காயத்தால் அன்னியனை அடித்தல் - அன்னியருடைய ஸ்ரீயைபபிடித்தல் அன்னியருடையசொத்தைப் பலவத்காரமாகஎடுத்தல் ஆகிய இம்மூன்றையுஞ் செய்யாதிருத்தல். வாக்கினுல் கடூரமாகப் பேசுதல் - பொய்சொல்லுதல் - கோள்சொல்லுதல்-உளறல் ஆகிய இவை நான்கையும் விட்டிருத்தல் மனசு அரிஷட்வர்க்கத்தை விட்டிருத்தல். தேகமுழுதும் விபூதிதூளிதம்பண்ணுதல். ஆசனம ஒன்பதுவகைப்படும். அவையாவன, ஸ்வஸ்திகம்-கோமுகம்-பதுமம் - வீரம்-கேசரி-பத்திரம்-முத்தம்-மயூரம் - சுகம் ஆம் இவற்றுள் ஸ்வஸ்திகமாவது, துடைக்கும் முழங்காற்கும் நடுவே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இறுமாந்திருத்தல். கோமுகமாவது, ஜகனபக்கத்தில் இருகாற் பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல். பதுமமாவது, இருதொடை மேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறித் தோன்றவைத்தல். வீரமாவது, வலத்தொடையில் இடக்காற் பரட்டைச்சேர்த்து இறு

மாப்புற் றிருத்தல். கேசரியாவது, பீஜத்தின்கீழ் ஜீவனியிடத்துப் பரட்டை வைத்து இட முழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலியைவிரித்து நாசியைப்பார்த்திருத்தல். பத்திரமாவது, பீஜத்தின்கீழ் ஜீவனியிடத்து இருகாற் பரட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல். முத்தமாவது, இடக்காற் பரட்டால் ஜீவனியை அழுத்தி வலக்கால்பரடு அப்பரட்டின்கீழ் உந்திருத்தல். மயூரமாவது, முழங்கையிரண்டும் உந்திபுறத்தில் அழுந்தப் புவியிற்கையூன்றிக் கால்நீட்டித் தலைநிமிர்ந்திருத்தல். சுகமாவது. சுகமுந் திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல் இவ்வொன்பதும் முக்யாசனமாம், இவை முக்யாசன மெனவே இரு குதிகாலுஞ் ஜீவனியிடத்திற் பொருந்த இருபுறவடியின்மீதிலும் இரண்டங்கையுஞ் சேர்த்து மார்புநெறித்துத் தலைநிமிர்ந்திருத்தலாகிய குக்குடாசன முதலிய சிலவாசனங்களும் உளவெனக் கொள்க. ப்ராணயாமம் இரண்டுவகைப்படும், அவையாவன, சகர்ப்பம் அகர்ப்பம் ஆம். சகர்ப்பமாவது, தியானத்துடன் மூச்சைப்பிடிப்பது. அகர்ப்பமாவது, தியானமில்லாமல்மூச்சைப் பிடிப்பது, இந்த இருவகையும் இரேசக பூரக கும்பகமாயிருக்கும். ரேசகமாவது மூச்சைவிடுதல், பூரகமாவது மூச்சை ஏற்றுதல், கும்பகமாவது மூச்சைநிறுத்துதல், இன்னும் பலவிதமாயிருக்கும். ப்ரத்யாகாரமாவது, யோ-ம். மனத்தை இந்திரியவிஷயங்களிற் செல்லவொட்டாமல் லக்ஷ்யத்தில் நிறு

த்துதல். ஞா - ம் சர்வம் ப்ரம்மமயமாய்ப் பார்ப்பதெனப் ப்ரம்மநிஷ்டர்கள் சொல்லுதல் வேதத்திற்சொல்லிய நித்திய நைமித்திய காமியகர்மங்களைப் பிரமாராதனமென்று செய்யு தல் தேகத்தை நானென்று நினைப்பதைத்தள்ளிச் சித் ஆத்மா வே நானென்று நினைத்திருத்தல். தாரணையாவது, யோ - ம் தேகாகாசத்தை வெளிஆகாசமாகவும், தேகவாயுவை வெளி வாயுவாகவும், தேகத்தீயை வெளித்தீயாகவும், தேகநீரை வெ ளிநீராகவும், தேகமண்ணை வெளிமண்ணாகவும், நினைததிருத் தலும் பாதமுதல் முழங்கால்வரையில் பிருதுவிபாகம் பிரம னாகவும், முழங்கால் முதல் தொப்புள்வரையில் சலபாகம் விஷ்ணுவாகவும், நாபிமுதல் மார்புவரையில் அக்கினிபாகம் ருத்திரனாகவும், மார்புமுதல் புருவம்வரையில் வாயுபாகம் ஈஸ்வரனாகவும், புருவமுதல் சிரசுவரையில ஆகாச பாகம் சதாசிவமாகவும் நினைத்திருத்தலும், மனத்திற்குச் சந்திரன், காதிற்குத் திக்கு, தோளுக்கு விஷ்ணு, புயத்திற்கு ஹரி, வாக்குக்கு அக்கினி, குதத்திற்கு மிருத்யுவு, உபஸ்தத்துக் குப் பிரஜாபதி, தொக்குக்கு வாயு, கண்ணுக்குச் சூரியன், நாவுக்கு வருணன், மூக்குக்குப் பூமிதேவி, புருஷனுக்கு அந் தரியாமி, அதிஷ்டான தேவதையென்று புத்தியில் தரித்த லும் ஆம் ஞா-ம். தேகாதிப்பிரபஞ்சமாகிய பஞ்சபூதங்களை மஹாபூதங்களில் ஒடுக்கி, மஹாபூதங்களை மாயையில்ஒடுக்கி, மாயையை ஆத்மசொரூபத்தி லொடுக்கித் தான் சின்மாத்திர னென்று மனதில் தரிப்பதுவும், நான் தேகாதிகளு மன்று.

அதற்குரித்தாகிய மாயையும் அன்று, நான் சின்மாத்திரமெ ன்று ஒடுங்கிநிற்பதுவும் பரமதாரணையாம். தியானமாவது யோ - ம். மனதை மூர்த்திவடிவமாக்கி மற்றொன்றிலும்பெ ருந்தாமற் செலுத்தல். ஞா - ம. தேயாதீதமாயும் திக்குருட மாயும் இருக்கிற சின்மாத்திரத்தை நானென்று தியானிட பது பரமதியானமாம். இபபடி தியானிக்கிறவனைச் சாக்ஷாத் பரமசிவனெனப்படும.

சமாதியாவது, யோ-ம். ஜீவனுக்கும் பரனுக்கும் ஐக்ய அபேதக்யானம் பிறக்கின்றதேயாம. ஞா-ம் நான்சாக்ஷி ஸ்வ ரூபனுகையினாலே நான் தேகாதிகளல்லன். நான் பரமசிவ னென்ற புத்தியும் பிரமாண்ட பிண்டாண்டங்களை ஸ்தூல பஞ்ச பூதங்களிலொடுக்கி அந்தப் பூதங்களை அபஞ்சீகிருத பூதங்களில் ஒடுக்கி அச்சத்தாதியாகிய தன்மாத்திரைகளை மாயையிலொடுக்கி அம்மாயையைப் பிரத்தியேகாத்மாவிலொ டுக்கி அவ்வாதமாவாகிய நானேபிரமம் நான்சமுசாரியல்லன் என்னைவிட வேறேயில்லையென்று அறிவதும் ப்ரணவஸ்வரூப மான பரமேஸ்வரனை மூன்று வர்னங்களாகப்பாவித்து அம் மூன்று வர்னங்களையும இருக்கு - தைத்திரிய - சாமரூபங்க ளாக பாவித்து நாதத்தை அதர்வண வேதமாகப் பாவித்து அம்மூன்று வர்னங்களையும் பிரம்மா-விஷ்ணு-ருத்திரர்களா கப்பாவித்து அந்த வர்னத்தினுடைய நாதத்தைக் காரண ஈஸ்வரராகப் பாவித்து அம்மூன்று வர்னங்களையும் மூன்று அக்கினியாகவும், மூன்று லோகமாகவும், மூன்று அவஸ்தை

யாகவும், மூன்று ஸ்தானங்களாகவும், மூன்று ஸ்வரங்களாக வும், மூன்று காலங்களாகவும் பாவித்து அகாரத்தை உகா ரத்திலொடுக்கி, உகாரத்தை மகாரத்திலொடுக்கி, மகாரத்தை நாதத்திலொடுக்கி, நாதத்தை மாயையிலொடுக்கி, மாயையை ஜீவனிலொடுக்கி, ஜீவனே ஈஸ்வரன் அவனே நானென்று பாவிப்பதும் பரமசமாதியாம். உ

(அ-கை.) அப்தராலடையும் மஹாவாக்யமாகிய ஆத்ம ஞானத்தாலன்றிச் சரிதையாதி தொழிலினால் முத்திகிடையா தெனல்.

வேறு.

சரிதையின்றொழிலினுஞ் சற்கிரியையினும்யோகம்
புரிதருமுயற்சியானும் பொருந்தாதென்பர்மேலோர்
உரியதேசிகனுரைக்கு மொருமொழியுண்மையாலே
அரியமெய்ஞ்ஞானவீடுங் கடைவது திண்ணமாமே.

(இ - ள்.) அருமையாகிய உண்மை ஞானத்திற்குரிய சீவன்முத்தியைச் சரிதைதொழிலினாலும் நல்கிரியையினு லும், அஷ்டாங்க யோகஞ் செய்தலாகிய முயற்சியினாலும் அடையக்கூடாதென்று மேலாகிய ஞானவான்கள் சொல் லுவார்கள் (மற்றையாதினால் அடையலாமெனின்) உரிமை யாகிய ஞானாசிரியர் அனுக்கிரகிக்கின்ற உண்மைபொருந்திய ஒரு மஹாவாக்யத்தினால் அடைவது நிச்சயமாம் எ - று. இன் சாரியை ஏ-ஏ அசைகள்.

[ப - ம்.] நிஷ்காமபூசை யென்பார் சற்கிரியையென்று சச்சிதானந்தமாகிய பரமசிவத்தினுடைய அருளுக்குச் சுதா தாரப்பட்டவரென்றும், மாணுக்கனது உடல்பொருளாவி யெ ன்னு மூன்றிற்கும் அதிகாரியென்றும், ஆத்மகோடிகள் சநந மரண அவஸ்தையிலுழலாமல் நிலைபெற்ற நற்கெதியைப் பெற்றுக்கொள்ளத் தாமேதேடி ஞானபோதகஞ் செய்யுங் கருணைக்குரியவரென்றும், தன் சொரூபமாய் விளங்குகிற உலகத்தின் கண் தனது லீலைக்குரித்தாய்ப் பிரகாசிக்கின்ற உயிர்த்தொகைகளில் இருவினையொப்பு மலபரிபாகஞ் சதுர்த்தா சத்தினிபாதத்தன்மை பெற்றவர்களைப்பார்த்துத் தன் மயமாகச் செய்யும் அருளிறைவடிவமென்றுங் கூறுவார். உரியதேசிக னென்றார்.

[இ - ம்.] ஆத்மஞானத்தன்றி ஏனையவற்றால் சநந மரணம் ஒழியாவென்பதாம்.

---

## சரிதையாதிதொழிலாற் பயனின்று ஞானமொன்றினாலேயே முத்தியேன்பதற்குப் பிரமாணம்.

### பிரமகீதை.

சரிதையாதியொருமூன்றுஞ் சவுபானங்கள்பயனில்லை, அரியும்பிரமனுரானு மறிதற்கரியதாரணங்கள், உரையுமில்லைமுடிவறியா வொன்றாய்நினைறதனிஞானப், பொருளையிருளும்வெளியுமிலாப் போதமருவிக்களியென்றான். எ-ம்.

## சிவஞானதீபம்.

சாத்திரம்புத்தகம் பூசைசமயமதந்தருக்கந் தந்திரமந்திர
யோகந் தவவிரதஞ்சீல, மேத்ரியபாவனையெண் சித்திகளே
முதலா மெய்ப்பயனுமுத்திவிலக் கெனவொருசொல் லதனால்,
தீர்த்தவன்மெய்த் தேசிகனு மவனருளா லகலாச் சித்தமல
மறுத்துலகிற் றீமை நன்மைசெயினும், வாய்த்தகதிரவன்செ
யலபோ லிசைந்திசையாதொழுகும் வண்மையரே மெய்ஞ்
ஞான வுண்மைநிலையினரே. எ-ம்.

## பிரபுலிங்கலீலை.

உரைசெயிற்பரமஞான மொன்றுமேமுத்திக்கேது, சரியை
நற்கிரியை யோகந் தாமொரு மூன்றுஞான, மருவுதற் கேது
வென்றே மறைபுகன் றுரைக்குமிந்தக், கருவினைப் பொரு
ளென்றெண்ணிக் களிப்பவர் கயவரன்றே. எ-ம்.

## திருமந்திரம்.

ஞானத்தின்மிக்கதவ நெறிநாட்டில்லை
ஞானத்தின்மிக்க சமயமுநன் றன்று
ஞானத்தின்மிக்கவை நன்முத்திநல்காவால்
ஞானத்தின்மிக்கார் நரரின்மிக்காரே: எ-ம்.

## தாயுமானசுவாமிகள்.

பத்திநெறிநிலைநின்று நவகண்டபூமிப் பரப்பைவலமாகவந்
தும். பரவையிடைமூழ்கியு நதிகளிடைமூழ்கியும் பசிதாக

மின்றியெழுதா, மத்தியிடை நின்றமுதிர் சருகுபுனல்வாயு வினை வன்பசிதனக்கடைத்து மௌனத்திருந்துமுயர் மலை முழைபுக்கியு மன்னுதசநாடிமுற்றுஞ், சுத்திசெய்தும்மூல ப்ராணனேடெங்கியைச் சோமவட்டத்தடைத்துஞ் சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல்கற்பங்க டோறுநிலை நிற்கவீறு, சித்தி செய்துஞ் ஞானமலதுகதி கூடுமோ சித்தாந்த முத்திமுதலே சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே.

## ஒழிவிலொடுக்கம்.

சரிதைகிரியைகளைச் சற்றுக்கிச்சாகாக்
கருமயோகத்தைக் கழற்ற - வரிதவர்க்குத்
தோன்றியதுபொய்யாசுக காண்கையிலேதோன்றுத
வூன்றியபோதங் கழனுமோ. எ-ம்.

## சசிவர்ணபோதம்.

ஐயறிவறிந்தவை யடங்கினர்களேனும்
மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறுரே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

## ஆசிரியர் உடல்பொருளாவி மூன்றிற்கும் உரியவரென்பதற்குப் பிரமாணம்.

### திருவாசகம்.

அன்றேயென்றனாவியுமுடலு முடைமையெல்லாமுங், குன்றேயனையா யென்னையாட்கொண்டபோதே கொண்டிலையோ, வின்றோரிடையூ றெனக்கு[illegible]டோ வெண்டோண்முக்கணெம் மானே, நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோவிதற்கு நாயகமே, என்பதனாற்காண்க.

## ஆசிரியர் ஆத்மாக்களைத் தாமேதேடி ஞானபோதஞ்செய்வ ரென்பதற்குப் பிரமாணம.

### திருவாசகம்.

வேண்டத்தக்கதறிவோய்நீ வேண்டமுழுதந்தருவோய்நீ, வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய், வேண்டிநீயாதருள்செய்தா யானுமதுவேவேண்டி னல்லால், வேண்டும்பரிசொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே என்பதனாற் காண்க. க

(அ - கை.) சர்வசங்க பரித்தியாகத்தினாலும் எல்லா ஞானநூலுணர்வினாலும் முத்தியின்றெனல்.

*கட்டறத்துறந்தே யுயிர்பொருட் சார்பைக் கருதிடும்வாசனையனைத்தும், ஒட்டறவிடுத்து ஞானநூலனைத்துமோர்ந்திடினென்பயனுதவும், எட்டுதற்கரிய சற்குருவருளா லியம்புமோர் மொழியினைப்பெற்றே, நிட்டைசாதித்தே சகலகேவலங்க ணீங்கிடிற் பிறப்பிறப்பறுமே.*

(இ-ள்.) பந்தங்களை முழுதும் நீக்கினாலும் உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை நினைத்துச்செல்லும் இந்திரிய வாசனைகளெல்லாவற்றையும் பற்றறவிட்டாலும் ஞானசாஸ்திரங்களை ஒருங்கே வாசித்தறிந்தாலும் என்னபிரயோசனத்தைத்தரும், ஆதலின் அவாங்மனோ கோசரமாகிய அருளிறை வடிவமாய் வந்த ஞானதேசிகர் கிருபையினால் அநுக்கிரகிக்கத்தக்க ஒப்பற்ற மஹாவாக்கியத்தைப் பெற்றுக்கொண்டு ஞானநிஷ்டா சாதனஞ்செய்து தோற்றவொடுக்கங்களாகிய * சகலகேவலங்களில் நின்றும் நீங்கினால் சநநமரண மொழித்து முத்தியைப் பெற்றுக்கொள்ளலாம் எ - று. ஏ-ஏ-ஏ-ஏ இந்நான்கும் அசைகள் பிறப்பிறப்பறுமென்றதனால் முத்திவருவிக்கப்பட்டது.

---

** சகலகேவலமாவன, குடிலையில் நின்றும் நீங்கிப் பராசத்திவடிவமா யிருக்கின்றோமென நினைத்தலும் அந்நினைவை மறத்தலும், துஷ்டநீம் பூதனை தன்னிடத்தில் ஒன்றுமில்லாததை நினைத்தலும் மறத்தலுமாமெனக்கொள்க.—ஆணவமாயையின் காரியமாகும் நினைத்தலும் மறைத்தலுமெனக் கூறுவாருமுளர்.*

(ப-ம்.) ஒருவன் ஆத்மஸ்வரூபமாகிய தன்னை அநாத்மாவாகிய சரீர முடிக்கொண்டிருப்பதுபோலத் தனதுதேகத்துக்குப் புறம்பாயிராநின்ற பெண்டீர்முதலிய சுற்றத்தாராகிய உயிர்ச்சார்பும், கிரகமுதலிய க்ஷேத்திர தனதானியங்களாகிய பொருட்சார்பும், ஆகிய புறப்பற்றுக்கள் முடியதைப் பொய்யென்றறிந்து அவைகளில் தோன்றும் வாசனையாகிய அகப்பற்றை ஒருங்கேவிட்டு வெளிப்படுகின்ற சாமான்னியத்தில் அடையக்கூடாமையான துறவைப் பெறுவானாயின் அவன் அந்தச் சரீராந்தத்தில் இவ்வுலகத்தாரால் அருமையாய்ப் புகழப்படுவதேயன்றித் தன் உண்மைவடிவத்தை அறிகின்ற சொரூபலாபமான முத்தியை அற்பமும் பெறமாட்டானென்பார். கட்டறத்துறந்தே யுயிர்பொருட் சார்பைக் கருதிடும்வாசனையனைத்து, மொட்டறவிடுத்து மென்பய னுதவுமென்றும், வேதம் முடிவாகிய தற்புருஷார்த்த நிலைபரியந்தம் உணர்த்தி அதற்குமேல் கூறப்படாமையால் வாயடங்கிற்றென்று அதையே விரித்துத் தெளிவாகச்சொல்லுகின்ற பல ஆத்மஞான சாத்திரங்களைக் கிரமமாகவாசித்தும் அவற்றின் அர்த்தங்களைப் பூரணமாகக் கிராகியம்பண்ணியும் அவற்றின் நுட்பங்களை யுத்தியாலும் ப்ரமாணங்களாலும் அறிந்தும் தன்னிலை அஃதே என்று நிச்சயத்தாலும் சம்ப்ரதாயத்தில் வந்த சதாசாரியரால் தனது வடிவமான அருட்கண்சோநிலையைப் போதிக்கப்பெற்று அவரது திருக்கண்ணோக்கத்தினல் அருளும் கிருபையின்வழித்தாய்நின்று பிரமசாதனந்

செய்து சுவாநுபூதி சாட்சாத்காரத்தை அடைந்தாலன்றி முத்திப்பிரயோசனத்தை ஒருகாலும் அடையக்கூடாதென்பார். ஞானநூலாராய்ந்து மோர்ந்திடு மென்பயனுதவுமென்றும், காயத்தினுல் வணங்கியும், வாக்கினுல் தோத்திரஞ்செய்தும், மனத்தினுல் தியானித்தும் அறிதல் கூடாமையான ஞானாசிரியரது திருவருள்வலியால், எப்பொழுதும் உளத்தின்கண் நெக்குநெக்குருகிக் கரக்கம்பஞ் சிரக்கம்ப முதலானவைகளும் உண்டாகக் கண்கள் ஆனந்தபாஷ்பஞ்சொரியத் தேகமெய்ச்சிலிர்த்து அவசப்பட்டிருக்குங் காலத்தில் உதயமாகின்ற சச்சிதானந்த ஸ்வரூபமாகிய மௌனகுருவினது அருட்பார்வையென்னுஞ் சுவாநுபூதி பரத்தியக்ஷமெனவுங் கூறுவார். எட்டுதற்கரிய சுகநிலைநின்றும், இதுதன்மைப்பட்ட சுவாநுபூதி சாக்ஷாத்காரத்தை உணர்த்துந்தந ஞானாசிரியரிடத்திற் சற்சீடன் அடைந்து அவர்மனங் களிகூர நடந்து ஞானநிஷ்டையைப் பெற்றுக் குருகுலவாசமாயிருந்து சதாநிஷ்டைசெய்து வருங்காலையில் சுவாநுபூதியின்கண் அடையாநின்ற சம்சயங்களனைத்தையும் அவ்வாசிரியரிடத்தில் தீர்தலடையும்பொருட்டு விண்ணப்பம்பண்ணிக்கொண்டு அவை நீங்கினபின்னர் ஜீவேஸ்வர சகத்பேதமாகிய நினைப்பு மறப்பையும் விட்டுத் தன்னை எதிரிட்டறிய உதயமாகின்ற கிஞ்சித் அறிவான இருப்பையும்விட்டுத் ததாகாரமாய்நின்ற விடத்திலேயே நிரதிசயானந்த மாகிய முத்தி தடஸ்தமாக விளங்குமென்பார். நிட்டைசாதித்தே சகலகேவலங்க ணீங்கிடிற் பிறப்பிறப்பறு மென்றுங் கூறினர்.

[இ-ம்.] சிவஞானதேசிகர் அநுக்கிரகிக்கின்ற நிலையின் வழிநின்று சாதனஞ்செய்கின்ற அநுபவிக்கேயன்றி ஏனை யோர்க்கு முத்தியின்றென்பதாம்.

---

துறவடைந்ததனால் முத்தியின்றென்பதற்குப்
பிரமாணம்.

பட்டணத்துப்பிள்ளையார்.

காடேதிரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி
யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்குவிண்ணோர்
ாடேயிடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடேயிருப்பினு மெய்ஞ்ஞானவீட்டின்ப மேவுவரே.

அன்றியும்,

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழிதுயின்று
பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர் பற்றற்றவரே.

எனவருதலாற் காண்க.

ஞானநூலுணர்வினால் முத்தியின்றென்பதற்குப்
பிரமாணம்.

திருவாசகம்.

நூலுணர்வுணரா நுண்ணியோன்காண்க. ஏ-ம்.

தாயுமானசுவாமிகள்.

கற்றதுங்கேட்டதுந்தானே யேதுக்காகக் கடபடமென்றுருட்டுதற்கோ கல்லாலெம்மான், குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக்கண்டு குணங்குறியற் றின்பநிட்டை கூடவன்றோ.

அன்றியும்,

சின்னஞ்சிறியார்கள்செய்த மணற்சோற்றையொக்கும்
மன்னுங்கலைஞானமார்க்கம் பராபரமே. எ-ம்.

அருணகிரியந்தாதி.

கற்றதனாற்றொல்லைவினை கட்டறுமோ நல்லகுலம், பெற்றதனாற்போமோ பிறவிநோய் - உற்றகடல், நஞ்சுகந்துகொண்டருணை நாதரடித்தாமரையை, நெஞ்சுகந்து கொள்ளாநெறி. எ-ம். வரும் பற்றும் வருவனவற்றாற் காண்க.

சதாநிஷ்டையாலேயே

## முத்திஅடையலாமென்பதற்குப் பிரமாணம்.

தாயுமானசுவாமிகள்.

கேட்டலுடன்சிந்தித்தல் கேடிலாமெய்த்தெளிவால்
வாட்டமறுவுற்பவநோய் மாறுமோ - நாட்டமுற்று
மெய்யானநிட்டையினை மேவினர்கட்கன்றோதான்
பொய்யாய்ப்பிறப்பிறப்பும் போம். எ-ம்.

## சிவபோகசாரம்.

*தன்னையிருந்திடத்தே தானேசுகவடிவா*
*யின்னபடியென்றுணரா வெங்கோனுட் - பின்னமற*
*நின்றநிலைதானுந்தெறியாதே நின்றவர்கட்*
*கன்றேபிறப் பறுக்கலாம்.* எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

### துறவினாற் புகழும் ஞானமொன்றினால்

## முத்தியு மேன்பதற்குப் பிரமாணம்.

### உபநிடதம்.

*தோற்று முபரதிவை ராக்கியஞான மூன்றிவைக டொழிற்பட்டாரு, ளேற்றுமுபரதியுடையார் பிரமாதிபதமடைவரிகலோகத்திற், போற்றும்வைராக்கியருக்கு மப்பதமுண்டா ஞானம் பொருந்தினோர்க்குச், சாற்றரியதனிமுத்தி சரீரந்தத்தெனவுரைப்பர் தகமையோரே.* என்பதனாற் காண்க.

(அ-கை.) *பலநூலுணர்வினாலும், தத்துவசோதனையினாலும் முத்தியின்றெனல்.*

---

*வித்தகமாகப் பலகலைபயின்று மேவுநற்பயன்களை யறிந்தும், தத்துவமுழுதுங் கசடறவோர்ந்துந் தன்னிலையறிவதற் கரிதாம், சுத்தமெய்ஞ்ஞான தேசிகன்மகிழ்ந்து சொல்லாமற்*

சொல்லுமோர் மொழியாம், முத்திரைமோன நிலையினாலன்றி
முத்தியினிலைகிடையாதே.

(இ - ள்.) ஒருவன் ஞானமுண்டாகப் பலநூல்களை வா
சித்தாலும் அந்நூல்களிலுள்ள சிறந்த பிரயோசனங்களைத்
தெரிந்தாலுங் குற்றமறத் தத்துவங்க ளெல்லா வற்றையும்
அறிந்தாலும தனது ஆத்மஸ்வரூப நிலையை அறிவதற்கு
அரியதாகும். ஆதலால் பரிசுத்தமான உண்மைபொருந்திய
ஞானாசிரியர் உள்ளக்களிப்புடன் சொல்லாமற்சொல்லுகின்ற
ஒப்பற்ற மஹாவாக்கியமாகிய சின்முத்திரையினாலாகும் மௌ
னநிலையினாலன்றி மற்றொன்றினாலும் மோக்ஷநிலைகிடையாது
எ-று. ஏ-அசை.

(ப - ம்.) அறுபத்துநாலு கலைக்கியானங்க ளென்பார்
பலகலையென்றார். பரமசிவனாருடைய பராசக்தி அருளினாலே
குடிலையில் நாதமும், நாதத்தில் விந்தும், விந்துவில் சாதாக்ய
முஞ், சாதாக்யத்தில் மஹேஸ்வரமும், மஹேஸ்வரத்தில் சுத்
தவித்தையுந் தோன்றும். இவ்வைந்தினுள் விந்துவிலே நாலு
வாக்கும் ஐம்பத்தோரக்ஷரமும் எண்பத்தொருபதமும் இரு
நூற்றிருபத்துநான்கு புவனமும் சப்தகோடிமஹாமந்திரமும்
சகலசாஸ்திரமும், விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனு
கரணபுவனபோகங்களும், சரியைகிரியை யோகங்களில் நின்
றோர்க்குச் சாலோக சாமீப்பிய சாரூப்பியமென்னும் பதமுத்
திகளும் பஞ்சகலைகளுந் தோன்றும் இவை சுத்தமாயையின்

தோற்றமாம். அனந்ததேவனருளினாலே அசுத்தமாயையிலே நின்றுங் காலமும் நியதியும் கலையுந்தோன்றும். கலையில் வித்தையும், வித்தையில் இராகமுந் தோன்றும். உருத்திரதேவனருளினாலே முன்சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும். முக்குணங்களுந் தோன்றாது நின்றவிடம் அவ்வியக்தம் இந்தஅவ்வியக்தத்திலே சித்தமும் புத்தியுந்தோன்றும். புத்தியிலே அகங்காரந்தோன்றும், அதுதான் யான் எனதென்று விகற்பித்துவரும், அதுதான் அகந்தைக்குவித்தாகும் அதுதான் தைசசாங்காரமென்றும், வைகாரிகாங்காரமென்றும், பௌதாதிகாங்காரமென்றும் மூன்றுவிதமாயிருக்கும். தைசசாங்காரத்திலே சத்துவகுணத்தினுடைய மனமும் புத்தியும் சுரோத்திராதிகளுந் தோன்றும். வைகாரிகாங்காரத்திலே இரஜோகுணத்தினது வாக்காதிகளுந்துப் தோன்றும். பௌதாதிகாங்காரத்திலே தமோகுணத்தினுடைய தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளுந் தோன்றும். சத்தத்திலே ஆகாயமும், பரிசத்திலே வாயும், ரூபத்திலே தேயுவும், இரதத்திலேஅப்புவும், கந்தத்திலே பிருதுவியுந்தோன்றும். ஒடுங்குங்காலத்துத் தோன்றினவடைவே ஒடுங்கும். உள்நிலைக்கருவிகள் முப்பத்தாறு புறநிலைக்கருவிகள் அறுபது ஆக தத்துவம் தொண்ணூற்றாறுமாகிய தேகத்துடனே கூடிநின்று ஆத்மாபுசிக்கும், அவசரத்தி னுணர்ந்துமுறைமை எங்ஙனமெனில் கீழாலவஸ்தைக்கு நிற்குங்கருவிகள் தத்துவம் ௩௫-ம் மேலாலவஸ்தைக்குத் தத்துவம் ௩௬-ம் ஆம்.

இனிச் சுத்தாவஸ்தை என்பது பூதங்களைத் தரிசிக்கில் தூல தேகமிலையென்பதும் இந்திரியங்களைத் தரிசிக்கில் பூதங்களில வென்பதும், அந்தக்கரணங்களைத் தரிசிக்கில் இந்திரியங்க ளிலவென்பதும், கலாதிகளைத்தரிசிக்கில் அந்தக்கரணங்களில வென்பதும், சுத்தாத்துவாக்களைத் தரிசிக்கில் கலாதிகளில வென்பதும, அருளைத்தரிசிக்கில் சுத்ததத்துவங்களிலவென் பதுமாம. இந்தப் பசுகரணங்கள் சிவகரணங்களாயிருத்த லே நின்மலசாக்கிரமெனவும் கண்டு-கேட்டு-உண்டு-உயிர்த்து உற்றுப் பொருந்துவனவெல்லாம் மனதிற் கோசரியாமலிருத் தலே நின்மல சொப்பனமெனவும், இந்தப்பேறு பெற்றோ மென்னும் நிராசையால் பரிணாமத்தை அடைதலே நின்மல சுழுத்தியெனவும், தனக்கு இன்பம் பிறந்து சம்பூரணத்தை அடைதலே நின்மலதுரியமெனவும், நீரிலே முழுகிவிட்டவ னைப்போலிருத்தலே நின்மலதுரியாதீதமெனவுங், தத்துவ ரூபம - தத்துவதரிசனம- தத்துவசுத்தி-ஆத்மரூபம் - ஆத்ம தரிசனம் ஆத்மசுத்தி - சிவரூபம்-சிவதரிசனம் - சிவயோகம- சிவபோகம் என்னுந் தசகாரியங்களெனவுங் கூறுகின்ற சை வாகம சித்தாந்தமுறைப்படியே ஒருவன பகிர்முகத்தில் அதி நுட்பமாக உரைப்பெற்றுஞ் சிவஞானதேசிகரால் அந்தர் முகத்திற் பெறுகின்ற ஞானநிட்டையின் வழித்தாய்நின்று ஆணவாதிமலங்களில் நின்றும் நீங்கி ஆன்மா அருளோடுங் கலந்து நிற்கின்ற காலவரையிலுஞ் சாதிக்கப்பெறுனாயின் சிவஸ்வரூபமான தனது உண்மைநிலையை ஒருகாலு முணர

மாட்டானெனவும், சுத்தப்பிரமமாகிய சர்வசாட்சியினிடத்தில் சூரியனிற் சூடுபோல அபின்னசத்தி யொன்றுண்டு அந்தச் சத்தி அவ்வதீதப் பிரமத்தினிடத்தில் அடங்கியிருக்கும் போது அதற்குச் சுத்தப்பிரமமென்றும் சூரியனது கிரணமெங்குமாய்ப் பிரகாசிக்கும்பொழுது அச்சூரியன் அதிலடங்கியிருப்பதுபோல அந்தச்சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது அப்பிரமம் பரைவியாபகத்துக்குள்ளிருந்தபடியால் அதற்குப் பரப்பிரமமென்றும் பெயராம். அந்தச் சத்தியினிடத்தில் அந்தப்பிரகாசத்தின் நிர்ச்சலம்போல அவிகிருத சத்துவமாகிய ஆனந்தரூபசத்தியும் சலனம்போல இரஜஸாகிய சித்ரூபசத்தியும், மக்னம்போலத் தமசாகிய சத்ரூபசத்தியுந் தோன்றின. அத்திரிவித சத்திகளுடன் கூடிய பரப்பிரமத்துக்குப் பரமானந்தன் - பரிபூரணன் - பரன் என்றும் பெயராம். இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த ப்ரம்மத்தினிடத்தில் கானற்சலத்தைப்போல மூலப்பிரகிருதியென்று ஒரு சத்திஉண்டாயிற்று அந்த மூலப்பிரகிருதி அக்கானற்சலத்தினது நிர்ச்சலம்-சலனம் - மக்னம்போல விகிர்தசத்துவ ரஜஸ் தமஸென்னும் மூன்றுகுணங்களுடனே கூடியிருக்கும். அவற்றுள் சத்துவ குணத்திற்கு மாயையென்றும், சர்வக்ஞ வுபாதியென்றும், ஈஸ்வரன் காரணசரீரமென்றும் பெயர். அந்தமாயையினிடத்தில் நிர்மலசலப்பிரிதி பிம்பம்போலப் பிரமம் சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும் அதற்கு ஸர்வக்ஞனாகிய ஈஸ்வரனென்றுபெயர். அந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்திற் சத்துவம்

ப்ரதானமாகும்போது விஷ்ணுவென்றும், சத்துவத்தில் ரஜசு ப்ரதானமாகும்போது பிரமனென்றும், சத்துவத்தில் தமசு ப்ரதானமாகும்போது ருத்திரனென்றும், முத்தொழிலுக் குரிய நாமங்களாம். இரஜோகுணத்திற்கு அவித்தைகளென் றும், சீவகாரணசரீரங்களென்றும் பெயர். அந்த அவித்தைக ளிடத்தில் மலினசலப் பிரதிபிம்பம்போலப் பிரம சைதன்னி யம் பிரதிபிம்பிக்கும் அவைகட்குக் கிஞ்சிக்ஞரென்றும்,சிதா பாச ஜீவரென்றும் பெயர். இந்த அவித்தைகளிடத்தில் ரஜ சில் சத்துவம் ப்ரதானமாகும்போது தத்துவஞானிக ளென் றும், ரஜசில் ரஜசு ப்ரதானமாகும்போது காமக்குரோத கர் ம்மலிஷ்டர்களென்றும், ரஜசில் தமசு ப்ரதானமாகும்போது சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவர்க ளென்றுமாம். தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபமெனு இரண்டுசத்திகள் தோன்றின, அவ்விரண்டில் விக்ஷேபசத்தியினிடத்தில் சத்த தன்மாத்திரையான ஆகாசமும், ஆகாசத்தில் பரிசதன்மாத் திரையான வாயுவும், வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயு வும், தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும், அப்புவில் கந்ததன்மாத்திரையான பிருதவியுந் தோன்றின, இச்சூக்ஷம பஞ்சபூதங்களுக்கு மூன்று குணங்களுண்டு. அவையாவன, தமசில் சத்துவத்தினுலுண்டான முற்பாதியில் சமஷ்டி அந் தக்கரணம் ஐந்தும், பிற்பாதியில் வியஷ்டி ஞானேந்திரியங் கள் ஐந்தும், தமசில் ராசதத்திலுண்டான சமஷ்டிமுற்பாதி யில் சமானுதி வாயுக்கள் ஐந்தும், பிற்பாதியில் வியஷ்டி கன்

மேந்திரியங்கள் ஐந்துமாம், ஆகிய உ௦-ம் இலிங்கசரீரமாம், அஃதெங்ஙனமெனில்.

## பிண்டாண்ட பிரமாண்டத்திற் சொல்லிய
# பூதபஞ்சீகரணம்.

சத்ததன் மாத்ரை சாத்விக அம்ஸம் சமஷ்டி அரை மாத்ரை ஞாதா அதில், பரிசதன்மாத்ரை ரஜோ அம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்திரைகூடினது சமானவாயு, ரூபதன் மாத்ரை சாத்விகஅம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரை கூடினது சுரோத்ரேந்திரியம், ரசதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரை கூடினது சத்தவிஷயம், கந்ததன் மாத்ரை ரஜோஅம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது வாக்கிந்திரியம்.

பரிசதன்மாத்ரை ரஜோ அம்ஸம் சமஷ்டி அரை மாத்ரை வியானவாயு அதில், சத்ததன்மாத்ரை சாத்வீக அம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது மனம், ரூபதன்மாத்ரை சாத்வீக அம்ஸம்வியஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது தொக்கிந்திரியம், ரசதன்மாத்ரை சாத்வீகஅம்ஸம் வியஷ்டிஅரைக் கால்மாத்ரை கூடினது பரிசவிஷயம், கந்ததன்மாத்ரை ரஜோ

அம்ஸம் வியஷ்டி அரைக்கால் மாத்ரை கூடினது பாணீந்திரியம்.

ரூபதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைமாத்ரை நேத்ரேந்திரியம் அதில், சத்ததன்மாத்திரை சாத்வீக அம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்ரை கூடினது புத்தி, பரிசதன்மாத்ரை ரஜோ அம்ஸம் சமஷ்டி அரைக்கால் மாத்ரை கூடினது உதானவாயு, ரசதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது ரூபவிஷயம், கந்ததன்மாத்ரை ரஜோ அம்ஸம் வியஷ்டி அரைக்கால் மாத்ரை கூடினது பாதேந்திரியம்.

ரசதன்மாத்திரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைமாத்ரை ரசவிஷயம் அதில், சத்ததன்மாத்ரை சாத்வீக அம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது சித்தம், பரிசதன்மாத்ரை ரஜோ அம்ஸம் சமஷ்டி அரைக்கால் மாத்ரை கூடினது அபானவாயு, ரூபதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைக்கால் மாத்ரை கூடினது ஜிக்.விந்திரியம், கந்ததன்மாத்ரை ரஜோ அம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரை கூடினது குய்யேந்திரியம்.

கந்ததன்மாத்ரை ரஜோ அம்ஸம் வியஷ்டி அரை மாத்ரை குதேந்திரியம் அதில், சத்ததன்மாத்ரை சாத்வீக அம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்ரை கூடினது ஆங்காரம், பரிசதன்மாத்ரை ரஜோஅம்ஸம் சமஷ்டி அரைக்கால்மாத்ரைகூடி

னது பிராணவாயு, ரூபதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது கிராணேந்திரியம், ரசதன்மாத்ரை சாத்வீக அம்ஸம் வியஷ்டி அரைக்கால்மாத்ரைகூடினது கந்தவிஷயம் ஆம்.

இதிற்கூறிய எதிர்விஷயங்களெல்லாந்தாம் நீங்கலாக மற்றவிருபதாஞ் சூக்ஷ்மசரீர கற்பனையாம். இதன் கிரியை எங்ஙனமெனில், ஞாதா சமானவாயுவுடனே சேர்ந்து சுரோத்திரேந்திரியத்தைப்பற்றிச் சத்தவிஷயத்தைக்கிரகித்தால் வாக்குவசனித்தலும், மனம் வியானவாயுவுடனே சேர்ந்து தொக்கேந்திரியத்தைப் பற்றிப் பரிசவிஷயத்தைக் கிரகித்தால் பாணியிடுதலும் ஏற்றலுஞ் செய்தலும், புத்தி உதானவாயுவுடனே சேர்ந்து நேத்திரேந்திரியத்தைப்பற்றி ரூபவிஷயத்தைக் கிரகித்தால் பாதஞ்சஞ்சரித்தலும், சித்தம் அபானவாயுவுடனே சேர்ந்து ஜிக்விந்திரியத்தைப்பற்றி ரசவிஷயத்தைக் கிரகித்தால் குய்யம் ஆனந்திப்பித்தலும், ஆங்காரம் ப்ராணவாயுவுடனேசேர்ந்து கிராணேந்திரியத்தைப்பற்றிக் கந்த விஷயத்தைக் கிரகித்தால் குதம் மலவிசர்க்கஞ்செய்தலுமாம். தமசில் தாமதத்திலுண்டான ஸ்தூலபஞ்சீகரணம் எங்ஙனமெனில், பிருதுவி தன்னம்ஸம்பாதி அஸ்தி, பிருதுவியில் அப்பு அரைக்கால்பங்குகூடினது மாம்ஸம், பிருதுவியில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது சர்மம், பிருதுவியில் வாயு அரைக்கால்பங்குகூடினது நரம்பு, பிருதுவியில் ஆகாசம்அரைக்கால்பங்குகூடினது ரோமம். அப்பு தன்னம்ஸம்பாதி மூத்திரம், அப்பு

வில் பிருதுவி அரைக்கால்பங்குகூடினது வயர்ீர், அப்புவில் அக்கினி அரைக்கால்பங்குகூடினது வியர்வை, அப்புவில்வாயு அரைக்கால்பங்குகூடினது இரத்தம், அப்புவில்ஆகாசம்அரைக்கால்பங்கு கூடினது சுக்கிலம். தேயு தன்னம்ஸம்பாதி பசி, தேயுவில் பிருதுவி அரைக்கால்பங்குகூடினது நித்திரை, தேயுவில் அப்பு அரைக்கால்பங்குகூடினது தாகம், தேயுவில் வாயு அரைக்கால்பங்கு கூடினது சோம்பல், தேயுவில்ஆகாசம் அரைக்கால்பங்குகூடினது மைதுனம். வாயு தன்னம்ஸம் பாதி ஓடல், வாயுவில்பிருதுவி அரைக்கால்பங்குகூடினது படுத்தல், வாயுவில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது நடத்தல், வாயுவில் அக்கினி அரைக்கால்பங்குகூடினது இருத்தல், வாயுவில் ஆகாசம் அரைக்கால்பங்குகூடினது தாண்டல் ஆகாசம் தன்னம்ஸம்பாதிமோகம், ஆகாசத்தில்பிருதுவி அரைக்கால்பங்குகூடினது இராகம், ஆகாசத்தில் அப்பு அரைக்கால்பங்குகூடினது துவேஷம், ஆகாசத்தில்அக்கினி அரைக்கால்பங்குகூடினது பயம், ஆகாசத்தில்வாயு அரைக்கால்பங்குகூடினது வெட்கம் ஆம். இவையிருபத்தைந்தும் ஸ்தூல சரீரகற்பனையாம். அவித்தையென்னும் இச்சாவசத்தாய் அஞ்ஞான சமுத்திரயிற் கட்டுண்ட சிதாபாசர்களை ஈஸ்வரன் தனது காருண்யத்தால் பிரமதேவனுய் நின்று சிவாங்குரத்தால் அசீவித்து அந்தக்கரணமென்னுங் கண்ணுடியைக் காட்ட அதிற் பிரதிபலிதனு ஸ்தூலசரீரத்தைத் தாமென்றும் புவனபோகங்களைத் தமதென்றும் அபிமானித்துவந்த ஜீவர்களது சரீரத்திரயம்-சிதாபாசன்-சாக்ஷிசைதன்னியம் என்பவைகளில் பேதந் தெரிகின்ற

தற்குரிய அறிவின்கண்ணை ஆவரணசத்தி மூடிவிட்டதென்றும் அம்மூடிதலில் நின்றும் நீங்குவதற்கு வேதாந்தக் கிரமப்படி பகிர்முகவிசாரணை முறைமையில் தேர்ந்து ப்ரம்மமுதல் தோன்றின அடைவே ஒடுக்கிப் பார்க்கச்சேஷித்தது எதுவோ அதுவே நமது வடிவமென்றுந் திடப்ரக்ஞையோடு அபரஞானியாயிருந்தாலும், ததாகாரமாகிய தேசிகரால் அந்தர்முக விசாரணையான சுவாநுபூதியை க்ரமமாகக் கொண்டு அச்சுவாநுபூதியிலெழுகின்ற சங்கல்பம் நசிப்பதான திருவடி தீக்ஷையும் பெற்று அங்ஙனம் பெற்றேமென்ற வுணர்வும் நழுவினவிடத்துண்டாகிய தனது சிதாகாசநிலையை அறிந்து பரஞானியாதல், அற்பமுங் கூடாதெனவுங் கூறுவார்.—

தத்துவமுழுதுங் கசடறவுணர்ந்துந் தன்னிலை யறிவதற்கரிதாமெனக் கூறினர்.

[இ-ம்.] ஒருவன் தத்துவசோதனையில் சுருதியுத்தியனுபவப்பட ஐயமறத் தெளிந்தாலுஞ் சகசீவபரங்களின் அபேதங்களைப் பலநூலால் நன்றாயறிந்து தானே அதுவென்றிருந்தாலுஞ் சற்குருவால் சுவாநுபூதியை உன்முகத்திற் பெற்றாலன்றி ஒருகாலும் நிஜபோத முத்தியாதென்பதாம்.

## பலகலையினுல் முத்தியின்றென்பதற்குப் பிராமணம்.

### ஒழிவிலொடுக்கம்.

குடையுஞ்செருப்புங் கொடுகடப்பதல்லாற்
[illegible]யும்விசும்பும் பரப்பி - யிடையாடு

மாத்திரம்போலே சமயவாதமனம்போதாத
சாத்திரங்கற்றூர் விடுற்றூர். எ-ம்.

சச்சிதானந்தவிளக்கம்.

கோடிபல நூலறிவு வேதமுறை பேசினுங் குருபாதம் வெளியாகுமோ. எ-ம்.

ஞானசுகாதீதவெண்பா.

நூறுகோடிநாளிருந்து நூல்கள்பலசற்றூலு
மாறுகோடி சித்தியடைந்தாலும் - பேறில்லை
நித்தன்மலரடிக்கே நீக்கமறவேநின்று
அத்துவிதங் காணுதவர். எ-ம்.

குறள்.

கற்றதனாலாயபய னென்கொல்வாலறிவ
னற்றாடொழா அரெனின். எ-ம்.

அத்துவிதக்கலிவெண்பா.

நன்றாகச், சாத்திரத்தையோதி மதந்தற்கியாதென்றோர்
வார்த்தையினைச்சொல்லி வழக்கறுத்தான். எ-ம்.

ஔவைக்குறள்.

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
யெல்லையிலாத சிவம். எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

வமுதலிய விசாரத்தால்

## தன்னை அறியக்கூடாதென்பதற்குப் பிரமாணம்.

சிற்றம்பலநாடிகள்.

தத்துவக் கற்றுஞ் சமயவிரோதமுஞ் சாத்திரஞ்சேர்
புத்தகப்பித்தையும் புந்திமத்தத்தையும்போட்டிடென்று
வித்தகச்சிற்றம்பலநாடி வேறுபுரத்திறைவன்
உத்தமமான சிவானந்தபோகத்தை யூட்டினனே. எ-ம்,

தாயுமானசுவாமிகள்.

தத்துவப்பேயோடே தலையடித்துக்கொள்ளாமல்
வைத்தவருள்மௌன வள்ளலேபோ - நித்தமன்பு
பூணத்தெரியாத போதகர்க்குமெய்ப்புகல
காணத்தகுமோ கிருபைக்கண். எ-ம்,

பதார்த்ததீபிகை.

திண்ணியவறிவுதான சிவத்தினையடையவேண்டில்
அண்ணியவராதனுக்கா வரித்தமாயோகமான
மண்முதற்றத்துவங்கண் மறுவெனநேதிசெய்து
எண்ணெய்போற்பிரிந்துமேயு மிருந்திடாயின்பமுற்றே. எ-ம்,

பாலையானந்தசுவாமிகள்.

தத்துவக்குப்பையைத் தள்ளுங்கடி வேத
சாத்திரப்பொத்தலை மூடுங்கடி

முத்திதருஞான வஸ்துவைவாவென்று
மூடிக்கொம்பி யடியுங்கடி. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்ருற் காண்க.

குருசொல்லாமற் சொல்லுவ
ரென்பதற்குப் பிரமாணம்.

திருவிளையாடல்.

கல்லாலின்புடையமர்ந்து நான்மறையாறங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்களுல்வர்க்கும் வாக்கிறந்தபூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமாயல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச், சொல்லாமற்சொன்னவரை நினையாமனினைந்துபவத் தொடக்கைவெல்வாம். என்பதனுற் காண்க.

ஞானகுரு அநுக்கிரகிக்கின்ற வழியேயன்றி
ஏனையவற்ருல் முத்தியின்றேன்பதற்குப் பிரமாணம்.

ஞானவாசிட்டம்.

பேசியதன்விசாரத்தாற் சனகர்பிரான்பெறும்பேறுபெற்றதல்லால், வாசியுளமற்றென்ருல் வந்ததல்ல வாரீசமலர்க்கண்மாலே, யாசிலதாய்ச் செவ்வியதாய்த் தனதான விசாரத்தாலடைவதல்லாற், றேசிகரில்லாவினர்செய் தொழிலிற்பெறலாமோ சிற்சொரூபம்.

## ஒழிவிலொடுக்கம்.

தன்னிழுப்பையென்னகற்றுச் சாதிப்பான்சற்குருவா
மன்னுபெருஞ்சீய மதயானை - தன்னடைமேற்
சொற்பனத்தேதோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்
நிற்பதுபோற் பாரானெனின். எ-ம்.

## குகைநமசிவாயர்.

செப்பரியஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனைநன்னூ லறிந்தாலும் - இப்புவிபிற
கொண்டகுருவைப்பொருளாக் கொள்ளார்பயனேது
கண்டவெலாமவீணிலே கற்று. எ-ம்.

## குருநமசிவாயர்.

சற்குருவைப்போற்றுமற் சற்குருவைச்சாற்றுமற்
சற்குருவைச்சந்ததமுஞ் சாராமற் - சற்குருவை
யின்றுதரியாம னீள்பிறவிநீங்கிடுமோ
மன்றுசிதம்பரதேவா. எ-ம்.

## திருமந்திரம்.

கருடனுருவைக் கருதுமளவிற்
பருவிடந்தீர்ந்து பயங்கெடுமாபோற்
குருவினுருவங் குறிக்கொண்டுநிற்கத்
[illegible]லந்தீர்ந்து சிவனவனாமே. எ-ம்.

### பட்டணத்துப்பிள்ளையார்.

குருமார்க்கமில்லாத குருடருடன் கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே. எ-ம்.

### தாயுமானசுவாமிகள்.

குருமொழியே மலையிலக்கு மற்றமொழியெல்லாங் கோடி
ன்றிவிட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய். எ-ம.

### ஔவைக்குறள்.

குருவினடிபணிந்து கூடுவதல்லார்க்
கருவமாய்நிற்குஞ் சிவம்.

அன்றியும்,

நெறிப்பட்டசற்குரு நேர்வழிகாட்டில்
பிறிவற்றிருக்குஞ் சிவம். எ-ம்,

### திருப்புகழ்.

ஐந்துபூதமு மாறுசமயமு மந்த்ரவேத புராணகலைகளு மை
ம்பதோர்வித மானலிபிகளும் வெகுரூப, வண்டராதி சராசர
மும்முயர் புண்டரீகனு மேகநிறவனு மந்திபோலுரு வானு
நிலவொடு - வெயில்காயுஞ், சந்த்ரசூரியர் தாமுமசைவையும்
விந்துநாதமு மேதுவடிவுமோர் தன்சொரூபம தாகிநிகழ்வது-
சிவயோகம, தங்களாணவ மாயைகரும மலங்கள்போயுப தே
சகுரு சம்ப்ரதாயமோ டேயுநெறியது - பெறுவேனோ.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (௫)

ஒருமொழியாலேயென்னுஞ் செய்யுண்முதல் இந்நான்கு செய்யுளாலும் ஒருமொழியாகியசின்முத்திரை இத்தன்மைத்தென்றும், அது ஆத்மஞானகுருவினால் அநுக்கிரகிக்கப்படுமென்றுங் கூறினர்.

இச்சின் முத்திரைக்குச் சௌபான முத்திரைகளை மேலருளிச்செய்கின்றார்.

(அ - கை.) முத்திரை மூன்றெனல்.

வேறு.

முத்திரைகளோர் மூன்றுமொழிந்திடில்
சுத்தசாம்பவி சொல்லும்பயிரவி
மெய்ந்துகேசரி யென்றுவிளங்கிடும்
இத்தையார்க்கு மியம்பவொண்ணுதரோ.

(இ-ள்.) சின்முத்திரையைப் பெறுவதற்குச் சாதனமாகிய ஞானமுத்திரைகள் மூன்றுவகைப்படும் அவைசொல்லுமிடத்துப் பரிசுத்தமாகிய சாம்பவியென்றுந், துதிக்கத்தக்க பயிரவியென்றும், மெய்யையுடையதாகிய கேசரியென்றும் பெயர்பெற்றுவிளங்கும் இவற்றை யாவருக்குஞ் சாதாரணமாகச் சொல்லக்கூடாது எ-று. அரோ-அசை - இத்தையென்பது-பன்மையி னொருமையாய்வந்த வழூவமைதி.

[இ-ம்.] அத்வைதாநுபவமான நிஷ்டைக்குரிய ப்ரதான முத்திரைகளை அறிவித்ததாம்.

இம்முத்திரைகளைக் குருசம்பரதாயத்திலறிக. (கூ)

(அ - கை.) சின்முத்திரையாகிய மௌனநிலையை அபக்கு வர்க்குப் போதிக்கப்படாதென்றும், அது மேலோர்களால் அனுபவிக்கப்பட்டதென்றும், அதைக் கைவல்யப்படுத்துவ தற்குரிய ஆசனமுதலிய சாதனவிதிக ளிவையென்றும், மன மொடுங்கினவர்களே எவற்றினும் பயன்படுவர்களென்றும், சாம்பவிமுத்திரையில்நின்று சதாநிஷ்டைசெய்யின் யாவுமொ டுங்குமென்றும், அதுவே சிவயோகமென்றும், அதில் இரா மல் இருக்கத்தக்கவனே அனுபவியென்றும், சாதகசாத்தியர் நெறியிதுவென்றும், அச்சாதகர் பெறும் நாதானந்த மிதுவெ ன்றும், அந்நாதவசமுற்றால்மயக்கந்தோன்றுமென்றும், அது நீங்கும்வகையில் நின்றால் அருட்டரிசன முதயமாமென்றும், அதற்கு மேலாகிய அனுபவபேற்றிலேறி நிறகக்காண்பானு திக ளிறக்குமென்றும், அங்ஙனம் மனமசையாதிருக்கிற் சத் தத்தில் பஞ்சாட்சரமுதலியவைகள் தோன்றாது நின்றவிடத் தொடுங்குமென்றும், அவ்வுறுதியோடிருந்து துவிதமறக்கலக் கின்ற அந்தமௌனநிலையை அடைந்து விளங்குவரென்றுங் கூறுவான் தொடங்கி வைத்தமுறைப்படியே, சின்முத்திரை யை அதிதீவரபக்குவர்க்கு அருளப்படுமெனல்.

---

முத்திரையை மொழியப்போகாதுகாண்
உத்தமர்க்கே யுரைக்கும்பொருளது
புத்தியீனர் புலம்பிமயங்கியே
பித்துமேலாய்ப் பிதற்றுவர்பேயரே.

(இ-ள்.) மேற்சொல்லிய சோபான முத்திரைகளுக்கு அதீதமாகிய சின்முத்திரையின் பொருளை யாவருக்குஞ் சொல்லத்தக்கதன்று அது சற்கரும பரிபாகிகளுக்குச் சொல்லத்தக்க பொருளாம், விவேகசூன்யர்களுக்குச்சொன்னால் அவர்கள் மூடத்தன்மையால் வாய்விட்டுளறி அறிவழிந்து பயித்தியகுண மேலிட்டுப் பேயராய்ப்பிதற்றுவார்கள் எ-று. காண் முன்னிலை அசை-ஏ-ஏ-அசைகள்.

(ப-ம்.) ஈஷணாத்திரியமான துன்பங்களில்நின்றும் நீங்கி ஞானசிரியனை அடுத்து அவரால் அனுக்கிரகிக்கப்பட்ட ஆத்மஞானத்தைப் பெற்று அதில் தாமாரூடராகு முன்னந் தேகவியோகத்தையடைந்து அந்தஸமஸ்கார பலத்தினால் மீண்டுந் திருவவதாரஞ்செய்துவந்த அதிஞான பக்குவரென்பார். உத்தமரெனக்கூறினார்.

[இ-ம்.] ஞான ஸமஸ்கார முடையவர்களுக்கே சின்முத்திரையைக் காட்டவேண்டு மென்பதாம்.

## இதற்குப் பிரமாணம்.

### ஞானவாசிட்டம்.

இனிப்பிறவாமுடிவான பிறப்பிலேமெய்ஞ்ஞான மெளிதினுண்டாம், பனிச்சுடர்வெண்ணித் திலங்களுத்தமமாமூங்கிலல்லாற்படுவதுண்டோ, செனித்தவரின்மேலோராய் நல்லோராய் மித்திரராய்த் தெளிந்தோராகி, யனித்தமறுமுத்தராய் ஞானிகளாங் குணமெல்லா மவரைச்சேரும். எ-ம்.

வாதவூரர்புராணம்.

வந்துநான்வருமையுற்றேன் மாற்றெனதிலம்பாடென்று
சிந்தையாகுலமுற்றான்கைச் செழும்பொருளீதல்செய்வார்க்
கிந்தநாளளிக்கவேண்டு மெனவிதியின்மையாலே
யந்தநாளிந்நாளாக வடிமைகொண்டருளவெண்ணி. எ-ம்.

ஒழிவிலொடுக்கம்.

அதிபக்குவத்தோர்க் கனுக்கிரகஞ்செய்யும்
புதுமைக்குச்சாத்திரங்கள் போதா - வதுவென்னுப்
பேறேயனந்தபிரகாரந் தந்தானும்
வேறேயனந்தவிதம். எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (எ)

(அ - கை.) இத்தன்மைப்பட்ட நிலையை அடைந்தோர் யாவரென்றுகேட்க அதற்குத்தரங் கூறல்.

வேறு.

இந்தநன்னிலையிலிருந்துசாதித்தோரெவரெனவுமையவள் வினவச், சுந்தரவாமதேவ மாமுனிவர் சுகர்முதன்முனிவரென்றறிதி, கந்தடுகரியின் கையினைப்புறங்காண்க வானுடைமலே தருமயிலே, நிந்தையினிட்டைக் குரியவாதனமு நிகழ்த்துவனன்புடன் கேண்மோ.

(இ - ள்.) இத்தன்மைப்பட்ட நல்லநிலையிலிருந்து சாதனஞ்செய்தவர்கள் எவர்களென்று தேவியார்கேட்கப் பரம

சிவனார் கட்டுத்தறியை முறிக்கும் மதயானையின் துதிக்கை யைப் புறங்கண்ட தொடையினை யுடைய இமயமலைபெற்ற உமையவளே? அழகியபெருமைபொருந்திய வாமதேவர் சுக யோகி முதலாகியமுனிவர்கள் சாதனஞ்செய்தவர்களென் றறி வாய் மேலும் துதிக்கப்படுகின்ற நிஷ்டைக்குரிய ஆசனத்தை யுஞ் சொல்லுவேன் அன்போடும் நீ கேட்பாயென் றருளிச் செய்வார், எ-று.

(ப-ம்.) அவ்யக்த மகதகங்காரங்களும், அவ்வகங்காரத் தில் முக்குணங்களும், அக்குணங்களினுடைய ஸ்வரூபமே நாமரூபாத்மக ப்ரபஞ்சங்களாய் விகற்பித்த காரண காரிய உபாதிமுதலியவைகளும், தோன்றியொடுங்குவதற்குரிய இர ண்டறச் சேஷித்துநின்ற சுயஞ் சைதன்யமாகிய ப்ரம்மானந்த போகபூமி யென்பார் இந்த நன்னிலையெனக் கூறினார்.

[இ - ம்.] மூல அடியார்களால் அனுபவித்த ப்ரம்மானு பவ நிலை ஈதென் றுணர்த்தியதாம்.

## இதற்குப் பிரமாணம்.

### ஞானவாசிட்டம்.

தன்னுள்விகற்பித்தெழுந்த விகற்பம்போகிற் றவிர்ந்திடுமா யையிற் பயனோர்சற்றுமில்லை, இன்னவகைத்தோ ருண்மை யியம்பவேண்டு மியாவர்மயக்கமு மாற்று மிறைவவென்ன, மன்னனதற்குரைசெய்வான் முனிவனீயே மதித்துணர்ந்தும்

பிதாவுரைக்க மறுத்துங்கேட்டாய், அங்கிலேயே நிச்சயமிந் சகண்டஞான வாகாயபுருடனுளா னயலொன்றில்லை. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

முந்நிலைச்சுட்டொழுதியெனப் பலகாலுமெனக்கோதான் மொழிந்தேனேநின், றன்னிலையைக் காட்டாதே யென்னையொன்றுச்சுட்டாதே சரணுன்போந்த, அந்நிலையேநிலையந்த நிலையிலே சித்திமுத்தி யனைத்துந்தோன்றும், நன்னிலையீதன்றி யிலை சுகமென்றே சுகர்முதலோர் நாடினரே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (அ)

(அ-கை.) ஆசனங்களிவை யெனல்.

உத்தரதிசைபார்த் திருப்பதாங்கலையி னுரிவையோ டுழுவையி னதளுஞ், சித்திராதனம்வெண் டுகில்குசையையுந் திண்புவிமிசை விரிப்பதுவாம், பத்திரம்வீரங் குக்குடமரிய பங்கயங்கோமுக மைந்தும், வித்தகமான வங்கவாதனமாம் விமலைநீயறிகென விளம்பும்.

(இ-ள்.) உமையவளே? சாதகன் நிஷ்டைதொடங்கும் போது பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது வடதிசை முகமாகும். மான்தோல் - புலித்தோல் * சித்திராசனம் - வெள்ளைவஸ்திரம் - தருப்பை ஆகிய ஐந்தும் அழுத்தமாகிய பூமி

---

* சித்திராசனமென்பது இரத்தினகம்பளமாம்.

யின்பேரில் விரிக்கத்தக்க ஆசனமாகும். பத்திரம் - வீரம் - குக்குடம் - அருமையானபதுமம் - கோமுகம் ஆகிய ஐந்தும் ஞான சாதனத்துக்குரித்தாகிய அங்காசனமாகும். நீயறிவாயாகவென்று சொல்லுவார் பரமசிவனார் எ-று. இவ்வங்காசனங்களுக்கு விபரம் முன்வந்தனகாண்க.

(ப - ம்.) தக்ஷிணாமூர்த்தமாய் விளங்கிய ஆத்மஞான குருவின் சந்நிதிக் கெதிராகச் சற்சீடன் வடதிசை நோக்கி இருக்கவேண்டுமென்பார், உத்தரதிசை பார்த்திருப்பதாமென்றும், பெரும்பாலும் யோகீஸ்வரர்களிருப்பது பத்மாசனமென்பார், அரியபங்கயமென்றுங் கூறினார்.

[இ-ம்.] ஞானசாதகன் நிஷ்டைகூடித் தந்திரமாக அப்பியாசித்தற்குரிய இருவகை ஆசனங்களையுங் கூறியதாம். (கூ)

அ-கை ) தேகத்தை அசைவறநிறுத்திச் சின்மயத்தில் நிற்றலே சமாதியெனல்.

இயம்புமாதனங்கடம்மி லொன்றுறவே யிடைகளஞ்சிரங் கணுானேராய், வயம்பெறத்தம்ப மெனநெறித்திருந்தே மனமதுவடிவினையுறாமல், நயம்பெறவுன்னு துன்னியெப்போது நடுநிலைதன்னைநீங்காமல், தயங்கியசுத்தமசுத்தமல்லாத தனிநிலைபொருந்துதல் சமாதி.

(இ-ம்.) ஞானசாதகன் முன்சொல்லிய ஆசனங்களில் ஒன்றிற்சேர்ந்து இடை - கண்டம் - தலை - கண் ஆகிய நான்கும்

நூல்விதிவழுவாது வெற்றியாக ஸ்தம்பத்தைப்போல நெறித்திருக்கவும் மனமானது தனதுசங்கற்பரூபமென்னும் விஷயாகாரங்களைப் பற்றாமலிருக்கவும் மோக்ஷ இன்பத்தைப்பெறும்படி நினையாமல் நினைத்துப் பிரகாசிக்கின்ற சுத்தாசுத்தமில்லாத ஒப்பற்றநிலையிற் சதாகாலமும் சாக்ஷித் தன்மையை நீங்காமற் பொருந்தியிருத்தலே சமாதியாம் எ-று. ஏ - ஏ - அசைகள்.

(பம்.) சலனமற்ற ஏகாந்தஸ்தானத்தில் பரமாத்தாணியைப்போல நிலைபெறுதலென்பார். வைபவபெறவென்றார், தேகேந்திரிய கரணாதிகளின் விவகாரஅவஸ்தையாவைக்கு முதற்காரணமாயுள்ள மனமானது தன்னிச்சைவடிவத்தினைக் கணின்று நீங்கிச சும்மாவிளங்கவேண்டுமென்பார். மனமது வடிவினையுறுமலென்று ரெனவும், குணத்திரயங்களில் உழலாநின்ற மனமானது தனக்குச்சேர்க்கை விவகாரங்களில் அரசு செலுத்துவிக்கின்ற இராசத தாமதத்தைவிட்டு நீங்கித் தன் சொந்த இடமான சத்துவத்திற் பொருந்தி இருக்கவேண்டுமென்பார். மனமது வடிவினையுறும லென்றுரெனவுங் கூறுவாருமுளர். மனமானது சத்ததன்மாத்திரைச் சாத்விக அம்ஸம அரைக்கால் மாத்திரையாய்த் தோன்றிப் பரிசதன்மாத்திரை ரஜோ அம்ஸம் அரைமாத்திரையாகிய வியானவாயுவுடன் சேர்ந்துநின்றதால் சலனத்துவமடைந்து விஷயங்களைப் பற்றிக்கோடலே அதற்குச் சங்கற்பரூபம். ஆதலால் அம்மனம அசசலமாம்சையைவிட்டு நீங்கித் தன்னிஜாம்ஸ

ன அருள்வடிவாய் நிற்கவேண்டுமென்பார். மனமது வடிவினையுறுமலென்று ரெனப்பொருள்கூறுதலே சிறப்புடைத்தாம். இன்பசுகத்தைப் பெறவேண்டுமென்கிற கிஞ்சித் நினைவான முன்னிலைச்சுட்டுப் பற்றறவிட்டு ஒன்றையுங் கருதாது கருதுவதென்பார். உன்றுதன்னி யெனவும், சகலகேவலமாகிய அறியாமையை அசுத்தமெனவும், அவைநீங்கித் தன்னையருளாற்கண்ட அறிவை சுத்தமெனவும், அவ்வறிவுங் கழன்று ஞானகாசமாகிய பரை நீக்கத்தில் விளங்குகின்ற பிறிதொன்றில்லாத நிகரற்ற துரியாதீதமாகிய சின்மாத்ரநிலையை அல்லாத தனிநிலையெனவும், அருள்வடிவமாகிய மனமானது அந்நிலையில் இரண்டறக் கலந்திருத்தலை பொருந்துதல் சமாதியெனவுங் கூறினர்.

[இ - ம்.] ஞானசாதகன் ஏகாந்த ஸ்தானத்தில் சித்திரதீபம்போலத் தேகத்தை அசைவறநிறுத்தி நிர்விகற்பசித்தனாய்த் தனதாத்மஸ்வரூப நிலையிற் பிரிவறத் ததாகாரமாக நிற்பதுவே சுகசமாதியென் றுணர்த்தியதாம்.

ஸ்தம்பத்தைப்போலச் சிரமுதலியவை நெறித்தென்ப

தற்குப் பிரமாணம்.

அமுதசாரம்.

செவ்வேயுடலுங்கழுத்துஞ் சிரமுமுற
வெவ்வாதனத்தே யிருந்தெவர்க்குங் - கைவந்தால்

வாசமுதனேய்கலியா மதியுடையோ
ராதனமென்ப தது. எ-ம்.

பகவற்கீதை.

தலையுங்கழுத்துமுடம்புமிவை செவ்வேதளராதேயிருக்கு
நிலையிலிருந்துகண்களைத்தன் மூக்குநுனிமேலேநிறுத்தி
அலையுங்கடல்போற்காமமு மெய்ப்பயமுந்தன்னைவிட்டகல
உலையுமனமுள்ளடங்கவென்னையுணர்ந்தே யிருக்குமதுயோகம்.

பிரமகீதை.

தக்கஞானத்தைத் தான்பெறற்பொருட்டுத் தனியிடந்தனை யடைந்திதய, துக்கமேவாமற் சுகாசனத்திருந்து தோடலை கழுத்துடம்பிவைநே, ரொக்குமாறிருத்திப் பூதிகொண்டிந்த வுடம்பையுத் தூளனம்பண்ணி, மிக்கவாய்வருமிந் தியங்களை யெல்லாம் விடையமேலெழாவகைமீட்டு. எ-ம்.

ஞானிகள்நிலைமை.

அத்தனுமெய்ஞ்ஞானியருமுறைத்தவாறே யாகமுடியிடை யசையாத் தறிபோலாக்கிப், பத்திரங்கோமுகம்வீரம் பதுமத் தோடுபகர்குலவு மாதனத்திற் படிந்தேகாந்த, முத்திரைசாம் பவிவான நொக்கதாகி முபல்கருத்துநடுநிலையி லிருந்திநானு, மித்தகைய சிவபோகத் திருப்பர்ஞானி யினியவற்குப் பிறவி யுமுண் டென்னலாமே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

## மனத்தின்வடிவு சங்கற்பமேன்பதற்குப் பிரமாணம்.

ஞானவாசிட்டம்

சடசூனியமாயெங்கணுஞ் சேர்தனிநெஞ்சுக்குப் பேரொழிய, வுடனுங்ககணந்தனைப்போல வுள்ளும்புறம்பு முருவிலதாம், படர்தீர்மெய்பொய் யெனும்பொருளிற் பயிறோற்றரவே மனமாகுந், தொடர்சங்கற்பமெங்குளதாங் தோன்றுமன மூமங்குளதே.

அன்றியும்,

மனத்தின்வடிவுசங்கற்ப மற்றிவ்விரண்டுமொன்றாகு
மனர்த்தமோகமலபந்த மவித்தைமாயைதம்முதலா
மினத்தபெயர்சங்கற்பத்துக் கேற்றபெயராமிதுநழுவிற்
கனத்தசகக்காட்சியும்போருங் கதிர்விட்டெறிக்கும்பரவடிவம்

என வருதலாற் காண்க.

## மனமானது நிர்மலத்துவமான தன்னதார்த்தவடிவமாயிருந்து அருள்நிலையைப் பற்றவேண்டு மேன்பதற்குப் பிரமாணம்.

ஞானவாசிட்டம்.

உன்னுருவைநீகாணு ஞானக்கண்ணிலொன்றலா வாசையெனுங் காசமுறும், அன்னதுதீர்த் துளக்கமலத்துள்ளேநொய்ய வறிவுடையவுன்மனத்தா லுன்னைஉன்னை, இன்னபடியெனநோக்கி மயக்கமெல்லா மிறையுமறவொழித்தின்ப மெ

ய்திகிற்பாய், பின்னவனே யெனமுன்னோ னுரைத்தானென்று பெருந்தகைக்கு வசிட்டமுனி பேசினனே என வருதலாற் காணக.

உன்னுதன்னி யென்பதற்குப்

பிரமாணம்.

திருவருட்பயன்.

ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்தனைப்பார்.

என்பதனாற் காண்க.

சமாதிநிலையைப் பெற்றிருத்தலே
சமாதியென்பதற்குப் பிரமாணம்.

ஞானவாசிட்டம்.

ஜனகனெனுமன்னவர்கோ னிவ்வாறேகத் தன்னிலையாம் பரம்பொருளிற் றளர்ச்சியறி, அனகாரகன்பயனீங்கிச் சோக மாறி யயர்வகன்று செயலடங்கி யையந்தீர்ந்து, கனகவரை யேறிநிரு விகற்பமான கலங்காதசமாதியிற்சிற் ககனத்துற் றான், தினகரனைச்செறிவருட மீரைந்தூற்றிற் றிரியொடு நெய்ம்மாண்டவிந்த தீபம்போன்றே. எ-ம்.

சிவப்பிரகாசம்.

பாசஞானத்தாலும் படர்பசுஞானத்தாலு
மீசனையறியவொண்ணா திறையருள்ஞானநண்ணித்

தேசுறுமதனுன்முன்னைச் சிற்றறிவொழிந்துசேர்ந்து
நேசமோடுயர்பரத்து னிற்பதுஞானநிட்டை. எ-ம்.

சந்நிதிமுறை.

அலையிலாத சாகரம்போ லனிலஞ்சேரா விளக்கதுபோ, லருங்கலிரும்பொன் சமமாகி யானதராசி னுனியதுபோல், நிலையொன்றியநற் சமாதியுற்று நின்றாட்கமலத் தெழும்பிரச, நிறைவாரிதியிற் புகுந்ததனி னேசித்தடியே னிருப்பேனோ, விலையின்மகுடத் திருமுடியாய் மிளிர்குண்டலங்கள் செறிகாதா, வியன்கேயூரத்திருத்தோளா விஞ்சுஞ்சதங்கை சூழ்தாளா, புலையுங்கொலையுங்களவுமில்லாப் புனிதத்தவத்தோர் தொழூதேத்தும், புராரிகுமரா வுமைசிறுவா போரூர்முருகப்பெருமானே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றூர் காண்க. (௪௦)
(அ-கை.) மனமடங்கில் வாயு வொடுங்குமெனல்.

வேறு.

விண்ணைமூடக் கவசனையை விரிக்குமொருவன் விரகதெனப், பண்ணும்யோகத் துறைநினைவோர் பவனத்தடக்கு மதுவிடுத்தே, எண்ணுங்கருத்தை முன்னடக்க வியங்கும்வளியும் பின்னடங்கும், கண்ணைமறைக்க வான்மறையுங் கணக்காம்படிநீ கண்டுகொள்ளே.

(இ-ள்.) உலகத்திற்செய்கின்ற யோகமார்க்கத்தைச் சாதிக்க நினைக்கின்றவர்கள் வாயுவை அடக்குதல் எத்தன்மைத்

தேனில் ஆகாயத்தை மறைக்க வஸ்திரத்தை விரிக்கின்ற ஒரு வனது உபாயத்தைப்போலாம். ஆதலால் அவ்வாயுவை அடக்குதல்விட்டுப் பலவகைகளை நினைக்கத்தக்கமனதை முன்னர் அசைவற அடக்கினால் சலிக்கின்றவாயுவும் பின்னர் அடங்கிப்போம் எங்ஙனமெனில் கண்களை மறைத்த மாத்திரத்தில் ஆகாச மறைகின்ற முறைமைபோல நீயறிந்து கொள்ளக்கடவாய். எ-று. ஏ-ம-அசைகள்.

[இ-ம்.] கருவிகள் எவற்றிற்குங் காரணமாயுள்ள மனமானது ஒடுங்கில் யாவுமொடுங்கு மென்பதாம்.

இதற்குப் பிரமாணம்.

ஒழிவிலொடுக்கம்.

உபதேசப் பித்தோ வுபமானப் பித்தோ
விபரீதமோ பழகவோவேறோ—தபசிநீ
கண்மூடாவிண்மூடத் தேடுங் கவசனைபோ
லெண்மூடாயோக மிதுவென். எ-ம்

திருமந்திரம்.

மனமடங்கிடில் வாயுவடங்கிடும்.

அன்றியும்,

மனமனமங்குண்டு வாயுவுமங்குண்டு
மனமனமங்கில்லை வாயுவுமங்கில்லை. எ-ம்.

சிவவாக்கியம்.

மனங்குவிந்துநின்றிடம் வாயுபஞ்சபூதமாம்
மனங்குவிந்துநின்றிடம் வாயுமண்ணுயிரதா

மனங்குவிந்துநின்றிட மகாஸ்தலங்களாயிடும்
மனங்குவிந்துநின்றிடம் வண்மையாகுமுத்தியே. எ-ம்.

ப்ரபுலிங்கலீலை.

இந்தியமோரொன்றுவிட் டிடின்மற்றையொன்றுசாரும்
முந்தியமனமழிப்ப முறறும்போமணியப்பாம்பி
னைந்தலைகளினுளொன்றை யரிந்திடின்மற்றொன்றாலஞ்
சிந்திடுமிடறரிந்தாற் றீர்ந்திடுமொருங்குமாதோ. எ-ம்.

தேவிகாலோத்ரம்.

வாயுவெனமறுகுகின்ற மனமடங்கும்வகைதடுப்பா
னியாவனவனரிபிரமனிந்திரன் சண்முகன்குருவும்
ஏயபலதேவதைகளி யோகிதபோதனனறிஞன்
ஆயினெல்லாமுடையானு மவன்வணங்குநுணங்கிடையாய்.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (கக)

(அ - கை.) சரிதைமுதலாகிய நான்கிற்குமுரிய அதிகாரிகள் மனோலயமடைதலால் அதிலதில்உயர்ந்தோர்களெனல்.

அலையுமனத்தையகத்தடக்கு மவனேசரிதைகடந்தோனும்
அலையுமனத்தையகத்தடக்கு மவனேகிரியைமுடிந்தோனும்
அலையுமனத்தையகத்தடக்கு மவனேயோகதற்பரனும்
அலையுமனத்தையகத்தடக்கு மவனேஞானியதிசூரன்.

(இ-ள்.) அலைகின்றமனதை உள்ளடக்கத்தக்கவனே சரிதை முழுதும் நிறைவேற்றினவனவன். அலைகின்ற மனதை

உள்ளடக்கத்தக்கவனே கிரியைபூரணப்பட்டவனாவன். அலே இன்றமனதை உள்ளடக்கத் தக்கவனே யோகீஸ்வரனாவன். அலேகின்றமனதை உள்ளடக்கத்தக்கவனே ஞானிகளில் மிகுந்த தீரனாவான். எ-று.

(ப-ம்.) சரிதையை விதிப்படிசெய்கின்ற ஒருவன் தான் இயற்றுவதில் பல்சங்கற்ப மனதுடையவனாயின் சரிதையை ஒருங்கே தெரிந்துசெய்யினுங் கடந்தவனன்று. எவன் தனக்குக் கிடைத்தமட்டும் மனதிருப்தியாய்ச்செய்து ஈஸ்வரார்ப்பணம் பண்ணினனோ அவனே அச்சரிதைக்கதிகாரியாமென்பார்.

அலேயுமனத்தை யகத்தடக்குமவனே சரிதைகடந்தோனாமென்றும்.

கிரியையை முறைப்படிசெய்கின்றவொருவன் தான்பூசிப்பதில் வருங்குறைவு நிறைவுகளில் இதாகிதமாகிய சித்தத்தையுடையவனானாலும் அல்லது கிடைத்தமட்டும பூசித்தாத திருப்தியடைந்து அப்பூசைவிடத்தில் காமிய மனதுடையவனாயினும் அக்கிரியாமார்க்க முற்றுந்தெரிந்து பிறருக்கும் போதிக்கத்தக்கவனாயினும் அதற்குரியவனன்று. எவன் நிஷ்காமிய மனத்துடன் ஆராதனை பண்ணினனோ அவனே அந்தக்கிரியாபூசையிற் சிறந்தவனாமென்பார்.

அலேயுமனத்தை யகத்தடக்குமவனே கிரியைமுடித்தோனாமென்றும்,

துறவின்கணின்று அஷ்டாங்கயோகவிதிப்படி தேகத்தைச் சுஷ்கிப்பித்துக் கற்பகாலந் தியானஞ்செய்கின்ற யோகியானாலும் அவனது சித்தமானது பூர்வம்விட்டுவந்த வாசனையில் ஒன்றையேனுங் கருதுமாகில் அவன்முடிந்தயோகியன்று எவன் தனது தியானசமர்தியில் வைத்திருக்கிற சித்தமானது திரியாமல் சுத்த மடைந்து அவ்விடத்தில் பொருந்தியதே சாக்ஷாத் பரமசிவமென்று நிற்பானோ அவனே பரமயோகிகட்கெல்லாங் கடவுளாமென்பார்.

அலையுமனத்தை யகத்தடக்கு மவனே யோகதற்பரனுமென்றும்,

சர்வம் ப்ரம்மமயமாகச் சுருதிகுரு ஸ்வானுபவத்தாற் பார்க்கின்ற ஆத்மஞானி இதாகிதப்பிராரத்துவவசத்தில் அற்பமும் பேதமில்லாமல் சுயம்பிரகாசமாய் ஜொலிக்கின்ற பரிபூரணமான மனதுடன்விளங்கிடின் அவனே பரஞானிகளுக்குத் தலைவனுமென்பார்.

அலையுமனத்தை யகத்தடக்கு மவனே ஞானியதிசூரனென்றுங் கூறினர்.

[இ - ம்.] மனோலயமுற்ற நான்கதிகாரிகளே முறையே நான்குபதங்களினது சிறந்த ப்ரயோசன மடைவர்களென்பதாம்.

## மனோலய மடையவேண்டு மென்பதற்குப் பிரமாணம்.

### தேவிகாலோத்ரம்.

அறிவுநிலை தவமடக்கம் புண்ணியந்தா னங்குணங்க
ணெறியுடைய முத்திநெறி முத்தியுபாயம் நினைக்கின்
மறுகும்வழி யளையமன மடங்குவதன் றியாததுவே
யறிவுடையோ ரிவையனைத்து மாமென்றே யறைகுவரால்.

### திருமந்திரம்.

மனமாயை மாயை மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினைமாய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே. எ-ம்.

### தேவாரம்.

வெள்ளத்தார் விஞ்ஞையார்கள் விரும்பவே
வெள்ளத்தைச் சடைவைத்த விகிர்தனார்
கள்ளத்தைக் கழியமன மொன்றினின்
றுள்ளத்தின் னொளியைக்கண்ட துள்ளமே.

அன்றியும்,

பொறிபுலன்களைப் போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்து நினைத்தவர்சிந்தையு
ளறிப்புறுமமுதா யவனேகம்பங்
குறிப்பினுற்சென்று கூடித்தொழுதுமே. எ-ம்.

## ஞானவாசிட்டம்.

பேதிக்கு மனமென்னும் பெரும்பகையை முழுவலியாற் பிளந்துவென்றேன், வாதித்த துயரெல்லா மாற்றினே னுப சாந்த வாழ்வுபெற்றேன், சாதித்த விவேகமே யுனைவணங்கி னேனென்று சனகர்கோமான், சேதித்தமன வலைவெல்லா மொழித்துத்தானே சித்திரம்போனின்றான். எ-ம்.

## ப்ரபுலிங்கலீலை.

விரிந்தநெஞ்சங் கருவியாம் விடயமுணர விரியாம
லொருங்குநெஞ்சங் கருவியாந் தன்னையுணர வொருங்காமல்
விரிந்தநெஞ்ச முடையானை விடாதுபிறவி யென்றுணர்க
வொருங்குநெஞ்சமுடையானை யுறாதுபிரப்பென்றுணர்கவே.

## பரணதேவரந்தாதி.

நினையடைந்தேன்சித்த நிலையாகும்வண்ண
நினையடைந்தேன்சித்த நிமலா—நினையடைந்தேன்
கண்டத்தாய்காளத்தியானே கனலாருங்
கண்டத்தாய் காபாலிகா. எ-ம்.

## கைவல்லியநவநீதம்.

மனதுசத்துவசொரூப மற்றிரண்டும்வந்துகலந்த னவவற்றை மாற்றினாற்போந், தனதுசன்மார்க்கத்தை விடாதிருந்தபோது தாமதமுமிராசதமுஞ் சமிக்கும்பின்னைக், கனபரிணாமஞ்சல னம்போம் போனுக்காற் களங்கமற்றுநின்றவா காயம்போ

னும், நினைதளமப்படியாமப் பிரமத்தொன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே. எ-ம்.

மோகவதைப்பரணி.

வீயுமோகினை வேரறுமல்விடஞ் செய்மோகன் விவேகனுண் மாயுமோவுயர் மாயையாரு மனத்தினுரு மிருக்கவே. எ-ம்.

திருவாய்மொழி

புலனைந்துமேயும பொறியைந்துநீங்கி
நலமந்தமில்ல தோர்நாடுபுகுவீர்
அலமந்துவீய வசுரரைசசெற்றான்
பலமுந்துசீரிற் படிமினேவாதே. எ-ம்.

திருவாசகம்.

உத்தமனத்தனுடையா னடியேநினைந்துருகி
மத்தமனத்தொடுமா லிவனென்னமனநினைவி
லொத்தனவொத்தன சொல்லிடவூரூர்திரிந்தெவரும்
தத்தமனத்தனபேசவெஞ் ஞான்றுகொல்சாவதுவே. எ-ம்.

திருக்களிற்றுப்படியார்.

அன்றிவருமைம்புலனு நீயுமசையாம
னின்றபடியேநிற்க முன்னிற்குஞ்—சென்று
கருதுவதன்முன்னங் கருத்தழியப்பாயு
மொருமகடன் கேள்வனுனக்கு எ-ம்.

கந்தரலங்காரம்.

தடுங்கோண்மனத்தை விடுங்கோள்வெகுளியைத் தானமெ ன்று, மிடுங்கோளிருந்த படியிருங்கோ ளெழுபாருமுய்யக்,

கொடுங்கோபச்சூருடன் குன்றந்திறக்கத் தொளைக்கவைவேல்,
விடுங்கோனருள்வந்து தானேயுமக்கு வெளிப்படுமே. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

தன்னிலேதானுக நினைந்துகனிந் தவிழ்ந்துசுக சமாதியாகப், பொன்னிலே பணிபோலு மாயைதரு மனமேயுன் புனைகடூர்ந்தா, யென்னிறே யான்பிழைப்பே னெனக்கினியாருன்போல்வா ரில்லையில்லை, உன்னிலோ திருவருளுக் கொப்பாவா ரென்னுயிர்க்கோ ருறவுமாவாய்,

அன்றியும்,

சினமிறக்கக்கற்றாலுஞ் சித்தியெல்லாம்பெற்றாலு
மனமிறக்கக்கல்லார்க்கு வாயேன்பராபரமே. எ-ம்,

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

பேதரகிதமான மனத்துடன் விளங்குகின்றவனே
ஞானியேன்பதற்குப் பிரமாணம்.

ஞானவாசிட்டம்.

சிந்தனையாங் களங்கமறச் சுத்தனாகித் திரைக்கடலிற் செறிந்தொன்றுந் திவலைபோல, வந்துறுவா தனைபோய்த் தற்பதத்தொன்றுனன் மாயாமோகந்தீர்ந்து வருத்தந்தீர்ந்தான், அந்நெறி யுனக்குமா மறிவதெல்லா மறிந்தமனத் திற்குரிய வடைவே தென்னிற், சந்ததமு மகிட்சிசெறி போகமெல்லாந் தனதென்னுஞ் சுதந்தரத்தைத் தவிர்த்திற்றல்.

என்பதனாற் காண்க, (கஉ)

(அ-கை.) உள்ளத்தின்கண் எழுகின்ற சங்கற்பங்களை அழிக்கத்தக்கவர்களே சர்வத்திற்கும் அதிகாரிகளெனல்.

---

அடக்கிக்கருத்தினலைவறுப் போனவனேசகலதியாகியாம், அடக்கிக்கருத்தி னலைவருப்போ னவனேபொன்றாப் பொருளுடையோன், அடக்கிக்கருத்தி னலைவருப்போனவனே யின்பவனுபவியாம், அடக்கிக்கருத்தி னலைவறுப்போ னவன்வீட்டின்ப மடைபவனே.

(இ-ள்.) கருத்தைஅடக்கி அதனுடைய சலனத்தை நீக்கத்தக்கவனே சர்வசங்க பரித்தியாகியாம் கருத்தை அடக்கி அதனுடைய சலனத்தை நீக்கத்தக்கவனே அழியாத பொருளையுடையவனும். கருத்தைஅடக்கி அதனுடைய சலனத்தை நீக்கத்தக்கவனே சுகத்தையுடையவனும் கருத்தை அடக்கி அதனுடைய சலனத்தை நீக்கத்தக்கவனே மோக்ஷவின்பத்தை அடையத்தக்கவனும். எ-று-வு-அசை.

(ப - ம்.) அந்தக்கரணத்தி லெழும் விருத்தி பேதங்களனைத்தையும் ஒழித்து விளங்குகின்றவனே துறவடைந்தவர்கட்கெல்லாம் மேலான சர்வபரித்தியாகியாமென்பார். அடக்கிக்கருத்தி னலைவறுப்போ னவனேசகல தியாகியாமென்றும், அத்தியாகிகளுள்ளும் அழிவில்லாத ஆத்மவிசாரம்பெற்றிருந்தாலும கருத்தென்னும்பஞ்சை அலையென்னும் காற்றினிடமாக விடாமல் உள்ளடக்கிப் பாதுகாப்பவனெவனே அவனே நித்தியத்துவமான பொருளுக்குடையவனு மென்பார்.

அடக்கிக்கருத்தி னலைவறுப்போனவனே பொன்ருப் பொருளுடையோ னென்றும், அப்பொருளுக் குடையவர்களுள்ளும் சுருதிகுருஸ்வானுபவம் ஒற்றுமைப்பட்ட நிஷ்டாபரர்களானுலும் அவ்வனுபவத்தில் அற்பமும் பேதந்தோன்ருமல் திடப்பட்டிருப்பவ னெவனே அவனே சுகபோகியாமென்பார். அடக்கிக்கருதி னலைவறுப்போ னவனேயின்ப வனுபவியாமென்றும், அச்சுகபோகிகளுள்ளும் நினைக்கின்றவைகளெவற்றையும் அதுவாகவே நினைத்து அதையுங்கைவிட்டு நிரதிசயானந்தியா யிருப்பவனெவனே அவனே பேரின்பத்துக்குச் சுதந்தரனுமென்பார். அடக்கிக்கருத்தி னலைவறுப்போனவன்வீட்டின்ப மடைபவனென்றுங் கூறினர்.

[இ-ம்.] விஸ்ராந்தி அடைந்தகருத்துடையவனே சுகாதீதமாய் விளங்குவ னென்பதாம்.

## இதற்குப் பிரமாணம்.

### தேவிகாலோத்ரம்.

கருத்தடங்கின்முத்தியது கையகலிற்கட்டாகும்
விரித்தபொருளினுவென்ன வறிவுடையமேதக்கோர்
திருத்தகுநல்லறிவாலே சித்தத்தைச் திறம்பாம
லருத்தியுடனிலைநிறுத்து மதுவறிவின்பயனுமால்.

அன்றியும்,

மருவியபொருண்மேலன்பாய் வானரம்போற்சரித்துத்
திரியுமச்சித்தந்தன்னைத் திரித்துச்சூனியத்தேநின்ருல்

மருவினோர்பிறிதலின்றி வானவரறிவுகெட்டாப்
பொருவிலாநித்தசுததப் பொருளினையடைவரன்றே. எ-ம்.

ஞானவாசிட்டம்.

சனகருமங்களின் வித்தாய்த் தருவையசைக்குங் காற்றே
போற், றினமுமுடலை யசைப்பதுவுஞ் சித்தமிதனைத் தீர்வது
வே, யனகசகல தியாகமதா மதுவேபரம வானந்தம், வினவு
பிறவெல்லாமிகவும வெருவுகின்ற வெந்துயரே. எ-ம்.

திருவாசகம்.

சித்தமுஞ்செல்லாச சேட்சியன்காண்க.

எ-ம் வரும மற்றும வருவனவறறுற்காண்க. (கரு)

(அ - கை.) பலவாயுதிக்கின்ற மனதைத் தங்நிலையிற் சேர்
த்தவருக்கே முத்தியெனல்.

வெறிகொள் குரங்கு மயக்குஞ்சொல் விளம்பி யருந்திவு
லதுவும், செறிதானமயங்கிச் சுழல்வதுபோ னிமிடந்தானு
நிலாமனத்தைக், குறியிறசமாதி யெனுங்கயிற்றாற் குறுகப்
பிணிப்போ ரெவரவர்தாம, அறிவோ டறியாமைக ளிறந்த
வரிய முத்திதனையடைவார்.

(இ - ள்.) வெறியைக்கொண்ட குரங்கானது அறிவை
மயக்குகின்ற கள்ளைக்குடிசதால் அக்குரங்கும் வழிகெட்டு
அலைவதுபோல நிமிஷமாததிரமும் நிலைபடாது அலைகின்ற
மனத்தைக்குறிக்கத்தகக நிலையிற்சேரும்படி சமாதியென்னும்

பாசத்தாற் கட்டத்தக்கவர்க ளெவர்களோ அவர்கள் அறி வும் அறியாமையுமாகிய இரண்டும் நீங்கிய அருமையாகிய மோக்ஷத்தைச் சேருவார்கள். எ-று. தான்-தான்-தாம்-சாரி யைகள்.

(ப-ம்.) ஒரு இமைப்பொழுதிற்குள்ளாக அளவின்றிய பேத அத்தியாசங்களை உண்டாக்கி அவற்றுள் ஒன்றைவிட் டொன்றுபற்றி ஒன்றிலும் இறையளவேனும நிலைபடாது சஞ்சரிக்கும் மனமென்பார். வெறிகொண்ட கள்ளுண்ட வா னரத்தைப்போல நிமிடந்தானு நிலாமனமென்றும், மனமுற் பத்தி ஸ்தானமென்பார். குறியிலென்றும், ஜடத்துவம் ஜீவத் துவம் ஈசத்துவம் சாக்ஷித்துவம் ஆகிய விந்நான்குமென்பார். அறிவோ டறியாமைகளென்றும், யாவராலும் அறிதற்கரிய நிரதிசயானந்த வீடென்பார். அரியமுத்தியென்றுங் கூறினர்.

[இ-ம்.] மனமிறந்தவர்களே நிரதிசயானந்த மடைவர்க ளென்பதாம்.

## மனக்குரங்கென்பதற்குப் பிரமாணம்.

### உபநிடதம்.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்.

என்பதனாற் காண்க.

## ஒரு நிமிஷத்தில் மனம் பலவாயுதிக்கு மென்பதற்குப் பிரமாணம்.

### கைவல்லியநவநீதம்.

வஞ்சகமில் பரமார்த்த குருவேசொன்ன வழிகளறிந்தே னினியோர் வசனங்கேளீர், சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந் ததாகார மாவதன்றோ சமாதியோகம், உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவமாகி யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த, நெஞ்சகம வஸ்துவிலசையா நிவாததீப நிலையடைவ தெப்படியோ நீர்சொல்வீரே. எ-ம்.

### தாயுமானசுவாமிகள்.

இமையளவுபோதை யொருகற்ப காலம்பண்ணு மிவ்வுலக மெவ்வுலகமோ, வென்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற்றின்ப மோ வென்னின்மக மேருவாக்கிச், சுமையெடுமி னென்று தான் சுமமாடுமோயெமைச் சுமையாளு மாக்கினானுந், தாப் புத்திபண்ணியுள நற்புத்தி யாவையுஞ் சூறையிட் டிந்திர ஜாலம், அமையவொரு கூத்துஞ் சமைநதாடு மனமாயை யம் மம்ம வெல்லவெளிதோ, வருள்பெற்ற பேர்க்கெலா மொளி பெற்றுநிற்குமீ தருளோவலாது மருளோ,சமயநெறி காணுத சாக்ஷிநீ சூக்ஷமமாத் தமியனேற் குளவுபுகல்வாய், சர்வபரிபூர ணவகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே, எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

## மனம் உதிக்குமிடத்திற்போ யொடுங்கவேண்டு மென்பதற்குப் பிரமாணம.

தாயுமானசுவாமிகள்.

உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதி யேனுமுனை யொழிந்துதள்ளற், கறவுமறிதன்சிரு விகபரமு முன்னையன்றி யாவதுண்டோ, வறிதிலுனை யசதென்னல் வழக்கன்று சத்தெனவும் வாழ்த்துவேனோன், சிறுமைகெடப் பெருமையினின் சென்மதேயத்தினினீ செல்லல்வேண்டும். என்பதனுற் காண்க.

## மனது சமாதியின்கண் நிற்கப்பெற்றவனே முத்தி அடைவா னென்பதற்குப் பிரமாணம்.

தேவிகாலோத்ரம்.

மந்திரஞ் செபந்தியானம் பூசனைவணக்கம் வேண்டாம்
அந்தமி லாதமுத்திக் குபாயமே யறிதல்வேண்டுஞ்
சிந்தனை புறமேசெல்லிற் றுயரமே திரியமீட்கிற்
பந்தமாந் துன்பநீங்கிப் பரமான வின்பஞ்சேர்வாய்.

என்பதனுற் காண்க. (கச)

(அ-கை.) சாம்பவியின் விதி யிதுவெனல்.

வேறு.

பங்கையாதனத்திற் படியவேயிருந்து பரமசற்குருவினைத் தொழுதே, இங்கிருவிழியும் விசும்புறநிறுவி யெழுங்கருத்தினை யகமாக்கி, அங்குறுநிலையா லடங்கிடாமனத்தி னலைவ

றத்தறி வறியாமை, துங்கமாயொழியச் சாதனைபுரிந்தே தூங்காமற் றூங்குகமாதோ.

(இ-ள்.) பதுமபீடத்திற் பொருந்தும்படியாக இருந்து உயர்ந்த ஞானாசிரியனை வணங்கி இவ்வுலகத்தில் விஷயங்களை நோக்குதற்குரிய இரண்டுகண்களையும் சிதாகாயத்தில் இமையாமல் பொருந்தநிறுத்தி உதிக்கின்ற கருத்தை உள்ளடக்கி அங்ஙனம் பொருந்திய நெறியாலே அடங்காத மனத்தின் அலைதலை அழித்து அறிவும அறியாமையும் நீங்கச் சுத்தமாகச் சாதனஞ் செய்து நித்திரையைச் செய்யாமல் செய்யக்கடவர்கள். - எ-று. ஏ-ஏ-ஏ-மாது-ஓ-இவ்வைந்தும் அசைகள்.

(ப - ம்.) இவ்வுலகத்தில் விஷயங்க ளென்னுங் காத்தில் மனமென்னுஞ் சூத்திரதாரங்கி அலைகின்ற இரண்டு கண்களாகியகறங்குகளை ஞானாசிரியராற்பெற்ற சாம்பவியாகிய அருட்பார்வையென்னுங் கையினாற்சேர்த்தி இதயாம்பரமென்னும் ஸ்தானத்தில் நிலைபெற நிறுத்திவைத்தென்பார்.—இங்கிரு விழியும் விசும்புற நிறுவியென்றும், ப்ரம்மநிஷ்டாசாதனஞ் சம்பூரணமான இடத்தில உதயமாகின்ற நனவிற்சுழுத்தியை அடையவேண்டுமென்பார். தூங்காமற றூங்குகவென்றுங் கூறினார்.

[இ-ம்.] ஞான அப்யாசிக்குரிய ப்ரதான முத்திரையின் சாதகபக்குவங்களை அறிவித்ததாம்.

## இமையா நாட்டத்துடன் சிதாகாயம் பற்றவேண்டு மென்பதற்குப் பிரமாணம.

### கடவுளந்தாதி.

சுழுமுனை வட்டச் சுழுமுனையுச்சித் துவாரத்திலே
வழிபயமெனறு மலைப்பர்களோ மடைக்கொக் கதுபோற்,
றெளிவுறுபார்வை யசையாது சித்தடி தூக்கிநின்று
விழியிமை யாதொளி பார்த்து நிருவ வெளிப்படுமே. எ-ம்.

### திருவாசகம்.

பொய்யனே னகநெகப் புகுந்தமுதூறும் புதுமலர்க்கழலி ணையடிபிரிந்தும், கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ விழித்திருந்துள்ளக் கருத்தினை யிழந்தே, னையனே யரசே யருட்பெருங் கடலே யத்தனே யயன்மாற் கறியொண்ணாச், செய்யமேனியனே செய்வகையறியேன் றிருப்பெருந் துறை மேவிய சிவனே. எ-ம்.

### செல்காலத்திரங்கல்.

களித்திருந்தஞானங் கண்ணலருந்தி யளித்ததனை யன்றே யருந்துதற்குப் பெற்றிலமே. எ-ம்.

### கைவல்லியநவநீதம்.

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுகமாகி யம்ம ட்டு, நிசத்திலுள் விழிப்பார் வையாயிப்படி நிரந்தரப் பழக் கத்தால், வசத்திலுன் மன நின்றுசின் மாத்திர வடிவமாகிடின்

லமர்ந்தா, சுசத்ததேகத்தி லிருக்கிறது மானந்தக் கடல்வடிவாவாயே. எ-ம.

சௌந்தரியந்தாதி.

உமையேமூலத் துறைந்தபொருளுணர்ந்தேசுழியின் முனை
திறந்து, விமையோரறிய வரிதாகுமெந்தாயுனது பதங்கருதி,
இமையா நாட்டத் துடன்காலை நீட்டிமுடக்கி நிலைபுகுந்து,
தலைமையுணருந் தாமருளுந் தாயேயமலன் றனிவாழ்வே.

சௌந்தரியலகரி.

இணைவிழி யிமையாநாட்ட மெய்திய தலரத்தோன்றும்
பணைநெடும் புவனமிந்தப் பார்வைசற் றிமைக்குமாயிற்
றுணையிழந் தழிவதெண்ணித் துணிந்தநின் கருணையென்றாற்
கணையினுங் கொடியதென்னக் கடவதோ கடவுண்மாதே.

தாயுமானசுவாமிகள்.

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலாற் பொங்
திடை யொடுக்கமுறலாற், பொலிவான வெண்ணீறு பூசியே
யருள்கொண்டு பூரித்தவெண்ணீர்மையால், எற்படவிளங்கு
ககனத்தி லிமையாவிழி யிசைந்துமே ஞேக்கமுறலால். எ-ம,

ஔவைக்குறள்.

இமையாநாட்டத் திருந்துணர்வாருக்
கமையாத வானந்தமாம்.

அன்றியும்,

கண்ணூறப்பார்த்துக் காதலாற்றுனோக்கி
யுண்ணுமே யீசனெளி. எ-ம்.

பத்திரகிரியார்.

அமையா மனதமையு மானந்த வீடுகண்டால்
இமையாம னோக்கி யிருப்பதினி யெக்காலம். எ-ம்.

ஒழிவிலொடுக்கம்.

தன்னேயிழப்பார்க்கென்ன சார்வூழிச்சங்கார
மென்னிலொளித்தெங்கே யிருக்கலா—முன்னே
புலிபார்க்கப்போனகதை போலிமையாநாட்டஞ்
சலியாமன் மூடுந்தனே. எ-ம்.

சொரூபத்தந்தாதி.

நயனமூமே வடிவாஞ் சொரூபத்தை நண்ணிநின்றால்
நயனஞ்செவி தொக்குமூக் கெனுமிந்திய நாவினொடு
நயநண் சுழுத்தி யவத்தைதகனவி னனவினுடன்
நயனம்பிறிவற் றிருக்கு மெல்லாங்கண்டு நாட்டதிலே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

தூங்காமற் றூங்குகவென்பதற்குப்

பி ர மா ண ம்.

மோகவதைப்பரணி.

ஆங்குணரா மையுமுணர்வு மாகியகோ ளறவிருந்து
தூங்கினர்காண் சுகமடைவார் சும்மேலோ சும்மூலக்காய்.

### கடவுளந்தாதி.

கண்டுகொண் டானந்தக் கூத்தாட்டை நேசக் கருணையி னூற், கொண்டு நின்றான்பர வீதியிலேகுரு பாதமென்றுா, தொண்டுசெய் தந்தத் திருவாடுமூசலிற றூங்கிக் கொண் டாற், பண்டுமுன் சோதிப் பழமபொரு டோன்றும் பணி ந்தவர்க்கே. எ-ம்.

### பத்திரகிரியார்.

கட்டறுக்கவெண்ணுக் கருவிகரணாதியெல்லாஞ்
சுட்டறுத்துநிட்டையிலே தூங்குவதுமெக்காலம்.

அன்றியும்,

ஆங்காரமும்மடக்கி யைம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகமபெறுவ தெககாலம்.

அன்றியும்,

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம். எ-ம்.

### பட்டணத்துப்பிள்ளையார்.

சினந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வினந்தனிலென் றிருப்பேனத்தனே கயிலாயத்தனே.

அன்றியும்,

ஒத்தவிடநித்திரையென் றுறத்துயிருந்தேண்டி. எ-ம்.

## திருவருட்பயன்.

ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்தி லின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டுசொல். எ-ம்.

## அவிரோதவுந்தியார்.

ஆங்கறியாமையுஞ் சாராதறிவொடுங் தூங்குவாய்நாளுமெ
ன் றுந்தீபற, தோன்றும் பரம்பொரு ளுந்தீபற. எ-ம.

## கந்தரலங்காரம்.

ஆங்காரமு மடங்காரொடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார்நினைப்பு மறப்புமறார் தினைப்போதளவு
மோங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகனுருவங்கண்டு
தூங்கார்தொழும்பு செய்யாரென்செய்வார் யமதூதருக்கே.

## ஞானவாசிட்டம்.

தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும்போதிற் சேர்ந்தசுக வறிவுமிகச் சிறந்ததாகும், தெரிபொருளால் வளைப்புண்டாற் பந்தமாகுந் தெரிபொருளை விட்டகன்றாற் றிடங்கொள்வீ டாந், தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும்போதிற் சேர்ந்த வனுபூதியிடர் தீர்ந்ததாகும், தெரிவுறலாங் கதுபற்றி நிற் பாய்நீ நின்றிரமிலையாஞ் சுழுத்திதனைச் சேருவாயே. எ-ம்.

## சவுந்தரியந்தாதி.

புரியுக்தொழிலு மூலத்திற் பொங்குஞ்சலதிப் பெருங்கடலைக்
கரிகொண்டரிய கனலெழுப்புங் காற்றும்புகுந்து களங்கமல

மெரியுஞ்சுழினைத் தடமேறி யிசென்றிருத்தர் ளிளையடைந்து
துரியங்கடந்தபெருவெளிக்கே துஞ்சத்தருவாய் துணைமாதே.

தாயுமானசுவாமிகள்.

தூங்கிவிழித்தென்னபலன் றூங்காமற்றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோ பலன்காண்பேன்பைங்கிளியே.

அன்றியும்,

தூங்காமற்றூங்கிச் சுகப்பெருமானின்னிறைவில்
நீங்காமனிற்கு நிலைபெறவுங்காண்பேனோ.

எ-ம் வரும் மற்றும வருவனவற்றுற் காண்க. (கரு)

(அ - கை.) சதாநிஷ்டை செய்யின் சர்வமும் ஒடுங்கி முத்தி அடையலாமெனல்.

---

ஆதனத்திருந்தே சாதனைபுரிந்தா லடங்கிடாப் பொறிபுல னடங்கும, ஆதனத்திருந்தே சாதனைபுரிந்தா லடங்கிடு மனோவிடயங்கள், ஆதனத்திருந்தே சாதனைபுரிந்தா லறிவறியாமைக ளொழியும், ஆதனத்திருந்தே சாதனைபுரிந்தா லகண்டவீ டடைவது நிசமே.

(இ-ள்.` மேற்சொலலிய அங்காசனத்திலேயே யிருந்து பிரமநிஷ்டாசாதனஞ் செய்தால் அடங்காத இந்திரியங்களும் அவைகளின் விஷயங்களும ஒடுங்கும். அங்காசனத்திலேயே யிருந்து பிரமநிஷ்டாசாதனஞ் செயதால் மனோவிஷயங்கள் ஒடுங்கும். அங்காசனத்திலேயே யிருந்து பிரமநிஷ்டாசாத

னஞ்செய்தால் அறிவும் அறியாமையுமாகிய விரண்டுநீங்கும். அங்காசனத்திலேயே யிருந்து பிரம நிஷ்டாசாதனஞ் செய்தால் அகண்டாகார சின்மயானந்த வீட்டைப்பெற்றுக்கொள்வது சத்தியம். எ-று-ஏ-அசை.

எனவே சாயுஜ்யபதம் பெற்றுக்கொள்ள வேண்டிய பரிபாகிகள் சற்குருவை அடைந்து ப்ரம்மநிஷ்டையைக் கைக்கொள்வாராயின் அவர்கள் ஓர் அங்காசனத்தில்நின்று அந்நிஷ்டையை இடைவிடாமல் சாதனஞ்செய்து வந்தால்மாத்திரம் அருட்போதமாகிய ஞானக்கினி சகோதயமாய் மேன்மேலும் விளங்காநிற்கும் அதனாற் பொறிபுலனற்று மனோலயமுற்று ஜடத்துவம்-ஜீவத்துவம்-ஈசத்துவம்-சாக்ஷித்துவம் ஆகிய விந்நான்குங் கழன்று அதீதமுத்தி அடைவார்கள். சாதனஞ்செய்யாவிடின் அத்தேகத்தில் முத்தியை அடையமாட்டார்களென்றதே துணிபெனப்பெற்றும்.

[இ-ம்] வெளிப்படை.

ஞானநிஷ்டாசாதனையினால் இந்திரியமுதலியவை

ஒடுங்குமென்பதற்குப் பிரமாணம்.

சிவானந்த மாலை.

பூதஞ்சூழலும் பொறிபுல னந்தக்கரணம்
போதங்கழித்துநாள் போக்காதே - போதச்
சிறையாநிறைவகலச் சின்மயநேயத்தே
நிறையா நிறைவாகிநில். ௭-ம்

## ஞானவாசிட்டம்.

மனமணிபேதச்சேற்றின் மறைந்தொருவருக்குந்தோன்று
[illegible]றவிவேகநீராற் கழுவினாற்சிதகாட்டும்
வினவுறுவிவேகவன்பான மெய்ம்மைமையமதியாற்கண்டு
சின[illegible]பொறியைவென்று தீர்வருபிறவிதீர்வாய். எ-ம்,

## மவுனதரிசனம்.

அருமையென்ற மௌனத்தை மூட்டுமூட்டு வடங்காத கரணமைந்து மடங்கிப்போகும், இருமையென்ற விந்திரியமாண்டுபோகு மிருண்மலம்போந் திரோதையில்லை மயக்கநீங்கும், வெருவுபல கோடிசன்மங் கணத்தினீங்கும் வெளியினுளளே யொளிதோன்று நாதங்கேட்கும, உரிமையுடன் மௌனசித்தி யாகவாக வுருவமுனக் கானந்த வநுவமாமே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

## சமாதியிலே குலையாதிருப்பவன் முத்தியடைவனென்பதற்குப பிரமாணம.

## சாந்தலிங்கசுவாமிகள்.

அருந்தவவிலக்கிவ் வுடல் பரிப்பதுதானச்சமாதிகடருமூலர் திருந்துநநூசிநதைசிவன் கணேயாவர்வரினு மென்றமையிற் பேதிப்பான், பொருநதினும்வானேரெதிர்முதிர்கொலை வெம்பூதமாதியவளைந்திடினு, மிருந்ததஞ்சமாதி நிலைகுலையாதோரெண்ணியவெண்ணியாங்கடைவர்.

என்பதனுற்காண்க.

(அ - கை.) சின்மயத்தில் அரை மாத்திரைப் போதேனும் நிலைபொருந்தினவர்களே முத்தரெனல்.

வேறு.

உலையாப்பொறியும்புலனடக்கி யொன்றுமனத்தினுன்னுதே
தலையாகியபேரானந்தந் தலைப்பட்டதனிற்றன்மூழ்கி
அலையாயோகமம்புவிடுநேர மரைமாத்திரையேனும்
நிலையாநிற்போர்வீடடைவர் நிலத்திற்பிறவாரிறவாரே.

(இ - ள்.) கெடாத இந்திரியங்களையும் விஷயங்களையும் அடங்கச்செய்து மனதில் ஒன்றையும் நினையாமல் சர்வானந்தத்துக்கும் முதன்மையான பேரானந்தக்கடலிற் பொருந்தி அதில் மூழ்கி அலைவற்ற ஞானயோகநிலையில் வில்லிற்றொடுத்த பாணத்தை விடுகின்ற நேரமாகிய அரை நிமிஷமாத்திரமாகிலும் தடஸ்தமாய் நிற்கத்தக்கவர்கள் மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். அன்னவர்கள் இப்பூமியின்கண் சநநமரண துக்கத்தை அடையார்கள். எ-று. தான-சரியை-ஏ-ஏ-அசைகள்.

(ப - ம்.) அலைநுரைகுமிழி திவலைகள்போற் றோன்றி அழியாநின்ற மனுடானந்தமுதல் இரணியகர்ப்பானந்த வரையிலுமுள்ள பதினோரானந்தங்களுக் கெல்லாம் மேலான ப்ரம்மானந்தக்கடலென்பார் தலையாகிய பேரானந்தமென்றார்.

[இ - ம்.] ஆத்மானு சந்தானத்தில் இறையளவேனும் சும்மாநிற்கவேண்டு மென்பதாம்.

## பேரானந்த மென்பதற்குப் பிரமாணம்.

### கைவல்லியநவநீதம்.

மனுடன் மனுடகந்தருவன் றேவகந்தருவன் பிதிர்பிறவித் தேவன், தனுடன்கரும சுரன்சுரனிந்திர னாசான் பிரசாபதி யானோன், கனவிராட் டனிரணிய கருப்பன் கருதுமிப்பதி னொருபேரின், பினவானந்தங்க ளுளையாப் பிரளயவெள்ளக் கடல் பிரமானந்தம். எ-ம்.

### சந்நிதிமுறை.

மன்னரா வாறுசுக மும்வானோர் மகிழ்ந்து பெறு சுகமு, மணிப்பைநாகத் தவர்சுகமு மற்றையோர்க ளடைசுகமும், பன்னுமிடத்திற் சிவதெழுந்த பரமானந்த லேசமெனப், பகர்ந்தாய் குருவாயெழுந்தருளிப் படிறேன் மறந்திங் குழல்கின்றேன், கன்னலெழுந்த தெளிசேறே கட்டிமாவின் றீங்கனியே, கதலிக்கனியே நற்பலவின் கனகச்சுளையே கதிமுளையே, பொன்னம் பொருப்பே யென்விருப்பே போதச்சுகமே நிஞ்சுகமே, புரணவெளியே யுள்ளொளியே போரூர்முருகப் பெருமாளே. எ-ம் வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

## அணைமாத்திரைப்போத நிலையில் நின்றவர்கள் முத்திபெறுவார்க ளென்பதற்குப் பிரமாணம்.

### ஒழிவிலொடுக்கம்.

சுட்டுப்போதங்கழன்ற சுத்தமணைமாத்திரையின்
மட்டுத்தானற்றநிட்டை வாய்க்குமாற்-கெட்டேன்

தலைச்செய்யுமானந்தஞ் சற்றோபால்வாரி
மூலைக்கண்ணிற் றோன்றுமறை. எ-ம்.

சாந்தலிங்க சுவாமிகள்.

பொல்லாதவென்னெஞ்ச மோனைந்துபுலன்கடம்பா
லல்லாததனைமாத்திரையுந் நின்னடிக்கணன்பாய்
நில்லாதிதற்கெனனசெய்கே னிதைநின்றிடென்றே
சொல்லாய்திருத்தில்லை யுண்மேவியசோதிநீயே. எ-ம்.

குருநமசிவாயர்.

மாத்திரைப்போதாயினுநின் வாய்த்தமலர்ச்சேவடிக்கே
நேத்திரத்தைநெஞ்சி னிருத்தாமற்—சாத்திரத்தை
யெல்லாமறிந்துபயனேது மினிக்கண்டிலேன
வல்லாய் சிதம்பரதேவா.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றாற்காண்க. (கஎ)

(அ-கை.) உண்மையாகிய சிவயோகமிதுவெனல்.

---

நிட்டைநிலையிதென் றுரைப்பர் நிகழும்வாயுத்தாரணையை
நிட்டையதுதானலவென்றே நிலவுமேலோர்புகலுவார்
நிட்டையாதல்கருத்தடங்க நிறுத்தலதுவேசிவயோகம்
நிட்டைவிடாதுசாதிப்போர் நித்தமெய்வீடுறுவாரே.

(இ - ள்.) செல்லுகின்ற வாயுவை அடக்குதலைச் சிலர் இதுவே ஞானநிஷ்டையினுடைய நிலைமையென்று சொல்லு

வார்கள், ப்ரகாசிக்கின்ற ஞானவான்கள் அது ஞானநிஷ்டை யல்ல ஞானநிஷ்டையாவது மனத்தினுடைய விர்த்திகளடங்க நிறுத்தலென்று சொல்லுவார்கள். அப்படிச்சொல்வதே சிவ யோகமாம் அந்தச் சிவயோகமாகிய ஞானநிஷ்டையை விடா மல் சாதிக்கத்தக்கவர்களே அழியாத உண்மையாகிய மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். எ-று-தான்-சாரியை-ஏ-ஏ-அசைகள்.

(ப - ம்.) மனமானது தொம்பத சுத்தார்த்தத்தை விட்டுத் தத்பதத்தைச் சார்ந்து தெளிவாக மவுனநிலையிற் போராமல் விளங்குகின்றதே ஞானநிஷ்டையாகுமென்பார்—நிட்டையாதல் கருத்தடங்க நிறுத்தலென்றும், இடைவிடாமல் நடக்கையிலும் விவகாரவேளையிலும் யாதொன்றைச் சிரவணம் பண்ணுகையிலும் ஞானநோக்குற்று அசிபதமாகிய ஐக்யநிலை பொருந்தினவர்களே சதோதமுமாய்ச் சீவன்முத்தி பதத்தைப் பெறுவார்களென்பார்—நிட்டைவிடாது சாதிப்போர் நித்த மெய்வீடுறுவாரென்றுங் கூறினர்.

[இ - ம்.] மனமிறக்கு நிலையேயல்லது வாயுத்தாரணையைச்செய்தல் பிரமநிஷ்டையல்ல வென்பதாம்.

## இதற்குப் பிரமாணம்.

### ஒழுவிலொடுக்கம்.

குறங்குருத்திக்கொண்டு குறோக்கைகத்திக்கூட்டை
மறந்தழைத்தாற் றூக்கம்வருமோ—வெறுங்கெடுவீர்

தன்னையழித்தெழுந்த சச்சிதானந்தத்தை
புன்னிலொளித்து விடாதோ.

என்பதனாற் காண்க.

கருத்தடங்கினதுவே

## சிவயோகமென்பதற்குப் பிரமாணம்.

### சொரூபசாரம்.

சித்தம்பிறந்துசெகம்பிறந்து தானெனவோர்
கத்தனைபிறந்தவழி கண்டோமே—சித்தம
அடங்காமையேமாயை யமமாயைமாய்ப்பார்
திடநதானே சாயுசசியம். ௭-ம்.

### உண்மைநெறிவிளக்கம்.

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்திங் கெய்துமுயிர் தனைக்கண் டிவவுயிர்க்குமேலாம், ஒப்பிலருள் கண்டு சிவத் துண்மைகண்டிங் குற்றதெல்லா மதனாலே பற்றிநோக்கித், தப்பினைச்செய் வதுமதுவே நினைப்பதுதானே தருமுணர்வு புசிப்புமது தானேயாகும், எப்பொருளு மசைவில்லையெனவநதப் பொருளோ டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன்மொழியே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க.

சதாநிஷ்டரே சீவன் முத்திபதத்தி லிருப்ப

## தென்பதற்குப்பிரமாணம்.

### தாயுமானசுவாமிகள்.

நடக்கினுமோடினுநிற்கினும் வேறொருநாட்டமின்றிக்
கிடக்கினுஞ்செவ்வித்திருக்கினு நல்லருட்கேள்வியிலே

தொடக்குமென்னெஞ்சமனமற் றப்பூரணத்தொட்டிக்குளே
மூடக்குவன்பான்பரமானந்த நித்திரைமூடிடுமே.

என்பதனாற்காண்க. (கஅ)

(அ-கை.) சதாநிஷ்டையாலே மோக்ஷமடைதல் சத்திய மெனல்.

வேறு.

நிட்டைசாதித்தா னிங்குமைம் பொறியொடு புலனும்
நிட்டைசாதித்தா னெஞ்சமு முளத்திடை யொடுங்கும்
நிட்டைசாதித்தா னினைப்பொடு கேவல மொழியும்
நிட்டைசாதித்தா னிமலவீ டடைவது நிசமே.

(இ-ள்.) ஞானநிஷ்டையைச் சாதித்தால் பஞ்சேந்திரியங்களுடனே அவைகளின் விஷயங்களும் ஒடுங்கும். ஞானநிஷ்டையைச் சாதித்தால் விஷயாந்தரங்களிற் செல்லுகின்ற மனமும் உள்ளொடுங்கும். ஞானநிஷ்டையைச் சாதித்தால் சகலகேவலங்களொடுங்கும். ஞானநிஷ்டையைச் சாதித்தால் மலரகிதமான முத்தியைப் பெற்றுக்கொள்வது உண்மையாகும்.—எ-று. ஏ-அசை.

(ப - ம்.) அனார்த்த சடதுக்கமாகிய திரிபுடியை மெய்யெனக்கொண்ட மனமானது அவற்றைப் பொய்யெனத்தள்ளச்செய்கின்ற சமாதியனுபவத்தில் அழுந்தப் பெறுமாயின் அம்மனம் அங்கிலேஷிடாதென்பார்.—நிட்டைசாதித்தா னெஞ்சமு முளத்திடை யொடுங்குமெனவும், அவ்வனுபூதியின்

கண் தன்னைத் தரிசிக்கின்ற தோற்றவொடுக்கம் நசிக்குமென் பார்—நிட்டைசாதித்தா னினைப்பொடு கேவலமொழியு மெனவுங் கூறினார். (கக)

(அ - கை.) இதுவுமது.

வேறு.

நீங்காக்கருத்தையகத்திருத்தி நிகழ்சாம்பவியாற்ககனமுற
நீங்காநிட்டைசாதித்தானீங்கும் பொறியுமபுலன்கரணம்
நீங்காநிட்டைசாதித்தா னினைப்புமறப்புமறநீஙகும்
நீங்காநிட்டைசாதித்தா னித்தமுத்திப்பேறடைவார்.

(இ - ள்.) ஒழியாத எண்ணத்தை உள்ளத்தில் நிறுத்திப் பிரகாசிக்கின்ற சாம்பவியினாற் சிதாகாயத்திற் பொருந்தப் பிரிவில்லாமற் பிரமநிஷ்டையைச் சாதனஞ்செய்தால் பஞ்சேந்திரியங்களும் அவைகளின் விஷயங்களும் அந்தக்கரணங்களும் ஒடுங்கும் பிரிவில்லாமற் பிரமநிஷ்டையைச் சாதித்தால் சகலகேவலங்கள் முழுதும் ஒடுங்கும். பிரிவில்லாமற் பிரமநிஷ்டையைச் சாதித்தால் அழிவில்லாத முத்திப்பேற்றைப் பெற்றுக்கொள்ளுவார்கள். எ-று.

(ப-ம்.) நிஷ்டையின்கண் உதயமாகின்ற ஞாதுருஞானமிரண்டும் நழுவுமென்பார்.—நினைப்புமறப்புமற நீங்குமெனவும், ப்ரம்மானுபவத்தில் ஙேயமாத்திரமா யிருக்கப்பெறின் ஜீவன் முத்தர்களாவரென்பார்—நிட்டைசாதித்தா னித்தமுத்திப்பேறடைவா ரெனவுங் கூறினார்.

[இ-உ-க-ம்.] ப்ரம்மநிஷ்டர்கள் சாதனத்தினலேயே பொறிபுலன்களும் மனமுமொடுங்கப்பெற்று அறிவானந்தமாகிய மோக்ஷவாழ்வை அடைவது சத்தியமென்றறிவித்ததாம். (உ0)

(அ-கை.) நிவாததீபம்போலத் தன்னிலையில் நிலைபெற்றவனே சிவத்தை யடைவனெனல்.

வேறு.

உத்தரமுகமா யாதனத்திருந்தே யுயர்குரு பதமலர் தொழுது, முத்திரையெனுஞ் சாம்பவியினைப் பொருந்தி மோனமாமந் நிலைவழாமற், சித்திரதீபம்போ லசைவறவே சிந்தையினலைவறுப் பவனே, அத்தனதடியை யடைவனென்றுரைக்கு மணணலாகம மெலாமெடுத்தே.

(இ-ள்.) வடதிசைமுகமாகி அங்காசனத்திலிருந்து உயர்ந்த ஞானசிரியருடைய சரணரவிந்தங்களை வணங்கிச் சாம்பவியென்னும் முத்திரையைப்பொருந்தி மவுனமாகிய அந்த நிலையில் வழுவுதலில்லாமற் சித்திரத்திலெழுதிய தீபத்தைப் போல அசைவில்லாமலிருந்து மனத்தி னுடைய சலிப்பை அறுக்கத்தக்கவனே பரமசிவனுடைய திருவடிகளை அடைவானென்று பெருமை பொருந்திய ஆகமங்களெல்லாம் எடுத்துச் சொல்லும்—எ-று. ஏ-ஏ-ஏ-அசைகள்.

[இ-ம்.] சித்த மசைவற இருந்த ஞானநிஷ்டாபரனே சிவனுமென்று வேதாகமங்கள் சொல்லு மென்பதாம்.

இதற்குப்பிரமாணம்.

பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்.

சித்தஞ்சிவத்தோ டொருக்கிச்சிவமான
முத்தன்சிவனென மொழிந்திடுமாகமஞ்
சத்தியஞ்சீவன் சங்கரனென்றே
குற்றமிலுன் மறை கூறும்வருத்தே.

என்பதனுற் காண்க. (உக)

(அ - கை.) ஞானநிஷ்டையைப் பெற்றும் அதிற்பாடுப டாம லிருக்கின்றவனைநோக்கி இரங்கிக்கூறல்.

வேறு.

இருந்தான்சமாதிபோலென்றே யிந்தவுலகோரியம்புங்கேட் டிருந்துஞ்சமாதிதனி லுழையா தென்னோவென்போலிருந்தா னே, இருந்தான்சமாதிதன்னிலேயி லிருந்தேயிலாமைதனை நீக்கி, இருந்தானவனேயிருந்தானே யின்பமளவிலின்பத்தே.

(இ - ள்.) (இவன்) இவ்வுலகத்தார் ப்ரம்மநிஷ்டையை யுடையவனாக இருக்கின்றானென்று தன்னைச்சொல்லவுங்கேட் டிருந்தும் நிஷ்டையில் பாடுபடாமல் யாதுகாரணமோ இது வரைக்கும் எதுபோலிருந்துவிட்டான். பெருமைபொருந்திய சமாதியாகிய தனதாத்மஸ்வரூப நிலேயிலிருந்து அறியாமை யையொழித்து இருந்தவனெவனோ அவனே (பலவாகச்சொ ல்லு) மின்பங்களைப்போல அளவுபடுத்தக்கூடாத பேரின்ப

## நிஷ்டையில் யாவுமிறக்கப்பெற்றவனுக்குப் பேரின்பபோகமுண்டேன்பதற்குப் பிரமாணம்.

### கடவுளந்தாதி.

திறந்தேயெடுக்கச்செகமாய்கை மோகத்திரை மருட்டு
மறந்தேவிடுவஞ்சநெஞ்சகமே மலையேறிவன்றாற்
பறந்தேவிழுவருமோபஞ்ச பூதச்சுமையுங்கொண்டே
யிறந்தேயெடுக்கவல்லார்க்கல்லவோ வெய்தும்வான்சுவையே.

என்பதனாற் காண்க. (உஉ)

(அ-கை.) ஞானசாதக னனுஷடிக்கும் விதிகளும் சாத்தியனது அநுபவமு மிவையெனல்.

### வேறு.

அருந்தபோனகமும்பாதியா நீருமதனி னும்பாதியதாகப், பொருந்துநாளொன்றுக்கொரு பொழுதருந்தல்புரிகமற்றெவ்விடத்தெனுந்தான், இருந்திடினும்பின்னெழுகினும் புவிமீதேகினுமாதர்கடம்மைப், பரிந்துகூடினுமெய்ஞ்ஞானமுத்திரையிற்படிவதுயோகிதன்பரிசே.

(இ - ள்.) (ஞானசாதகன்) உண்ணத்தக்க போசனம் அரைவயிறாகவும் ஜலம் அதிற்பாதியாகவும் (சாதனத்திலிருக்கிறநாளில்) நாளொன்றுக்கு வொருபொழுது போஜனஞ் செய்யக்கடவன். வேறேயெந்த இடத்தில் தானிருந்தாலும் பின்னர் எழுந்துநின்றாலும் உலகத்தில்சஞ்சரித்தாலும் ஆசை

யுற்றுப் பெண்களைச் சேர்ந்தாலும் உண்மையாகிய சின்முத்திரையிலழுழ்கிக்கிடப்பது சாத்தியனாகிய சிவயோகியின் குணமாம்.—எ-று. எனினுமென்பது, எனுமென விகாரமாயிற்று மற்று-ஏ-அசைகள்.

(ப-ம்.) சாதன சதுஷ்டயத்தைப் பெற்ற முமுக்ஷுக்களானபரிபாகிகள் அஞ்ஞாசாரியனை நீங்கிக் கனிந்தஞானாசிரியரிடத்தில்வந்தடைந்து அவரால் தத்தம் ஆத்மஸ்வரூபநிலையில் நிற்கப்பெற்று ஞானசாதகர்களாய் அப்பிரமசாதனஞ்செய்துவருவதற்கு எவ்வனபக்குவமானாலும் விசேஷமாய்க்கொள்ளுகிற அன்னபானாதிகளால் வியாதி-மயக்கம் - சோம்பல்-விகாரம் ஆகிய இவைகள் நேரிடுமாதலால் கிரமமாகத் தங்கள் க்ஷுத்தக்கினிக்குத்தக்க உணவுகளைவுட்கொண்டு அவ்வக்கினிமேலிட்டிருக்கச் சாத்தியத்தின் அனுபவ மெளிதிலுதயமாக இருத்தலே அவர்களுக்குரிய விதியென்பார்.—அருந்துபோனகமும் பாதியாநீரு மதனினும்பாதியதாகப் பொருந்துநாளொன்றுக் கொருபொழுதருந்தல் புரிகவென்றும், அத்துவித அபரோக்ஷானுபவத்தில் நிறைந்துவிளங்கிய ஜீவன் முத்தர்கள் தமது தேகபிராரத்வமானது பற்பலவிதங்களாய்ப்பொருந்தி யிருக்கச்செய்தாலும் தேகோகமென்ற சொப்பனசகத்தினின்று நீங்கிச் சிவோகமயமாய் நின்ற சுவானுபூதி சாக்ஷாத்காரத்தி லிறந்துநின்ற இச்சடசித்துக்களால் உண்டாகின்ற பிராரத்வ த்ரயபோகங்களை யுணர்தல் கிஞ்சித்துமில்லாதிருப்பதே சுபாவமென்பார்—எவ்விடத்தெனுந்தா

விருந்திடினு மெய்ஞ்ஞான முத்திரையிற்படிவது யோகிதன் பரிசேயென்றுங் கூறினர்.

[இ-ம்.] சாதகர்கள் ஏகபுக்தங்கொண்டிருக்கக்கடவர்க ளென்றும், சாத்தியர்கள் எத்தன்மையான பிராரத்வபோகங் கள் முயற்சியின்றியேவந்தடையினும் அப்போகங்க ளுள்பற நின்றித் தங்கள்நிலையில் கேவலமாய் மூழ்கிநிற்பர்களென்று மறிவித்ததாம்.

இருந்திடினுமாதியாய்வரும் எதிர்மறை உண்மைகளால் அச்சிவன்முத்தர்கள் எவைகளிலும பிரவேசியா ரென்பதே துணிபெனப்பெற்றும்.

சீவன்முத்தர்கள் எத்தன்மைத்தான

பிராரத்வபோகத்திலிருந்தாலும் தநிலைவிடா

ரென்பதற்குப் பிரமாணம.

கைவல்லியநவநீதம்.

காமமாதிகள்வந்தாலுங் கணத்திற்போமனத்திற்பற்றார்
தாமரையிலைத்தண்ணீர்போற் சகத்தொடுங்கூடிவாழுவார்
பாமரரெனக்காண்பிப்பார் பண்டிதத்திறமைகாட்டார்
ஊமருமாவாருள்ளத் துவகையாஞ்சீவனமுத்தர்.

அன்றியும்,

விலகாரவேலையெல்லாஞ் சமாதியென்றால்விகற்பமன்றோ
மனமலைந்து விடாதோவிட்டால், அவதான் கழுவுமன்றோ
வென்றுயாகி லதற்கொருதிட் டாக்தங்கே ளாசைகொண்டு

நவமாகப் பரபுருடன் றன்னைக்கூடி நயந்துசுக மனுபவித்த நாரிநெஞ்சந், தவமான மனைத்தொழில்கள் செய்யும்போதுந் தழுவியனுபவித்தசுகந் தனைவிடாதே. எ-ம்.

அத்துவிதாநுபவம்.

சகலமறிந் தாசையிலலா மெய்ஞ்ஞானி யெத்தொழிக டான்செய்தாலும், மிகசாம்ப ராஜ்யமுதல் பரமபதத் துள்ளசுக மெல்லாஞ் சேர்வான், அகல்கரும மொன்றுண்டோ பிறவியுண்டோ விரண்டுண்டோ வவித்தையுண்டோ, சுகமயமோ மெய்யறிவோ சற்குருவோ வவன்மகிமை சொலலொணாதே.

பட்டணத்துப்பிள்ளையார்.

எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப்பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே - வித்தகமாய்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தேதான். எ-ம்.

பசுபதிபாசவிளக்கம்.

மன்னியசோரன்றன்னை மனதினினினைத்துக்கொண்டு
தன்னுறுகணவனோடு தழுவியவாறுபோலத்
தன்மனஞ்சிவத்தில்வைத்துத் தானவனனஞானி
பின்னையுமுலகினின்று பேசுவான்மாசொன்றில்லான். எ-ம்.

ஞானவாசிட்டம்.

மிகவருகாமாதிகளாம் விகாரமடைந்தும் விண்போன்மிக வொய்தானோர், அகமெனவின்றிச் செயல்கள்செய்தாலுந் தனி

ர்ந்தாலு மழுத்தமற்றோர், சகநெறிகள்செய்திடினு மன்னி யர்போற் கண்டுருளிர் தன்மைசான்றோர், திகழுமனமு நினை வுமிருந்துஞ் சிறிதுமில்லாதோர் சீவன்முத்தர்.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (உங)

(அ-கை.) ஞானசாதகர்க்குத் தசநாதங்களும் உதிக்கு மெனல்.

இத்திறமானயோக சாதனையிலிருந்து சாதிப்பவர்தமக் குச், சுத்தமாநாதத் தொனிகளும்பலவாத் தோன்றிடுமணிக டன் மேகம், மத்தளம்பேரி யாழொலிசிலம்பு வீணையளிதாள மென் றுமையாட், கத்தனு மொழிந்தா னன்றியுமுரவோ ராய்ந்தெடுத் துரைத்தனரன்றே.

(இ-ள்.) இத்தன்மையான சிவயோக நிஷ்டையிலிருந்து சாதனஞ்செய்பவர்களுக்குக் கண்டா-சமுத்திரம்-மேகம்-மத் தளம்-பேரிகை-வீணை-ஒலிக்கின்றசிலம்பு-சங்கு- வண்டு-கைத் தாளம் (ஆகிய இவைகளின் சப்தத்தைப்போலப்) பரிசுத்த மாகிய நாதங்களும் பலவாறுக உண்டாகுமென்று தேவியா ருக்குச் சுவாமியும் உபதேசித்தார் அல்லாமலும் அறிவுடை யோர்களும் (பலநூல்களிலும் ஆராய்ந்து எடுத்துச்சொல்லி யிருக்கின்றூர்கள்.—எ-று-அன்று-எ-அசைகள்.

(ப - ம்.) தந்நிலையை அசைவற உணர்ந்தறிகின்றதாகிய கூடஸ்த சைதன்ய சாக்ஷியென்னுஞ் சமுகத்தில் தசநாதங்க ளும் உதிதோசிதமாய முழங்குமென்றும், அந்நிலைவிட்டுப்

பகிர்முகமாய்ப் பிரகாசிக்குங் காலேயிலும் தங்கள் சுவானுப வத்திற் கண்டபடி அத்தசநாதங்களுந் தாமேசப்தித்து விள ங்காநிற்குமென்றுங் கூறுவார்—யோகசாதனையிலிருந்து சா திப்பவர்தமக்குச சுத்தமா நாதத்தொனிகளும் பலவாத்தோ ன்றிடு மென்றூர்.

[இ - ம்.] ஞானசாதனத்தில் விளங்குகின்றவர்களுக்கே யன்றி ஏனேயோர்க்கு நாதானந்த முதியாதென்பதாம்.

## இதற்குப் பிரமாணம்.

### கடவுளந்தாதி.

அன்பருக் கன்புதரும் பரஞ்சோதியை யாத்துமத்தோ
டென்புருகக் கலந்துள்ளே யுருகி யிரவுபகல்
தம்புருவீணை சரமண்டலத் தொனி தாளதித்தி
மின்பெருகுங்கொலுச் சிங்காரங்கண் டிருமெய்ம் மகிழ்ந்தே.

அன்றியும்,

சிலம்பொலியப் புறமிப்பாற் சிலம்பொலி தேவர்சபை
யலம்பொலி யோசை யதுவெகுநாத மதற்குமப்பால்
வலம்புரி சுற்றிய வாசலுமுச்சி வழிதெரிந்தாற்
புலம்பொலி யாடலும் பாடலுமாகிய பூரணமே.    எ-ம்.

### ஞானிகள்நிலைமை.

கந்தமுதலேம்புலனை யடக்கிநாப்பண் கருத்தமைத்துச் சா ம்பவிநோக் கதனைமேவிச், சிந்தையுறத் தான்சரிக்கு மிடங்க

டன்னிற் செறிந்திடையா திருந்தினையி னிட்டைகூட, வந்தெழும்பு மணிசலதி சிலம்புசங்குவண்டிசையாங் குழல்பேரி முழக்கங்காண, இந்தவகை சிவயோகத் திருப்பான் ஞானி யினியவற்குப் பிறவியுமுண் டென்னலாமோ. எ-று.

அகஸ்தியமுனிவர்.

வையஞ்சலமங்கி கால்வான் பலவுயிர் வான்முடியோ
டெய்யுமபராமுதற் சார்வதெல்லா மெம்பிரான் முருகா
தெய்யனநின்று நின்றாட்சிலம போசைத திருவிளையாட்
டையநின னங்கமதென் னங்கமாய்நிறை வானந்தமே. எ-ம்.

திருவாசகம்.

என்னணியார் முலையாக மளைந்துடனின்புறு மாகாதே
யெல்லையின்மாக் கருணைக்கட லின்றினிதாடுது மாகாதே
நன்மணிநாத முழங்கியென் னுள்ளுறநண்ணுவ தாகாதே.

தாயுமானசுவாமிகள்.

கெஜதுரகமுதலான சதுரங்கமனமாதி கேள்வியி னிசைந்துநிற்பக், கெடிகொண்ட தலமாறு மும்மண்டலத்திலுங் கிள்ளாக்கு செல்லமிக்க, தெசவிதம தாய்நின்ற நாதங்களோலிடச் சிங்காசனாதி பர்களாய்த், திக்குத்திகந்தமும பூரணமதிக்குடை திகழ்ந்திட வசந்தகால, மிசையமலர் மீதுறைமணம்போல வானந்தமிதயமேற் கொள்ளும்வண்ண, மென்றைக்கு மழியாத சிவராஜயோகமா யிந்த்ராதி தேவர்களெலாம, விஜயஜயஜயவென்னவாசிசொலவே கொலுவிருக்கும்பெருமை

வெளிதோ, வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற் றவித்த நச் சித்தர்கணமே. எ-ம்.

வாதவூரர்புராணம்.

முக்குணம்புல னோர்ந்துடனடக்கி மூலவாயுவைமெழுப் பிரு வழியைச், சிக்கெனும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த், தக்கவஞ்செழுத்தோ ரெழுத்துருவாந் தன்மைகண் டருடரும் பெருவெளிக்கே, புக்கழுந்தின ரெமதுருப்பெறுவார் புவியில்வேட்டுவ னெடு த்த மென்புழுப்போல்.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற்காண்க. (உச)

(அ - கை.) தமதுள்ளே தோன்றும் நாதவசப்படாது தம் மை அறிபவர்க்கு மயக்க மின்றென்பதையும் அந்நாதவசமு ற்று மயக்கமடைந்தவர் அதில்நின்றும் நீங்கும்வகை சொல் லுதுமென்பதையுங் கூறல்.

ஒத்தவந்நாதந்தோன்றியபொழுதே யொலியினுலுயர்ந்தெ ழுபடம்போல், தத்துவஞ்சகலகேவலநீங்கித் தனையறிபவர்க் கிலை மூடம், இத்திறமலாதுசகலத்துமெய்தா விம்பர்கேவலத் தினு மடையா, மத்தியத்தந்தமூடமேயுற்றால் வகையதற்கு ரைக்குதுமன்றே.

(இ-ள்.) ஒற்றுமைப்பட்ட ஸ்வாநுபூதியில் அந்நாதமு ண்டான காலத்திலேயே புல்லாங்குழலின் ஓசையினால் ஓங்கி

யெழுகின்ற சர்ப்பத்தைப்போலத் தத்துவங்கள் (வேறுபா டின்றி ஒற்றுமைப்பட்டு உதயமாகும். அப்போது அவைக ளின் தொழிலாகிய) சகலகேவலங்கள் நீங்கிப்போகத் தனதா த்ம ஸ்வரூபத்தைஅறிகின்றவர்களுக்கு அஞ்ஞானமில்லையாம் இவ்வண்ணமான அனுபவச்செய்கையை அறிதலல்லாமல் இங் ஙனஞ் சகலத்திலும்பொருந்திக்கேவலத்திலுஞ் சேர்ந்திருக்க நடுவிலே அந்த அஞ்ஞானமும் பொருந்துமாயின் அம்மூடத் தன்மை நீங்குவதற்கு வகைசொல்வோம்.—எ-று.படம்-ஆகு பெயர்-அன்று-ஏ-அசைகள்.

(ப - ம்.) சிற்சபையி லெழுகின்ற தசநாடிகளென்பார் தத்துவமென்றும், அத்தசநாடிகளா லுண்டாகின்ற சத்தங்க ளையுணர்தலென்பார்—சகலமென்றும், அந்நாதங்களொடுங்கு கையில் அவற்றின்பின் செல்லுமனமெனபார்—கேவலமென் றுங் கூறினர்.

[இ-ம்.] தசநாதங்களுந் தன்னைத்தவிர வேறின்றென்று சும்மாநிலைபெற்றவனே தன்னையறிந்தவனென்றும, அந்நாத ங்களை யெதிரிட்டறிபவனே மூடத்தன்மை யுடையவனென் றும் தெரிவித்ததாம்.

மனம் நாதவழிச்செல்லாமல் குருதுரியத்தில் நிற்கின்
## முத்திபெறுவ ரென்பதற்குப் பிரமாணம்.

கடவுளந்தாதி.

மாறிநின்றுடியவான் பொருளாடிமணியசைந்து
மீறிநின்றுணர்ந்தபிர்த்தத்தி லோசைவிளங்கிமனந்

தேறிநின்றூற்பரனுலாம் பதமென்னுந்தேனமுத
மூறிநின்றின்பரசந் திருவாய்திறந்துண்பவர்க்கே. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

தாராதவருளெலாந் தந்தருளமௌனியாய்த் தாயனைய கருணைகாட்டித் தாளிணையென் முடிசூட்டி யறிவிற்சமாதியே சாசுவிதசம்பரதாயம், ஓராமன்மந்திரமு முன்னுமன்முத்திநிலை யொன்றே டிரண்டெனுமை லொளியெனவும வெளி யெனவு முருவெனவு நாதமா மொலியெனவு முணர்வுறுமல், பாராது பார்ப்பதே யேதுசாதனமற்ற பரமவனு பூதிவாய்கரும் பண்பென்றுணர்த்தியது பாராமலங்நிலை பகர்ந்தநின் பழவடியர்தம், சீராயிருக்கநின தருள்வேண்டுமையனே சித்தாந்தமுத்தி முதலே சிரகிரிவிளங்கவரு தக்ஷணாமூர்த்தியே சின்மயானந்த குருவே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

---

நாதானந்தமுந் தானேயென்பதற்குப்
## பிரமாணம்.

ரிபுகீதை.

அமலசின்மாத்திர சொரூபமாகுஞ் சித்துமறிவரிய நிரங்குசனு முனக்குளானு, மும்மலமகல்நிற்கிடமா கானுமொன்றாய் முதிர்ந்தருளுமேக,மேவாதவிதந்தான், விமலபரப் பிரமமெ

னும்பூதமற்ற விரிகண்டாமணி கருணாதமுமாகி, நிமலசச்சிதா நந்த மாகுவானு நிலையலால்வேறுமுண்டோ நீயேயாவாய்.

என்பதனுற்காண்க.

(அ-கை.) அம்மூடநீங்கு முபாயமிவையெனல்

இன்னியவந்தமூட நீங்கிடமெய்த்தூய சற்குருவினைத்தொழுதே, மன்னுகாரணமா மனுவினைப்பெற்று மனம்விடயத்துறுதிருந்தே, அந்நிலைப்பதி னுயிரந்தரஞ் செபிக்கி னகன்றிடு மகன்றிடா துறமேற், பின்னுமச் செபத்தை யொருபதாண் டளவும் பெட்புடன்செபிக்க நீங்கிடுமே.

(இ-ள்.) நெருங்கிய அந்தஅறியாமை நீங்கும்படி உண்மையாகிய பரிசுத்தம் பொருந்திய ஞானுசிரியனை வணங்கி நிலைபெற்ற காரண பஞ்சாக்ஷரமாகிய மந்திரத்தைப் பெற்று மனதை விஷயத்திற் பொருந்தவிடாமலிருந்து அந்நிலைப்படி பதினுயிரந்தரஞ் செபித்தால் அவ்வறியாமைநீங்கும் அங்ஙனம் நீங்காமல்அவ்வறியாமை தங்குமாயின் மறுபடியும் அச் செபத்தைப் பத்துவருஷம் வரையினும் அன்போடுஞ் செபஞ்செய்ய நீங்கிப்போகும். எ-று. ஏ-ஏ-ஏ-அசைகள்.

[இ - ம்.] அஞ்ஞானம் நீங்கிப்போமாறு முத்தி பஞ்சாக்ஷரத்தைத் தியானிக்கவேண்டு மென்பதாம்.

(அ - கை.) மூடத்தன்மையுடையவர்கள் சதாஸ்மரணத்தினுல் அடுத்த சநநத்திலும் பரிபாகிகள் எடுத்த சநநத்திலும் முத்தி அடைவர்களெனல்.

இந்தமெய்ச்செபமுங் குருபதத்தன்பு மிடைவிடாதேயு ஞற்றுவரேல், வந்திடுஞ்சநநந் தன்னிலேயுறுவர் மன்னுமெய் ஞ்ஞான நிட்டையினை, உந்துமம்மூட மிலாதவர்தம்மை யுத் தமபக்குவ ரெனலாம், முந்துசற்குரவ னல்குமுத்திரையான் மோனவீ டுறுவர்களன்றே.

(இ-ள்.) இந்த உண்மையான செபத்தையும் ஆசிரியரு டைய திருவடிகளில் அன்பையும இடைவிடாமற் செய்வாரா யின் மறுசநநனத்தில் நிலைபெற்ற சத்தியமாகிய சிவயோக நிஷ்டையைப் பெற்றுக்கொள்ளுவார்கள் (அனந்த சநநத்தி லேறிவந்த வாசனைகளாற்) செலுத்தப்பட்ட அந்த மூடத்தன் மை இல்லாதவர்களைச சற்கரும பரிபாகிகளென்று சொல்ல லாம் தலைமைபெற்ற ஞானசிரியர் அனுக்கிரகிக்கின்ற சின் முத்திரையினுல் அபபரிபாகிகள் இச்சநநனத்திலேயே மௌ னநிலையாகிய மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள்.— ஏ-று. ஏ-ஏ-அன்று-ஏ-இந்நான்கும் அசைகள்.

[இ-ம்] வெளிப்படை. (உஎ)

(அ கை.) ஸ்வானுபூதியிற் றோன்றுகின்ற சித்ப்ரகாசந் துரியாதீதப் பொருளன்றெனல்.

இயம்புநன்னிலையி னிட்டை சாதிப்போர்க் கின்னொளி கோடிக ளொன்றாய், வயங்குவபோல வகக்கணிற்றோன்று மற்றதும் பொருளலவென்றே, தியங்குறவெங்கை . [illegible]

குறைத்திடவே தேவிகேட்டதனை நீதெளிய, நயம்பெறப்புகறி யென்னவே வினவநாதனுந்தெளிவுற நவிலும்.

(இ - ள்.) சொல்லுகின்ற நன்மையாகிய நிலையில் நின்று நிஷ்டையைச் சாதிக்கின்றவர்களுடைய உளத்தின்கண் கோடிசூரியர்கள் ஒன்றாகக்கூடிப் பிரகாசிப்பதுபோல இனியபிரகாசமுண்டாகும் அதுவும் வஸ்துவல்லவென்று எம்மை ஆண்டவராகிய பரமசிவனார் தேவியாருக்குச் சொல்ல அதை யத்தேவியார் கேட்டு மயக்கமுற்று அந்தவஸ்துவை நான்தெளிவாக அறியும்படி தேவரீர் நயம்பொருந்தச் சொல்லவேண்டுமென்று கேட்கப் பரமசிவனாரும் தெளிவுபொருந்தும்படிச் சொல்லுவார்.—எ - று - மற்று-ஏ-ஏ-ஏ - இந்நான்கும் அசைகள்.

[இ-ம்.] ப்ரம்ம நிஷ்டாசாதனத்தைப் பரிபாலனம்பண்ணுகின்றவர்களது கருத்து உள்ளே அடங்க அடங்கத்தோன்றுகின்ற சிவதரிசனத்துக்கு அதிஷ்டானமாகிய பொருள் வேறே ஒன்றுண்டென்பதாம.

உளத்தின்கண் அருட்பிரகாசந்தோன்று

மென்பதற்குப் பிரமாணம்.

பத்திரகிரியார்.

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போ
லுடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம். எ-ம்.

## காரைக்காலம்மையந்தாதி.

காண்பார்க்குங்காணலாந்தன் மயனேகைதொழுது
காண்பார்க்குங்காணலாங் காதலாற்காண்பார்க்குச்
சோதியாய்ச்சிந்தையுள்ளே தோன்றுமேதொல்லுலகுக்
காதியாய் நின்றவரன். எ-ம்.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (உஅ)

(அ-கை.) சத்தாதிங்கலாக ஞானவிஷயங்கள் ஸ்வானுப வத்தி லொடுங்குமெனல்.

*இலங்கியமோன முத்திரையதனி லிருந்திடும்பொழுதிலைம் புலனில், நலந்திகழ்மூன்று புலனொடுங்கிடுமா னவினுதுமவை யெவை யென்னில், துலங்கியரூப மிரதநற்கந்த மென்றுசொற் றிடுவர்மற் றிரண்டு, புலன்களிற்பரிசந் தரிசனந்தோன்றிற் போயிடுமென்பர் புண்ணியரே.

(இ-ள்.) பிரகாசிக்கின்ற மௌனநிலையாகிய சின்முத்திரையில் இருக்கின்றகாலத்தில் சத்தாதிவிஷயங்கள் ஐந்தில் நன்மையாய் விளங்குகின்ற மூன்றுவிஷயங்கள் அடங்கும் அங்ஙனஞ் சொல்வதாகிய அம்மூன்றும் எவையென்றால், சொல்லுவோம் ஒளிர்கின்ற நல்லரூப ரசகந்தமென் றுரைப் பார்கள். மற்றிரண்டு விஷயங்களில் பரிசமானது ப்ரம்மதரிசனம் உதயமாயின ஒடுங்கிப்போமென்று புண்ணியவான்கள் சொல்லுவார்கள் - எ-று. ஆல்-ஏ-அசைகள்.

(ப-ம்.) விஷயங்களனைத்திலுந் தோர்ந்தமனமானது சமஸ்தமுந் தானாய்விளங்கிய சின்முத்திரையென்னும் நகருள்ஞானத்திற் சரிதையாகிய முதற்பஞ்சவர்ன சுந்தரம் பொருந்திய பஞ்சாட்சரநிலையிற் புகுந்து ஊடுருவித் தசநாதங்களும் முழங்குவதற்குக் காரணமாகிய சதாசிவத்தையுந் தாண்டி, ஞானத்திற் கிரியையாகிய புருஷாகாரநிலை யென்ற திருவருட் சத்தியினது அரசிருக்கையின் மகிமையைக் கண்டு அந்நிலையில் அசைவறநிற்குங் காலையில் அங்ஙனம் அனுபவத்திற்குரிய துரிய விஷயங்கள் ஐந்தில் காட்சியாகிய அருட்டரிசனமும் பேரின்பமாகிய சுவையுஞ் சுகமாகியவாசனையும் ஒடுங்குமென்பார்.

இலங்கியமோன முத்திரையதனி லிருந்திடும்பொழுது நலந்திகழ்மூன்று புலனொடுங்கிடு மென்றும்,

அத்திருவருட் சத்தியினது அருளாலே அதற்குமேல் ஞானத்தில் யோகமாகிய சொரூபசித்தென்னும் பார்வையான லீலைக்கண்ணாடியிலறிந்த பஞ்சசபையின் அலங்காரத்துள் பரமகாஷ்டை அறிவாய்ச் சென்று சென்று தேய்ந்து தேய்ந்து முத்திசகலமும முத்திகேவலமும்விட்டுச் சும்மாநிற்கச் சுயஞ்சோதிதானே மேலிட்டு வளர்ந்து அகண்டாகார நிலை பொருந்துங் காலையில் ஞானத்தில் ஞானமாகிய கூடஸ்தப்ரம்மைக்யமென்னுஞ் சிதாகாசமாகிய சுபாவம் உதயமாகாதற்கு முன்னிருந்த ப்ரம்மானந்தகோஷ நீங்கலாகத் தானே தானுகிய மெய்ப்போதமாகிய பரிசமும் ஒடுங்கிச் சின்மாத்

திரமாய் விளங்குமென்று அருளிறைவடிவங்கொண்ட அடிகளால் கூறப்படு மென்பார்.—பரிசந் தரிசனந் தோன்றிற் போயிடுமென்பர் புண்ணியரே என்றுங் கூறினர்.

[இ - ம்.] சரிதையாதியாய்வரும் நான்கில் நன்னான்காகிய பதினாறுசோபானங்களில் காரியப்பட்ட பன்னிரண்டு படிகளையும் நீக்கி மேல்நின்ற காரணத்தின்பயனாகிய நான்கு பதங்களுள் மூன்றுபதங்களினுடைய இலக்கணங்களை விதித்துச் சொற்றனரென்பதாம்.

எனவே ஞானத்தில் ஞானமாகிய ப்ரம்மவரிட்ட பதத்தில் மேற்சொல்லிய ப்ரம்மானந்தகோஷ மொடுங்கு மென்பதே துணிபெனப்பெற்றும்.

ஞானத்திற் சரிதைநிலையிதென்பதற்குப்
பிரமாணம்.

திருவாசகம்.

உன்னற்கரியதிரு வுத்தரகோசமங்கை
மன்னிப்பொலிந்திருந்த மாமறையோன்றன்புகழே
பன்னிப்பணிந்திறைஞ்சப் பாவங்கள்பற்றறுப்பா
னன்னத்தின்மேலேறி யாடுமணிமயில்போ
லென்னத்தனென்னையுமாட் கொண்டானெழில்பாடிப்
பொன்னொத்தபூண்முலையீர் பொன்னூசலாடாமோ.

அன்றியும்,

நெக்குநெக்குள் ளுருகிநின்று மிருக்துங்கிடந்து மெழுந்து,
நக்குமழுதுந் தொழுதும்வாழ்த்திநானுவிதத்தாற் கூத்துநவிற்

றிச், செக்கர்போலுந் திருமேனி திகழநோக்கிச் சிலிர்சிலிர்த்துப், புக்குநிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே. எ-ம்.

சாந்தலிங்கசுவாமிகள்.

போற்றிநீறணிந்து ருத்திர சாதனம்பூண்டி டைந்தெழுத்துள்ளே, சாற்றிநீகுருவாதி மூவுருவையுந் தாழ்ந்திறைஞ்சிவைசெய்தான், மாற்றலாம் பிறப்பிறப்பினை நெஞ்சமே மன்றுளாடியதாளும், தோற்று முள்ளொளிக் குள்ளொளியாயதைத் தொழுது வாழ்தலுமாமே. எ-ம்.

அகஸ்தியமுனிவர்.

அண்டத்திலுள்ள து பிண்டத்திலுமுண் டவ்வாறெழுத்தும்
பண்டித்ததற் சதகோடி மகாசித்தி பண்ணுதற்காய்த்
துண்டத்துட லுயிராய பனைசெய்த சூத்திரததாற
கண்டித்த நமசிவாயா வெனவுருக் காட்டியதே. எ-ம்.

பாலயானந்தசுவாமிகள்.

விந்துவிருந்த தலந்தனிலே குரு நந்தியிருந்தார் கொலுவாகச், சிந்தைதெளிந்து மகாரம்வைத்தா லந்தச் சீமானைக்காணலாம் ஞானப்பெண்ணே. எ-ம்.

சச்சிதாநந்த விளக்கம்.

முச்சுடராகியொன்றாய் முடிந்ததோர்சோதிபாதம்
அசசுதனையனுங்காணு வகண்டமாயவிலாத

சச்சிதானந்தஞான சதாசிவகுருவைப்பாட
மெய்ச்சுடருதயமான விளக்கொளியுண்மைசேர்வாம்.

அன்றியும்,

திருமருவுசோதியாய்ப் பிரபையொளிவீசியே தெருவிலொரு பாதையதிலே, திரிகரணசுத்தியா யமுதகலசத்திலே தேனமுதமூறு சுனைநீர், வருமொருவர் காணவே திருகுசுழிகேணியில் வரவுசிறு வாசநெளிவு, மயிர்ப்பாலமீதினி னெருப்பாறுதாவியே வந்தவழிகண்ட தெவரோ, அருவுருவிலாகாச மிருசரண கீதமே யனேகசிவ சோதினடனம், அபயவரவுபயசிவ சமயகுருநாதனே யத்துவித முத்திபுரிவாய், தருமவுன சுழிமுனையி லணுவளவு கவனமே தரல்வேண்டு மிதுசமயமே.

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி.

ஆண்டகுரவ னுவானையல்லற் பிறவியறுப்பானை, வேண்டும்பதவிதருவானை வெளிவீட்டின்ப மளிப்பானைத், தூண்டல்செய்யா மணிவிளக்கைத் தொழின்மூன்றியற்றுந் தொல்லோனைக், காண்டற்கரிய பேரொளியைக் களாவினிழற்கீழ்க் கண்டேனே. எ-ம்.

உடலறிவிளக்கம்.

நந்திகொலு விருந்தவிடந் தானுமங்கே நற்கமல மாயிரத்தெட் டிதழுமங்கே, அந்திசந்தி பூசையனுட் டானமங்கே யறுத்தடைத்த வாசல்சிவ யோகமங்கே, மந்திரமுஞ் சாத்திரமுஞ் பிறந்ததங்கே, மனுநீதிகுலவரவு தானுமங்கே, செந்தி

யொளி சிவன்சிங்கா தனமுமங்கே சிறந்தவிருபாத மடையாள முரைத்தோமே. எ-ம்.

வாதவூரர்புராணம்.

இடம்படுமுடம்பின்மூலத் தெழுந்தநற்சுழுனைநாடி
யுடன்கிளரொளியேயாகி யொளியிலஞ்செழுத்துமொன்றாய்
நெடுங்குழலோசையாகி நிலவுமவ்வோசைபோயங்
கடங்கியவிடமேயென்று மாடுமம்பலமதாகும்.

அன்றியும்,

எண்டரும்பூதமைந்து மெய்தியநாடிமூன்று
மண்டலமூன்றுமாகி மன்னியபுணர்ப்பினாலே
பிண்டமுமண்டமாகும் பிரமனேடைவராகக்
கண்டவர்நின்றவாறு மிரண்டினுங்காணலாகும். எ-ம்.

சந்நிதிமுறை.

விதையாயிருக்கு மைந்தெழுத்தும் வேதாகமமு முத்தமிழும் விளங்குஞ்சரி தாதிகளுன்கும் வீறாகியமெய்ச் சிவமதமுஞ், சுதையாதரிக்குந் திருநீறுஞ் சோதிநயனத் திருமணியுந்துகடீர்பத்தி விதிநெறியின் றொடர்புஞ்செடிதீர் மெய்யடியா, ரிதையாலயத்தைப் பிரியாதங் கிருடீர்ஞான மணிவிளக்கு மிலங்குமவுனந் தளும்பாத வின்பவளனுஞ் சந்ததமுஞ், சிதையாதளிக்கு மோரிறையே சிறியேஞ்சிற்றில் சிதையேலே, தேரூர்வீதிப் போரூரா சிறியேஞ்சிற்றில் சிதையேலே.

பாரதம்.

ஐவகைப்பொருளுநான்கு கரணமுங்குணங்கள்மூன்றுஞ்
செய்வினையிரண்டுமொன்றி யாவருந்திகைப்பநின்ற
பொய்யிருளகலஞானப் பொருட்கதிர்விரித்தபுத்தேள்
கைவளராழிச்செங்கட் கண்ணனைக்கண்ணுள்வைப்பாம்.எ-ம்.

திருவாய்மொழி.

ஏகமூர்த்தியிருமூர்த்தி மூன்றுமூர்த்திபலமூர்த்தி
யாகியைந்துபூதமா யிரண்டுசுடராயருவாகி
நாகமேறிநடுக்கடலுட் டுயின்றநாராயணனேயுன்
னாகமுற்றுமகத்தடக்கி யாவியல்லன்மாய்த்ததே. எ-ம்.

தேவாரம்.

மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமுமாய் மாணிக்கந் தானேயாகி, கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக் கலைஞானந் தானேயாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணுமாகிப் பிரளயத்துக் கப்பாலோ ரண்டமாகி, யெண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்துமாகி யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்றவாறே.

அன்றியும்,

கற்பகத்தார் கற்பகமே ஞானமூர்த்தி கலஞ்சுடரே நால்வேதத் தப்பானின்ற, சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்துநின்ற சொலற்கரிய சூழலா யதுவுன்றன்மை, நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னு ணிலவாதபுலா லுடம்பே புகுந்து

நின்ற, கற்பகமே யானுன்னைவிடுவே னல்லேன் கனகமாமணி நிறத்தெங் கடவுளானே.

அன்றியும்,

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதியேமிக், குருவேயென் னுறவே யென் னூனே வூனி னுள்ளமே வுள்ளத்தி னுள்ளேநின்ற, கருவே யென்கற்பகமே கண்ணே கண்ணுட் கருமணியே மணியாடு பாவாய் காவாய், அருவாயவல் வினைநோய வடையாவண் ணமாவடுதண் டுறையுறைய மமரரேறே. எ-ம்.

திருமந்திரம்.

ஆரங்கம்புலியூராதி நடுவாசி
சீரங்கஞ்சிற்சபை சிவமனம்பூத்தது
பேரங்கம்பெற்ற பேதத்திருநடனம்
வேரங்கஞ்சொல்வார் விழுவார்நரகில். எ-ம்.

தத்துவராயசுவாமிகள் கலிமடல்.

அரியதவமுடைய ராகம்பொருந்த
வுரியபுயமோ வொளிமணியோ
முத்திநிறையோ சிவனதுயிலே.

அன்றியும்;

தெருவதொறுமுலவு தென்சிற்கை சேர்ந்தகுருமணியைக்
கோவத்தைக்கோயிலாக் கொண்டவருமருந்தை. எ-ம்.

ஔவைக்குறள்.

சுந்தரச்சோதி துலங்குமிடமது
மந்திரச் சக்கரமுமாம்.

அன்றியும்,

தற்பரமான சதாசிவத்தோடொன்றி
லுற்றறிவில்லை யுயிர்க்கு. எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

சருகுசலபக்ஷணிக ளொருகோடியல்லாற் சகோரபக்ஷிகள் போலவே, தவளநிலவொழுகமிர்த தாரையுண்டழியாத தன்மையுரானந்தகோடி, இருவினைகளற்றிரவு பகலென்பதறியாத வேகாந்த மோனஞான வின்பநிஷ்டையர்கோடி மணிமந்திர சித்திநிலை யெய்தினர்கள் கோடிசூழக், குருமணி யிழைத்திட்ட சிங்காதனத்தின்மிசை கொலுவீற் றிருக்குநின்னைக்,கும்பிட்டனந்தமுறை தெண்டனிட் டென்மனக் குறையெலாந் தீரும்வண்ணம், மருமலரெடுத்துனிரு தாளையர்ச்சிக்கவென்னை வாவென் றழைப்பதெந்நாள், மந்திர குருவேயோக தந்திர குருவேமூலன் மரபில்வரு மௌனகுருவே.

அன்றியும்,

காணுங்கண்ணிற் கலந்த கண்ணேயுனைச்
சேணும்பாருந் திரிபவர் காண்பரோ
ஆணும்பெண்ணு மதுவெனும் பான்மையும்
பூணுங்கோலம் பொருந்தியு ணிற்கவே.

அன்றியும்,

குன்றிடாத கொழுஞ்சுடரே மணி
மன்றுளாடிய மாணிக்கமே யுனை
யன்றியார்துணை யாருறவார் கதி
யென்றுநீயெனக் கின்னருள் செய்வதே. எ-ம்.

## சிவப்பிரகாசம்.

கண்ணொளிவிளக்களித்துக் காட்டிடுமென்னின்முன்னங்
கண்ணொளியொன்றுமின்றும் விளக்கொளிகலந்தவற்றைக்
கண்ணொளியகலநின்றே கண்டிடுவேறுகாணுக்
கண்ணொளிவிளக்கின்சோதி கலந்திடுங்கருத்தொன்றன்றே.

## சிவவாக்கியர்.

அண்ணலாயநாதியா யநாதிமுன்னநாதியாய்ப்
பெண்ணுமாணுமொன்றலோ பிறப்பதாகுமுன்னெலாங்
கண்ணிலாணிசுக்கிலங் கருத்தொடுங்கிநின்றபின்
மண்ணுளோரும்விண்ணுளோரும் வந்தவாறெங்ஙனே. எ-ம்

## சௌந்தரியந்தாதி.

மயில்போன்றிருக்குந் திருமேனிமணியோ குயிலோமறை முடிவோ, வயில்போன்றிருக ணாங்கணையோ வருவார் கடலோ யாதுரைக்கேன், வெயிலோநிலவோசோதிமின்னல் விளைவோ ககனவிற்றனோ, பயில்வோருனது திருவழகை யுமையே தொகுத்துப் பாடரிதே. எ-ம்.

## கடவுளந்தாதி.

மெய்ப்பொருளுச்சிக்கு ளுச்சிதமாகவிருக்குமப்பா
வைப்பினின்மாணிக்கப் பொக்கிஷம்மமணிமாமகுடச்
செப்புக்குளேற்றுந திருவிளக்குள்ளொளிதீபமது
கைப்பொருடன்னினு மெய்ப்பொருளாமது கண்டவர்க்கே.

## மவுனதரிசனம்.

அரசனென்ற மவுனவித்தை ராஜயோக மறைகிறேனகார முத லேந்துமூட்ட, நிரமயமா மூலத்தி லிங்கநதோன்று மிங்க மென்ன சிவரூப நந்திமேனி, குருமூலத்தட்டதளம் விரிந்து தோன்றுங் குண்டலிவாய் திறக்குமப்போ கோடிரவிதோன் று, மரமனேயி லமுதகபா டந்திறநது வமுதமழை வருடிக்கு மருளிலன்றே.

அன்றியும்,

அன்றறியா தாரத்தின் மௌனமூட்ட வங்கங்கே சிவசத்தி வடிவுதோன்று, நின்றவந்த தலத்தினிற்கும் வன்னந்தோன்று பிராகார மாமவாயு சுழியிலேறுங், குன்றுத சுழிமுனையில் மௌனமூட்டக் குலாவுமனத்தாநநத நிர்த்தங்காணுஞ், சென் றேறிநடனத்தைப் பாருபாரு திருச்சிலம்பி னொலிகேட்குஞ் சேர்ந்துகூடே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

## ஞானத்திற் கிரியை
## யிதேதென்பதற்குப் பிரமாணம்.

### திருவாசகம்.

உடையாளுன்றனடுவிருக்கு முடையாளடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீரு மிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப் புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்து முடியும்வண்ணமுன்னின்றே.

### சவுந்தரியந்தாதி.

மாதுநின்கருணை ஞானநித்திரைசெய் மஞ்சநாலுநிலை கால்களும், வேதமாலுட னுருத்திரன்கன மயேச்சுரன்றலை விதித்தபே, ரோதுபின்னறு கச்சுமானதொரு வுச்சிதத்துறை சதாசிவன், மீதுகண்டயில வல்லயுன்கிருபை யன்றிவேறொரு விருப்பமே.

அன்றியும்,

இழைறுழையாதிடையழகுறுபூண் முலையிளவெயில்மேனியி னிழலுறுசாமளமணிவடமாடிய நிலவெழுபூதியினால் [லே கழைபெறுதோளியையழகொழுகாவிறைகருணையினாலுமைத த், தொழுமவரேசிவனடியவர்காணிதுசுருதியினாலுமையே.

### தாயுமானசுவாமிகள்.

பூரணிபுராதனிசுமங்கலைசுதந்தரி புராந்தகித்ரயம்பகியெழி ற், புங்கவிவிளங்குசிவசங்கரிசகஸ்தர தளபுஷ்பமிசைவீற்றிருக்கும், நாரணிமனாதீதநாயகிகுணாதீத நாதாந்தசத்தி.

அன்றியும்,

பூதமொடுபழகிவள ரிந்திரியமாம்பேய்கள் புந்திமுதலான
பேய்கள், போராடுகோபாதி ராக்ஷசப்பேய்களென் போதத்
தையூடழித்து, வேதனைவளர்த்திடச் சதுர்வேதவஞ்சன் விதி
த்தானி வல்லமெல்லாம், வீழும்படிக்குனது மௌனமந்த்ரா
திக்ய வித்தையையியங் தருள்வையோ, நாதவடிவாகிய மஹா
மந்தரரூபியே நாதாந்தவெட்டவெளியே, நற்சமயமானபயிர்
தழையவருமேகமே ஞானவானந்தமயிலே, வாதமிடுபரசமய
மியாவுக்குமுணர்வரிய மகிமைபெறு பெரியபொருளே வரை
ராஜ னுக்கிருகண் மணியாயுதித்தமலை வளர்காதலிப் பெணு
மையே. எ-ம்

அகஸ்தியமுனிவர்.

ஓங்காரவட்டத்து ளாதாரமாறும்விட் டோங்கியரி
றீங்காரவட்டத் துளேவிந்து நாதமிணைச்சுடர்மேற்
பாங்காம்பரைசிவ மாகியொன்று யப்பரவெளியின்
றுங்காரத்தாண்ட வியாறெழுத் தாறுமுகத்தம்மையே.

அன்றியும்,

குண்டலிபாரதிலக்குமி பார்வதிகோமளை பூ
மண்டலிசாம்பவிதேவி மனோன்மணிவாகினிப்பிர
சண்டலிகாரியகாரி யுகாரிசடாக்ஷரிமா
விண்டலியாண்பெண்ணிரண் டுருவாய்நின்றமின்னொளியே.

ஔவைக்குறள்.

தற்புருடமாமுகந் தன்னிற்றனியிருந்
தற்பன மஞ்சையுறை.

அன்றியும்,

ஓதியதற்புருடத் தடியொவ்வவே
பேதியா தோதுபினை. எ-ம்.

கைவல்லியநவநீதம்.

உன்முகம்போற்கண்ணாடிக்குள் ளொருமுகங்கண்டாற்போற்
சின்மயவடிவின்சாயைச் சித்துபோற்புத்திதோன்று
மின்மலவிருத்தியந்த நிழல்வழியாயுலாவுந்தன்ம
நன்மகனேயித்தைத்தா னன்றேஞானமென்பார். எ-ம்.

கடவுளந்தாதி.

பனையிடத்தேயுருத்தோன்றி யொடுங்கும்படியறிந்தோர்
புனையறக்கீறிப்புண்ணாற்றுவரோ புத்திமத்தியிலே
தினையறவாசைத்திசைதிகை யாறித்திருக்கறுக்க
வனைதிருநாதமலைக்குறப் பெண்கொடிவாய்த்திடுமே. எ-ம்.

சச்சிதானந்தவிளக்கம்.

ஆடல்புரிநடன விருபாதபங்கய வேதமவதான சிவகோணமா, மருமறையிலெட்டாத திருநடனவிஸ்தார மானதொருபானுமதியே, கூடவொருதிரிகோண விடுதருநவகோண கோணமிசை திசைநாலுமே, கோதையபிராமியிரு பாதவொலிநாதமே கோடான கோடிநடனம், பாடலதுகீதசபை யொகசிவ ரேகைவெளி பரமாயசத்திவடிவு, பாரமகமேருகிரி யூடுருவிமேலான பாலனைய பாதகமலஞ், சாடவனுபோகசெய

லேகமுதலாகவே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரானந்த சபை நிஷ்களானந்தசிவ சச்சிதானந்தகுருவே.

அன்றியும்,

தற்புருஷநிலையிலே விற்புருவநடுவிலே. எ-ம்.

பாலையானந்தசுவாமிகள்.

ஓங்காரமான பிரணவத்தா ளெங்குமுயர்ந்த சோமகலை நிறுத்தாள், றீங்காரமான பராசத்திதேவியை நேர்ந்துகும்பி யடியுங்கடி. எ-ம்.

சந்நிதிமுறை.

மும்மையுலகெங்கும் பரந்தொளிபரப்பிடு முதற்பரைபெடுத்தணைத்து, முதருட்புனிதநீர் நிறையவாட்டிப் பெருமை மொய்த்த நித்தியவாடையான், மெய்ம்முழுது மொத்தியிருவேறற்றவத்துவித வெண்ணீறணிந்து மிளிரும், வீறுபூரணநிலப் பொட்டுமிட்டுப் பெரிய மெஞ்ஞான தீபதட்டா, லம்மருவு மாலத்தி சுற்றிமற்றிச்சையுட னுஞானக்கிரியையென், றருள்செவிலியாயரங் கருகிலுறவாரு றகன்றசிவ வாரியிலெழுன், செம்மையாரமுதம் புகட்டவளருங்குழவி செங்கீரையாடியருளே, திமிரமல மகலவருகுமசரவண முருக செங்கீரை யாடியருளே. எ-ம்.

சௌந்தரியலகரி.

ஆரமுதின்கடல்வேலி செழுந்தருவாய்மணிபம்பியதீவூடே பாரகடம்படர்காளிலருங்கொடைபாய்மணிமண்டபவீடே

கோரசிவன்பரமேசனுமஞ்ச மோர்கூர்பரியங்கமெனுமேலே
சீரடரும்பரஞானமுறுங்களி தேவராருந்துவர்பூமாதே. எ-ம்.

பட்டணத்துப்பிள்ளையார்.

அரிபிரமர்போற்ற வமரர்ஜயஜயெனப் பெரியம்மைபாகம் வளர் பேரழகைப் பாரேனே.

அன்றியும்,

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெலா மூணல்லாதுண்பர்களோ. எ-ம்.

மவுனதரிசனம்.

கூடுவதுபுருவமைய வெளியினுள்ளே குறிப்பாகமௌனத்தை மூட்டுமூட்டு, வாடுவது மனோன்மணியுஞ் சிவனுந்தோன்று மாகாயஞ் சர்வவியா பகமுந்தோன்றும், நாடுவது கனலொளிபோல் விந்துதோன்றும நாதமங்கே கோடிமதிபோலேதோன்றுந், தேடுவதுவனந்தவா னந்தந்தோன்றுஞ் சிவசிவா மௌனவித்தை செப்பொணாதே. எ-ம்.

பத்திரகிரியார்.

நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைப்படுவதெக்காலம்.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஞானத்தில் யோகநிலை

யிதென்பதற்குப்பிரமாணம்.

நிகழ்காலத்திரங்கல்.

*ஆகமசீலனைப்பாரீ ரேகனேகனைப்பாரீ ரின்பவுருவனைப் பாரீர்.*

*அன்றியும்,*

*அறிவுக்கறிவனைப்பாரீ ரறிவுக்கதீதனைப்பாரீர்*
*செறிகைக்கினியானைப்பாரீர் தேசிகர்தேவனைப்பாரீர்.* எ-ம்.

பத்திரகிரியார்.

*அருளிமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்*
*திருவிளையாடற்கண்டு தரிசிப்பதெக்காலம்.* எ-ம்.

சிற்றம்பலநாடிகளநுபூதிவிளக்கம்.

*ஆயவியயில்லா வகண்டபரிபூரணத்தே*
*தூயகுருவுருவந் தோன்றுமற்றோன்றியதே.* எ-ம்.

திருவாசகம்.

*இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயி றேபோன்று, நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே னீயலாற் பிறிதுமற்றின்மை, சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய் ந்தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே, யொன்றுநீ யல்லை யன்றியொன்றில்லை யாருன்னை யறியகிற்பாரே.*

அன்றியும்,

பிறவிதனையறமாற்றிப் பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினொடுமொழியச்சென் றுலகுடையவொருமுதலைச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த் திருச்சிற்றம்பலமன்னி
மறையவருமவானவரும வணங்கிடநான்கண்டேனே.

அன்றியும்,

கட்டறுத்தெனையாண்டு கண்ணாரநீ
றிட்டவன்பரோடி யாவருங்காணவே
பட்டிமண்டப மேற்றினையேற்றினை
யெட்டினோடிரண் டுமறியேனையே. எ-ம்.

## திருவாய்மொழி.

நின்றவொன்றை யுணர்ந்தேனுக் கதனுணேர்மை யதுவிது வென், றென்றுவொருவர்க் குணரலாகா துணர்ந்துமேலுங் காண்பரிது, சென்றுசென்று பரம்பரமா யாதுமின்றித் தேய் ந்தற்று,நன்றுதீதென் றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்ததே.

அன்றியும்,

யாவருமெவையுந்தானா யவரவர்சமயந்தோறுந்
தோய்விலன்புலனைந்திற்குஞ் சொலப்படானுணர்வின்மூர்த்தி
யாவிசேருயிரினுள்ள லாதுமோர்பற்றிலாத
பாவனையதனைக்கூடி லவனையுங்கூடலாமே. எ-ம்.

## பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்.

காணாதுபுலன்கள்போகக் கரிசறுமனம்போம்போனால்
ஆணவம்போகும்போனா லாருயிர்ப்போதம்போகுஞ்

சேணுறுமொளிக்குமேலாஞ் சிவப்பிரகாசந்தோன்றும்
மாணவேளையிதுவேமுத்தி நிலையெனமதித்திடாயே. எ-ம்.

## சச்சிதானந்தவிளக்கம்.

படிமண்டலங்கனக சபைமண்டலம்படிக பதிமண்டலந் தலமதாய்ப், பவிவிண்டலம்புகுத மதிகுண்டலங்குழைகள் பணிகங்கணங் கிரணமே, உரமண்டலம்பெரிய தலமண்டலந் தெரியு வுமைபாக னன்பு புரியு, வொளிமண்டலந்தரிசு வெளிமண்டலம்பெரிசு யுகமண்டலஞ் சிரசதாய்ச், சிரமண்டலங்களவை குடிகொண்டிலங்குசடை சிவசமபு சாம்பசிவனே, ஜெகமண்டலமபுகழ ரவிசம்ப்ரமங்களொடு திருவம்பலம்பரவவே, சரமண்டலங்களொடு நடனம்புரிநதகழல் தரல்வேண்டு மிது சமயமே. எ-ம்.

## சந்நிதிமுறை.

அடியார்நிமலத் திருவகத்து ளன்புபொறுமை யவாவறுத்த, லடுப்பாங்கமைத்து மலக்காட்டந்தங்க ஞானக்கனன் மூட்டி, மடியாதிருந்தவுயிர்க் கலசமவழியவருட் பெருலைவார்த்து, மாறாப்பெரு மைச்சிவானந்த மதுரச்சோறு தினம்பொங்கி, விடியாச்சிவபோதவிருள் வீயமவுனச்சுடர்விளக்கு, விளக்கியிருந்தபடியிருந்து மேலாஞ்சிற்றில் விளையாடுஞ், செடிதீரகத்தோர்புகழ வாலைசிறுவாசிற்றில் சிதையேலே. எ-ம்.

## தாயுமானசுவாமிகள்.

பாராதியண்டங்க ளத்தனையும்வைக்கின்ற பரவெளியினுண்மைகாட்டிப் பற்றுமனவெளிகாட்டி மனவெளியினிற் றோய்

நீ பாவியேன் பரிசுகாட்டித், தாராளமாய்சிற்க நிற்சிந்தை காட்டிச் சதாகால நிஷ்டையெனவே சகசநிலைகாட்டினை சுகாதீதநிலையுந் தனைக்காட்ட காட்செல்லுமோ, காராரவெண்ணரு மனந்தகோடிக ணின்று காலூன்றி மழைபொழிதல்போற் கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங் கம்மியா னந்த வெள்ளம், சோராதுபொழியவே கருணையின் முழங்கியே தொண்டரைக் கூவுமுகிலே சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ் சோதியே சுகவாரியே.

அன்றியும்,

சென்றுசென்றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாகி
நின்றுவிடுமென்ற நெறிநிற்குநாளெந்நாளோ.

அன்றியும்,

அத்துவித வனுபவத்தை யனந்தமறை யின்னமின்ன மறியோமென்னும், நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத் தன்னருளா நினைவுக்குள்ளே, வைத்துவைத்துப பார்ப்பவரைத் தானாகவெந்நாளும் வளர்த்துக்காக்கும், சித்தினைமாத்துவெளியைத் தன்மயமா மானந்த தெய்வந்தன்னை. எ-ம.

பெரியபுராணம்.

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ள வளப்பருங்கரணமோர் நான்கும், சிந்தையேயாக்கு குணமொருமூன்றுஞ் சிறந்த சாத்துவிதமேயாக, விந்துவாழ்சடையா னடிமானந்த வெல்லை

யிற்றனிப் பெருங்கூத்தில், வந்தபேரின்ப வெள்ளத்துட்டினை
த்து மாறிலாவின்பத் துட்டினைத்தார்.　　　　எ-ம்.

## கடவுளந்தாதி.

சிவமதுமுப்பத்து முக்கோடிதேவர்கள் செய்யுமொரு
தவமதுபொன்னகர் மின்னனைத்தாமரைத் தாள்பணியப்
பவமறுசூட்சத்திற் பத்தியும்பாயும் பவமிருந்த
நவமணிமண்டப மேடையுங்காணுவர் நாட்டத்திலே.

அன்றியும்,

இன்பமிருந்தவிடஞ் சுடுகாடதெடுத்துரைக்கத்
துன்பம்வெகுதொலை சுற்றிலும்வன்னி துருவமத்திக்
கம்பமதுநுனிகாணாத காட்சிகனகசபை
விம்பம்பெருவெளியுற்றுப்பார்க்க விளக்கொளியே.

அன்றியும்,

ஒளியாம்விளக்கொளிக்குள்ளே தெளிந்துகொண்டேருவ
வெளியாம்பராபரமாசோதியே விந்துநாதமொத்துத்
தெளிவாயிருந்துபிரகாசந் தோற்றுஞ்சிதம்பரத்தி
லழியாவரம்பெற்றிருக்கப் பதமுண்டடியவர்க்கே.　　　　எ-ம்.

## ஞானவாசிட்டம்.

உண்டானசிருட்டிதா னென்றெய்ப்பார்க்கி லொழிந்துபோ
முறுதியா யுணராவற்றூற், கண்டார்கள் கயிற்றிலே பாம்பெ
ன்பார்போற் காட்சியுறுங்கலை நூலாற் கற்றோர்சார்வாற்,றண்

டாதபரிசயத்தாற் சிலகாலத்திற் றுவுமன நின்மலமாய்ச் சசி போனிற்கிற், பண்டாயவனுபூதி மயமாய்த்தானே பாக்கிய வான்களுக்கிந்த பார்வைதோன்றும்.

அன்றியும்,

சொரூபம்விட்டகலன் மோகமாம்வேறுசொல்லிட முன்பு பின்பில்லை, ஒருபொருணினைவை யொழித்துமேலப்பா லொருபொரு ணினைவுறிலாத, விருபொருணடுவு ணினைவறவிருக்கு மிதுசொரூபத் தியல்பிதுதான், மருவுகற்பனை மாண்டசைவில் கற்போலாய் வருநனுச்சுழுத்தி நீர்வடிவாம்.

அன்றியும்,

வெறியாரும் பொருப்புறைவோர் விழிப்புலத்தின் மேவாதோர் விளமபுகீதை, நெறியார்மன் னவன்கேட்ட படியுணைப்ப நெடியவனே நினைவிற்கொள்வாய், அறிவாணு மறிபொருளுங் கூடியகூட் டரவிலெழு மறிவானந்தம், பிறியாதவான் மதத்துவத்தெழுந்த தாமதனைப் பேணல்செய்வாம். எ-ம்.

## கைவல்லியநவநீதம்.

களங்கமற்றகண்ணுடி தன்முன்வேறோர் களங்கமற்ற கண்ணுடி காட்டும்போது, விளங்கியதன்மயமாகி யபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்ப மானாற்போல, அளந்தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச் சித்தாயா னந்தமாம் பிரமத்தைக்யமான, உளங்தெளிந்த படியிருந்தா லுலகமெங்கே யுலெவெங்கே யென்றுசங்கை யொழித்திடாயே. எ-ம்.

## திருப்புகழ்.

இருவினையு மலமு மறவிறவியொடு பிறவியறவேக போக
மாய் நீயுநானுமாயிறுகும்வகை பரமசுகமதனை யருவிடைமரு
திலேகநாயகாலோக நாயகாயிமையவர் பெருமாளே. எ-ம.

## சிவவாக்கியர்.

கருக்கலந்தகாலமே கண்டிருநதகாரணு
வுருக்கலந்தபோதலோ வுன்னைநானறிந்தனன்
திருக்கலந்தசோதியைத் தெளிந்துநானறிந்தபின்
இருக்கிலேனிறக்கிலே னிரண்டுமற்றிருந்ததே.

அன்றியும்,

மவுனமானவைந்தெழுத்தை வாசியேறிமெல்லவே
வானெலாநிறைந்தசோதி மண்டலமபுகுந்தபின்
அவனுநானுமெய்கலந்தே யனுபவிக்குமளவிலே
அவனுமில்லைநானுமில்லை யாருமில்லையானதே. எ-ம்.

## அகஸ்தியமுனிவர்.

வடிவம்பொருளருண்முக்குணம் வாக்குமனமுமடி
முடிவுமில்லாதமுடிவினைச் சூட்டிமுருகனென்றே
படிகந்தனிற்கண்டகாக்ஷிப் பிரபஞ்சபார்வையற்றால்
விடியும்பொழுதிலிரண்டு மொன்றேதெய்வம்வேறில்லையே.

## ஔவைக்குறள்.

ஆர்க்குந்தெரியா வுருவந்தனைநோக்கிற்
பார்க்கும் பரமாமவன். எ-ம்.

## கந்தரலங்காரம்.

அராப்புனைவேணியன் சேயருள்வேண்டு மவிழ்ந்தவன்பாற் குராப்புனைதண்டையந்தா டொழல்வேண்டுங்கொடியவைவர் பராக்கறல்வேண்டுமனமும் பதைப்பறல்வேண்டுமென்று விராப்பகலற்றவிடத்தே யிருக்கையெளிதல்லவே. எ-ம்.

## சௌந்தரியந்தாதி.

தெளிவாயமுதப் பெருக்கெறிந்து தேங்குங் கடலிற் றினமூழ்கி, யொளிவாய்த்திருக்குங் கனகசபைக் குள்ளேபுகுந்துவுமையேயுன், களிவாய்த்திருக்குங் கணவனுடன் கனகத்தவிசின் வீற்றிருந்த, வளிவாய்த்தருகுங் காட்சிமங்கைக் கரசேகாண்டற் கருள்வாயே. எ-ம்.

## மவுனதரிசனம்.

செப்பரியவம்பரத்தைக் காத்தாயானுற் றேகமங்கே நிராமயமாய்க் கரைந்துபோகும், ஒப்பரியவீசனிட மூலமானவுண்மையறிந் தறிந்தறிவில் மௌனமூட்டத், தப்பாதுஜீவன்முத்தி யடையும்பாரு சாரமங்கே கற்பூரதீபமாகும், அப்பாகே ளறிவென்ன தேவிதேவி யணைந்தவா னந்தமென்ன சிவமுமாமே. எ-ம்.

## தேவாரம்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையான் மாசொன்றில்லான், ஒப்புடையனல்லனொருவனல்லனோரூரனல்ல னுவமையில்லன், அப்படியனவ்வுருவ னவ்

வணத்தனவருளே கண்ணைக் காண்பதல்லால், இப்படியனி வ்வுருவ னிவ்வணத்தனிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே.

எ-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (உகூ)

(அ-கை.) ஸ்பரிசாதிகளிருந்த ஞானயோகத்தில் உன் முகப்பட்ட மனமானது நாதவசமுற்றிருக்கின் அந்நாதத்தி ன் சொருபமாகிய பஞ்சாக்ஷரந்தோன்றுவ தின்றென்பதை யும் அதன் ஒடுக்கமெங்ஙன மென்பதையுங் கூறல்.

வே று.

பேசரிய வனுபோக மாகுங்காலைப் பிறங்கு சத்தத் தக்கர ந்தோன் றிடுமேயாயின், நீசமாம பொறிபுலன்க ளவையுந் தோன்று நிலவுபொழுதசமுகம தாகவுய்த்தே, பாசமிறே சிவ ன்முன்னம் பகர்ந்தவாறே பதுமவாதனமும் பார்வையுநீங்கா மல், ஆசிலங்கிலையி லுறவஞ்செழுத்து மிலையெனக்கேட்டவை போமா றியமபுகென்றாள்.

(இ - ள்.) சொல்லுதற்கரிய சுவானுபோக முண்டாகுங் காலத்தில் விளங்குகின்ற நாதத்தில் பஞ்சாக்ஷரம் உதயமா னல் இழிவாகிய அந்த இந்திரியவிஷயங்கள் ஐந்தும் உதய மாம் ஆதலின் சத்தம்விளங்குங்காலத்தில் அந்தர்முகமாக அறிவைச் செலுத்திப் பற்றற்ற ஞானசிரியர் முன்னனுக்கிர கித்தபடியே பத்மாசனமும் ஞான திருஷ்டியுங் கெடாமல் குற்றமற்ற அந்தநிலையிலிருந்தால் சத்தாதிகளுக்குரிய பஞ்சா க்ஷரந் தோன்றுவ தில்லை யென்று பரமசிவனார் சொலக்

கேட்டு அவைகள் ஒடுங்குகின்றவகையைச் சொல்லுவீரென்ஞர் தேவியானவர்.—எ-று. எ-வ-அசைகள்.

(ப - ம்.) அருள்வடிவமான மனமானது எவையாலும் மதித்தறிதற்கரிய ஞானத்தில் யோகமாகிய நிலையிற் பொருந்துங்காலையிற் சுபாவமுதயமாவதற்கு முன் புண்டான காண்பானுதிகளிறந்ததாகிய மெய்ப்போதவொழிவில் உதிக்கும் பரையின் முழக்கமென்பார்—பேசரிய வனுபோக மாகுங்காலைப் பிறங்குசததமென்றும், உன்முகப்பட்டிருந்த அம்மனம் அந்நாதத்தை எதிரிட்டறியவரின் மெய்ப்போதமாகிய பரிசமும், அருட்டரிசனமாகிய வொளியும், பேரின்பமாகிய சுவையும், சுகமாகிய வாசனையும் தோன்றும். அவை தோன்றவே அவைகட்குரிய சூட்மவடிவமாகிய பஞ்சாக்ஷரமும் அதன்காரியமான ஸ்தூல வடிவமாகிய பஞ்சேந்திரிய விஷயங்களுந் தோன்றுமென்பார்—அக்கரந் தோன்றிடுமேயாயி னீசமாம் பொறிபுலன்க ளவையுந் தோன்றுமென்றுங் கூறினர்.

[இ - ம்.] அத்வைத அபரோக்ஷாநுபவ சுகத்தில் உன்முகப்பட்ட மனம் நாதவுணர்வில் வாராது அசைவற அந்நிலையிற்பொருந்துமாயின் யாவு மொடுங்கு மென்பதாம். (ரு0)

(அ - கை.) அப்பஞ்சாக்ஷரம் ஒடுங்கு முறைமை யிதுவெனல்.

வேறு.

நகரமொடு மகரமது சடந்தருங்காரணமா நாடுமவை நீங்கியிடுவகையை நவிலுதுங்கேள், வகரமதி னகரமுதல் யகரத்திற்

ருனே மகரமுநீங்கிடு மரியசிகரமனுதன்னால், யகரலயம்வகர மூந்தான் சிகரத்தி லொடுக்கமாகு மிறைநீங்கவுயிர் முத்தியெ ய்துமென்றே, தகரநறுங்கரிய குழுனகமாதுக் கிறைவன் றன து திருவுளமகிழ்ந்து சாற்றின னன்குணர்ந்தே.

(இ-ள்.) * பிருதுவி தத்துவமாய்க்-கந்தவிஷயமாய்-வெ ண்ணிறமாய்ப்-பூமிமயமாய்-நிவர்த்திகலையாய்ச்-சத்தியோஜா தமாய்க்-கர்மசாதாக்கியமாய் - நான்முகரூபமாய்ச் - சிருஷ்டி யைத்தருகின்ற-மறைப்பையுடைய - திலாயக்ஷரமாகிய-நகார த்துடனே, * அப்புதத்துவமாய்-ரசவிஷயமாய்க்-கருநிறமா ய்ச்-சலமயமாய்ப்-பிரதிஷ்டாகலையாய்-வாமதேவமாய்க்- கர்த் துருசாதாக்கியமாய்-விஷ்ணுரூபமாய்த்- திதியைத்தருகின்ற- மயக்கத்தையுடைய-மலாக்ஷரமாகிய, மகாரமானது ஆன்மாக் களுக்குத் தேகத்தைக்கொடுப்பதற் கேதுவாய்த்தோன்றும் தியானிப்பதற்குரிய இவ்விரண்டக்ஷரங்களும் ஒடுங்குகிறதற் கு லகையைசசொல்லுகிறோங் கேட்பாயாக, * வாயுதத்துவ மாய்ப்-பரிசவிஷயமாய்ப் - புகைநிறமாய்க்-காற்றுமயமாய்ச்- சாந்திகலையாய்த் - தற்புருஷமாய் - அரூர்த்திசாதாக்கியமாய்- மயேஸ்வரரூபமாய்த்-திரோபவத்தைத்தருகின்ற - சத்தியவடி வத்தையுடைய-பரையக்ஷரமாகிய-வகாரத்திலே முதலிற் சொ ல்லிய நகாரமும், ஆகாயதத்துவமாய்ச் - சத்தவிஷயமாய்-நீல

---

* பிருதுவி பொன்னிறமும், அப்பு வெண்ணிறமும், வாயு பச நிறமும் ஆமெனக்கொள்க.

நிறமாய்ச்-சுத்தவெளியாய்ச் - சாந்தியாதீதகலையாய்ச்- ஈசான மாய்ச் - சிவசாதாக்கியமாய்ச் - சதாசிவரூபமாய் - அநுக்கிர கத்தைத்தருகின்ற - சிவவடிவத்தையுடைய-ஜீவாக்ஷரமாகிய, யகாரத்திலே மகாரமும் ஒடுங்கும், அருமையாகிய தேயு தத் துவமாய்-ரூபவிஷயமாய்ச்- சிவந்தநிறமாய்-அக்கினிமயமாய்- வித்யாகலையாய்-அகோரமாய்-மூர்த்திசாதாக்கியமாய்-ருத்திர ஸ்வரூபமாய்-ஸம்மாரத்தைத்தருகின்ற-ஞான சூரியப்ரகாசத் தையுடைய - பதியக்ஷரமாகிய, சிகாரமந்திரத்தினாலே யகா ரம்லயத்தை அடையும் - (மேற்சொல்லிய பதியக்ஷரமாகிய) சிகாரத்திலே வகாரமும் ஒடுக்கமாகும், அந்தப்பதியக்ஷரந் தானேயொடுங்கச் சீவன்முத்தி வருமென்று மயிர்ச்சாநதை யணிந்த வாசனைபொருந்திய கறுத்த கூந்தலையுடையஉமைக் குப் பரமசிவனார் தமது திருவுள்ளங் களிகூர்ந்துசெவ்வை யாக அறிந்தநுக்கிரகஞ் செய்தார். எ - று. தான்-சாரியை - ஏ-ஏ-அசைகள்.

[இ - ம்.] பிறவிநோய்க் கிடமாகிய - நகாரமகாரங்களில் வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும் ஒடுங்கும், அந்த வகார யகாரமும் பதியக்ஷரத்தில் ஒடுங்கும். அந்தப்ரம்மா க்ஷரமுந்தானே ஒடுங்கச் சீவன்முத்தி வருமென் றுணர்த்திய தாம்.

எனவே ஞானேந்திரியங்களுள் நான்கும் சக்ஷு இந்தி ரியத்தில் ஒடுங்குவதுபோலப் பஞ்சாக்ஷரத்துள் நான்கும்

பதியக்ஷரத்துள் ஒடுங்குமென்பதே சித்தாந்த க்ரமமெனக் கொள்க. (௩௧)

(அ - கை.) அங்கநிஷ்டையில் மனந் திரியுமாயினது வொடுங்குமுபாய மிதுவெனல்.

ஆதனத்திருந்தே சாதனைசெயும்போ தலைதருமனமடங் காமற், போதுமே யெனினுங் கேவலமயக்கம் புரியுமேயெனினு மங்கெழுந்து, நீதியினையீரடியுலாவந்தே நிலவுமாதனத் தினிற்பொருந்தி, யோதுசாதனையி னுறுதியோடிருப்பதியோகியர்க்கியல்பதா மன்றே.

(இ-ள்.) அங்காசனத்திலிருந்து சிவயோகசாதனையைச் செய்யுந்தருணத்தில் அலைகின்றமனம் அடங்காமற்போகுமாறும் முழுதும் மயக்கத்தைச் செய்யுமாறும் அவ்வாதனத்தில் நின்றுமெழுந்து முறைப்படி பத்தடிநடந்துவந்து ப்ரகாசிக்கின்ற அவ்வங்காசனத்திலிருந்து சொல்லுகின்ற சிவயோகநிஷ்டையில் நிலைகொண்டிருப்பது ஞானநிஷ்டாபரருக்குச் சுபாவமாம்.—எ-று. ஏ-ஏ-ஏ-ஏ-அன்று-ஏ-இவ்வாறும் அசைகள்.

(ப - ம்.) மயிர்ப்பாலத்தி லேறிச் சென்றிருக்கு மனமானது ஞானுகாசமாகிய பரையின் முழுகத்தினல் அம்மனந் தனது ப்ரக்ஞை தப்புமாயின் ஒடுங்கின வியானவாயுவுடனே சேர்ந்து அலைதலையுற்றுத் தன்காரியமாகிய விஷயங்களைப் பற்றி ப்ராந்தியடைந்து திரியுமென்பார்—அலைதரு மனமடங்காமற் கேவலமயக்கம் புரியுமேயெனினு மெனக் கூறினர்.

[இ - ம்.] நிஷ்டையில் மனமசையுமாயின் வெளிவந்து லாவிப் பின்னர் அநநிஷ்டையில் உறுதிபெற் றிருப்பதுவே ஞானயோகிகளுக்குரிய குணமென்பதாம். (கஉ)

(அ-கை.) ஞானத்தில் ஞானமாகிய கூடஸ்தப்ரம்மைக் யங் கூறல்.

இந்நிலையாகிய பரமகேவலத்தி னுளுமெழினிதித்தியாசன த்தி லிராம லிருந்திடுவோன், அநநிலையே யுடலினொடு சீவன் முத்தி யடைகுவ னெவ்விதமென்னி லறைகுதுநீ கேளாய், துன்னியதோ யத்தினொடு தோயமுறல் போலுஞ் சுவைதரு கீரத்தினொடு கீரமும்போற் கலந்தே, எந்நிலையுந் தோன்றாம லிருந்திடவிவ்வுலகி லிறப்பினொடு பிறப்புமறுத் தீணையிலின் பத்துறுவான்.

(இ-ள்.) இத்தன்மைப்பட்ட நிலையாகிய மேலான துரி யத்தில் ஞானசுந்தரம்பொருந்திய (கைவல்யப்பட்ட) ஞான நிஷ்டையினால் சதா இராமலிருக்கின்றவன் அநநிலையிலேயே தேகத்துடனே ஜீவன்முத்தியடைவான். அஃது எங்ஙனமெ ன்னிற் சொல்லுகின்றோம் நீ கேட்கக்கடவாய் நெருங்கிய (அநேகநதி) சலம் (கங்கா) சலத்திலே கலந்து ஒன்றுபட்டு விளங்குவதுபோலவும் மதுரமாகிய பாலுடனே பால கலப் பதுபோலவும் (பிரமத்துடனே கலந்து) எந்த நிலையுந்தோன் றாமலிருக்க இந்தவுலகத்தின்கண் * பிறப்பிறப்பாகிய இரண்

* பிறப்பிறப்பென்பது, நினைப்புமறப்பெனக்கொள்க.

டையும் நீக்கி ஒப்பில்லாத பேரின்பத்தை அடைவான்-எ-று. இராம லிருந்திடுவோ மென்றதனால் கைவல்யப்பட்ட வென்று வருவிக்கப்பட்டது.

(ப-ம்.) ஆணவத்தால் மறைபட்டிருந்த உயிர்க்கு அநுபோகளு சொல்லக்கூடாதுபோல அருளும்பரையுமாகிய ஞானாகாசத்தைக்கடந்து சிவத்திற்கலந்த நிலையி லெங்ஙானுமென்றும, சச்சிதானந்தமென்னுந் திரிபுடியில் நின்றும் நீங்கிச் சுத்தசைதன்யமான நிலையி லெக்காலமு மென்றுங் கூறுவார் இந்நிலையாகிய பரமகேவலத்தினனுமென்றும். சொர்னப் பிரகாசமாகிய மனதைச் செலுததிவைத் திருப்பதற்குரிய ஞானநிஷ்டையிற் பொருந்தவென்பார்—நித்தியாசனததி லென்றும், அச்சமாதியோகத்தின்கண் முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற விடத்துப் பாசமிது அருளிதுவென்று பகுத்தறிந்த அறிவுதானென்று தன்னை யருளாலறிந்து பின்னர் தன்னையும் அவ்வருளையும் பிரித்துப்பார்த்த அருள் தானயிருந்து பின்னர்த்தன்னைச் சிறிதுந் தோற்றுவிக்காத அந்தப் பரிபூரணமாகிய பரையேயாகி யிருக்கின்றவனென்றும், அந்தநிலையிலெழுஞ் சுவானுபூதி சாக்ஷாத்காரத்தைத் தானென்று சும்மாவிருந்தறிகின்றவனென்றுங் கூறுவார்— இராமலிருந்திடுவோ மென்றும், அப்பரை நீக்கத்தில் தற்போதமிறந்து சதசத்தான ஆனந்தமயமாகி அவவானந்தத்தை இங்ஙனமென்றறியாது அதனுள் அதீதப்பட்டுச் சிவத்தில் இரண்டறக் கலக்கின்றவனென்றும், சாக்ஷிமாத்திரமாய்

நின்றவன் சரீரத்தோ டிருக்கும்பொழுதே பந்தநீங்கின கூட ஸ்தப்ரம்மைக்யமான முத்தியைப் பெறுவானென்றுங் கூறுவார்.— அநகிலேயே யுடலினொடு ஜீவன்முத்தி யடைவனென்றும், அவ்வருள்பரையென்னு மிரண்டில் அருள் ஆன்மாவிற்குத் தோற்றலானும் பரை ஆன்மாவிற்குத் தோற்றாமல் தோற்றலானும் அப்பரை நீக்கத்தில் தோன்றிய ஆனந்தமளவுப ஆன்மாவா லனுபவங்கூறலானும் அவவானந்தமும் அதனுள் அதீதப்படுவதாகிய பேதமறக் கலக்கின்ற சிவாதீதத்தைக் கூறுணு தென்பதே சாமவேதமுடிவாகிய * தத்வமஸியென்னும் மஹாவாக்கியார்த்த அனுபவம் அவ்வர்த்தத்தையுணர்த்துங்கால் அதுநீயோ இருக்கின்றாயென்பதாம் அவ்வாக்கியத்தை அந்வயப்படுத்து மிடந்துத் - துவந்ததஸி யென்பா அதற் கர்த்தம்-நீ அதுவாயிருக்கின்றா யென்பதாம். த்துவம் பத'சுத்தார்த்தம் பரமாத்மாவாகிய அருள்பரையென்னுஞ் சித்தே நிசாங்கம-தத்பதசுத்தார்த்தம் பரமசிவமென்னுஞ்சித களானந்தமே நிசலிங்கம் இந்த அங்கலிங்க சமயோகமான ஆத்மார்ப்பணமாகத் தக்கவனே அஸிபதசுத்தார்த்த மாகிய சித்களானந்தாதீத சுயபிரகாச நிராவஸ்தை நிஷ்பத்தியென்னும் நிர்ப்பாவ நிசலிங்கைக்ய சிவாத்வைதபேரின்பக்கடலுள முழ்கப் பெறுவானென்பர்—எநிலேயுந் தோன்றாம லிருந்திடவிணையி லின்பத்துறுவானென்றுங் கூறினார்.

---

* தத்வமஸியானது, போதிக்கிற முறைமையில் அதுநீயாகின்றா யென்றும் அது நீயாகுமெனறும் பொருள்கொண்டிருக்கும்.

[இ-ம்.] கருவிகள் முப்பத்தாறையுங்கடந்து அவற்றின் மேல் நின்ற ஆத்மாவினது இச்சையைச்செலுத்தி ஞானக் கிரியைகளையடக்கித் தற்போதத்தைச் சீவியாமற் பரிபாகஞ் செய்கின்ற அருளையும் அதற்குமேல்நின்ற பரையையுந் துவி தநாட்ட மின்றிக்கழன்று நின்றவிடத் துதயமான ஆனந்த போத மிறந்ததாகிய சலத்துடன் சலமும் பாலுடன் பாலும் கலந்ததுபோல்வதாகிய இரண்டற்ற சிவைக்யமான சுத்தஅத் வைத வேதாகமமுடிவிற்கும் முடிவாய் விளங்கியதே அதீத மவுனநிலையென்று உமைக்குப் பரமசிவனார் குருதுரியமாக உபதேசித்தருளினா ரென்பதாம்.

ஞானத்தில் ஞானநிலை

வீதேன்பதற்குப் பிரமாணம்.

பத்திரகிரியார்.

அப்பிலுறையுப்பு மரனடியிற் சேர்ந்தோருஞ்
செப்பிலொன்றாய்த்தோன்றுமெனச் செப்புவதுமெக்காலம்.

அன்றியும்,

நானாரோ நீயாரோ நற்றபரமான தானாரோவென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம்.

அத்துவிதக்கலிவெண்பா.

ஆறுகடற்சென் றொடுங்குமாபோற் சிவத்திலொடுங்கென்று னென்றுமறவொன்று யுருகென்றான். எ-ம்.

## தாயுமானசுவாமிகள்.

அப்புழுப்பும்போன்ற வயிக்கியபரானந்தர் தமக்கொப்பு வமைசொல்லவும் வாயுண்டோ பராபரமே.

அன்றியும்,

கூடுதலுடன்பிரிதலற்று நிர்த்தொந்தமாய்க் குவிதலுடன் விரிதலற்றுக் குணமற்று வரவினொடுபோக்கற்று நிலையான குறியற்று மலமுமற்று, நாடுதலுமற்றுமேல் கீழ்நடுப்பக்கமெ ன நண்ணுதலுமற்றுவிந்து நாதமற் றைவகைப் பூத பேதமு மற்று ஞாதுருவின் ஞானமற்று, வாடுதலுமற்றுமே லொன் றற்றிரண்டற் றுவாக்கற்று மனமுமற்று மன்னுபரிபூரணச் சுகவாரிதன்னிலே வாய்மடுத்துண்ட வசமாய்த், தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே சித்தாந்த முத்திமுதலே சிரகிரிவிளங்கவரு தக்ஷணாமூர்த்தியே சின்மயானந்தகுருவே.

அன்றியும்,

தானான தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்கவொட் டாது தலைப்பட்டாங்கே, போனாலுங் கர்ப்பூர தீபம் போ லப் போயொளிப்ப தல்லாது புலம்வேறின்று, ஞானாகாரத்தி னொடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவாம னழுவினிற்கும், ஆனா லுமிதன்பெருமை யெவர்க்கார்சொல்வா ரதுவானா லதுவாவ ரதுவேசொல்லும்.

அன்றியும்,

அதுவென்று லெதுவென வொன் றடுக்குஞ்சங்கை யாத னிலு லதுவெனலு மறவேவிட்டு, மதுவுண்ட வண்டெனவுந்

ஜனகனாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும்,
பதியிந்த நிலையெனவு மென்னையாண்ட படிக்குநிரு விகற்பத்
தாற் பரமானந்த, கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன். எ-ம்.

## திருவாசகம்.

நானேதோ ரின்னுள்ளமார் ஞானங்களா ரென்னை யாரறிவார்.

அன்றியும்,

பந்தவிகாரகுணங்கள் பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்த பராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்மு ளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாய பரஞ்சுடரண்ணுவதாகாதே.

அன்றியும்,

வான்கெட்டுமாருதமாய்ந் தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச் சலிப்பறியாத்தன்மையனுச்
சூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ. எ-ம்.

[illegible]

தத்துவம்போய்க்கேவலம்போய்த் தான்போயருள்கழன்று
சுத்தபரையாய்த்தன் சுதந்தரம்போய்ச் - சத்தி
யொழிவிலேபோதம்போ யொன்றாகாவொன்றி
னழிவிலேவின்ப வதீதம். எ-ம்.

ப்ரபுலிங்கலீலே.

ஞேயஞானஞாதாரு வெனுமிவை பலசிற்குமாயின் வேறது முத்தியன்றது சகமாமென், றேயுமாறிது வதுவெனுஞ் சுட்டிலாவியல்பை, மாயைமாறிய தேவிபாலருளினன் வல்லள்.

ஞானவாசிட்டம்.

முடிவுகனவஞ் ஞானமில்லா நீடுயிலதுவா மும்மையாகு, மடர்தரு ஞாதாருஞான ஞேயமொழிந் தொடுங்குமிட மதுவேயாகுந், திடவிசும்பன் றுயிருந்தும் விசும்பான நிலையதுவாஞ் சித்தம்புத்தி, படர்மனம் போய்த் தாவாவுள் ளறிவுபெறி லொப்பாமப் பரமரூபம். எ-ம்.

சிவநெறிப்பிரகாசம்.

ஞானமுடன்ஞேய ஞாதருவென் னுமூன்று நாடாமற்றானதுவாய் நண்ணியிடுறுனே, யூனமிலாவுன்மனிக்கு மேலான முத்தியுற்றது நின்மலதுரியாதீத மெனவுரைப்ப, ரானவிதை சுத்தமா முத்தியாகுமன்றிவே றுரைக்குமுத்தி யவைகளெல்லா, மீனமா முத்தியது தன்னையெல்லா மியம்புவா மறிந்ததனை யிசையாவாறே. எ-ம்.

உண்மைவிளக்கஞ்சிந்தனை.

ஆதவன்றன்சந்நிதியி லம்புலியினுர்சோதி
பேதமறநிற்கின்ற பெற்றிபோல்-நாதாந்தத்
தண்ணல்திருவடியி லான்மாவணைந்தின்பக்
கண்ணிலமுழ்ந்தி யிடுங்காண்.

அன்றியும்,

சென்றிவன்றானென்றிற் சிவபூரணஞ்சிதையும்
அன்றிவன்றானென் றுமெனி லன்னியமா-மின்றிரண்டும்
அற்றநிலையேதென்னி லாதித்தனந்தன்விழிக்
குற்றமறநின்றது போற்கொள். எ-ம்.

திருவிளையாடல்.

பார்த்தபார்வையா லிரும்புண்டநீரெனப்பருகுந்
தீர்த்தந்தன்னையுங்குருமொழி செய்ததுந்தம்மைப்
போர்த்தபாசமுந்தம்மையு மறந்துமெய்ப்போத
மூர்த்தியாயொன்றுமறிந்திலர் வாதவூர்முனிவர். எ-ம.

நிகழ்காலத்திரங்கல்.

சிவமொழிந்தற்றமைபாரீர் சேர்ந்துகலந்தமைபாரீர் நவ மொழிந் தற்றமைபாரீர் நாமவரானமைபாரீர். எ-ம்.

அவிரோதவுந்தியார்.

அந்தப்பரத்தோ டிரண்டற்றயிக்கமா மந்தநன்னிட்டையே யுந்தீபற, அத்துவிதவீடென் றுந்தீபற. எ-ம்.

கடவுளந்தாதி.

மூச்சில்லையேது மொழிவதுமில்லை முனைமொழியப், பேச்சில்லை யம்பலம் பேருருமில்லை பிறந்திறக்க, நீச்சில்லைபள்ள நிலையுமங்காச்சுது நின்றநிலை, யாச்சில்லையென்று சற்றங்கே யிருக்கின்ற தானந்தமே. எ-ம்.

## கந்தரலங்காரம்.

போக்கும்வரவுமிரவும்பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும்வடிவுமுடிவுமில்லா வொன்றுவந்துவந்து
தாக்குமனோலயந்தானே தருமெனைத்தன்வசத்தே
யாக்குமறுமுகவா சொல்லொணுதிந்தவானந்தமே. எ-ம்.

## சொரூபசாரம்.

நானேவதுவோவது நானோநானதுவோ
ஞானோதயமோ நாதாந்தமோ - மோனமோ
சுத்தமோசூனியமோ தோற்றுஞ்சுபாவமிலே
யித்தனையு மல்லவாமே. எ-ம்.

## சச்சிதாநந்த விளக்கம்.

பரமுமிதுபொருளுமிது வழியுமிதுதெளிவுமிது பதினுலோக மிதுவே, பாசவினையாலெனது மோசமேமோசமிது பாழுறவு பாழானதே, உரமுமிரு காலோசை யிரவுபகலன்றியே யுட்சராசரமு மதிலே, யொளிவெளியி லொளியாகி யுபநிடத நடனமா பூமிவிதி யாழியெனவே, சிரமகுட முடியிலே கனகமணி யிசையிலே சிவஞான தீபமதுபார், திருமருவுசிவசோதி மதிபெருகு கதிவீடு தெரிசனைகளாகி முடியும், சரமுமது பதிசேவை சகலகலை யனுராக சாயுஜ்ய பாதமருள்வாய், தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதானந்தகுருவே.

## பாலையானந்தசுவாமிகள்.

ஞானமாமோக்ஷ மிதுதாண்டி மற்ற தியாயமெல்லா மாயமானதடி, தானசங்கற்ப விகற்பசமயமுர் தன்மயமானது ஞானப்பெண்ணே.

அன்றியும்,

அண்டமும் பிண்டமும் பாழாச்சுவதுக் கப்பாலும் பெரும் பாழாச்சு, உண்டில்லையென்று பராபர ப்ரம்மத்தை யுகந்து கும்மி யடியுங்கடி. எ-ம்.

உபநிடதம்.

தேகமேதானெனல் சீவத்தோய்தமதுபோய்த் தெளிவுவரி லாகாயத்தின் வடிவேதானுய்ப், போகமாந் தனுகரணம் வாயு வைப்போ லியங்கப்பொருந்து மவனேயீசனப் பொலிவு தன் னி, லேகமாயண்டமெலாங் கடுகளவாய்த் தோன்றுமவை யக ண்டாகார மதுவேயீசத்தொய்த, மாகமா மகண்டாகாரமு நீங்கிக் கடுகாவண்டமுந் தோன்றுதவிடத் தத்துவிதமிலேயே.

கைவல்லியநவநீதம்.

இந்தநிச்சயமுத் தருளனுபவ மிருப்பதெப்படி யென்றுற், சிந்தையற்றபூ மண்டலவிராஜனுஞ் சிசுவும்போற் சுகமாவர், பந்தமுத்திகண் மறந்துபோமுண்டென்று பலர்சொலினகை யாவ, ரந்தரத்தையுண் டுமிழ்ந்ததோர் கொசுகெனு மவர்களை நகையாரோ.

அன்றியும்,

பிறந்ததுண்டானலன்றே பிறகுசாவதுதானுண்டாம்
பிறந்ததேயில்லையென்னும் பிரமமாவதுவுநானே
பிறந்ததுநானன்றுகிற் பிரமமென்றந்தநானே
பிறந்ததுமிறந்ததற்ற பிரமமாநானேநானே. எ-ம்.

தத்துவராயசுவாமிகள்.

உள்ளாய்ப்புறம்பா யுருவாயருவாகி
வெள்ளவெளிதானுய் வெறும்பாழாய் - கள்ளிருளாய்
அல்லாய்ப்பகலா யனைத்துமாயப்பாலா
யெல்லாமாய்நின் றேனுமியான். எ-ம்.

திருவம்மானை.

சத்தியமானது சத்தேகாணம்மானை
தற்போதம்போனவிடந் தற்பரமாமம்மானை. எ-ம்.

நெஞ்சோடுமெகிழ்தல்.

நீரொடுதண்ணளி விண்டுநீரானவாறே போலூரொடுபே ரில்லானே டொன்றினுய் நெஞ்சமே. எ-ம்.

திருப்புகழ்.

அஞ்சுவிதபூத முங்கரணநாலு மந்திபகல்யாது-மறியாத
வந்தகடுவாதி யொன்றுமிலதான வந்தவொருவீடு-பெறுமாறு
மஞ்சுதவுசார லஞ்சயிலவேடர் மங்கைதனைநாடி-வனமீது
வந்தசரணார விந்தமதுபாட வண்டமிழ்விநோத-மருள்வாயே.

அன்றியும்,

சுட்டதுபோலாசை விட்டுலகாசார துக்கமிலாஞான - சுக மேவி, சொற்கரணாதீத நற்குணமூடாடு சுத்தநிராதார -வெளி காண, மொட்டலர்வாரீச சக்ரசடாதார முட்டவுமீதேறு-மதி மீதாய், முப்பதுமாறாறு முப்பதும்வேறான முத்திநாயா மோன-மடைவேனோ. எ-ம்.

வரும் மற்றும் வருவன வற்றுற் கரண்க. (௩௩)

முத்திரையை-என்னுஞ் செய்யுண்முதல் இவ்விருபத்தேழு செய்யுளாலுஞ் சின்முத்திரையையும், அதை அனுபவித்தோரையும், அதைப்பெறுதற்குரிய ஆசனமுதலியவைகளையும், சாம்பவிநிஷ்டையின் விதிகளையும், அதன்கண் அடைகின்ற நாதாநந்தமுதலிய காக்ஷிகளையும், அவைகட் கதீதமாகிய மௌனநிலையின் இலக்கணங்களையும், அப்பியாசி அர்த்தாரூடன் பூரணாரூடன் ஆகிய இம்மூவர்கள்மேல் வைத்துக்கூறினார்.

ஆத்மஞான நிஷ்டையில் மயக்கமற ஏறமாட்டாதோர் அம்மயக்கநீங்கச் செபித்தற்குரியதாயும், ஆத்மாக்களுடைய மலங்களைப் பரிபாகஞ்செய்வதற்கு மூலமாயும் விளங்கிய பஞ்சாக்ஷரத்தின் முறைமையை மேலருளிச் செய்கின்றார்.

(அ - கை.) பஞ்சாக்ஷரம் இருவகைப்படு மென்பதையும் அவைகளை உபதேசிப்போ ரிவரென்பதையுங் கூறல்.

வே று.

அறைவேன்பஞ்சாக்கரவிதியை யதுதான்றூலசூக்குமமாம்
உறவேதிரோபமாதியா யுயிரீறுதற்றூலமதாம்
இறைமுன்னாகமலம்பின்னா விசைத்தல்சூக்கமிவைகடமை
முறையேசமயகுருஞானகுரு வான்மொழியப்படுங்காணே.

(இ - ள்.) பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கு முறைமையைச் சொல்லுகின்றேன் நீகேட்பாயாக அந்தப் பஞ்சாக்ஷரமானது ஸ்தூல பஞ்சாக்ஷரமென்றும், சூக்ஷ்மபஞ்சாக்ஷர மென்றும்,

இருவகைப்படும் அவற்றுள் திரோபாக்ஷரமுதலிலும் ஜீவாக்ஷரங் கடையிலும் பொருந்த உச்சரிப்பது ஸ்தூலபஞ்சாக்ஷரமாம்-புதியக்ஷரமுதலிலும் மலாக்ஷரங் கடையிலும் பொருந்த உச்சரிப்பது சூக்ஷ்மபஞ்சாக்ஷரமாம் - இவ்விருவகைப் பஞ்சாக்ஷரங்களைக் கிரமமாகச் சமயாசாரியாராலும் ஞானசிரியாராலும் சொல்லப்படும்.—எ - று. பின்னகவென்பது, பின்னுவென விகாரமாயிற்று. தான்-சாரியை-காண்-முன்னிலையசை ஏ-ஏ-ஏ-அசைகள்.

எனவே மொழிக்குமுதலில் - நகாரமும் - அதற்குமுன் - மகாரமும் வரத்தொடுப்பது - ஸ்தூல பஞ்சாக்ஷரமாம். இது சமயகுருவினுல் உபதேசிக்கப்படும் மொழிக்கிறுதியில்-மகாரமும் அதற்கயலில்-நகாரமும் வரத்தொடுப்பது-சூக்ஷ்ம பஞ்சாக்ஷரமாம். இது ஞானகுருவினுல் உபதேசிக்கப்படுமெனக் கொள்க.

அவை வருமாறு, பக்த பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து நின்றதனுல்-நவ்வென்னுந் திரோதை இல்லையென்னும் பொருளைச் செய்வதாகக்கண்டு தானுந், தான்சேட்டிக்கிற ஆணவமும், ஆணவமிழப்பித்த சிவமும, அருளும், இந்தவேறுபாடுகளெல்லாம் அறமயங்கின ஆன்மாவுமறச், சர்வசூன்யம்பண்ணுதலால்-நவ்வாகிய திரோதையில்லை-மவ்வாகிய மலமில்லை-சியாகிய சிவமில்லை-வவ்வாகிய அருளில்லை-யவ்வாகிய ஆன்மாவில்லை-இத்தூலபஞ்சாக்ஷரம் நின்றமுறைமை இவ்வாறுதரிசித்து இனில் ஆன்மஉபாதியாகிய மலத்தையும் - சிவவுபாதியாகிய

திரோதையையும்-அறிந்து முன்கீழானசிவமும் அருளும்மே லாகத் திரோதையும்-ஆணவமுங் கீழாக ஜீவாக்ஷரம் திருளினிடமாக நடுவேகிற்பது சூக்ஷ்மபஞ்சாக்ஷரம் உண்மையால் சிவானந்தம் மேலீடாவது, சிகாரம் இச்சிவானந்த வருளாவது-வகாரம். இச்சிவானந்தமாகிய சுகத்தைத்தான் அறகின்றனுபவிப்பது - யகாரம்-கீழான ஆணவத்தையும், மேலான சிவத்தையும் அனுபவிப்பதான ஆன்மாவை மறைத்துநிற்பது-நகாரம் - ஆனந்தம்வளர்கைக்குத் தான்கெட்டுச் செல்லுவது-மகாரம் எனவறிக.

[இ - ம்.] ஸ்தூல சூக்ஷ்ம பஞ்சாக்ஷரங்களின் முறைமையையும் அவைகட்குரிய போதகரையும் அறிவித்ததாம்.

ஸ்தூல பஞ்சாக்ஷரம்

## யீதென்பதற்குப்பிரமாணம்.

### திருநாவுக்கரையர்.

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. எ-ம்

### திருவாசகம்.

நமச்சிவாய வாழ்க. எ-ம்

சிவவாக்கியர்.

ஓநமசிவாயமே வுலகமாவ துலகெலாம்
ஓநமசிவாயமே வுணர்ந்துமெய்யுணர்ந்ததும். ௭-ம்.

பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்.

அஞ்செழுத்தினிலொருபுடை பதியெனவமரும்
வஞ்சமுற்றுளவொருபுடை பாசமாய்வதியும்
துஞ்சலின்றியவிடையினிற் பசுவெனத்துலங்கும்
அஞ்செழுத்தினின்மும்முத லறிந்தவர்பிறவார்.

௭-ம் வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம்

ஈதென்பதற்குப் பிரமாணம்.

வாதவூரர்புராணம்.

எவர்க்குமெய்ஞ்ஞானமாமஞ் செழுத்தையுமுணர்த்தவேண்டி
யவத்தொழிலகற்றியாளுஞ் சிவத்தைமுன்னுகமாறித்
தவப்பெருவடிவங்கொண்டார் தண்டமிழ்பாடுமன்பர்
செவிப்புலன்வழியேசிங்கை யுறத்திருவாய்மலர்ந்தார். ௭-ம்

உண்மைவிளக்கஞ் சிந்தனை.

சிவனருளாவி திரோதமலமைந்து
மவனெழுத்தஞ்சி னடைவாம் - இவனின்று
நம்முதலாயோதிலரு ணடாதூராமெருட்
சிம்முதலாயோதுநீ சென்று.

அன்றியும்,

அண்ணன்முதலா யழகாரெழுத்தஞ்சும்
எண்ணிலிராப்பக லின்பத்தே - நண்ணி
அருளான துசிவத்தை யாக்குமனுவை
யிருளானவை நீரவின்று. எ-ம்.

திருவருட்பயன்.

சிவமுதலே யாமாறுஞ் சேருமேற்றீரும் பவநீ யோதும் படி. எ-ம்.

திருவிளையாடல்.

சூக்கமாமஞ்செழுத்தினிற் சுற்றியபாசுவீக்க
நீக்கிமெய்யானந்த விளங்கிலத்துய்த்துப்
போக்கிமீட்சியுட் புறம்பிலாப்பூரணவடிவ
மாக்கினெருதீவகம்போல் வருமண்ணல். எ-ம்.

திருவாசகம்.

நானேயோதவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்
தேனையின்னமுதமுமாய்த் தித்திக்குஞ்சிவபெருமான்
தானேவந்தெனதுள்ளம் புகுந்தடியேற்கருள்செய்தான்
ஊனுருமுயிர்வாழ்க்கை யொறுத்தன்றேவெறுத்திடவே.

பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்.

பானுவாமிறையெழுத்து வதனௌிபனையெழுத்து
ஊனமில்கண்ணேயாகு முயிரெனுந்தனியெழுத்துத்

நினையில்விளக்கேயாகுஞ் செப்பியதிளையெழுத்து
நானெனுமிருளேயாகு நவையுறுமவ்வெழுத்தே. ஏ-ம்.
வரும் மற்றும் வருவனவற்றுற் காண்க. (ரு_ச)

(அ - கை.) சூக்ஷ்மகாரண பஞ்சாக்ஷரங்களைத் தியானிப்பவர்களிவரெனல்.

வே று.

பதின்மரிலொருவர் நூற்றினிலொருவர் பகருமாயிரத்தினிலொருவர், அதிகமாமிலக்கந் தன்னிலேயொருவ ரரியகோடிகளினி லொருவர், கதிதருசூக்க வஞ்செழுத்தினையே கருதிடுபவர்களென் றறிதி, விதிதருபருவத் தவர்கள்கா ரணத்தை விளங்குறச் செபித்திடத் தகுமால்.

(இ - ள்.) பத்துப்பேரில் ஒருவர் நூறுபேரில் ஒருவர் சொல்லுகின்ற ஆயிரம்பேரில் ஒருவர் அதிகமாகிய லக்ஷம் பேரில் ஒருவர் அருமையாகிய கோடிபேரில் ஒருவர் மோக்ஷத்தைத் தருகின்ற இந்தச் சூட்சுமபஞ்சாக்ஷரத்தைத் தியானிப்பார்களென் றறிவாய் - கிரமமாகப் பரிபாகப்பட்டவர்கள் காரண பஞ்சாக்ஷரத்தை ஞானேதயமாகும்படி செபஞ் செய்யத்தகும்.—எ-று. ஏ-ஏ-ஆல்-அசைகள்.

எனவே, பெரும்பாலும் ஸ்தூல பஞ்சாக்ஷரத்தையே ஆசிரியர் உபதேசிக்க மாணாக்கர் செபிப்பார்களென்றும், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தல் அருமையென்றும், உபதேசித்தபோதிலும் மாணாக்கர் செபித்தல் அருமையென்

றும், இவ்விரண்டிலுஞ் சிறந்தது காரணபஞ்சாக்ஷரமென் றும்; அது பரிபாகிகள் அல்லாத மற்றையோர்கள் செபித் துப் பரிக்கக் கூடாதென்றுங் கூறினாராயிற்று.

(ப - ம்.) சற்கருமங்களாலுஞ் சாந்திமுதலிய சாதுசங்க த்தாலும் ஜீவன்முத்தர்களைத் தரிசித்தலாலும், அவர்கள் ப்ர சாதத்தாலும் அடைந்தவராகின்ற மலபரிபாகிக ளென்பார். விதிதருபருவத்தவர்களெனக் கூறினார்.

[இ - ம்.] முத்தியைத் தருகின்றதற்குரிய சூக்ஷமகார ண பஞ்சாக்ஷரங்களின் மகிமையைச் சொற்றன ரென்ப தாம். (கரு)

(அ - கை.) காரணபஞ்சாக்ஷரம் இன்னதென்பதையும் மகாகாரணத்தையுங் கூறல்.

வேறு.

அஞ்செழுத்தின்விதி யெவ்விதமென்னி லரியதூலமொ சூக்குமமேவும், பிஞ்செழுத்தினைத் தள்ளிமேனின்ற பெ யெழுத்தினைப் பினுமுனுவிறுவி, எஞ்சலில்லுயிர்கடுவி னின் லவுவிசைத்தல் காரணமாகு மென்றறிதி, விஞ்சுகல்லுருளிை பதாமிதனை விளங்குபக்குவர்க் கருள்வதுவிதியே.

(இ - ள்.) மேற்சொல்லிய காரண பஞ்சா க்ஷரத்தி முறை எப்படியென்றால் சொல்லுவோங் கேளாய் உமை அருமையுற்ற ஸ்தூலபஞ்சாக்ஷரத்தின் மூன்றும் சூக்ஷமபு

சாக்ஷரத்தின் பின்னும்பொருந்தியிருக்கின்ற அநுபவத்தைத்தாகிய திரோபமலாக்ஷரங்களை நீக்கி மிகுதிபெற்றிருக்கின்ற பெருமைபொருந்திய பதி அக்ஷரமு சத்திஅக்ஷரமாகிய விரண்டையும் முன்னும்பின்னுமநிறுத்தி குறைவில்லாத ஜீவாக்ஷரத்தை மத்தியிற்பிரகாசிக்க இசைத்தல் காரண பஞ்சாக்ஷரமாகும் என்றறிவாய் - இதறகும மேலிட்டு விளங்கத் தக்கதாகிய மோக்ஷ நன்மையைத தருகின்ற அருளக்ஷரமும இறை அக்ஷரமுங் கூடியதே மஹாகாரணமாம். இந்த மஹாகாரணத்தை இருவினையொப்பு மலபரிபாகஞ் சத்திநிபாதம் விளங்கிய பக்குவர்களுக்கு உபதேசிப்பது கிரமமாம்.— எ-று. ஓடுமென்பது இசை நிறை-ஏ-அசை.

ஸ்தூல பஞ்சாக்ஷரத்தின் விதிவிலக்காலாகிய காரண பஞ்சாக்ஷரத்தையும் மகாகாரணத்தைத் தீவரதரபரிபாகிகளுக்கே போதிக்கவேண்டுமென்பதையுங் கூறினாரென்பதாம.

காரணபஞ்சாக்ஷரம்

## ஈதென்பதற்குப் பிரமாணம்.

### பஞ்சாக்ஷரப்பதிபசுபாசவிளக்கம்.

நகரமாகியசேரியை நஞ்செனவெறுத்து
மகரமாகியமயலெல்லாம் வேரொடுமறுத்து
வகரமாகியவனத்தினி லிருந்திளைப்பாறிச்
சிகரமாகியநகரினை யடைந்தனன்சிவன். எ-ம்.

கண்ணுடையவள்ளல்.

அஞ்சக்கரமன்றிவேறொருமந்திரமாயினில்லை
அஞ்சிலிறையருளாவிதிரோதைசில்லாணவமற்
றஞ்சிலிரண்டையருளாலகற்றிடலாவியந்த
வஞ்சிலிரண்டையணையுமென்றான்கச்சியேகம்பனே.

அன்றியும்

ஒருதலைமாணிக்கமுன்னனெனக்குபதேசஞ்செய்தான்
இருதலைமாணிக்கம்பின்னரும்பேசியிருளறுத்தான்
இரிதலைமற்றையயன்றலைசூட்டியகங்கையின்மு
வெரிதலைச்சூலத்தொடேடிப்பான்கச்சியேகம்பனே. எ-ம்

திருமந்திரம்

அஞ்சுநடுவே யழியாத்தலங்காட்டி, நெஞ்சிநடுவேநிறுத்தினனென்னந்தி, பஞ்சாக்கரத்தைப்பகர்ந்துபதிகாட்டி, அஞ்சிலிரண்டையறுத்தனனந்தியே. ஐ-ம்

வருமற்றும்வருவனவற்றாற்காண்க.

மாஹாகாரணம்ஈதென்பதற்குப்பிரமாணம்.

திருமந்திரம்.

வாசிவாவென்றுவாசியைவைத்து
வாசியோடொன்றவகையறிவாரில்லை
வாசியோடொன்றவகையறிவாளர்க்கு
வாசியோடீசன்மகிழ்ந்திருந்தானே.

பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்.

பாசமாகியவிரண்டையும்படிறெனத்தள்ளி
நேசமாகியவிரண்டையுநெஞ்சிடையழுத்திக்
காசநீங்கியகண்ணெனமுத்தியைக்காண்பாய்
ஆசைநீங்கியநிலையிதுவிதற்கிலையையம். எ-ம்

கண்ணுடையவள்ளல்.

மந்திரமாவதுமஞ்செழுத்தேயம்தமந்திரத்தில்
ஐந்துபொருளையுங்காட்டியிரண்டின்வழியடைத்து
மூந்துமிரண்டின்வழியைத்திறந்துயர்முத்திதநதான்
கந்தன்கணபதிக்கபயன்கலிக்கச்சியேகம்பனே. எ-ம்

தாயுமானசுவாமிகள்.

ஆரணமார்க்கத்தாகமவாசியற்புதமாய்நடந்தருளும், காரணமுணர்த்துங்கையுநின் மெய்யுங கண்கண்மூன்றுடைய வென்கண்ணே, பூரணவறிவிற்கண்டிலமதல றபோற்றியிப்புந்தியோடிருந்து, தாரணியுள்ளமட்டுமேவணங்கத் தமியனேன் வேண்டிடததகுமே. எ-ம்

திருவருட்பயன்.

ஈசியருளியவைவாழ்விக்குமற்றதுவே
யாசிஇருவமுமாமங்கு. ஞ-ம்

வரும்மற்றும்வருவனவற்றூற்காண்க. (கூகூ)

(அகை) மேற்சொல்லிய பஞ்சாக்ஷரத்தில் இரண்டெழுத்தைநீக்குவது எனனையென வினுதலும் அதற்கு உத்தரமுங் கூறல்.

## வேறு.

இந்தவஞ்செழுத்திலிரண்டெழுத்தொழிப்பதென்னையென்றுமையவள்வினவ, அந்தமிலின்பதுன்பவேதனையிலழுத்துவதிரண்டெழுத்தாமால், சிந்தனைககரியசிவமிருபாலுஞ்சேர்ந்துயிர்நடுவணைநதிலங்கும், ஐந்தெழுத்தினையே காரணமெனலாமதுமுத்திக்குறுதுணையாமே.

(இ-ள்.) இந்தஸ்தூலசூக்ஷமபஞ்சாக்ஷரங்களிலிருக்கின்றநகாரமகாரங்களிரண்டையும் நீக்குவதுஎன்னகாரணமென்றுதேவியானவர்கேட்கப பரமசிவனார்அநுக்கிரகிக்கின்றார், முடிவில்லாதசுகதுக்கத்காலாகிய பவரோகத்தில் முழுகச்செய்வது அவ்விரண்டெழுத்தாகும் (அவைநீங்க) மனத்தால் நினைப்பதற்கரிய பதிஅக்ஷரஞ் சத்தி அக்ஷரமாகிய இரண்டும் முன்னும்பின்னுமாகச்சேர்ந்து ஜீவாக்ஷரம்நடுவிற் பொருந்திப்பிரகாசிக்கின்ற அஞ்செழுத்தையேகாரணபஞ்சாக்ஷர மென்று சொல்லபபடும் அதுவேமோக்ஷத்துக்குமிகுந்ததுணையாகும். எ-று ஆல்-ஏ- அசைகள்.

(ப-ம்.) ஒருவன் தனதாத்ம ஸ்வரூபத்தை அறிகின்றபரிபாககாலம் வருமளவும் சுழல்காற்றி லலைகின்ற பஞ்சுபோல் எக்காலமும் பவசாகரத்தில் மயக்கமுற்றுமுழ்கிநிற்பதற்குரிய ஒழிவின்றிய அகங்கார மமகாரங்களைத் தருகின்ற உபயாக்ஷர மென்பார் அந்தமிலின்பதுன்ப வேதனையிலழுத்துவ திரண்டெழுத்தென்றும், அக்கடலுள்மூழ்கிக்கிடக்கின்றவனை முத்தி

[illegible]யிற்சேர்ப்பதற்கு முத்திபஞ்சாக்ஷரமாகிய தெப்ப [illegible]மாகுமென்பர் ஐந்தெழுத்தினையே காரண மென [illegible]றக்கூறினர்.

[இ-ம்.] பஞ்சாக்ஷரத்தினது சலக்ஷண விலக்ஷண வர்ணங்களின்குணங்களை அறிவித்ததாம்.

## பவசாகரத்தைக்கடக்க முத்திபஞ்சாக்ஷரமேதெப்ப மென்பதற்குப் பிரமாணம்.

### திருவாசகம்.

தனியனேன்பெரும்பிறவிப் பௌவத்தெவ்வத்தடந்திரையா லெற்றுண்டு பற்றொன்றின்றிக், கனியைநேர்துவர்வாயா ரென்னுங்காலாற் கலக்குண்டுகாமவான்சுறவின்வாய்பட் டினியென்னேயுய்யுமாறென்றெண்ணியஞ் செழுத்தின்புணைபிடித்துக்கிடக்கின்றேனை, முனைவனேமுதலந்தமில்லாமல் லற்கரைகாட்டியாட்கொண்டாய்மூர்க்கனேற்கே. என்பதனாற்காண்க. (௯௪)

(அ-கை.) மஹாமனுவின் பெருமையைக்கூறல்.

விதிசேர்பஞ்சாக்கரத்தன்னை விளங்கவுரைத்தோ மேலியம்பல், பதியின்மனுவாமதையுளத்திற்பதித்தோர்பரமபதமடைவார், கதிசேர்செபமுநீங்காதோர் கருதும்பலனேயடைவரென, மதிசேர்சடையெம்மண்ண லுமைமகிழவுரைத்தான்வாய் மலர்ந்தே.

(இ-ள்.) கேளாய்உமையேகிரமமாக ஸ்தூலசூக்ஷ்மகாரணபஞ்சாக்ஷரத்தை மஹாகாரணத்துடன் விளங்கும்படி,வி

வரமாகச் சொன்னோம். இனிமேற்சொல்லவேண்டியது பதியக்ஷரமாகிய மஹாமந்திரமாகும். அப்பதி யக்ஷரத்தை உள்ளத்திற்பொருந்தச்செய்தவர்கள் மேலானமோக்ஷத்தை அடைவார்கள்நன்மார்க்கத்திற் சேர்க்கத்தக்க அந்தமனுவைச்சதாதியானிப்பவர்கள் விரும்பிய நற்பயனையே பெற்றுக்கொள்ளுவார்களென்று பார்வதியார் சந்தோஷிக்க இளம்பிறையணிந்தசடையினையுடைய ஏமதாண்டவராகியபரமசிவனார்திருவாய்மலர்ந்து அநுக்கிரகித்தார்.—எ-று. இன்,சாரியை.ஐ அசை,

(ப-ம்.) கிரியாதியானங்களில் இளைத்திளைத்து நிஷ்காமியத்தையடைந்த மனமானதுமேலடையவேண்டியது ஆத்மவிசாரமென்பார் கருதும்பலனென்றார்.

[இ-ம்.] மஹாமனுவை இதயத்தில் அடக்கினவர்கள் முத்தியும் செபிக்கின்றவர்கள் ஆத்மவிசாரமும் பெறுவர்களெபதாம்.

பதியக்ஷரம் இத்தன்மைத் தென்பதற்குப்
பிரமாணம்.

திருமந்திரம்.

நாயோட்டுமந்திரநான்மறைவேதம்
நாயோட்டுமந்திரநாதனிருப்பிடம்
நாயோட டுமந்திரநாதாந்தசோதி
நாயோட்டுமந்திரநாயறியோமே

என்பதனுற்காண்க (கூ-அ)

(அ-கை) அம்மனுவை உள்ளடக்கத்தக்க பேரறிவுடை
யோனே சாட்சாத் சிவமெனல்.

சினத்தினிடத்துமுவகையினுஞ்சிநேகனிடத்து மனையி
டத்தும்மனத்தான் மொழியாற்கரத்திடையுமருணுமலியிட
த்தினுந்தான், எனைத்துநழுவவிடாதகத்தினிடையேயுய்ப்பவனா
ரிறையெழுத்தை. மனத்துக்கரியயாமவனேயென் றுன்பர
மன்மலைமகட்கே

(இ-ள்.) பதியக்ஷரத்தைக் கோபத்தினாலாயினுஞ் சந்
தோஷத்தினாலாயினும் பகைவனிடத்தாயினும், சிநேகனிடத்
தாயினும், இல்லாளிடத்தாயினும் கழுதையினிடத்தாயினும்
பயங்கொள்ளசசெய்யும நாயினிடத்தாயினும்மற்றும் எத்தன்
மைப்பட்டவிடத்தாயினும் மனத்தினாலாந் சொல்லினாலுஞ்
சோரவிடாமல் நெஞ்சினிடத்திலேயேசெலுத்தத்தக்கவனே
மனத்தாலும் நினைத்தற்கரியநா மென்றுசொன்னார் பரமசிவ
னார் உமாதேவிக்கு—ஏ-று-வ-வ-அசைகள். சிநேகனென்ற
மையால் பகைவனெனவருவிக்கப்பட்டது

( இ-ம்.] வெளிப்படை. (௩௧)

(அ-கை.) அம்மனுவையுள்ளத்தி லடக்காதவர்கள் செய்
வனபயன்படாவெனல்.

வேறு.

பதியெழுத்தைவிடுத்தவர்கள்பண்ணும்பூசையவமாகும்
பதியெழுத்தைவிடுத்தவர்கள்பண்ணுஞ்செபமுமவமாகும்

பதியெழுத்தைவிடுத்தவர்கள்பண்ணுந்தவமுமவமாகும்
பதியெழுத்தைவிடுத்தவர்கள்பண்ணுமறங்களவமாமே.

(இ-ள்.) பதியக்ஷரத்தை விட்டவர்கள்செய்கின்றபூசைவீணாகிப்போகும், பதியக்ஷரத்தைவிட்டவர்கள்செய்கின்றசெபமும்வீணாகிபபோகும், பதியக்ஷரத்தைவிட்டவர்கள்செய்கின்ற தவமும்வீணாகிப்போகும், பதியக்ஷரத்தை விட்டவர்கள்செய்கின்ற (ஆத்மவிசாரமாகிய) தருமமும் வீணாகிபபோகும் ஏ-று--ஏ அசை. (இ-ம. வெளிப்படை.) (சுO)

(ஆ-கை.) அம்மனுவை மனதி லடக்கினோர்க்கே மஹா காரணத்தை உபதேசிக்கத் தகுமெனல்.

வேறு.

இந்நிலையாமிறையெழுத்தையுளத்தடக்குமவனேயிவ்வுடம்பினுடனிருந்துமிலங்குபரகதியை, அந்நிலேயேயடைவனென வண்ணான்மலேமாதுக் கறைந்தனனுலஂதுமோராண்டுளத்திடக்குந், தந்நிலைமையுடையவர்க்குப்பரகுரவ றுகமாகாரணத்தைத்தமதுளத்திலடக்கா, நன் ரவல்லாதவர்க்குத்தானேநவின் றிடவொண்ணுதெனவேநவிலு வர்நல்லவரே,

(இ-ள். இத்தன்மையாகிய பதியக்ஷரத்தை மனதினிடத்தில் அடக்கத் தக்கவனே இத்தேகத்தோடிருந்தும் அந்நிலே படியேபிரகாசிக்கின்ற மோக்ஷத்தை அடைவானென்றுபர

சிவனார் உமாதேவிக்கு அநுக்கிரகித்தார் அந்தப்பதியக்ஷரத்தையும் ஒருவருஷம் மனதினிடத்தில் அடக்கத்தக்க தமதுநிலையையுடைய பக்குவர்களுக்கே மஹாகாரணத்தைஉயர்ந்த ஞானசாரியர் சந்தோஷித்துச் சொல்லக்கடவர் அந்தப்பதிய க்ஷரத்தைத்தமதுள்ளத்தில் அடக்காத நன்னிலைக்குரிய பரிபாகிகளல்லாதவர்களுக்கு அந்தம்ஹா காரணத்தைச்சொல்லத் தகாதென்று சொல்லுவார்கள் மேலோர்கள்.—எ-று.தான் சாரியை-ஏ-ஆல்-ஏ-ஏ-ஏ-ஏ-இவ்வாறும் அசைகள்.

[இ-ம்.] ஆசிரியர் சற்சீடனுக்கு மஹா காரணத்தை உபதேசிக்கவேண்டுமாயின் ஒருவருஷம்அவனைச்சோதிக்கவேண்டுமென்பதாம். (சக)

(அ-கை.) காரண மஹாகாரணங்களை நிராசையால் போதிப்போர் ஆசிரியரென்றும் ஆசையால்போதிப்போர்அனுசாரிய ரென்றும்அவைகளை உபதேசித்தற்குரியமுறைமையோர் இவர்களென்றுங் கூறல்.

வேறு.

ஞானதேசிகன்மா காரணப்பொருளை நவிலுதற் குரியவனுமால், ஈனமாம்பொருளினிச்சையா லிதனையியம்புவோன்றே சிகப்பதராம்,மோனதேசிகனேமுத்தியின்பொருளைமொழிகுவனருளிறைமுடிவில், ஆனதேசிகன்மாகாரணந்தன்னையருளுவனுகமவழியே.

(இ-ள்.) காரணமஹாகாரணப்பொருள்களைப் (பரிபாகிகளையறிந்துநிராசையால்) உபதேசித்தற்குரியவர் ஆத்மஞான

குருவாவர் அற்பமாகிய திரவியாபேட்சையினாலே இவற்றைச் சொல்லத்தக்கவர் ஆசிரியப்ரஷ்டராவர் (இவற்றுள்) காரண பஞ்சாக்ஷரத்தை மௌனாசிரியரோ உபதேசித்தற் குரியராவர் மஹாகாரணத்தைஅருளிறை வடிவங்கொண்ட சிவஞானதேசிகருஞ்சிவாகமங்களின் முடிவிற்சொல்லிய முறைமைப்படி உபதேசஞ் செய்வார்.—ஏ-று-ஆல்-ஏ-அசைகள்.

[இ-ம்.] மாணாக்கரது பரிபாகத்தை யறிந்து இருவிதப் பொருள்களைப்போதிப்பவர்களே ஆசிரியர்களென்பதாம்.௬௨

(அ-கை°) நிஷ்டை அநிஷ்டைஇவை யெனல்.

இப்படியாயவுபயகன்மனுவையெழிற்குரு வருளிடப்பெற்றுச், செப்பருஞ்செபமுஞ் செபியாதுசெபிக்கச்சிந்தையுமோயுமதோய்ந்தால், அப்படிதானேயாதனங்கட்டியசைவறவிருப்பதேநிட்டை, துப்புறுகரணமசையு மேயானாற்றுரிசுளவநிட்டையென் றுணரே.

(இ-ள்.) இத்தன்மைப்பட்ட இரண்டக்ஷரங்களாலாகியநலமான மஹாகாரண மந்திரத்தை ஞானசுந்தரம்பொருந்திய ஆசிரியர் அநுக்கிரகிக்கப்பெற்றுச்சொல்லுதற்கரியசெபத்தையுஞ் செய்யாமற்செய்ய மனமும் ஒடுங்கும் அம்மனமொடுங்கினால்அவ்வண்ணமே அங்காசனம் உண்டாக்கிக் கொண்டு சலனமில்லாமலிருப்பதுவேஞானநிஷ்டையாகும்.பரிசுத்தம்பொருந்தியஅந்தக்கரணஞ் சலிக்குமாயின்குற்றமுள்ளதாகியஅநிஷ்டையென்று அறிந்து கொள்வாய்.—ஏ-று-தான்-சாரியை ஏ-அசை.

(ப-ம்.) மஹா காரணப்பொருளைப் பெற்றவன் ஏகாந்த ஸ்தானத்திலிருந்து மனதைக்கண்டத்தில் அசைவறநிறுத்தி அப்பொருளைநினையாமல நினைக்கவேண்டுமென்பார்? செபியாதுசெபிக்கவென்றும், அங்ஙனம் நினையாமல் நினைக்க அதிலெழுஞ்சுகத்தினால் அம்மனமும் உன்முகப் படுமென்பார் சிந்தையுமோயுமென்றும், தனமாத்திரைகளின் சாத்வீக அம்ஸசமஷ்டியில் தோன்றிய தெனவும, எப்பொருளையும் அறிதற்குக் கருவியெனவுங் கூறுவார் துப்புறு கரணமென்றுங் கூறினர்.

[இ-ம்.] மனத்தைநசித்து அறிவாய் விளங்குவதேபரம் மநிஷ்டையென்பதாம்.

சிந்தையானது வோயின் அப்படியே அசைவற்றிருக்க வேண்டு மேன்பதற்குப்பிரமாணம.

நாலடியார்.

உவக்கத்தாங்கொண்டவிரதங்களுள்ளுடையத்
தாக்கருந்துன்பங்கடாந்தலைவந்தக்கால்
நீக்கிநிறூஉமுரவோரோநல்லொழுக்கங்
காக்குந்திருவத்தவர். எம்

திருவள்ளுவர்.

எண்ணியவெண்ணியாங்கெய்துபவெண்ணியார்
திண்ணியராகப்பெறின்.

அன்றியும்.

துன்பமுறவரினுஞ்செய்க துணிவாற்றி
யின்பம்பயக்கும்வினை. எ-ம்

அருட்பிரகாசம்.

கடைதருதீப்புகை கால்வருத்தங்கொடுமைநெகிழ்ந்து
விடினவிந்தாக்கவொண்ணாதது பொய்தலின் வெம்பொறிவாய்ப்
படர்தருசித்த மொருகாலடங்கிற்பின்னைப்படாத்
தடைசெயல்வேண்டும்படர்ந்தா லெவர்பின் றடுப்பவரோ. எ-ம்.

ஞானவாசிட்டம்.

வருந்திமுயன்று மனந்தன்னை மாற்றி யில்லையுண்டென்று, திருந்தபதத்திலிருந்திடுவா யிடர்தீர்நெஞ்சமிடறின்றிப, பொருந்தல்வேண்டுமனம்வென்றாற் புவனமூன்றுந்துரும்பாகும, திருந்தவினிதென்றென வெல்லாந்தீர்ந்த தோணறின்மனமாறும. எ-ம.

தேவிகாலோத்ரம்.

ஆராதசித்தமானதோர் காலத்தடங்குமானாற், போராமல்வருந்திக்காத்துப் பின்னைச்சிந்தனைகளென்று, சாராமல்வல்லவாறுதடுத்துச் சார்வானவெல்லாஞ், சேராமன்மயக்கநீக்கித்திரமாகச்செய்து கொள்வான எ-ம. வரும மற்றும் வருவன வற்றுங் காண்க. (௬௧)

இதிற்கூறியஸ்தூல பஞ்சாக்ஷரமாதியாய் வருவன வற்றைக்குருசம்ப்ரதாயத்திற் கேட்டுணர்க.

அறைவேனென்னுஞ் செய்யுண்முதல் இப்பத்துச் செய்யுளாலும்ஞான நிஷ்டையினுதிக்கும்மயக்க நீங்கும்படிச் செபித்தற்குரிய பஞ்சாக்ஷரந் திரிவிதமாமென்பதையும்மஹாகாரணப்பொருளேயும் அவற்றுள் சலக்ஷண விலக்ஷண வர்ணங்களின் பயன்களையும் அவற்றுட் காக்கவெண்டிய அக்ஷரம் இத்தன்மைத்தென்பதையும்அவைகட்குரியஆசிரியரையும்மாணுக்கரையும்நிஷ்டையின் அனுபவநிச்சயத்தையுங்கூறினர்.

(அ கை,) முன்சொல்லிய மயக்க நீங்காதநிஷ்டாபரர்கள் மேலடைவதை அருளிச்செய்கின்றார்.

இநநிலேமுத்தியடைந்தவர் சநநமெடாதொழித்திடுவரேயானுல், முன்னமோதிடுமம்மூடநீங்காதோர் முத்தியையுறும்வகையுரையென், றுன்னியேயுமையாள் வினவலுமவர்தாமுற்றசாதனையைநீங்காது, மன்னியேயிறந்தான் மறுசநநத்தில்வளமைவீடுறுவரென் றிசைத்தான்.

(இ-ள்.) இத்தன்மைப்பட்ட நிலேயைபெற்று மயக்க நீங்கிச்சீவன்முத்திரை அடைநதவர்கள் மறுசன்மத்தைத்தாங்காமல் ஒழிப்பார்களேயானுல் முன்சொல்லிய அச்சிவயோகததிற்றோன்றிய அந்தமயக்கநீங்காதவர்கள் மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையைக்கிருபைசெய்ய வேண்டுமென்று தேவியானவர்யோசித்துக்கேட்க அநதமயக்கநீங்காதவர் தாமடைந்தநிஷ்டையில் இடைவிடாமல் நிலேபெறறிருந்துஇறநதுபோவாராயின் மறுசனமததில் சிவஞானநிஷ்டையைப் பெற்று மயக்கநீங்கி வண்மையாகிய மோக்ஷத்தைபெற்றுக்

ாள்ளுவாரென்று சொன்னார்; பரமசிவனார்—ஏ-று-வ-வ-
ைசகள்.

(ப-ம்.) ஞானசமஸ்கார முடையவர்தமக்குப்பரமசிவ
மகுருமூர்த்தமாக வெழுந்தருளிக்காருண்யத்தால் திருவடி
ளைச் சிரத்திற்சூட்டி அஸ்தமஸ்தக சையோகத்துடனே
ார்த்து நினைத்து விபூதியினாற் பரிசித்திருந்தபடி யிருந்து
ாட்டிய மயிர்ப்பாலமீதிற் சுத்ததெளிவுகொண்டேறிச்செல்
ும் உண்மைநிலையில்முத்திசகலமும் முத்தி கேவலமும்விட்டு
ீங்கிச் சும்மா அசைவறநின்று சீவன்முத்தராமென்பார்
இந்நிலை முத்தியடைந்தவரென கூறினார்

[இ-ம்.] அர்த்தாரூடர்கள் பூர்ணாரூட ராவதற்கு முன்ன
ம்தேகவியோகத்தை யடைந்தால் மறுசநநத்தில் முத்தி பெறு
வர்களென்பதாம். (சச)

(அ-கை.) புமான்கள் நிர்மலநிஷ்டையைப் பெறுவதற்
கேதுவைக் கூறத்தொடங்கல்.

உற்றமெய்ந்நிட்டைவிடாது சாதித்தோருறுவர்நன்முத்தி
யையென்றும், மற்றவம்மூடநீங்கிலார் முத்திமறுபவத்துறுவ
ரென்றுரைத்தீர், குற்றமினிட்டையடையுங்காரணத்தைக்கு
முகநீயுரையெனவினவப், பற்றறுபரமனுமையவண் மகிழப்
பண்பொடுபகர்தன் மேயினனால்.

(இ-ள்.) மெய்ஞ்ஞானம் பொருந்திய நிட்டையைஇடை
விடாமற் சாதனஞ் செய்தவர்கள் நல்லமோக்ஷத்தை அடை

வர்களென்னும்வேறாகிய அம்மூடத்தன்மை நீங்காதவர்கள் மறுசன்மத்தில் மோக்ஷத்தைப்பெற்றுக் கொள்ளுவார்களென்றுந் திருவாய்மலர்ந்தீர் சவுந்தரியசிரேஷ்டரே? தேவரீர்குற்றமில்லாதநிஷ்டையை (ஆனியுயிர்கள்) அடைவதற்கேதுவை அநுக்கிரகிக்க வேண்டுமென்றுகேட்க மாயாரகிதராகியபரமசிவனார் பார்வதியார்மகிழும்படி பரமசாந்தகுணத்துடனே சொல்லத்தொடங்கினார். ? எ-று-ஆல்-அசை.

(ப-ம்.) பர்தமுத்திகள் தோன்றாமல் விளங்குகின்ற தன்மயசமாதியென்பார—றற்றமினிட்டையெனக்கூறினார்.

[இ-ம்] வெளிப்படை. (சஞ)

(அ-கை.) ஆசிரியர் உபதேசித்ததிற் சந்தேகமடைந்தவனுக்கு முப்பத்தாறாவது சநநத்தில முத்தியெனல்.

வேறு.

செய்யுநிட்டையைச்செபபத்தெளிகிலா
தையமாகவகததிற்கொளுமவன்
உய்யுமுப்பதினாறாம்பவததினில்
வையநீங்கியேமன்னுவன்முத்தியில்.

(இ-ள்.) மஹான்களால் செய்யத்தக்கஞானநிஷ்டையை ஆசிரியர்உபதேசிக்க உண்மையென்று தெளியாமல் சந்தேகமாகமனத்தில்நினைத்துச்செய்கின்றவன் [அச்சநநமுதல்] முப்பத்தாறாவது சநநத்தில் இப்பூமியிற் பிறவியை யொழித்து உச்சீவிக்கும்படி மோக்ஷத்திற் சேர்ந்து நிலைபெற்றிருப்பான். எ-று-ஏ-அசை.

[இ-ம்.] சதாசாரியர் அநுக்கிரகிக்கப்பட்ட நிஷ்டையைச்சத்தியமாகக்கொள்ளவேண்டுமென்பதாம். (சசு)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களுண்டென்று நினைப்பவனுக்குமுப்பத்தினுன்காவது சநநத்தில் முத்தியெனல்.

உண்மைநிட்டருமுண்டென்றுளத்திடைத்
திண்மையாகநற்சிந்தனைசெய்பவன்
நண்ணுமைமுப்பததினாலாமபவததினில்
வண்மையாகமெய்மமுத்திபின்மன்னுவான்.

(இ-ள்.) மெய்ம்மையாகிய ப்ரம்ம நிஷ்டர்களும்உலகத்தில் உண்டென்று மனதினிடத்தில நிச்சயமாக எண்ணி நன்மை பொருந்தத் தியானஞ் செய்கின்றவன் முப்பத்தினுலாவது சநநத்தில் வளமைபெறும்படி நடுநிலைமையாகிய உண்மை மோக்ஷத்தைப் பெற்று நிலைபெறுவான்.—எ-று

[இ-ம்.] மஹான்க ளெங்கு முண்டென்று தியானிப்பவன்புமான்களுள் புண்ணியோத்தமனென்பதாம். (சஎ)

(அ-கை.) சாதுக்கள் மஹாவாக்கியம் உசாவுங்காலத்திலிருந்துகேட்டவனுககுமுப்பதாவதுசநநத்தில் முத்தியெனல்.

ஞானநிட்டரிருக்குமந்நாட்டினில்
மோனவார்த்தைமொழிநதிடக்கேட்டவன்
தானுமுப்பதாமாகந்தவத்தினுல்
ஆனமுத்திப்பதத்தையடைவனுல்.

(இ-ள்.) ப்ரம்மநிஷ்டர்களிருக்கும் அழகிய நாட்டில் மோனநிலைக்குரிய மஹாவாக்யத்தைச் சொல்ல (உணர்வின்றிக்) கேள்விப்பட்டவனும் முப்பதாஞ் சநநத்தில் முன்னேயிட்டதவத்தினால் மோக்ஷமாகிய பதம்அடைவான்.—எ-று, தான்-ஆல்-அசைகள்.

[இ-ம்.] சத்துக்களிடத்தில் வேதாந்த ஸ்ரவணம் அவசியங்கொள்ளவேண்டுமென்பதாம். (சஅ)

(அ கை. ப்ரம்மநிஷ்டர்கள்வசிக்க இடங்கொடுத்தவனுக்கு இருபத்தெட்டாவது சநநத்தில் முந்திியெனல்

சேப்பநிட்டாபரருக்குச்சிந்தையோ
டொப்பின்மாடமோடேக்கமுஞ்செய்பவன்
இப்புவிக்கணிருபத்தெட்டாம்பவந்
தப்பிலாதமெய்ப்முத்தியைச்சாருமால்.

(இ-ள்.) சொல்லும்படியான ஞானநிட்டாபரருக்குஅன்போடும் ஒப்பில்லாத மாளிகையைத்தந்து சந்தோஷம் உண்டாகச்செய்கிறவன் இப்பூமியினிடத்தில் இருபத் தெட்டாவது சநநத்தில் குற்றமில்லாத உண்மையாகிய மோக்ஷத்தை அடைவான்-எ-று-ஆல்-அசை.

[இ-ம்.] ப்ரம்மஷ்நிடர்களுக்கு அன்புசெய்யாதவன்இப்பூமியில் மானிடனாய்ப்பிறந்ததிற் பயனின்றென்பதாம். (சகூ)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களுக்குச் சதா அமுதுபடைத்தவனுக்கு ;பத்தைந்தாவது சநநத்தில் முத்தியெனல்.

ஞானநிட்டாபரருக்குநாடொறும்
போனமாதிபொருந்தவுதவுவோன்
ஈனமில்லாவிருபத்தைந்தாம்பவம்
மானமுத்தியைமன்னுதறிண்ணமே.

(இ-ள்.) பிரமநிஷ்டாபரருக்கு நாள்தோறும் போசனமுதலானவைகளைத் தக்கபடி கொடுக்கிறவன் இழிவில்லாதஇருபத்தைந்தாவது சநநத்தில் மேன்மை பொருந்திய மோக்ஷத்தைப்பெற்றுக்கொள்ளுதல் நிசசயமாம், — ஏ - று - ஏ - அசை — போசன மென்பது போனமென நடுக்குறையாய் வந்தது.

[இ-ம்.] அறிவானுயர்ந்த பெரியோர்களுக்கு அன்போடும் அமுதுபடையாதவனுக்கு நற்கதிகிடையாதென்பதாம்.()

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்கள்உடுக்க வஸ்திரங் கொடுக்கின்றவனுக்கு இருபத்திரண்டாவது சநநத்தில் முத்தியெனல்.

நிட்டைமேவுநிருமலயோகியர்
கட்டவேநற்கலைகளுதவுவோன்
இட்டமாயிருபத்திரண்டாம்பவத்
தெட்டரும்பதமெய்துவதுண்மையே.

(இ.ள்.) ப்ரம்மநிஷ்டையைப் பொருந்திய மலரகிதமாகிய யோகீஸ்வரர்கள் உடுக்கும்படி நல்லவஸ்திரங்களை இஷ்டமாகக்கொடுப்பவன் இருபத்திரணடாவது சநநத்தில் அவாங்கமனோ கோசரமாகிய பதத்தைப் பெற்றுக்கொள்வது நிசமாம், — ஏ - று - ஏ - அசை.

[இ-ம்.] நிஷ்டாபரர்களை வஸ்திராலங்காரஞ் செய்து பாராதவன் முகத்திற் படைத்தகண் புண்ணென்பதாம். (ருக)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களுடைய பதத்திற் பணிகின்றவனுக்கு இருபதாவது சரநத்தில் முத்தியெனல்,

சாதனைக்குண்முயலுர்தகைமையோர்
பாதமுச்சிப்படியப்பணிபவன்
ஓதுமங்கமொருபதிரட்டியில்
தீதில்வீடுபெறுவதுதிண்ணமே.

(இ-ள்.) ப்ரம்மநிஷ்டையில் முயற்சிசெய்யத் தக்கபெருமை பொருந்தின வர்களுடைய திருவடிகளிற் சிரசுபொருந்தும்படி வணங்கத்தக்கவன் சொல்லுகின்ற இருபதாவது சரநத்தில குற்றமற்ற மோக்ஷவீட்டைப் பெற்றுக் கொள்வது நிச்சயமாம்.—எ-று-வ- அசை.

[இ-ம்.] ப்ரம்மநிஷ்டர்களுடைய பாததாமரையில் வணங்கத்தக்கவனே மகாபுருஷனென்பதாம். (ருஉ)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களிடத்தில் இலிங்கமூர்த்தியைப்பெற்றவனுக்குப் பதினாறுவது சரநத்தில் முத்தியெனல்,

ஒப்பிலாதநல்லுண்மைநிட்டாள்கையிற்
செப்புதாரணஞ்செய்துகொள்கிற்பவன்
தப்பிலோர்பதினாறுத்சனுவினில்
எய்ப்பின்முத்தியையெய்துவதுண்மையே.

(இ-ள்.) நிகரில்லாத நலத்தைப் பொருந்திய சத்தியஞானநிஷ்டாபரரிடத்திற் சொல்லும்படியான இலிங்கதாரணையைப்பெற்றுக் கொள்பவன் தவறுத லில்லாமல் ஒப்பற்றபதினாறுவது சநநத்தில் அழியாத மோக்ஷத்தை அடைவது சத்தியமாம் எ-று-எ- அசை.

[இ-ம்.] ப்ரம்மநிஷ்டா பரரால் சிவபூசையைப் பெருகின்றவனே தேவர்களுள் சிறந்தவனென்பதாம். (ரு௩)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களிடத்திற் பணிவிடை செய்கின்றவனுக்குப் பன்னிரண்டாவது சௌநநத்தில் முத்தியெனல்.

சாற்று நிட்டையைச்சார்ந்தமெய்ஞ்ஞானிபால்
ஆற்றுநற்பணியன்பொடுசெய்பவன்
வற்றுமீராறியன்றதனுவினிற்
போற்றும்வீடுபொருந்துவதுண்மையே.

(இ-ள்.) சொல்லும்படியான ஞானநிஷ்டையை அடைந்த உண்மையாகிய ஞானவான்களிடத்திற் செய்யத்தக்க நற்பணிவிடைகளைப்பக்தியோடுஞ் செய்கின்றவன் மேன்மைபொருந்தச்செய்யும் பன்னிரண்டாவது சநநத்தில்யாவராலுந் துதிக்கத்தக்க மோக்ஷவீட்டைச் சேருவது சத்தியமாம்—எ-று ஏ- அசை.

[இ-ம்.] சான்றோர்களுக்கு உள்ளன்போடும் பணிவிடைசெய்கிறவனேயாவராலுந் தொழுதற்குரியவனென்பதாம்.

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமுதலி யவை கொள்ளுகின்றவனுக்கு எட்டாவது சநநத்தில் முத்தி யெனல்.

ஓதுசாதனையுற்றவர்சேவடிச்
சீதநீரொடுசேடமுமேற்பவன்
தீதிலெட்டாந்தனுவிற்றிகழதரும்
ஏதின்மேன்மைவீடெய்துமினிதரோ.

(இ-ள்.) சொல்லுகின்ற ஞானசாதனத்தைப்பெற்றவர்க ளுடைய குளிர்ச்சிபொருந்திய பாதோதகத்துடனே பரிகலத் தையும் 0 அங்கீகரிக்கின்றவன் குற்றமில்லாத எட்டாவது சந நத்தில்ப்ரகாசிக்கின்ற நன்மையைத் தருகின்றமேலாகிய மோ க்ஷவீட்டை இன்பமாகச்சேருவான் —எ-று-அரோ-அசை.

[இ-ம்.] மேலோர்களுடைய பாததீர்த்த பரிகல ப்ரசா தத்துக்குடையவனே சிவஸ்வரூப மென்பதாம். (ருரு)

(அ-கை.) ப்ரம்மநிஷ்டர்க ளுடைய திருவுருவங்களைப் பரிசித்துத் தொண்டுசெய்கின்றவனுக்கு ஐந்தாவது சநநத்தில் முத்தியெனல்.

மன்னுயோகமருவுவோர்தேகமு
நன்னயம்பெறுபாதநளினமும்
பின்னமின்றிப்பிடித்தேவல்செய்பவன்
பன்னுமைந்தாம்பவத்தில்வீடெய்துவான்.

---

0 அங்கீகரித்த லென்பது, உட்கொள்ளுதலாம்

(இ-ள்.) நிலைபெற்ற சிவயோகத்திற் பொருந்தியிருக்கின்றவர்களுடைய திருவுருவத்தையும் நல்லநயம்பெற்ற பாததாமரையையும் அபின்னபாவமாகப் பரிசித்துத்திருத்தொண்டு செய்கிறவன் சொல்லுகின்ற ஐந்தாவது சநநத்தில் மோக்ஷத்தைப பெற்றுக்கொள்ளுவான்.—எ-று.

(ப-ம்) ஆத்மாக்களுடைய பாசபந்தங்களை ஒருங்கேகட்டறுத்து அவர்களைப் பரிசுத்தஞ் செய்து பரிபக்குவத்துக்குத் தக்கவர்களாய்த் தன்மயப் படுத்திக்கொள்ள நல்லவளமைதங்கிய சுயம்ப்ரகாசமான பரிபூரணானந்த சுகமே ப்ரத்தியக்ஷமாகத் திருவுருக்கொண்ட திவ்ய சரணங்களென்பார்—நன்னயம் பெறுபாதமென்றார். சிரசிற்சூட்டிக் கொள்ளவுங் கண்களி லொற்றிக்கொள்ளவும் மார்பிலணைத்துக் கொள்ளவுங் குளிர்ச்சிபொருந்தி மிருதுவாயிருக்கத்தக்கதாகையால் நளினமென்று திருவடிகளை யுருவகஞ் செய்தார்.

[இ-ம்.] மஹான்களுடைய அருள்மேனியையுந் திவ்ய சரணாரவிந்தங்களையும் பரிசித்து இனிதாகச் சிசுருஷை செய்பவனுடைய ஆத்மானந்த செல்வத்துக்குச்சமமான துஜகத்தில் வேறின்றென்பதாம். (ருசு)

(அ-சை,) ப்ரம்மநிஷ்டர்களுக்கு நிதந் தொண்டு செய்து பூசித்து அமுது படைக்கின்றவனுக்கு எடுத்த அத்தேகத்திலேயே முத்தியெனல்.

ஒப்பிலா துயருண்மைநிட்டாள்தமக்
கப்பொடன்னமுமர்ச்சித்துதவியே

தப்பிலேவலுந்தான்செயுப்புண்ணியற்
செய்ப்பின்முத்தியெடுக்கும்பவத்தினே.

(இ-ள்) சமானரகிதராகி உயர்ந்த வுண்மையாகியஞான நிஷ்டாபரர்களைப் பூசித்து அன்னபானாதிகளைக் கொடுத்துத் தவறுதலில்லாமல் திருத்தொண்டு செய்யத்தக்க ஞானநிஷ்டையையுடைய புண்ணியவானுக்கு எடுத்த அந்த ஜந்நத்திலேயே அழியாதமோக்ஷங் கிடைக்கும்.—எ-று. ஏ-ஏ-அசைகள் புண்ணியனென்றதனால் ஞானநிஷ்டையையுடையவனென்று வருவிக்கப்பட்டது,

[இ-ம்.] ஆத்மவிசாரம் பொருந்தினவர்களுக்குச் சர்வ உபசாரத்துடன் அன்னமிட்டு அர்ச்சித்துத் திருத்தொண்டு செய்கின்றவனே ஞானஸமஸ்காரத்தினால் திருவுருக்கொண்டு சதாசாரியரால் ஆத்மஞானநிஷ்டையைச் சம்பூர்த்தி செய்ய வந்தவனென்பதாம். (௫௭)

(அ கை.) மேற்சொல்லிய வண்ணம் அன்புசெய்கின்ற மாணாக்கர்களுக்கு ஞானகுருவானவர் சம்பூரணகிருபையோடும் அனுக்கிரகிப்பரெனல்

வேறு.

இந்நிலைத்திருப்பணியெலாஞ்செய்பவர்க்கிசைய
அந்நிலைப்பரகுருவருள்சுரந்தினிதாக
உன்னுதற்கருமொருமொழியருளினுளுதவித்
தன்னிலைப்பரநிட்டையிலிருத்துவன்றயைபால்.

(இ-ள்,) இத்தன்மைப்பட்ட திருத்தொண்டுகளெல்லாங் (குறைவறச) செய்யத்தக்கவர்களுக்கு ப்ரம்மானுபவம் பொருந்த அபூர்வமான நிலையையுடைய ஞானசிரியர் உளத்தில் அருளானந்தமுண்டாகி இனிமையாக நினைத்தற்கரிய மஹா வாக்கியப்பொருளைக் கிருபாநோக்கத்தால் அநுக்கிரகித்துத் தமையினுல் தனதுஸ்வரூப நிலையாகிய ப்ரம்மநிஷ்டையிலிருக்கச் செய்வார்.—எ-று.

[இ-ம். ஞானசிரியர் தமக்குவுள்ளன்போடும்பணிவிடை முதலியன்வ செய்யத்தக்க மாணர்களுக்குத் தமதுண்மை நிலையைஅருள்செய்வதே அவருக்குஉரிய தர்மமென்பதாம். ()

உற்றமெய்யென்னுஞ் செய்யுண்முதல் இப்பதினன்கு செய்யுளாலும் ஆசிரியருபதேசித்ததில் சந்தேகங்கொள்பவனுதியோரும் சத்துக்களையடுத்துச் சர்வபூசா வுபசாரத்தோடுதிருந்தொண்டு செய்பவர்களும் முத்திஅடையுங் காலத்தையும் அவர்களுக்கே ஆசிரியர் ஆத்மஞானத்தைப்போதிக்கக்கடவரென்பதையுங் கூறினர்.

(அ-கை.) நிஷ்டாபரர்களுக்குப் பூசைவேண்டுவதின்றென்றும் அவர்களின்பூசை இத்தன்மைத்தென்றும், கிரியாபூசைக்கதிகாரிகளிவரென்றும், சிவயோகிகளிவரென்றும், கிரியாயோகமிதுவென்றும், அந்தயோகஞ் செய்பவர்களுக்குப் பிறவியொழியாதென்றும், சிவயோகிகளேமுத்தியடைவரென்றும், அச்சிவயோகநிஷ்டையைப் பூமான்களுக்கு உபதேசித்தற்குரிய பருவப்ரமாணங்களிவை யென்றுங்கூறுவான்தொ

டங்கிவைத்த முறைப்படியே நிஷ்டாபரர்களுக்குக்கிரியாபூசை வேண்டுவ தில்லையேல் உலகோர் அப்பூசையை விடுவரே யெ ன்வினாதல்.

வேறு.

இப்படியாய நிட்டைசாதனையிலிசைந்தினிதிருப்பவர்தா மும்,ஒப்பறும்பூசையொழித்திடல்வேண்டுமென்றுமைக்கிறை யவனுரைப்ப, அப்படியாமேலவனியோரெல்லாமருச்சனைவிடு வரேயென், றிப்படிபிசைத்தாளுமையவடானுமிணையிலாவிறை வனை நோக்கி.

(இ-ள்.) இத்தன்மைப்பட்ட ப்ரமநிஷ்டா சாதனத்திற் பொருந்தி இனிமையாக இருப்பவர்கள் ஒப்பற்ற கிரியாபூ சைகளை நீக்கவேண்டுமென்று தேவியாருக்குப் பரமசிவனார் சொல்ல அதைக்கேட்டஅத்தேவியாரும் சமானரகிதராகிய பரமசிவத்தைப்பார்த்து நிஷ்டாபரர்களே பூசையைவிடுவர்க ளாயின் உலகோரெல்லாம் சிவபூசையை விட்டுவிடுவார்களே யென்று இவ்விதமாகச்சொன்னார்.—எ-று. தாம் - தான்-சா ரியைகள்.

[இ-ம்.] உலகத்தார் கிரியாபூசைகளில் நின்றும்,வேறுப டாமையைநோக்கி வினாவினதாம். (௫௬)

(அ-கை.) நிஷ்டாபரர்கள்செய்யுஞ்சிவபூசை இஃதெனல்.

அத்தனுமொழிவானிட்டை சாதகரர்ச்சனை யெனவறை வதேபூசை, கைத்தலமமருமுடையவன் றனக்குக்கனகுருபாத

நீராட்டிக், சுத்தமாகிய வெண்ணீறணிந்ததனாற்சோடசபூசை யுஞ் செய்தே, இத்திரம்புரித லேயவர்பூசையென விறைபியம் பின னெடுத்தே.

(இ-ள்.) பரமசிவனாருந் தேவியாரைப்பார்த்துச் சொல் லுவார் ப்ரம்மநிஷ்டா சாதகர்கள் பூசைசெய்ய வேண்டுமென் றுநினைத்துச் சொல்லுவார்களாகில் அதுவேவேதாகம முறை யின்படி சகலபூசாஉபகரணங்களையுங்கொண்டுபூசைசெய்ததற் குச்சமானமாம் (அவ்வாறன்றிப்பூசைசெய்யவேண்டுமாயின்) கரபீடத்தி லெழுந்தருளியிருக்கும் இஷ்டலிங்க மூர்த்திக்குப் பெருமைபொருந்திய குருபாதோதக அபிஷேகஞ்செய்து பரி சுத்தமாகிய வெண்மைபொருந்திய விபூதியைத்தரித்து அந்த விபூதியினாற் சோடசஉபசாரபூசையுஞ் செய்து மேற்சொல்லி யபடி நிஷ்டைசெய்வதே ப்ரம்மநிஷ்டர்களுடைய பூசாவிதி யென்று பரமசிவனார் எடுத்துரைத் தருளினார்.—ஏ-று. ஏ-ஏ அசைகள்-வாக்கென்றதனால் மனமும்வருவிக்கப் பட்டது.

(ப-ம்.) எங்கும் வியாபக சைதன்னியமான பரிபூரண மனத்தோடும்விளங்குகின்ற ஞானநிஷ்டாபரர்கள் சிவார்ச் சனைசெய்யும்படி நினைப்பதுஞ் சொல்வதுமே உலகத்திற்கிரியா பூசைக்கதிகாரிவிதியுடன் செய்கின்ற கோடிபூசைக் கொக்கு மென்பார்—நிட்டைசாதக ரர்ச்சனையென வறைவதே பூசை யெனக்கூறினார்.

[இ-ம்.] பூசாகோடி, தோத்திரம். தோத்திரங் கோடி செபம். செபங்கோடி, தியானம். தியானங்கோடி, நிஷ்டை.

நிஷ்டைகோடி, மனோலயம் என்றுவேதாகமங்களலால் விதிக்கப்பட்டும் மேலோர்களால் கூறப்பட்டும் இருக்கின்றமையால் அம்மனோலயம் பெற்ற சிவயோகிகள் மனோவாக்கினால் சிந்தித்துச்சொல்வதே பூசையென்பதாம.

## மேலோர்களுக்கு ஆத்மானந்த பூசையன்றி வேறுபூசை இன்றென்பதற்குப் பிரமாணம்.

### ஞானவாசிட்டம்.

தேகமுதற்பிரிவுகளாய்ச்சிறியனவாம் பொருள்களிலத்தெய்வமுண்டோ, பாகமறப்பணிந்தியறவடிமுடி வற்றுளவுணர் வேபரமபோத, மாகவினலதுதெய்வமருச சித்தற்குரித்தாகுமறிவிலாத, மூகருக்குவடிவமுதலருச்சனையே யியல்பென்று மொழியுமன்றே.

### அன்றியும்.

அறிவுசமபாவனைசந்தோடமெனு மலர்களாலந்தத்தேவாம்
பிறிவரியவாத்துமதத்துவத்தை யருச்சிப்பசேபெரியபூசை
குறிவடிவிற்பூசனையல்ல வகண்டமெனக்கூறுந்தெய்வ
நெறிகொள்புறத்தொழில்களா னேராதிங்கதனாலேகிறையுமின்பம்.

### பசுபதிபாசவிளக்கம்.

சாத்திரஞ்சமயம்வேண்டார் தத்துவக்கத்தும்வேண்டார்
கோத்திரங்குலங்கள்வேண்டார் கூறுமால்விரதம்வேண்டார்
மூர்த்திசேவையுமேவேண்டார் முன்னவன்பூசைவேண்டார்
தீர்த்தமும்வேண்டார் ஞானசின்மயமானமேலோர். எ-ம்.

### சிவானந்த மாலை.

எங்குஞ்சிவாலயமா மெங்குஞ்சிவமாகு
மெங்குஞ்சிவனடிமை யெங்குமாய்ப்-பங்கறவே

சிற்றச்சிவபூசை நின்றநிலையாய்நிறைவிற்
பற்றொழிதல் பூசாபலம். எ-ம்.

சிவப்பிரகாசம்.

மண்முதற்கரணமெல்லா மறுவசத்தாக்கிஞானக்
கண்ணினிலூன்றியந்தக் கருத்தினாலெவையுநோக்கி
யெண்ணியஞ்செழுத்துமாறி யிறைநிறையுணர்ந்துபோற்றல்
புண்ணியன்றனக்குஞான பூசையாப்புகலுமன்றே. எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (௬௰)

(அ-கை.) கர்மகாண்டிகளும் பக்திகாண்டிகளும் பண்ணும்பூசை இஃதெனல்.

இப்படிநிட்டாள்பூசனை புரிதலியல்பதாமிவ்விதபூசை, செப்பிடுங்கன்மகாண்டியுங்கிரியா காண்டியுஞ்செய்யொணாதவர்கள், திப்பியசைவாகமவிதிப்படியேசெய்பவேண்டிடுதலேயியல்பாம், இப்படியன்றிச்செய்யொணாதென்றே யிறையுமைக்கியப்பினனன்றே.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் பிரம்மநிட்டர்கள் பூசைசெய்தல்முறைமையாம் 'இவ்விதமாகியபூசையைச் சொல்லுகின்ற ? கர்மகாண்டத்துக் குரியவர்களும் † பக்திகாண்டத்துக்குரியவர்களுஞ்செய்யக்கூடாது அவர்கள்தெய்வீக மானசைவா

? கர்மகாண்டி, தேக - கிரக - கிருத்தியாதிகளில் யானெனதென்னும் அகமமதை யுள்ளவனெனவும்.

பத்திகாண்டி, சகலகிரியையும் ஈஸ்வரார்ப்பணஞ்செய்பவனெனவுங் கொள்க.

மத்திற்சொல்லியிருக்கின்ற விதிப்படியேசெய்யும்படி விரும்பு தல்முறைமையாம். இந்தக்கிரமந்தப்பிச் செய்யக்கூடாதென் றுஉமைக்குச்சொன்னார் பரமசிவனார்.—எ-று. ஏ-ஏ-அன்று-ஏ-அசைகள்.

[இ-ம்.] சகல கர்மத்துங்கும் நாமேசாக்ஷி யென்பவர்க ளாகிய ஞானகாண்டிகள் தவிர ஏனையோர் பூசைசெய்யவேண் டுமென்பதாம். (சுஈ)

(அ-கை.) சிவயோகிகள் இவரெனல்.

இப்படிநிட்டைதன்னிலேயிருந்து மியல்பொடுதன்னனு பவத்தை, ஒப்பிலாவரசற்கமைச்சுரைப்பதுபோ லுயர்குருப ரற்குரைத்தளவில், மெய்ப்படுகுரவன்பின்னிகழ்வதனை விளம் பிடக்கேட்டறிகுனரே, ஒப்பின்மாயோகரலாதவர் கிரியா காண்டியென்றுரைத்திடப்படுமால்.

(இ-ள்.) இந்தப்ரகாரம் நிஷ்டையிலேயிருந்தாலும் இறை மாட்சிமுதலியவரசிலக்கணத்தில் தன்னோடொப்பாவாரில்லா தஅரசனுக்கு அவ்வரசனிலற்றைச்செய்கவென்று தனக்குக் கட்டளையிட்ட காரியங்களில்முயன்ற மந்திரியானவன் அவற் றாலுண்டாய குறைவுநிறைவுகளைக்கூறிப்பயன்படுத்துமாறு போலக், கிரமமாகத்தங்களுடைய உயர்ந்த குருபரனுக்கு அ வர்அநுக்கிரகித்த வண்ணம் தாங்கண்ட அனுபவப் பேற்றில டைந்தசம்ஸயங்களை விண்ணப்பம்பண்ணிக்கொண்டு அளவு படாத உண்மையாகிய அவ்வாசிரியர்மேல் நடப்பதைச்சொல்

லக்கேட்டறிந்து கொள்ளத்தக்கவர்களே நிகரற்றபெருமை பொருந்தியசிவயோகிகளாம் இத்தன்மைப் பட்டவர்களல்லாதவர்கள் கிரியா காண்டத்துக் குரியவர்களென்று சொல்லப்படும்.—எ-று. ஆல்-அசை- இங்ஙனங் காண்டியென்றது இழிவின்கண்வந்த பன்மை வழுவமைதி.

[இ-ம்.] பூரணஞ்டராகுங் காலவரையிலுங் குருகுலவாசமாயிருந்துநிட்டை சாதித்தவர்களே ஆத்மஞானிகளென்பதாம்.

(அ-கை.) தேவியாருக்குக் கிரியாயோகவிதியைப் பரமசிவனார் சொல்லத்தொடங்கல்.

உன்னருஞானநிட்டையையடிகளுரைத்திடக் கேட்டுளமகிழ்ந்தேன், பன்னருங்கிரியா யோகமென் றுரைக்கப்படுவதையெனக்குநீவிரித்தே, நன்னயமாக வுரைத்திடவேண்டுமென்றுமைநாதனைவணங்க, இன்னமுதொழுகு மதியணிசடையோ னிறைவியைப்பார்த்தினி துரைப்பான்.

(இ-ள்.) நினைப்பதற்கரிய சிவஞானநிட்டையைத் தேவரீர் உபதேசிக்கக்கேட்டு (அடியேன்) மனமகிழ்ந்தேன் சொல்லுதற்கரிய கிரியாயோகமென்று சொல்லப்படுவதை விரித்து நல்லநயப்பாக அடியேனுக்குத் தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று பரமேஸ்வரரைவணங்கிப் பார்வதியார் (கேட்க இனிமையாகிய அமுதமொழுகுகின்ற கிரணங்களையுடைய இளஞ்சந்திரனையணிந்த சடையையுடைய பரமசிவனார் தேவியாரைப்பார்த்து சந்தோஷமாக்ச் சொல்லுவார்.—எ-று. ஏ அசை.

[இ-ம்,] வெளிப்படை. (௬௩

(அ-கை.) கிரியாயோக மிப்படிப்பட்ட தென்றும் அது ஞானயோகிகளுக் கில்லையென்றும் ஞானயோகிகளே முத்தியை அடைவார்களென்றுங் கூறல்.

வேறு.

பங்கமுறமனங்கொண்டுசுவாசமது தன்னைப்பந்தனஞ்செய்தருங்கற்பம் பற்பலவயின்றோ, அங்கமதைத்தான் சுழற்றிய பானவழிதன்னாலயம்வாங்கி யவ்வழியாலதை மீளவிடுத்தும், இங்கிவைகள் பலவியற்றலட்டமாயோகமென் பரிவைசிவயோகமியற்றுவோர்க்கில்லையால், தங்குசிவயோகத்தாலாக்கமுடனமிழ்ந்தானிலாப் பரமசாயுச்சியந்தானடைவார்.

(இ-ள்.) உலகநடைக்கு வேறுபாடாக மனதில்நினைத்துச் சுவாசத்தைப் பந்தனப்படுத்தியும் அருமையாகிய பலபல விதகல்பங்களை உண்டும் அவையவங்களைசுழற்றியபானமார்க்கத்தில் இரும்பைவுள்ளேவாங்கி மறுபடியும்அவ்வழியினாலே அவ்விரும்பைவெளியிலேவிட்டும் இவை போல்வனவாகியபல விதகாரியங்களைச்செய்தல் அட்டமாயோகமென்று சொல்லுவார்கள். இக்கிரியைகள் ஞானயோகஞ்செய்யத்தக்கவர்களுக் கில்லையாம் (அவர்கள்) பொருந்தியசிவயோகத்தினாலேபிறப்பிறப் பில்லாதஉயர்ந்த சாயுஜ்யபதத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். — எ-று. தல்-தான்-தான்-சாரியைகள். ஏ-ஆல்-அசைகள்.

[இ-ம்.] அத்பஞானத்தன்றி வேறியவற்றால் முத்திவாராதென்பதாம்.

## இதற்குப்பிரமாணம்.

கந்தரலங்காரம்,

திருத்தியெனும்படிக்கும் பித்துவாயுவைச் சற்றிமுறித்
தருத்தியுடம்பையுருக்கிலென்னுஞ் சிவயோகமெனுங்
குருத்தையறிந்துமுகமாறுடைக் குருநாதன்சொன்ன
கருத்தைமனத்தி லிருத்துங்கண்டீர்முத்திகைகண்டதே. எ-ம்

ஒழிவிலொடுக்கம்.

அறிவடங்காவாயுவடங்க வசைவற்றுத்
தறியிருந்தாற்போலச் சமாதி-பெறாகி
ளடந்தகுருட்டே மனஞ்சருநதிட்பாமூர்
கிடந்தகுழிபபுக்க தனுங்கேடு. எ-ம்

வரும் மற்றும் வருவன வற்றுற் காண்க. (௬௪)

(அ-கை.) கிரியாயோகிகளுக்குச் சநநமரணம் ஒழியா வெனல்.

வேறு.

புத்திகொள்கிரியாயோகசாதனையைப் புரிந்திடுபவர்களிவ்வு லகில், எத்தனைகாலமிருப்பினுமீண்டு சிறப்பொடு பிறப்பினை யடைவார், சத்தியமாகவறிதிநீயிந்தத் தனிச்சிவயோகசாதனை யை, இத்தனைவயதிற்போதிப்பதென்றே யிறையவனுமைத னக்கிசைப்பான்.

(இ-ள்.) மனத்தில் எண்ணுகின்ற கிரியாயோக சாதனை யைச்செய்பவர்கள் இந்தப்பூமியின்கண் எத்தனைகாலமிருந்தா லும் மேலும்மேலும் சநநமரணங்களை அடைவார்கள் (சந்

தேகமில்லை, உண்மையாகநீ அறிந்துகொள்வா (யென்றுசொல்லி) இந்தலைப்பற்ற சிவயோகசாதனத்தை இத்தனை வயதில் அநுக்கிரகிக்க வேண்டுமென்ற (பருவப்பிரமாணத்தை, உமைக்குச் சொல்லுவார் பரமசிவனார்.—ஏ-று,ஏ-அசை.

[இ-ம்.] தெய்வநாயகர் கிரியாயோகிகளுக்கு முத்தியின்மையென்றறிவித்துச் சிவயோகத்தை அநுக்கிரகிக்குங் காலத்தை அறிவிக்கத் தொடங்கினரென்பதாம். (௬௫)

(அ-கை.) ஞானநிஷ்டையை உபதேசித்தற் குரியகால அளவைக்கூறல்.

இந்தநன்னிட்டை யேழுநான்காண்டி லியம்புதலுத்தமமாகும், மூந்தியவையாறாண்டினி வாசான்மொழிகுதன் மத்திமமாகும், அந்தமிலாறாறாண்டினிற் புகறலறைதருக நிட்டையதாமால், உந்துமிப்பருவங்கடந்தவர்க்கதனையுரைத்திடத்தகாதென வுணரே.

(இ-ள்.) இத்தன்மையாகிய நன்மையைத்தருகின்ற ஞானநிஷ்டையைப் பிரதானமாகிய ஞானாசிரியர் மாணாக்கனுக்கு இருபத்தெட்டாம்வயதில் அநுக்கிரகஞ்செயதல் உத்தமமாகும் முப்பதாம்வயதில் அநுக்கிரகித்தில் மத்திமமாகும் பருவப்பிரமாணமில்லாத முப்பத்தாறும்வயதில் அநுக்கிரகித்தல்அதமமால். மேற்சொல்லிய மோட்சசுகத்திற் சேர்க்கத்தக்க இப்பருவங்களைக் கடந்தவர்களுக்கு அச்சிவஞானநிஷ்டையை அநுக்கிரகித்தலதகாதென் றறிந்துகொள்வாய்.—ஏ-று, ஆல்-ஏ-அசைகள்.

[இ-ள்.] புமான்களுக்கு முப்பத்தாறுவயதுக்குமேல் ஞானநிஷ்டாசாதனஞ் செய்வதற்குத் தேகவலி குறைந்திருக்குமாகையால் அவர்களுக்கு ஞானுசிரியர் அந்த நிட்டையைப் போதிக்கக்கூடாதென்பதாம்.

யௌவனபருவமே பிரமநிஷ்டை பெறுதற்குறிய
தென்பதற்குப் பிரமாணம்
ஞானவாசிட்டம்.

எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்றை கடந்தெளிதினேற வல்லோ, ரத்திறத்தோரே புருடரவாகளே தொழுற்குரியோ ரவரேசான்றோர், மெய்ததிறக்தோர் சேரிடமாய் விநயநிதி படைத்தருளால் விளங்காநிற்குரு,. சுதரகுணமெவ்வன மிவ்வுலகிலுளதோ விசுபமிற்சூழ்காடுண்டோ.

என்பதனுற்காண்க (சுசு)

இப்படியாயவென்னுஞ் செய்யுண்முதல் இவ்வெட்டுசெய்யுளாலுங்கர்மபக்திகிரியாயோகிகளாகிய இம்மூவர்களுக்கு மபிறவியொழியாதென்பதையும் ஞானுசிரியருடைய கிருபைக்குப்பூரணப்பட்டவரே சிவயோகிகளென்பதையும அச்சிவயோகத்தை ஆத்மாக்களுக்குப் போதிப்பதற்குரியபருவங்களையுங்கூறினார்.

இந்நூற்பொருளாகிய பிரமநிஷ்டையைப் போதிப்பதற்குரிய ஆசிரியனையும் மாணுக்கனையும்மேலருளிச் செய்கின்றார்.

(அ-கை.) குருவேபரமசிவமெனல்.

வேறு.

ஞானநிட்டையை நல்குநற்றேசிகன்
மானமுற்றிடு மானிடனல்லனல்
வானமுற்று வளர்கயிலைப்பரன்
தானெனத்தினஞ் சாற்றிடலாகுமே.

(இ-ள்.) ப்ரம்மநிஷ்டையை அநுக்கிரகஞ் செய்யத்தக்க நலம் பொருந்தியஆசிரியர் அகங்காரம்பொருந்திய மனிதனல்லர்ஆகாயமளாவிவளர் கின்றகயிலையிலெழுந்தருளி யிருக்கின்றபரம சிவமேயென்றுநித்தியஞ் சொல்லலாகும.—எ-று. ஆல் ஏ-அசைகள்.

[இ-ம்,] ஆத்மகோடிகளுள் சிறந்துவிளங்கியமலபரிபாகிகளுக்கு ஞானநிஷ்டையை அநுக்கிரகஞ் செய்யுமபடி பசுபதியேகுரு மூர்த்தமாகஎழுந்தருளி வருவரென்பதாம்.

இதற்குப்பிரமாணம்,

திருமந்திரம்.

குருவேசிவமெனக்கூறினனந்தி
குருவேசிவமென்பதுகுறித்தோரார்
குருவேசிவமாகிக்கோனுமாய்நிற்குங்
குருவேயுரையுணர்வந்ததோர்கோவே. எ-ம்.

திருவாசகம்.

அருபரத்தொருவனவனியில்வந்துகுருபரனாகியருளிய
பெருமையைச்சிறுமையென்றிகழாதே

அன்றியும்.

சிவனெனயானுந்தெறினன்காண்க
வவனெனையாட்கொண்டருளினன்காண்க. எ-ம்.

திருவாய்மொழி,

துயரில்சுயரொளி தன்னுட்சோதிநின்றவண்ணநிற்கவே
துயரின்மலியம்மனிதர் பிறவியிற்றோன்றிக்கண்காணவந்து
துயரங்கள்செய்து தன்றெய்வநிலையுலகிற்புகவுய்க்குமம்மான்
றுயரமில்சீர்க்கண்ணன் மாயன்புகழ்துற்றயானோர் துன்பமி
லேனே. எ-ம்.

அமுதசாரம்,

உள்ளத்தினின்றுமொளித்தான் பரன்குரவன்
கள்ளந்தனைத்தவிர்த்துக் காட்டினான்-வள்ளல்
அருவானகோலமோ வக்கோலங்காட்டும்
குருவானகோலமோகூறு. எ-ம்.

பாடுதுறை

முகுந்தனுநானுமுகனுங்கேட மூலமொருகுருமூர்த்தியா
கிப், புகுந்தடியார்தொழவீற்றிருக்கும் பூங்கோயிலாகநான்
பெற்றிலேனே, எ-ம்.

நிகழ்காலத்திரங்கல்.

செப்பரியவுண்மைச் சிவஞானதேசிகரா
யிப்படியேவந்திங்கிருந்ததிசயமே.

அன்றியும்.

என்றுமருவுருவா யெங்குநிறைந்தவர்தா
மின்றெனக்குத்தேசிகரா யெய்ந்தததிசயமே.

அன்றியும்.

தேனடருமானந்தச் செங்கமலத்தாளருள
மானிடர்போல்மண்மிசையில் வந்தததிசயமே.

திருவருட்பயன்.

அறியாமையுண்ணின் றளித்ததே தொனுங்
குறியாகநீங்காதகோ.

அன்றியும்.

அருளாவகையா லருள்புரியவந்த
பொருளாரறிவார் புவி. எ-ம்.

அத்துவிதக்கலி வெண்பா.

தற்பரமாய்ச்சிற்கனமாய்த் தத்துவாதீதமாய்ச், சிற்பரமாய் ஞானச்செழுஞ்சுடரா யற்புதமா, யறிவுக்கறிவா யகண்டிதமாயெங்குஞ், செறியும்பரசிவமாய்ப் பிறியாதவேதச் சினகரத்துள் வீற்றிருந்ததெய்வமே பேதக்குருவாய்ப் புவிமீது நாதனெனவந்தான் றிருவடியைமத்தகத்திற்சாத்தினுன். எ-ம்.

அதிரகசியம்.

இவ்வண்ணம்புலம்பும்வேலை யீசனுமுளத்திரங்கி
யுய்வண்ணமறியநின்றவுவனையோர் வசனத்தாலே

பொய்வண்ணநீக்கிநம்போற்புனிதனுக் குவமென்றுன்னி
மெய்வண்ணமுடையார்போல மேதினிவந்தானன்றே. எ-ம்

வாதவூரர்புராணம்.

உத்தமரின்னவாறிங் குரைத்தனுமுவந்தாலாஞ்
சத்திநிபாதமெய்துந் தன்மையராதலாலே
யத்திருமன் றுளாடுமையரிங்கென்னையாள
வித்திருமேனிகொண்டா ரென்பதுமனத்திலெண்ணி. எ-ம்

தத்துவராயசுவாமிகள்கலிமடல்.

பங்கயர்கண் மாலாசரனு யயனு யறியாதா ரன்பால்வரு மாறறியாதார் மானிடமாய்வந்த திருமேனியின்றன்மைதேரா தார் நேராவருளேனடியென்றறியாதார். [எ-ம்.

வருவ் மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூஎ)

(அகை.) பசுபதியார் குருமூர்த்தங் கொள்ளுங்காலத்தில் மறைக்குஞ் சின்ன மிவையெனல்.

வேணியுறைநதிமதியு நுதல்விழியுங்களவிடமுமேனியெங்கும், பூணுமணியங்கதமுங் கரியுரியுமலமாதும் புயங்கனுன்கும், பாணியுறைமழுமானும் பதனகஞ்சேர் மாமணியிம்பலவுமற்றும், மாணமறைத்திவ்வுலகின்மானிடர்தம் பிறப்பறுக்கமனத்திலுன்னி.

(இ-ள்.) இவ்வுலகத்தின்கண்ணுள்ள மனிதர்களுடைய பிறவியையொழித்து (முத்தியைத்தரத்) திருவுளத்தில்நினைத்துப் (பரமசிவனுனவர்) சடையில் வாசம்பண்ணுகிற கங்கை

யையும் இளஞ்சந்திரனையும் நெற்றிக்கண்ணையுங் கண்டத்திற் பொருந்திய விஷத்தையுந் திருமேனி முழுதுந் தரித்திருக்கின்ற சிரோமணியையுடைய சர்ப்பங்களையும் யானைத்தோலையும் (வாமபாகத்திலிருக்கின்ற) இமயமலைபெற்ற உமாதேவியையும் சதுர்புஜத்தையுந் திருக்கைகளில் தரித்த மழுவையும் மானையும் புலிநகத்தையும் பெரிதாகிய எலும்பு மணியையும் இன்னுமிவைமுதலாகிய பலவற்றையும் பெருமைபொருந்த மறைத்து.—எ-று தம்-சாரியை.

[இ-ம்.] பார்வையைக் கொண்டு விலங்கை வசப்படுத்துவதுபோலத் தெய்வநாயகர் அஞ்ஞானவிருளின் வசப்பட்ட ஆத்மாக்களை அருள்வசப்படுத்தத தமதுசொரூபத்தை மறைப்பரென்பதாம்.

இதற்குப்பிரமாணம்.

திருவருட்பயன்.

பார்வையெனமாக்களை முன்பற்றிப்பிடித்தற்காம
போர்வையெனக்காணுப்புவி. எ-ம்.

இருபாவிருபது.

கண்ணுதலுங்கண்டக் கறையுங்கரந்தருளி மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்-வெண்ணைநல்லூர், மெய்கண்டானென்றொருகான் மேவுவரால்வேறின்மை கைகண்டாருள்ளத்திற் கண்'' எ-ம்.

போற்றிபஃறொடைவெண்பா.

நன்னெறியின்ஞானகலர் நாடுமலமொன்றினையு, மந்நிலையேயுண்ணின்றறுத்தருளிப்-பின்னன்பு, மேவாவிளம்புபிரளையா கலருக்குந்தேவாய்மலகன்மந் தீர்த்தருளிப் - பூவலையந்,தன்னின்று நீங்காச்சகலர்க்கவர்போல, முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை-யன்னவனுக், காதிகுணமாதலினாலாடுந்திருத்தொழிலுஞ், சோதிமணிமிடற்றுச்சுந்தரமும்-பாதியாம், பச்சையிடமும் பவளத்திருச்சடைமேல், வைத்தநதியுமதிக்கொழுந்து-மச்சமற, வாடுமரவுமழகார் திருநுதன்மே,னீடுருவன்னிநெடுங்கண்ணுங்-கேடிலையங், கூட்டுந்தமரகமுங் கோலவெறியகலும், பூட்டரவக்கச்சும் புலியதளும்-வீட்டின்ப, வெள்ளத்தழுத்திவிடுந்தாளினுமடியா, ருள்ளத்தினும் பிரியாவெகண்சிலம்புங்-கள்ளவினை, வென்றுபிறப்பறுக்கச்சாற்றியவீரக்கழது, மொன்றுமுருந்தோன்றுமனுள்ளடக்கி - யென்று, மிவறாதவின்பதெதைமையிருக்கவேண்டிப், பிறவாமுதல்வன்பிறந்து - நறவாருந், தாருலாவுமபுயத்துச்சம்பந்தனுதனென்று' பேரிலாநாதனொருபேர்புனைந்து - பாரோர்தம், உண்டியுற்க் 'கம்பயமின்பமுற்றொருழுகிக், கொண்டுமகிழ்ந்தருணம்போற்றி,

எ-ம்.

தாயுமானசுவாமிகள்.

காணரியவல்லமெல்லாந் தானேகட்டுக்கட்டாக விளையுமதைக்கட்டோடேதான், விணினற்கற்பூரமலை படுதீப்பட்ட விந்தையெனக் காணவோரு விவேகங்காட்ட, ஊனுறைக்கமின்

பதின்பம் பேரூராதி யெவ்விடத்து மெனைப்போல வுருவங்
காட்டிக், கோணறவோர்மான்காட்டி மானையீர்க்குங்கொள்
கையெனவருண்மௌன குருவாய்வாது. எ-ம்.
வரும்மற்றும் வுருவன வற்றுற்காண்க. (சுஅ)

(அகை.) பசுபதியார் குருமூர்த்தங் கொள்ளுங் காலத்
தில்தரிக்குஞ் சின்னமிவை யெனல்.

திருச்சடையுநுதலிலிடுபுண்டரமுங் கண்டமதிற்றிகழுமார்
பில், உருத்திரநன்மணியணியுஞ் சிவலிங்கதாரசமுமொளிரக்
கற்றேய், அருத்திகொளுந்துாசணிந்து வேண்டுகிற்கோவண
வுடையுமரையிற்சாத்திக், கரத்திலகுபுத்தகமு மழகுறுசின்
முத்திரையுங்காட்டியேதான்.

(இ-ள்.) அழகுள்ள சடையுந் திருநெற்றியில்தரிக்கின்ற
விபூதியுங் கண்டத்திலும் மாரபிலும் ப்ரகாசிக்கின்ற சுந்தரம்
பொருந்தியருத்திராட்சமணி யாபரணமுஞ் சிவலிங்கதாரண
மும்ப்ரகாசிக்கஉலகத்தார் விரும்பத்தக்க காவிதோய்த்த வஸ்
திரத்தை யுடுத்தி வெண்மைபொருந்திய வஸ்திரத்தினாலாகிய
கோவணவுடையையும் அரையில்தரித்துத் திருக்கையிற் ப்ர
காசிக்கின்ற புஸ்தகத்தையும் அழகுபொருந்திய சின்முத்தி
ரையையும் (விளங்கக்) காண்பித்து.—எ-று. எ-தான். அசை
கள்; (சுகூ)

(அ-கை.) பரமசிவங் திருக்கூட்டத்துடனே எழுந்தரு
ளுதல்.

தேண்டிஞெடுபலியொருகைபாத்திரமும் விளங்கவேசெய்யநாவில், எண்டிகழைங்தெழுத்திலகச் சரணத்திற்பாதுகையுமிலங்கவேதான், மன்டுமிருவினையொப்பு மலபரிபாகமும்வந்த மாணர்சூழ, அண்டர்பிரான்றிருவருளே யொருவடிவமாக வெழுந்தருளுவானல.

(இ-ள்.) (ஒருதிருக்கையிற்றூங்கிய) தண்டத்துடனே (மற்றொரு) திருக்கையிற்றூங்கியபலிப் பாத்திரமும் ப்ரகாசிக்கவும் அழகுபொருந்திய திருநாவில் (உலகோர் மதிக்கவிளங்கிய பஞ்சாக்ஷரந் துலங்கவுந் திருவடிகளில் மிதியடிவிளங்கவும் நெருங்கிய இருவினையொப்பு மலபரிபாகமு(முற்றமாணுக்கர்கள் சூழ்ந்துவரவுந் தேவநாயகரே ஒப்பற்ற அருளிறை வடிவமாக எழுந்தருளுவார் —எ-று. தான் சாரியை-ஏ-ஏ-ஆல்-அசைகள்.

[இ-உ-க-ம்.] சமஸ்தத்திற்குங் காரணகர்த்தாவாகிய அகண்டாகாரசிவமே இவ்வுலகத்தின்கண் சகளீகரித்து ஆத்மாக்களைப் பரிபாகப்படுத்தித் தமதுதிருவருளிற் கூட்டிச் சிற்சடலீலையைக் காட்டிச்சிதாகாசஸ்வரூபமாக விளக்குவித்தறபொருட்டுத் துவாதசமுத்திரையோடும அடியார்கள் சகிதராய் எழுந்தருளுவாரென்பதாம். (எὓ)

வேணியுறையென்ற செய்யுண்முதல் இச்செய்யுள் வரைக்குமகுளகம்.

(அ-கை,) ஞானகுருவின் தன்மையைக்கூறல்.

### வேறு.

தேசிகவுருவமாகவந்துலகிற்சீவர்கள்பக்குவந்தெரிந்தே, ஆசிலாதவருக் கொருமொழிமோனவுண்மையை யருளினுலுரைத்து, ஏசிலாஞான நிட்டையிலிருத்தியெய்தருமுத்தியையுதவல், மாசிலாமணியாவொளிர்தருகயிலைவள்ளனற்றேசிகன் கடனே.

(இ-ள்.) குருமூர்த்தமாக வெழுந்தருளிவந்து ஜகத்திலிருக்கின்ற ஆத்மாக்களுடைய பரிபாகத்தை அறிந்துபெருமைபொருந்த அவர்களுக்கு ஒப்பற்ற மஹாவாக்கியமாகிய மவுனநிலைக்குரிய சத்தியப்பொருளைக்கிருபா வீட்சண்யத்தால்அநுக்கிரகித்துக் குற்றமில்லாத ஞானநிஷ்டையிலிருக்கச்செய்து பெறுதற்கரிய மோக்ஷத்தைக் கொடுத்தல் களங்கரகிதமாகிய இரத்தினம்போலப் பிரகாசிக்கின்ற கயிலையங்கிரிவள்ளலாகியஞானதேசிகருக் குரியதருமமாம்.-ஏ-று.ஏ-ஏ-அசைகள்.

[இ-ள்.] மாணுக்கரது பக்குவத்துக்கேற்க அவர்களைச் சிவமாக்கிக் கொள்ளுதலே அருட்டேசிகருக்குரிய விதியென்பதாம்.

(அ-கை.) வருணசதுஷ்டயருக்கு உபதேசஞ்செய்யும் பருவகாலமிவையெனல்.

மறையவர்க்கிருபதாண்டினுமுலகாண் மன்னருக் கொருபதோடைந்து, நிறைதருவணிகரங்கொருபதாண்டினுஞ்சொன்னிகரறு சூத்திரர்க்கைந்திற், பொறைதருபருவமுடையவர்

க்கொன்றி லிரண்டொன்றிற்பாதியிற்போதம், அறைகுதலா குநல்லுபதேசமாரியன்றனதுளமகிழ்ந்தே.

(இ-ள்.) வேதியர்களுக்கு இருபதுவயதிலும் உலகத்தை யாளுகின்ற அரசர்களுக்குப் பதினைந்துவயதிலும் பெருமை நிறைந்த வைசியர்களுக்குப் பத்துவயதிலும்லொப்பில்லாத புகழையுடைய சூத்திரர்களுக்கு ஐந்துவயதிலும் (தீக்ஷாத்ரயங் களைச்செய்து அதற்குமேல் முறையே, அப்பருவத்தவர்களுக்கு ஒருவருஷத்திலும் இரண்டுவருஷத்திலும் ஆறுமாதத்திலும் பரமசாந்தம்நிறைந்த (பரிபாகம் வரக்கண்டு) ப்ரம்மோபதேசஞ் செய்வதற்குரியஞானாசிரியர் தமது திருவுள்ளமகிழ்ந்து ஆத்மஞானத்தை அநுக்கிரகிக்கத்தகும்.—ஏ-று ஏ- அசை.,

[இ-ம்-] ப்ரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் அடையும் ஞானபோதத்திற்குப் பருவகாலங்களையும பரிசோதிக்கு ங்காலங்களையும் அறிவித்ததாம்,

வருணத்திற்கேற்கச் சீடரைச்சோதித்தல்

என்பதற்குப்பிரமாணம்.

சைவசமயநெறி.

பண்ணிடுகதீக்ஷையினைப் பக்குவம்பார்த்தாநிரண்டு
ளெண்ணுமும் மூன்றுறின்மூன்றின்.

அன்றியும்.

சூத்திரராதியர்க்குச் சொன்னமுறையா
லாண்டுபார்த்தே யனுக்கிரகம்பண். எ-ம்

## சிவநெறிப்பிரகாசம்.

ஆதரவுஞ்சாந்திநற்பொறுமைதானு மசத்தியமில்லாவுரையு மாசாரந்தவமும், நிதானசெயன்மறந்துநன்றியறிநதிடலுஞ் சிவாகமத்தைக் கேட்டதனைத்தெளிதறலும், போதலறப்பொறிவழியினிற்றலாதிப் புகன்றுடைய நற்குணங்கள்பொருந்திமேலும், ஓதலுறுங்குணங்குற்றஞ்சோதித்தோர் வருடமுறுங்குணத்தினளவாகத் தீக்கைசெய்வருயர்ந்தோர். எ-ம்.

வரும் மற்றும் வருவனவற்றாற்காண்க (எஉ)

(அ-கை.) இத்தன்மைப்பட்ட மாணாக்கனுக்கு உபதேசிக்கத்தகுமெனல்.

உடற்குயிர்போலுங் கட்கிமைபோலு மூசியுநூலுமேபோலும், படப்பொறியரவைப்பிடியெனப்பிடிக்கப் பாயும்வெம்புலிதனைத்தழுவத், தொடற்கருந்தழலையெடுவெனவெடுக்கத் தம்பிமுன்னஞ்சுற்றிருக்க, விடற்கருஞ்சித்த மென்னவேயுதவும்விவேகியற்களித்திடலாமால்.

(இ-ள்.) (ஒருமையில்) உடலுக்குயிரைப்போலவும் (பாதுகாத்தலிற்) கண்ணுக்கு இமையைப்போலவும் (நடையில்) ஊசியும் நூலும்போலவும் (பொருந்திப்) படத்தையும்புள்ளியையுமுடைய சர்ப்பத்தைப்பிடியென்று சொன்ன மாத்திரத்திற்பிடிக்கவும்பாய்கின்ற கோரமான புலியைத் (தழுவென்று சொன்னமாத்திரத்தில்) தழுவவுந்தொடுதற்கரிய அக்கினியையெடுவென்று சொன்ன மாத்திரத்தில் எடுக்கவும் மத யானை

மூன் (நில்லென்றுசொன்னமாத்திரத்திற்) பயப்படாது நிற்க வும் பெற்று (இவனதுசித்தம்) திடசித்தமென்று சொல்லும் படியாக உதவிசெய்கின்ற விவேகமுடைய பக்குவனுக்கு ஆத்) மஞானத்தை ஆசிரியர் அநுக்கிரகிக்கத்தகும்.—எ-று, தன்- சாரியை.வ-வ-ஆல்-வசைகள்.

(ப-ம்.) சீவன் தன்னுடலைத் தானயபிமானித்து வருந் துன்பங்களை நீக்கி அதற்கு உபசாரஞ் செய்வதைப்போலும் ஞானசிரியருடைய திருமேனியைத் தன் தேகமாயபிமானித் து வுபசாரஞ்செய்யவேண்டுமென்பார்—உடற்குயிர்போ லென்றும், இமையானது கண்ணோ டொற்றுமையா யிருந்து அதனிடத்தில் தூசுமுதலியவைகள் அணுகுறாது பாதுகாத்தல் போலும் துஷ்டசெந்துக்களால் அவரது திருமேனி துன்ப முறாமல் சதாகாக்கவேண்டு மென்பார்—கட்கிமைபோலென் றும், ஊசிசென்றவிடந்தோறும்சரடு பின்சேறல்போலும் அவரது திருவுள்ளக்குறிப்பின்படிச்சென்று வழிப்படவேண்டு மென்பார்—ஊசியுநூலுமேபோலுமென்றுங் கூறினார், தேகாபிமானம்விட்டுவந்த மாணுக்கனுதலால் பாம்பாதி கண்மேற்செலுத்தினும் வீழ்வானென்பதாயிற்று. (எரு.

(அ-கை-) இதுவுமது.

தேனிரம்புமலரையளிதேடுவேபோலெங்குந் தேசிகனைப்பல நாளுந்தேடிக் கண்டளவில், ஞானகுருவிவன்பாகஞ் சோதிக்க வேண்டினடுக்கங்களுறவே யெந்நாளுஞ்செய்வித்தும், ஈனமா ந்தொழிலதனிதேவிமிகவிடுத்து மிரக்கமிலாதேயடித்து மிழிபு

ரையால்வைதும், மானமின்றிச்செயும்போதுங் குருபத்திவழூ
வாவாய்மையனுக் குயர்நிட்டை வழுத்திடவுந்தகுமால்

(இ-ள்.) மாணுக்கன் தேன் நிறைந்திருக்கின்ற புஷ்பத்தைவண்டுதேடுகின்றதைபபோலப் பலநாளும் எவவிடத்தும் தேடிஞாஞசிரியரைக்கண்டபொழுது அந்தஞாஞசிரியர் இம்மாணுக்கனுடைய பரிபாகங்களைச் சோதிக்கவிரும்பினல் பயப்படும்படியாக எந்நாளுந் தான்செய்வதுவுமனறிப் பிறரைக்கொணடுசெய்வித்தும் மிகவும் அற்பமாகிய தொழில்களைச் செய்ய உத்தரவுசெய்து அனுபவிக்தும் இரக்கமில்லாதவரைப்போலஅடித்தும்துச்சமான சொற்களால வைதும் மானமில்லாமற்செயய அந்தக்காலத்திலுங் குருபத்தி வழுவாமல் (நிலைகொள்ளத்தக்க) சத்தியவானுக்கே உயர்ந்த பரம்மநிஷ்டையைப் போதிக்கத் தகும்.—எ-று. வ-வ- ஆல்-அசைகள்.

(இ-உ-க-ம்.) ப்ரம்மநிஷ்டைக் கதிகாரியை அறிவித்ததாம்.

குருவின்திருவுளக் குறிப்பின்படி மானமின்றிப்பணிசெய்ய
வேண்டுமென்பதற்குப் பிரமாணம்.

சிவநெறிப்பிரகாசம்.

தேசிகருமானவர்கள்செய்தியுணர்ந்திடவே சிறியோரைப்
பெரியோர்செய்தொழிலதனிற்செறித்து, மேசிலராம்பெரி
யோரையீனமாநதொழிற்கேயிசைத்துமடித்தும்வைதுமிவ்வா
றுசெயவுங், கூசியிடாதிட்டபணிசெய்துகுருபத்தி குறைவில

ராய்நம்பினராய்த்துரோகமின்றி, மாசிலராய்மனவாக் காயத்
தாற் குருவின்வாக்கியபாலனஞ்செய்புமதி மானு மாயே. எ-ம்

### ஒழிவிலொடுக்கம்.

உடற்குயிர்போற்கட் கிமைபோலூசிநூலொத்து
விடுறபுலிதீபாமபிணைவ வீழ்வாக்காளு - சுடச்சுடினும்
வாழைககாகாவேறி மட்கலத்திற்காகாவா
றேணுழக்காக திது. எ-ம்

### அருட்பிரகாசம்.

குருபரனுக்கவ னெஞ்சகமபோலனுகூலநதனைய்க்
கரசரணாதியினேவல்செய்தே தினங்கட்கிமைபோ
லாரியமனைமுதல்யாவையுங் காத்துண்மையாயொருதற்
பரமிவனேயெனக்காண்பான சற்சீடன்பகர்ந்திடினே.

### அன்றியும்.

தேசிகன்பாற்பற்பலதீக்குணங்கள் செறியினும்நம்
பாசப்பிராந்திக் கிவைதோற்றியவிறைபாலிலையென்
றூசறுபத்தியினோர்ந் தெவ்விதத்துமவனருளைக்
தேசங்குலவவளர்ப்போன் சற்சீடன்றெறிந்திடினே. எ-ம்.

### வருங்காலத்திரங்கல்,

என்றுங்குருநாதரிட்டபணிசெய்துமிக
நின்றபடிநில்லாதநெஞ்சுவிடுநாளேதோ,

அன்றியும்,

குன்றாதஞானக்குருவாமோர்சொற்கேட்டுப்பொன்றாதவா
னப் போக்கிவிடுநாளேதோ. எ-ம்,

வீராகமம்.

அடுத்ததின்றன்மையான்மனவாகுமென்றறிந்துநல்லோர்
கடித்திடுஞ்சமயவாதகற்றவஞ் செய்ந்தியானம்
படிற்றுலகியற்கையாவும் பாகதிவிலக்காமென்றே
விடுத்தருட்குரவன்பாத மேவியேபணிசெய்வாரே. எ-ம்.

வரும் மற்றும் வருவன வற்றாற் காண்க. (எச)

## இந்நூலாசிரியரது மாணாக்கர் புகழ்ந்து கூறல்.

திருவளர்கோவல்வீரட்டநாதர் திருவடிக்கமலங்கள்வாழி
பெரியநாயகிபொற்கழலிணைவாழி பெரியமாகணபதிவாழி
முருகனற்பதங்கள்வாழி நந்தீசர்முளரிமென்பதங்களும்வாழி
பெரியசம்பந்தராதியர்நான்கு பெரியர்தம்மடிகளும்வாழி.

(இ-ள்.) செல்வம்விர்த்தியாகின்ற திருக்கோவலூரில் எழுந்தருளியிருக்கும் திருவீரட்டேஸ்வரருடைய திருவடித்தாமரைகளவாழி பெரியநாயகியாரது அழகிய திருவடிகள் வாழி பெரியானைக்கணபதியின் திருவடிகள்வாழி சரவணபவனது நல்லதிருவடிகள் வாழி நந்தீஸ்வரருடைய மிருதுவாகிய பாதபங்கயங்களும்வாழி சிறப்புற்ற திருஞானசம்பந்தசுவாமிகள் அப்பர்சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசசுவாமிகள் ஆகியபெரியோர்கள் நால்வர்களுடைய திருவடிகளும்வாழி. எ-று

வசவணர்பதங்கள்வாழிமாச்சென்னவசவணர்பதங்களும்
வாழி,திசையுளார்வலஞ்சூழ்குகைநமசிவாயதேசிகனடிகளும்
வாழி,நசையுறுமவர்பாற்குருநமசிவாயநற்பரனடிகளும்வாழி
அசைவுறுமனத்தையறிவினுளடக்குமடியர்தம்மடிகளும்வாழி·

(இ-ள். வசவேசர் திருவடிகள்வாழி பெருமைபொருந்திய சென்னவசவேசர் திருவடிகள்வாழி எட்டுத்திக்கினுமுள்ளோர்ப்ரதக்ஷணஞ்செய்து வணங்கத்தக்க குகைநமசிவாயகுருவின் திருவடிகள்வாழி அவரிடத்தில் அன்புபொருந்தியநன்மையையுடையகுருநமசிவாய தேசிகர்திருவடிகள்வாழிசஞ்சலப்படுமனத்தைஅறிவினுட்சேர்த்து அடக்குகின்ற அடியார்களுடைய திருவடிகளவாழி.—எ-று, (உ)

கோவல்வீரட்டரனுக்கிரகித்துக்கொடுத்திடுமாகமம்வாழி
பாவனைக்கரிதாம்பரகதிபடையப்பகருமோர்சொற்பொருள்
வாழி,நாவலந்தீவோரகத்திருளிரியநற்சிவாதீதனுய்வந்த
தேவனுமாறுமுகசிவஞானதேசிகனடிகளும்வாழி.

(இ-ள்.) திருக்கோவலூரிலெழுந்தருளி யிருக்குந்திருவீரட்டேஸ்வரர் அநுக்கிரகஞ் செய்தருளியஆகமநூல் வாழி மனோவாக்கினால் பாவனைபண்ணற் கரியதாகிய உயர்ந்த மோக்ஷத்தைஅடைய உபதேசஞ் செய்யப்படும் லுப்பற்றஅர்த்தத்தையுடையமஹா வாக்கியம்வாழி ஜம்புத்தீவிலிருக்கின்றவர்களுடையஉள்ளத்திலிருக்கின்ற அஞ்ஞானவிருள்கெட நல்ல சிவஸ்வரூபராகியும் மநுநீதப்பட்டவராகியுந் தோன்றியதே

வணங்கிய ஆறுமுகசிவஞானதேசிகருடைய அடிகளும்வாழி.
எ-று. (௩)

## இந்நூற்பெருமை.

பாவனுதீதநிட்டானுபூதிபரசிவனுமைதனக்கருளத்,தேவியு
மகிழ்ந்தவடமொழியதனைச்செஞ்சடைப்பிரான்றிருவருளால்
கோவல்வாழாறுமுகசிவஞானகுருபரன்றமிழினுலைத்தான்
மேவுநற்பயனையுணர்ந்துசாதித்தோர் மேன்மைவீடடைவதுநி
சமே.

(இ-ள்) மனோவாக்குகளாலும் பாவனைபண்ணற்கரிய சிவஞானநிஷ்டையின் அனுபூதியைப் பரமசிவனார் தேவியாருக்குஅநுக்கிரகிக்க (அதைக்கேட்டுத்) தேவியார் சந்தோஷிக்கப்பட்டதாய் விளங்குகின்ற வடமொழியிலுள்ள அப்பொருளைச் சிவந்தசடாபாரத்தைத்தாங்கியஅநுக்கிரகத்தினால் திருக்கோவலூரில் வாழ்கின்ற ஆறுமுக சுவாமிகளென்னுந்திருநாமத்தையுடைய மேலான சிவஞான தேசிகரானவர் (யாவருமெளிதிலுணரத்) தமிழ்ப்பாவினமாகச் செய்தருளினார் (அங்ஙனம் அவராற் செயயப்பட்ட இந்நூலை ஓதி) இதிலுள்ளமுத்திப்பிரயோசனத்தைத் தெரிந்துசாதனஞ்செய்தவர்கள்மேன்மையாகிய மோக்ஷத்தைப்பெற்றுக்கொள்ளுவார்களென்பது சத்தியமேயாம்—எ-று. (௪)

பாயிரம்-௰உ- நூல்- எ௰௪- வாழிகள்-௩-
நூற்பெருமை-க- ஆக பாடல்-கூ௰-
உதாரணப்பாடல்-௪௱௰-ஆகபாடல்-௫௱.

நிஷ்டானுபூதிமூலமும்,

சாரம்பொதியைநாயகர் சபைக்கு முதற்பட்டத்துஸ்வாமி
களால் அருளிச் செய்யப்பட்ட நூதன வுரையும்

முற்றுப்பெற்றன.

## நேரிசைவெண்பா.

போதமூறுமேதமறும் போதச்சிவயோக
சாதனையைச் செய்துதலைப்படுவர்-ஓதரிய
முத்திருமாவாரிம்முறையினுதாரணமும்
புத்துரையுங்கற்போர்பொலிந்து.

உ

திருச்சிற்றம்பலம்.

# கடவுளந்தாதி

## மூலபாடம்.

கட்டளைக்கலித்துறை.

அந்தாதிஞானக்கடவுளந்தாதியையான்றுதிக்க
வந்தாதிசற்குருவான்பொரு ளாய்மகிழ்ந்துள்ளமிர்தம்
விந்தாதிநாதமணிநா வசைத்துவிளங்கநன்னூல்
தந்தார்மெய்ஞ்ஞானக்கண பதியாகியசற்குருவே.

இதுவுமது.

பரிச்சுழிமீதிற்கயற்சுழி தத்திப்பன்னீரொழுகி
யரிச்சுழிமூலத்திலாடிய சிரந்தரங்கவுண்மை
தரிச்சதுமுத்திரையுட்சுழி வட்டத்தடவிகடக்
கரிச்சுழிவாசித்துதிக்கை விநாயகன்காப்பதுவே.

மண்டலமெண்டிசைதெண்டிரை வானமற்றுள்ளவெல்லாம்
குண்டலமென்னுஞ்சிறு மணியாகக்குழைக்கணிந்து
விண்டலமானதலையலங் காரத்தின்மீதிருந்த
புண்டரிகத்திருமரீதாபி ராமிசொற்பூரிக்கவே.

பூரித்தசெந்தமிழ்வேதாந்த ஞானப்பொருளமிவிற்
சாரித்தசந்தனம்வாசனை போலித்தமிழ்முரசம்
பாரித்தவானத்தின்மின்னகு மேகம்பனிசுரந்து
மாரித்ததூவல்சொரிவது வாழிந்தமந்திரமே. உ

மந்திரமானபொருளெழுத் தீரெட்டுமாளிகையாய்த்
தந்திரமானமனையாறு விட்டுத்தலமுமஞ்சா
யந்தரவானத்தனற்புகுங் காலமனுவசையாச
சுந்தரச்சோதிமடந்தான் முடிந்ததுஞ்சூத்திரமே. ௩

சூத்திரமாகுமிடத்திலீராறுஞ்சுழிபிறந்த
மாத்திரமோரவிசோமனு மாகியுள்வட்டத்துச்சி
நேத்திரமேபொடியண்டகடாகநிறைந்தவொளி
பாத்திரமேசிவசூத்திர மானதும்பாதத்திலே. ௪

பாதத்திலேமனம்பற்றுவர் முற்றுவர்பாசமற்றோர்
நீதத்திலேநிலைபேராமற் சாதிப்பர்சித்து வித்தை
வாதத்திலேபொருளொன் றாகக்காண்பர்மனதுநெறி
நீதத்திலேகுருசொல்லாமற் சொன்னநிறைபிதுவே. ௫

நிறையொருசோதனை தட்டான்றராசுநிறுத்துமத்தித்
துறைசுழிவட்டச்சர முனைதூக்கியசூட்சத்திலே
பிறையிருகால்கொம்பு நாதாந்தப்பிஞ்சுபெருத்தசெயல்
கறைமிடற்றெல்லைக்குமேல் வெளிசென்றவர்கண்டுகொள்ளே

கண்டுகொண்டானந்தக்கூத் தாட்டைநேசக்கருணையினாற்
கொண்டுநின்றான்பரவீதியிலேகுருபாதமென்றுங்

தொண்டுசெய்தந்தத்திருவாடு மூசலிற்றூங்கிக்கொண்டார்
பண்டுமுன்சோதிப்பழம்பொருடோன்றும்பணிந்தவர்க்கே.

பணிந்தவரென்றுஞ்சனன மெடாமற்பரகதிக்கீழ்த்
தணிந்தவர்சென்னிதரிக்கப் பெற்றோர்தம்மைக்கொல்லமனந்
துணிந்தவர்பந்தமு மற்றவர்நீதிச்சுருதிமதி
யணிந்தவர்தாமவர்காண் பிறவாநெறியாண்டவரே. ௮

ஆண்டவரானவ ரீரேழுலகத்திலாணிமுத்தா
யீண்டவர்பேரின்பநாத மண்றோவெவ்விடனுயிரும்
பூண்டவராதியிற்பூருவமா னவர்பொய்கடந்த
தாண்டவர்நீண்டவெளி யொளிதாண்டியசற்குருவே. ௯

சற்குருவென்னும்பொருளைந் தெழுத்துட்சடாட்சரமும்
சொற்குருவென்றுதிருவெட் டெழுத்துஞ்சுழியுமென்று
கற்குருசெம்புக்களிபுக்கும் பூசனைகாட்டுகின்ற
மற்குருமற்றக்குருவென்று சொல்லவும்வாயில்லையே. ௰

இல்லையுண்டென்றுதுதிக்கப் படாதவிடந்தனிலே
சொல்லவிளங்கமணிநாத வோசையிற்றூங்கியகா
லெல்லையிலேசுழிச்சங்கரமா னதுமேய்க்குமுன்னே
தில்லையிலேமனங்கண்ணூட்டம் பார்த்திருஞ்சித்தங்களே. ௰௧

சித்தங்களானதிருவந்தாங் கத்துச்செச்சையிலே [டா]
வைத்துங்கணேசத்தைமாட்டிக்கொள்வீர்வழியொன்றுகண்
லொத்துள்களவும்புலைகொலை காமங்களேதுமற்றுச்
செத்துங்கிடைமனமேமதி யூர்ச்சிறுவாசலிலே. ௰௨

வாசலுங்கோபுரமையமு மண்டபவாவிகளும்
பூசலுந்தாமரைப்பொய் கையுமெய்யும்புருவநடு
வூசலுமத்தளவோசையுந் தீபவொளியுங்கண்டால்
பேசலும்பேசுவரோயேக போகத்தின்பேரின்பமே. ௰௩

இன்பமிருந்தவிடஞ்சுடு காடிதெடுத்துரைக்கத்
அன்பம்வெகுதொலைசுற் றிலும்வன்னிதுருவமத்திக்
கம்பமதுநுனிகாணாத காட்சிகனகச்சபை
விம்பம்பெருவெளியற்றுற்றுப் பார்க்கவிளக்கொளியே. ௰௪

ஒளியாம்விளக்கொளிக்குள்ளே தெளிந்துகொண்டேருவ
வெளியாம்பராபரமா சோதியேவிந்துநாதமொடு
தெளிவாயிருந்துபிரகாசந் தோற்றுஞ்சிதம்பரத்தி
லழியாவரம்பெற்றிருக்கபபத முண்டடியவர்க்கே. ௰௫

அடியவர்க்கன்புகொடுகருந் தியாகரானுக்கிரகப்
படியவர்க்கெய்தும்பயனதுவே பற்றிப்பாயந்தவுண்மை
வடியவர்க்கேதிறங்கண்டவர் விண்டிலர்பேதமற்ற
முடியவர்க்கேகுடியப்பா னடக்கருமூச்சில்லையே. ௰௬

மூச்சில்லையேதுமொழிவது மில்லைமுனையொழியப்
பேச்சில்லையம்பலம் பேருருமில்லைபிறந்திறக்க
நீச்சில்லைப்பள்ளநிலையு மங்காச்சதுநின்றநிலை
யாச்சில்லையென்றுசற்றங்கே யிருக்கிறதானந்தமே. ௰௭

ஆனந்தமானவடிவு சங்காரத்திலுச்சரியந்
தானந்தமானசரணடைந்தோர்சற்றறிந்துமகில்

வானந்தமானவனுபோக மூன்றுமகிழ்ந்துரைப்ப
வானந்தவாறறியேன்யான் செய்தவாய்மதமே. ௰அ

மதமென்றெனச்சொல்லவோ வல்லவோமதியுள்ளவர்கட்
கிதமிதமாகவெடுத்துரைத்தா ரின்மைநன்மைபுன்மை
சதமல்லமக்களும்பெண்டிரும்வாழ்வுமுன்றாய்தமரு
கிதமல்லமெய்ப்பொருள் வேறேயிருக்குதுநேசத்திலே. ௰௯

நேசத்திலேபொருளுண்டென்றுபார்த்துவிலக்கப்பசு
பாசத்திலேவிதம்பட்டுழலாமற்பரதேசுவிசு
வாசத்திலேமனம்வைக் கத்தியானம்வளரும்பிர
காசத்திலேகருத்தல்லா லசைவறக்கண்டுகொள்ளே. உ௰

கொள்ளும்பொருள்தங்கப் பங்கங்களாகிக்குலையுமது
விள்ளும்புறம்பொசியாம லுள்ளேவெளிகண்டமட்டுந்
தள்ளுந்தனைமறந்தெல்லாத் தலங்களுந் தத்தளிக்கக்
கள்ளுங்குடிக்கவரும்வெறியானந்தக்கள்வெறியே. உக

வெறியேதுடங்கிநடனங்கள்கண்டுவிழிகுளிர்வ
தறியேனினிச்செல்வதேதுமுண்டோவள்ளியள்ளித்தரக்
கறியோவறுசுவையோமாடைக்காசுபொன்வெள்ளிசெம்போ
வுறியேயிருக்குதென்றாலுன்னிலேனுறிகால்திறந்தே. உஉ

திறந்தேயெடுக்கச்செகமாய்கையோகத்திரைமருட்டு
மறந்தேவிடுவஞ்சகமேமலையதிலேறவென்றாற்
பறந்தேவிழவருமோபஞ்சபூதச்சுரையுங்கண்டே
யிறந்தேயெடுக்கவல்லாற்கல்லவோவெய்தும்வான்சுவையே, ()

சுவையொளியோசையுநாதமுமன்றிச்சுழியினின்று
சுவையறப்பொன்னகர்மின்னகத்தேகமென்றாய்மையதா
யவையவங்கெட்டுப்பதைபதையாமலளக்குமந்தக்
சவைநடுக்கண்டுதெளிவோர்க்குஞானமுஞ்சாதகமே. உச

சாதகமென்னுஞ்சிவஞானபூரணந்தன்னிடத்திற்
போதகமானவருளிருக்கப்பொருள்வேறெனவே
பேதகமாகத்திரிந்துழன்றெங்கும்பித்தற்றும்பொய்யிற்
சோதகமொன்றுமறியாமன்மாய்கின்றதொல்பவரோ. உரு

தொல்பவஞ்சொல்லத்தொலையாதபாதகத்துன்பத்தி
வல்லபங்கண்டுதெளிவதுஞானவழியெறும்பு
செல்லவும்பாதைசிறுதாரையாகுந்தினந்தினமு
மெல்லவுந்தானடந்தன்றன்றுஞ்சாதிப்பர்மெய்யன்பரே. உ௬

அன்பருக்கன்புதரும்பரஞ்சோதியையாத்துமத்தோ
டென்புருகக்கலந்துள்ளேயுருகியிரவுபகல்
தம்புருவீணைசரமண்டலத்தொனிகாளந்தித்தி
மின்பெருகுங்கொலுச்சிங்காரங்கண்டிருமெய்மகிழ்ந்தே. உஎ

மகிழ்ந்தேயிருக்கத்திருவருட்பாலுண்டுவஞ்சமறப்
புகழ்ந்தேயிருக்கச்சிவஞானபேரின்பம்பூருவமாய்ச்
சுகந்தந்திருக்கவமுதுண்ணுமலுண்டுசுகிக்கவிந்தச்
சகந்தானருந்துபடும்பெருந்துன்பங்கள்சாற்றரிதே. உஅ

அரிதேயிவ்வஞ்சத்தவாழ்வைமறப்பதற்காசையென்றூர்
பெரிதேமனம்புத்தியாணவங்காமியப்பேய்பிடித்துத்

திரிதேபஞ்சாக்ஷரத் தீமூட்டிபூமித்திரணமதாய்க்
கரிதேபரிதளச்சேனையும்பட்டறக்கைவிட்டதே. உ௯

விட்டதுமால்கையுருவேமெய்ஞ்ஞானவிளக்கொளியிற்
பட்டதஞ்ஞானவிருளிறந்தோடிப்பகலிடமாய்த்
தொட்டதவ்வுச்சிச்சுழிவழியேறிச்சொருகியென்றாய்
வட்டமுமொத்ததப்பான்மதிதாளுருமாறிநின்றே. ௩௰

மாறிநின்றாயடிவான்பொருளாணிமணியசைந்து
மீறிநின்றானந்தநிர்த்தத்திலோசைவிளங்கமனந்
தேறிநின்றற்பரஞலாம்பதமென்னுந்தேனதுவே
மூறிநின்றின்பரசந்திருவாய்திறந்துண்பவர்க்கே, ௩௧

அவர்க்கேபரமென்றிருத்திக்கொண்டாசனமக்ஷரத்தா
லிவர்க்கெம்பிரானைத்தொரியாதிறுக்கியிருக்குமனு
பவர்க்கேயெழுத்தெட்டினட்டாக்ஷரத்தின்பஞ்சாட்சரமுந்
துவர்க்காதஞானமுந்தானேதுலங்குஞ்சுழுத்தியிலே. ௩௨

சுழுத்தியின்மேலொருசாக்கிரதமாயதிற்சொற்பனமா
யழுத்தியநாபிக்கமலத்துரியத்ததீத்ததிலே
வழுத்தியநாடிசுழிசுழித்துச்சிவழிதிறந்து
விழித்தவழியசையாதேயிருமெய்வெளியுண்ணுமே. ௩௩

உண்ணுங்கதிர்மதிகாலாங்கிமூட்டியுருகவெண்ணெ
யெண்ணிங்கசிந்திடச்சிற்றாறல்பாயவிடைநடுவே
கண்ணுங்கருத்துந்துயிலாதிருந்திருகால்திறந்து
விண்ணும்பரவெளியூடேகலந்துவிரவுவரே. ௩௪

விரவுவர்தேகமெடுத்துமெடாமல்வினையிதன்றே
பரவுவர்மேடதுபள்ளமில்லாமற்பல்காலுமுன
நிரவுவராசைநிராசையதாகநிற்தூளிசெய்தே
வரவரக்கண்டுகண்டாகாசமேறுவர்மாதவரே. நரு

மாதவர்சோதிவடிவாமுலகத்தின்மக்களுக்கு
மாதவன்போற்பிரகாசமுமாவரருளடங்குந்
தூதுவர்தேசிகர்தாசானுதாசர்க்குந்தொண்டுசெய்ய
வேதவராயிருப்பார்திருமேனிகண்பூத்திடவே. நசு

பூத்திடுஞ்சென்னியிலாகாசங்கோத்துடல்பூரணத்திற்
பார்த்திடுஞ்ஞானக்கண்பார்வையிடாப்பரிபூரணத்திற்
சேர்த்திடுங்காசிச்சிதம்பரத்தெல்லைத்தெருநடுவே
யேத்தியுந்தமபித்துக்கம்பித்துவாசியுமெய்ப்பறவே. நஎ

எய்ப்பற்றொருவனுக்குண்டேமுகப்பிலிறந்துமனக்
கற்பத்தடிமுடிக்கார்கம்பநாட்டிக்கவாடமதி
லொப்பற்றவாசலுக்கிப்பாலிருந்தங்கொருபடிகற்
செப்பைத்திறந்துகொண்டாற்றவமேசிவபாக்கியமே. நஅ

பாக்கியமென்கின்றபஞ்சாக்ஷரமுப்பாலுடனே
யாக்கிபசழ்குருவேதாந்தச்சீனியருள்பெருகித்
தாக்கியவக்கினிமுக்கோணவீட்டிற்சமைத்துவைத்துத்
தூக்கியிருக்குதுமந்திரவான்மதிருக்ஷத்திலே. நகூ

சூட்சத்திலேகருச்சொல்வாருமில்லினிச்சொல்வவென்றான்
மோட்சத்துக்காகிவரத்தக்கதன்றிமூலைக்குத்தண்ணீர்

பாச்சப்பலன்பெறவில்லாமற்போன துபாரினுண்டோ
காச்சப்ப[illegible]ல்வாவாக்காண்பதுவே. ௪௰

காண்பதுங்கேட்பதுங்கையிட்டுச்செய்வதுங்காசினியிற்
பூண்பதுந்தீவினையொப்பல்லவேபுலன்வேறறவே
யாண்பெண்ணிருவினையில்லாதொழிந்துபெண்ணாசையற்றால்
வீண்பருக்கேதுரைப்பேனுரையேனந்தமெய்ப்பொருளே. ()

மெய்ப்பொருளுச்சிக்குளுச்சிதமாகவிருக்குமப்பா
வைப்பினின்மாணிக்கப்பொக்கிஷமேமணிமாமகுடச்
செப்புக்குள்ளேற்றுந்திருவிளக்குள்ளொளிதீபமது
கைப்பொருடன்னினுமெய்ப்பொருளாமதுகண்டவர்க்கே ()

கண்டவருள்ளந்தெரியாதுவாசனைகாட்டுமல்லால்
விண்டவரேதும்விளம்புவரோவிண்ணிற்பார்வைவிதங்
கொண்டவர்கொள்கைகுறித்ததுநேசங்குறிதவிறுப்
பண்டவர்கண்டபடியாயிருப்பார்பதைப்பறவே. ௪௩

பதைபற்றேகத்துக்கேதொன்றுமற்றவர்பாசங்கெட்டு
விதப்பற்றைத்தூரறவெட்டத்தீமூட்டிவிரவியொளி
யதைப்பற்றிமூலத்தறைதுறைவிம்மியடங்கியொன்றாய்
மதப்பித்தைவிட்டெறிந்தெட்டாப்பதஞ்சென்றுவாழ்பவரே.

வாழ்பவர்செல்வமகிழ்ச்சியுள்ளானந்தமாமதிபூ
ராழ்குவராயிரத்தெட்டாமிதழிலமுதமுண்டு
மூழ்குவரானைமணித்திருநாதமுகப்பிற்சென்னி
தாழ்குவர்சோதிப்ரகாசத்திலேயொன்றிச்சார்ந்துகொண்டே

சார்ந்துகொண்டுச்சியைவிட்டாசையாச்சச்சிதானந்தத்தே
ரூர்ந்துகொண்டந்தத்தெருவுகுளங்கணோடுமதி
தேய்ந்துவளர்ந்துருவட்டமுமாகத்தெளிவதுபோ
லாய்ந்துகுலங்கெட்டெழுந்ததிற்றாங்கியவாசனமே. ௪௬

ஆசனமானதரியாசனத்திலகராமுதற்
பேசினராகியமாறிவொன்றாமதுபேச்சரியா
மோசனமானதுதேடாமற்றேடுமுத்தனுமது
தேசனந்தேசியுமொன்றாய்நிறைந்துசிவமதுவே. ௪௭

சிவமதுமுப்பத்துமுக்கோடிதேவர்செய்யுமொரு
தவமதுபொன்னகர்மின்னனைதாமரைத்தாள்பணியப்
பவமறுஞ்சூக்ஷத்திற்பத்தியம்பாயும்பவமிருந்த
நவமணிமண்டபமேடையுங்காணுவர்காட்டத்திலே. ௪௮

நாட்டத்திலேவிழிநாவசையாதசொன்னதமணி
யாட்டத்திலேகருத்தங்கேயுருகியருள்பொசியு
மோட்டத்திலேவருமூறலையுண்டுணர்வாய்ந்ததிருக்
கூட்டத்திலேயிருமேகாந்தபூரணகும்பத்திலே. ௪௯

கும்பத்திலேதிருநாதமுண்டாக்கிக்குவிந்தமனக்
கம்பத்திலேதுளையஞ்சுருவாணிக்கடைந்தெடுத்த
ரம்பத்திலேமுனைகொண்டேதிருக்கரநாட்டிவைத்த
தம்பத்திலேசுழிவட்டமிட்டாடியசக்கிரமே. ௫௰

சக்கரமெட்டுஞ்சுழியிரண்டுமாகிச்சதாசிவனு
ரக்கரமெட்டதிலாடிக்கொண்டாலதற்க்ப்பூரத்தே

நிட்களமானவங்கிராமயச்சோதிநிறைந்தநம்மிற்
சிக்கத்துதிக்குத்தெரியாதெவர்க்குசிலம்போலியே. ருக

சிலம்பொலிப்பப்புறமிப்பாற்சிலம்பொலிதேவர்சபை
யலம்பொலியோசையவெகுநாதமதற்குமப்பால்
வலம்புரிசுத்தியவாசனுமுச்சிவழிதெரிநதாற்
புலம்பொலியாடலும்பாடலுமாகியபூரணமே. ருஉ

பூரணம்பூத்தகருப்புருவத்திடைபொங்கிப்பொங்குங்
காரணம்பார்க்கவுங்காரணமேகண்மணியினுள்ளே
நீரணங்கேறிமலைமேல்விளக்குடனெய்யுமிட்டுத்
தோரணங்கட்டியகாலிட்டுத்தூண்டுஞ்சுழிமுனையே. ருங

சுழிமுனைவட்டச்சுழிமுனையுச்சித்துவாரத்திலே
வழிபயமென்றுமலைப்பார்களோமடைக்கொக்கதுபோற்
றெளிவுறுபார்வையசையாதுசிந்தனைதூக்கிநின்று
விழியிமையாதொளிபார்த்தூடுருவவெளிப்படுமே. ருச

வெளிப்படுமுட்சுழிநச்சரவுச்சிவிடப்பிறக்க
வழிப்படுதத்துவமெல்லாமிறக்குமறந்துருக்கெட்
டொழிப்படுஞ்செந்தீச்சுடர்பூத்துக்காட்டியிங்குள்ளழைத்த
சுழிப்படுஞ்சக்கரத்தாணிவலமிடஞ்சுற்றுகவே. ருரு

சுற்றியுராட்டினச்சுற்றதுபோலச்சுழித்திநடு
மத்தியினின்றுயர்கான்மாறிக்கொண்டுமகுடரத்நப்
பத்தியிற்சென்றுபகலிறவற்றப்பதிபுகுந்து
சத்தியிற்சித்துவிளையாடுங்கூத்துத்தனித்தனியே. ருசு

தனியேநடனம்புரிகின்றகூத்துச்சகலகலைத்
தொனியேபிறக்கப்பிரசண்டமாகச்சுயம்புலிங்கக்
கனியேபழுத்துக்கனிந்தமுதூரல்கசிந்துவரும்
பனியேபருப்பதமேராகந்தோன்றும்பரையிடத்தே ௫௭

பரையிடத்தேயுருத்தோன்றியொடுக்கும்படியறிந்தோர்
புரையறக்கீறிப்புண்ணூற்றுவரோபுத்திபத்தியிலே
திரையறநாசத்திசைதிசையாறித்திருக்கறுக்க
வரைதிருமாமலைக்குறப்பெண்கொடிவாய்த்திடுமே. ௫௮

வாய்த்ததுசந்திரவட்டத்திலேதிட்டிவாசலது
சாய்த்ததுமங்கைதன்கொங்கையின்கொங்கைக்கண்ணீர்தது
தோய்த்ததுதீர்த்தத்துறையிலந்நீர்த்துளிதுள்ளிவிழக் [ம்பித்
தாய்த்ததுமலநமவென்றுபஞ்சாக்ஷரக்காயதுவே. ௫௯

காயதுகாய்த்துப் பிரபஞ்சக்கோப்பிற்கலந்துகொத்தாய்
மாயுதுபாருங்கள்வையகத்தேமண்ணுவிண்முதலாய்
பேயதுபூதப்பெரும்பேய்பிடித்திடப்பிஞ்சுதிர்ந்து
போயதுசாகுதுகாண்போகபாக்கியப்புண்சுவையே. ௬௰

புண்சுவைக்கேமனம்புண்ணுயுடைந்துபொருமிவிம்மிக
கண்செவியாற்றெறிகன்மங்களேற்றுக்கருத்துங்கெட்டுப்
பெண்சுவையென்னும்பெரும்பாசமாய்க்கைப்பிடித்தவர்க்கு
விண்சுவைவகைப்படுமோபஞ்சபாதகவீண்மருக்கே. ௬௧

வீண்மருக்கெத்தனைசொன்னாலும் பொய்யாதுமெய்யென்றெண்ணார்
மாண்மருக்கும்பொருளாவதுண்டோமதுவுண்டுவெறி

காண்பரைக்கும்பிட்டுக்கல்லையுஞ்செம்பையுங்கைதொழுது
பூண்பவர்பாதகபூதலத்தொல்லேபிடித்தவரே. ௬௨

பிடித்தவர்சேத்துமத்திப்போதுமுன்றபிடித்தவெறி
பிடித்துசேற்றினிணுட்டியகம்பம்பிடித்துமுன்று
குடித்தவர்சங்கிலிக்கூட்டுக்குணமூந்தப்பி
மடித்தவர்புத்தியும்வாணுளுங்கூற்றுக்குவாய்த்தனவே ௬௩

வாய்த்தொருகூற்றுவன்வாணுளைக்கொண்டுயிர்வாங்கவந்தா
லாய்த்தொருவுார்த்தைசொன்ஞலும்விடேனினிகொட்டிற்செ
மூத்தையைச்சாம்பலேயொவ்வாதகாயத்தையொப்புவிக்க[ல்லு
சோற்றையிட்டேன்வளர்ப்பேன்றறப்பேன்மலப்பாண்டத்தையே

பாண்டத்தையேசுமப்பேன்பஞ்சபூதப்பனேமுறிந்த
காண்டத்தைத்தியுண்ணும்கட்டியைச்சுட்டகரிவிறகை [து
மாண்டற்றுபோம்பொய்யைமாயமின்கூட்டைவளர்த்தெடுத்
மூண்டற்றுக்கைவிட்டசூத்திரநூலின்முறுக்கினனே. ௬௫

முறுக்கதுசுற்றிவந்தேறுறும்போதுமுடிசுமுன்று
கிறுக்கிறெனத்தனேயேகெட்டுச்சாயுங்கிலேசமதை
வெறுக்கமருந்திலேயோதிருவண்ணுமலேவிளக்கைத்
திறக்கத்திருவிளக்காலேதெரியுந்திருவுளமே. ௬௬

திருவுளமுண்டென்றிருக்கத்திருவுளஞ்செய்வதல்லாற்
றிருவுளஞ்செய்வதுவேறுமுண்டோதிரிலோகமெல்லாம்
வெருவுளமானகுணங்கெட்டறிவுவிளங்கச்சித்தி
தருகவதியாப்பொருளாகவந்திடுந்தற்பரமே. ௬௭

தற்பரமானசரணாரவிந்தச்சபையறியக்
கற்பதுமுன்றுரைசெய்வதுமில்லைகேட்டறியா
வுற்பனந்தன்னைத்தெளியத்தெளிவினுருகியுருச்
சொற்பனவிற்பனமாய்த்தோன்றுமேசுடர்க்காற்கொழுந்தே

கொழுந்துதிரண்டுண்டண்டத்தடிமுறியக்கொரம்புசுற்றி
வளர்ந்ததந்துபஞ்சவடிவாய்த்தழைந்தமதியறைமே
லெழுந்தப்ரகாசவொளிதன்னிலிநனீடக்கிக்
கொழுந்துவகிர்ந்திருள்தீபத்துலொன்றியகூறறியே. ௬௯

கூறறியாத்தற்பரமானஞானமுங்கூறறிந்து
தேறறியாப்பரத்தேறுபரோதிநக்கூற்றினது
வாறறியாதற்பர்சாம்பலைப்பூசிமணிகளெண்ணிப்
பேறறியாமலிருந்துங்கணமுடியபித்தர்களே. ௭௰

பித்தர்களானபிரபஞ்சமாய்கையின்பேய்பிடித்த
பித்தர்களானவர்பித்தர்களேபிரபஞ்சவாசமில்லாச்
சுத்தர்களானபரிசுத்தரானவர்சோதிபதி
சித்தர்கள்பித்தரென்றேசெப்பலாம்பரதேசிகட்கே. ௭௧

தேசிகரென்னுங்குருலிங்கமூர்த்தியென்சிந்தையின்மேல்
வாசியிலேறியிடம்வலஞ்சுற்றியுள்வட்டத்திலே
பேசியதாரறிவாரறிந்தோர்தம்புரயபொசியா
ராசியுமாமல்லவோநாமதேகமில்லாதத்திலே. ௭௨

இல்லாதபாழதிலேயொருநாமமெடுத்துரைக்கச்
சொல்லாதபோதொருசொல்வருமோதுதியாதரிய

வல்லாரொருவருண்டானாலவர்களிம்மாநிலத்திற்
செல்லாதிருப்பார்கள்பார்தேகசூட்சுமதேகத்திலே. எங

தேகத்திலேபிரகாசத்தையேற்றித்தெளியசிவ
யோகத்திலேமனமேலானமாகனவுற்பனஞ்செய்
தாகத்திலேவருமூறனாயுண்டுசகலகலை
ராகத்திலேகருத்தொன்றாகநிற்கின்றநல்லவரே. எச

நல்லவர்மேலவர்நாலாம்பதம்பெற்றநாயனவர்
சொல்லவரோகைமணித்திருநாதத்தொனியதுகா
ணல்லவர்க்கும்மதுகிட்டாதுதேகமெடுத்துமெடா
தல்லவர்க்கிந்தவழிசற்றறிவதகப்பொருளே. எரு

அகப்பொருளொன்றுமுடியாயிருக்குதவிழ்த்தெடுக்க
செகப்பெருமாயையிருளதுமூட்டுந்திறைதிறக்க
மிகச்சிறுதுன்[illegible]வினைத்திருக்காணவிலங்கைவெட்டித்
தகத்தெடுத்தாற்பொருள்கைமேலிருக்கிறதுசத்தியமே. எசா

சத்தியஞ்சத்தியமெய்யிதுவேறில்லைதற்பரத்தே
ரித்தியமுண்டுபசியிளைப்பாறநிழலுமுண்டு
சுற்றியமும்மலஞ்சுட்டதுவட்டச்கழியுமுண்டு
மத்தியிலந்தச்சிறுதாரையூடுவழிநடப்பே. எஎ

நடப்பதுமார்க்கமறிந்தறியாயனடப்பதிலே
கடப்பதுவேறுகவர்விலக்கில்லைக[illegible]ர்துளையி
லுடப்படநெஞ்சுறுதீரக்கமறுபுறமுன்னிநட
தடப்படவாசலதிறக்குங்கபாடந்திருக்கறுமே. எஅ

திருக்கறுகின்றதிரிபுரத்தாணிகயன்றேகவினை
கருக்கறுக்கக்கருக்கெட்டதுவேகமலாலயத்தின்
குருத்திருக்கக்கருத்தெங்கேயருகக்கொழுந்துவிட்டுப்
பெருக்கப்பெருக்கவன்றேவட்டமாமதிபேரின்பமே. ௭௯

பேரின்பஞ்சிற்றின்பமிரண்டுமொன்றாகப்பிடித்தவர்க்கு
மோரின்பமானதிரண்டின்பமோவின்பமொன்றதுகேள்
றாரின்பம்வேறின்பங்காய்கனியூண்வகைச்சொல்லின்பமு
மாரின்பமொன்றுரைப்பேனப்பனேயொப்பிலாதவனே, ௮௰

ஆதவனேயொப்பிலாருமில்லாதவதீதபர
மாதவனே குருதேசிகனேவடிவொன்றுமில்லா
நீதவனேமுற்றுமீரேழுலோகநிறைந்ததிரு
நாதவனேயினிநானிலைநீயில்லைரண்டுங்கெட்டே, ௮௧

கெட்டதிச்சாம்பலுக்கற்றதுபாசங்கெடாதுகொள்ளி
சுட்டதுகண்டப்பொருநதும்புகையெழச்சூக்குமத்தாற்
றொட்டள்ளுங்சாம்பலையிட்டெங்கும்பூசவுநதூயவெள்ளை
பட்டதுசெவ்வைகண்டீர்பார்க்கவேறில்லைபால்வடிவே. ௮௨

பால்வடிவாகியபாதத்தைப்பற்றிப்பதைப்பறவே
நூல்வழியேணிப்படியேறிப்போய்வரநோக்கிப்பின்னே
காலதுகாலடிபோராமற்பார்த்துக்கடந்துமுப்பாழ்
மேல்வெளிபார்த்திருப்பீரந்தமின்னொளியே. ௮௩

மின்னொளியென்றொருமின்மினியானதுமேதினியிர்
றன்னொளிகண்ணுண்மறக்கத்திறக்கத்தவம்பெற்றதே

வென்னொளிதன்னுக்குட்காணாமலிப்படியேனிருந்தே
னுன்னொளியாகிபடாதமென்னுள்ளத்தினுச்சியிலே ௮௪

உச்சியிருபாதத்தைமேற்றியங்கோர்படியா
யச்சியிலேகுருநாதாந்தரத்நச்சிரோமணியா
கச்சியிலேபதிதானுபுருந்துகலந்திமிர்த
வச்சியிலேவருவாரறிந்தேனினியானில்லையே ௮௫

யானில்லைவேறினியைம்பத்தோரக்ஷரத்தாணியச்சுத்
தானில்லைலோகசராசரமில்லைசகலமெல்லாம்
வானில்லையண்டமடுக்கில்லைவாரிதிமற்றுமொரு
தேனில்லையூனிலலைபாரீர்பராபரச்சித்திரமே. ௮௬

சித்திரம்போலுருத்தானசையாத்திசைக்கம்பமது
பத்திரமுத்திரத்தூணதுபார்பஞ்சமிர்தமுள்ள
சத்திரவீடதுபெற்றவரிப்படித்தன்னறிவான்
மித்திரமில்லைதெரியாதடிமைசெய்விண்ணப்பமே. ௮௭

விண்ணப்பமெய்ப்பதஞ்சீர்பாதம்விண்ணப்பம்வித்வசன
மெண்ணப்பரப்பர்சொல்லேகாக்ஷரத்திலிருந்தெடுத்துக்
கண்ணப்பரப்பர்சொன்மாணிக்கர்சுந்தரர்காக்ஷிபெற்ற
சண்ணப்பவெண்மையினீருகத்தாக்கியசுத்தமிதே. ௮௮

சுத்தமிதென்றுமுருக்கத்திருந்தவதுய்யவெண்மை
யத்தமெய்ஞ்ஞானிகள்சித்தமதாகுமப்பாலுக்கப்பா
னிந்தமதாகியபூரியாவியல்பினுநிட்களத்தே
சத்தமதாகியநாதாந்தவிந்துவின்சன்னமிதே. ௮௯

சன்னமுமில்லைபெண்டாய்தங்கையில்லைதனித்திருந்தால்
வின்னமுமில்லைவெளியிற்பயமில்லைவிட்டகுறை
யின்னமுமில்லையுளத்துநிற்பார்க்கிறப்புமறும்
வன்னமுமில்லையப்பாற்சொல்லப்பேச்சிலலைவாய்திறந்தே. ௯௰

வாய்திறந்தேனென்றுசொல்லுவநோமனச்சாக்ஷிதனை
நாய்திறந்தாலதுமூடறியாதுநஞ்சுடர்போ
லாயிரந்துள்ளமொடுங்கியடங்கியசைந்ததுவாய்
நீயிறந்தாலறிவாய்நெஞ்சமேயேதுநீசில்லையே. ௯௧

நீச்சில்லையப்புரம்போய்பரவிலலைநிலைப்பதிலே
பேச்சில்லையந்தரநதில்லைவநத்துறைபேசப்பெரு
மூச்சில்லைத்தாரையிலொத்துடன்தித்திமுழங்கச்சங்கு
கீச்சிலலைநம்மென்றசத்தமுங்கேள்வியிராகமுமே. ௯௨

இராகம்பதினெட்டுமொன்றும்நடனம்புரியச்சத்த
லோகமீரேழுமொருநொடிச்சற்றுதுணுக்கமது
லேகமதுவித்ததொய்தமத்தொய்தவிகசிதமா
யேகமதாயணுரூபாதிரூபமெடுக்கின்றதே. ௯௩

எடுத்ததுறைமுறையாராய்ந்துமுன்னங்கிருந்தபடித்
தொடுத்துவிடையறச்சோதித்தறையச்சுற்றறுத்துக்
கெடுத்துமனம்புத்தியாங்காரபோக்கிக்கிழங்கெடுத்தே
யடுத்துப்பதைப்பறக்கண்டுகொண்டாலதுனைகவருமே. ௯௪

கைவருமானந்தவெள்ளம்பெருகிக்கருணையின்பான்
மெய்வறும்பொய்யறும்வேதாந்தத்துண்மைவிளங்கவரு

மைவரும்பட்டுத்தெருவெளியாயிற்றறுத்தடைத்த
பைவுறுங்கூறுவிளக்கும்பரிபதபாகமிதே. ௯௫

பாகம்பதிபசுபாசமுமூன்றும்பகுத்தறியத்
தேகமேபாடாசைபசுபாசமாமதுதேர்ந்தசிவ
யோகமெய்ஞ்ஞானம்பதியென்றுணர்ந்தங்கொடுக்கவல்லார்க்
கேகமதாகவருங்குருபாதமிருபதமே. ௯௬

இருமிருங்கண்டத்தைக் கண்டுகொண்டேறுமிருக்கையிலே
வருவதும்போவதறிந்துகொள்வீர்வழிகண்டுகொண்டா
லருவுருவில்லையவ்வண்டமடுக்கில்லையாண்பெணில்லை
துருவகும்பெருவழிகாண்டுணிந்தேறச்சுழல்கின்றையே. ௯௭

சுழல்கின்றவாயுவைப்பூரித்துவிம்மித்துருத்திபின்வாய்க்
கழல்கின்றவொன்பதுவாசலும்பூட்டிக்கவையடுப்புத்
தழலதைமூட்டியோருசுடரேற்றச்சமாதிகிட்டைக்
குழல்வழிமுத்திரையூடேறிக்குறுகக்குறிதைக்குமே. ௯௮

தைக்குங்குறியதைவிட்டுவிட்டாய்தன்னொளியின்மனம்
வைக்கும்பிடித்துவராதிருப்பீர்வட்டமானகுறி
கைக்குமெய்யானதுங்காட்டும்பலன்பெரும்கவ்வையில்லை
மெய்க்குமெய்யானதுபொய்க்குப்பொய்யாமன்றிவேறில்லை.

வேறில்லையெங்கும்விடிவதுபார்க்கவும்வெட்டவெளி
தூறில்லையேதுந்துதிப்பதற்கொன்றில்லைசுட்டொழியுங்
கூறில்லைசாம்பற்குருவுக்குநீறுகுறித்துவைத்தும்
பேறில்லையந்தத்திற்பேச்சுவேறாகிப்பிறந்திடுமே.

பிறந்திடும்பேச்சுத்திருந்தப்புரமென்றுபேசுவபின்
மறந்திடுந்துன்பத்தைவிட்டதுபோகமதிபெருகிச்
சிறந்திடுமின்பந்திருக்குருபாதந்தெரிசனையா
மிறந்திடுமாய்கையறிந்திடுநேசத்திலென்றைக்குமே. ௱௧

என்றைக்குமிப்படியொன்றாகக்கண்மேகமர
மன்றைக்குமிப்படிதானாய்முடியுமமைத்தபடி
யொன்றைக்கொண்டரையுபசரித்தூட்டியுறக்கிவைக்கு
மின்றைக்குந்தானவனாளைக்குந்தானவனெப்படியே. ௱௨

எப்படியென்றுமலைக்கப்பொறிகளிசைப்பசையிற்
கைப்பிடியாய்ப்புலன்கட்டுமென்றேகடையாணிதச்சன்
சொற்படிசூட்சுமக்கயிறதைத்தூண்டச்சுழித்திரையிற்
செப்படிவித்தையுந்தப்பரைப்பேச்சுந்தெரிகின்றதே. ௱௩

தெரிகின்றமாய்கைமலைக்கின்றபாரைத்திரையினுள்ளே
திரிகின்றதற்குக்குதிக்குங்குதித்துமிதாதையென்று
பரிகின்றசித்தரவித்தாரமார்பலனுள்ளறிவில்
விரிகின்றசூக்ஷத்தைவித்தாரமென்றுவிளம்பினனே. ௱௪

விளம்பினனைந்தெழுத்தெட்டெழுத்தொன்றைவிதையதுவா
வளம்பெறச்சோறுதெளியவிரைத்துவளர்முளைதா
னிளம்பயிராகிவிளைந்தகதிராயிருந்துகொய்து
களம்பொலிதூற்றிப்படிமரக்கால்தொகைக்கண்டதுவே. ௱௫

கண்டதொகையதுசொல்லாமற்கட்டிக்களஞ்சியஞ்சேர்
நின்றதல்லாற்பிறர்க்கீவதுமில்லைநிறைந்தசெம்ம

லின்றதுமிற்கவொன்றில்லாமற்சற்றுமிடையறவே
ஞண்டதுசோதிப்பழையமுதலென்றும்பாடினனே ௱சு

பாடினஞானக்கடவுளந்தாதிபடிக்கவென்றே
தேடினசற்குருவானதன்றேசெகப்பேய்பிடித்தே
யாடினமூடர்க்குக்கிட்டாதஞானமதீதமதிற்
கூடினபுண்ணியவான்களையேப்ரம்மங்கூப்பிடுமே. ௱எ

கூப்பிடுமாதிக்கடவுளந்தாதிகுருமொழியாற்
காப்பிடும்போதுகணபதியோர்பத்துகாப்பெனவே
மேற்பொருண்ஞானக்கனிபறித்துண்ணவிரும்பினவோர்
சாப்பிடும்வேதருசியாக்கிவைக்கின்றதத்துவமே. ௱அ

தத்துவமென்னுஞ்சபையலங்காரத்தலைமுடிமேன்
முத்துபவளமுழுநீலராகமுளைத்தபச்சை
கொத்துமரகதமாணிக்கம்வச்சிரங்கோகனகம்
பத்துமணிக்குமொருமணிநூலெனப்பாடினனே. ௱கூ

பாடினதுட்பொருளாகமங்தொட்டுப்பரத்தையுற்றுச்
சூடினதென்பதுமற்புதமேசுத்தவெள்ளையதாய்
நாடினகூத்துக்கிடமாகக்கீழ்நடனசபை
தேடினமன்னுயிர்தன்னுயிராகித்தெளிவதற்கே. ௱ய

தெளிவதற்கும்பரந்தானுகமுன்னிற்கச்சேர்ந்தவர்க்குங்
மழிவதற்குகதிருக்கண்கண்டகாட்சிகனகசபை
கழுவதற்குத்திருக்கண்டகாட்சிகனகசபை
மொழிவதற்குச்செவிகேட்டிருசத்யமுழக்கத்தையே. ௱க

முழக்கத்தைக்கேட்டந்தமுத்தியைச்சேரான்மோக்ஷத்திலே
பழக்கத்திற்கிந்தக்கடவுளந்தாதியைப்பார்த்துமன
விளக்கத்தையார்ந்துதெளிவோர்க்குஞானம்வெளிப்படுமென்
றளக்கத்துணிந்தகடவுளர்பாதத்தருந்தவமே. ௱௰௨

அருந்தவமானபரபாதத்தின்பந்திலத்துவிதம்
பெருந்தவமானகடவுளந்தாதிபிறந்தபலன்
வருந்தவமானசெமபொன்னழகுண்மைமருமகனுக்குத்
தருந்தவமானகடவுண்முன்னின்றுதந்ததுவே. ௱௰௩

தந்தஞானக்கடவுளந்தாதியைச்சாற்றுதற்கு
வந்ததுவீரையழகுமகிபன்வரத்திலொளி
மைந்தனெனவந்தெதம்பிகைபாதத்தைவாழ்த்திநெஞ்சிற்
செந்தமிழ்கூறியவாக்குத்திருவுளஞ்செப்பியதே. ௱௰௪

விருத்தம்.

நற்றவமுடையாள்வையைநதிவளரழகுபோதம்
பெற்றசீர்வரத்தில்வந்தபிரபலன்கூறிவாக்கின்
முற்றுவப்பெரியஞானமொழிந்ததுகடாக்ஷமாகக்
கற்றவர்பெற்றபாதங்கடவுளந்தாதிதானே. ௱௰௫

கடவுளந்தாதி

முற்றிற்று.

| பாட்டு | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அஞ்செழுத்தின்விதி | 207 |
| அடக்கிக்கருத்திணலே | 122 |
| அடிபணிவே | 39 |
| அத்தனார் | 49 |
| அத்தனுமொழியா | 232 |
| அரியநாயகி | 36 |
| அரியானை | 36 |
| அருந்தபோன | 148 |
| அலையுமனத்தை | 115 |
| அறைவேன்பஞ்ச | 201 |
| அன்னமய | 42 |
| **ஆ** | |
| ஆதனத்திருந்தேசா தனைசெயும | 189 |
| ஆதனத்திருந்தேசா தனைபுரிந்தா | 134 |
| **இ** | |
| இத்திறமானயோக | 152 |
| இந்தநன்னிட்டை | 240 |
| இந்தநன்னிலை | 104 |
| இந்தமெய்ச்செப | 159 |
| இந்தவஞ்செழுத் | 211 |
| இங்கிலைத்திருபபணி | 230 |
| இந்நிலைமுத்தி | 220 |
| **இ** | |
| இங்கிலையாகிய | 190 |
| இங்கிலையாமிறை | 215 |
| இப்படிநிஷ்டாள்பூசனை | 235 |
| இப்படிநிட்டைதன் னிலே | 236 |
| இப்படியாயவு | 217 |
| இப்படியாயநிட்டை | 232 |
| இயம்புநன்னிலையி | 159 |
| இயபுமாதனங்கட | 107 |
| இருந்தான்சமாதி | 145 |
| இலங்கியமோன | 161 |
| **உ** | |
| உடற்குயிர்போலு | 252 |
| உண்மைமநிட்டரு | 223 |
| உத்தரதிசைபார்த் | 106 |
| உத்தரமுகமா | 144 |
| உலையாப்பொறி | 137 |
| உற்றமெய்ந்நிட் | 221 |
| உன்னருஞான | 237 |
| **ஒ** | |
| ஒத்தவநாதன் | 155 |
| ஒப்பிலாத | 226 |
| ஒப்பிலாதயருண்மை | 229 |
| ஒருமெழியாலே | 54 |

| பாட்டு | பக்கம். |
|---|---|
| ஓ | |
| ஓதுசாதனே | 228 |
| க | |
| கடல்சுவற | 37 |
| கட்டறத்துறந்தே | 80 |
| கோ | |
| கோவல்வீரட் | 257 |
| ச | |
| சரிதையின்றொழி | 75 |
| சா | |
| சாதனைக்குண் | 226 |
| சாற்றுநிட்டையைச் | 227 |
| சி | |
| சிவசமயபபயிர் | 40 |
| சினததினிடத்து | 214 |
| சீ | |
| சீாபூத்தசெஞ்சடை | 35 |
| சீலமிகுங்குகை | 43 |
| செ | |
| செப்புநிட்டாபாருக்கு | 224 |
| செய்யுநிட்டையைச் | 222 |
| ஞா | |
| ஞானதேசிகன் | 216 |
| ஞானநிட்டரிருக்கு | 223 |
| ஞா | |
| ஞானநிட்டாபாருக்கு | 225 |
| ஞானநிட்டையை | 242 |
| தி | |
| திருச்சடையுநுதலி | 248 |
| திருவளர்கோல் | 256 |
| து | |
| துன்னிய | 158 |
| தெ | |
| தெண்டிறெடு | 249 |
| தே | |
| தேசிகவுருவமாக | 250 |
| தேனிரமபு | 253 |
| ந | |
| நகரமொடுமகரமது | 186 |
| நி | |
| நிட்டைசாதித்தா | 142 |
| நிட்டைநிலையிதென் | 139 |
| நிட்டைமேவு | 225 |
| நித்தனேயுமையா | 51 |
| நீ | |
| நீங்காக்கருத்தை | 143 |

| பெயர் | பக்கம் | பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| ப | | மு | |
| பங்கமுறமனங் | 238 | முத்திரைகளோர் | 101 |
| பங்கையாதனத்திற் | 127 | முத்திரையை | 102 |
| பதியெழுத்தை | 214 | மூங்குசஞ்சிதங்க | 38 |
| பதின்மரி | 206 | வ | |
| பத்தியங்கங்கொ | 44 | வசவணார் | 257 |
| பா | | வா | |
| பாவனைநீத | 257 | வாருங்கோள்வைய | 48 |
| பு | | வி | |
| புத்திகொள்கிரியா | 239 | விண்ணைமூடக் | 113 |
| பே | | வித்சேர்பஞ்சாக் | 212 |
| பேசரியவனுபோக | 185 | வித்தகமாகப | 85 |
| ம | | வெ | |
| | | வெறிகொள் | 124 |
| மறையவர்க் | 250 | வே | |
| மன்னுயோக | 228 | வேணியுறை | 245 |


பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றிற்று.

## உதாரணசெய்யுள்களின்பெயரகாராதி


| பெயர் | பக்கம். |
| --- | --- |
| அகஸ்தியமுனிவர் | 33 |
| ,, ,, ,, | 154 |
| ,, ,, ,, | 164 |
| ,, ,, ,, | 173 |
| ,, ,, ,, | 183 |
| அதிரகசியம் | 214 |
| அர்த்தவிதக்கலிவெண்பா | 61 |
| ,, ,, ,, | 96 |
| ,, ,, ,, | 193 |
| ,, ,, ,, | 244 |
| அத்துவிதானுபவம் | 151 |
| அத்துவிதஉண்மை | 34 |
| அமுதசாரம் | 109 |
| ,, ,, ,, | 213 |
| அருட்பிரகாசம் | 219 |
| ,, ,, ,, | 255 |
| அருணகிரியந்தாதி | 84 |
| அவிரோதவுந்தியார் | 133 |
| ,, ,, ,, | 197 |
| இருபாவிருபது | 246 |
| உடலறிவிளக்கம் | 165 |
| உண்மைநெறிவிளக்கம் | 141 |
| உண்மை விளக்கஞ்சிந்த | 33 |
| ,, ,, ,, | 196 |
| ,, ,, ,, | 204 |

| பெயர் | பக்கம் |
| --- | --- |
| உபநிடதம் | 85 |
| ,, ,, ,, | 125 |
| ,, ,, ,, | 199 |
| ஒழிவிலொடுக்கம் | 31 |
| ,, ,, ,, | 61 |
| ,, ,, ,, | 78 |
| ,, ,, ,, | 95 |
| ,, ,, ,, | 99 |
| ,, ,, ,, | 104 |
| ,, ,, ,, | 114 |
| ,, ,, ,, | 131 |
| ,, ,, ,, | 138 |
| ,, ,, ,, | 140 |
| ,, ,, ,, | 195 |
| ,, ,, ,, | 239 |
| ,, ,, ,, | 255 |
| ஔவைக்குறள் | 96 |
| ,, ,, ,, | 100 |
| ,, ,, ,, | 130 |
| ,, ,, ,, | 169 |
| ,, ,, ,, | 173 |
| ,, ,, ,, | 183 |
| கடவுளந்தாதி | 58 |
| ,, ,, ,, | 129 |
| ,, ,, ,, | 132 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| கடவுளந்தாதி | 148 |
| ,, ,, ,, | 153 |
| ,, ,, ,, | 156 |
| ,, ,, ,, | 171 |
| ,, ,, ,, | 174 |
| ,, ,, ,, | 181 |
| ,, ,, ,, | 197 |
| கண்ணுடையவள்ளல் | 32 |
| ,, ,, ,, | 209 |
| ,, ,, ,, | 210 |
| கந்தரலங்காரம் | 120 |
| ,, ,, ,, | 133 |
| ,, ,, ,, | 184 |
| ,, ,, ,, | 198 |
| ,, ,, ,, | 239 |
| கந்தரனுபூதி | 29 |
| ,, ,, ,, | 60 |
| காரைக்காலம்மையந்தாதி | 161 |
| குகைநமசிவாயர் | 99 |
| குருநமசிவாயர் | 99 |
| ,, ,, ,, | 139 |
| குறள் | 96 |
| கைவல்லியநவநீதம் | 30 |
| ,, ,, ,, | 65 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| ,, ,, ,, | 119 |
| ,, ,, ,, | 126 |
| ,, ,, ,, | 129 |
| ,, ,, ,, | 138 |
| ,, ,, ,, | 150 |
| ,, ,, ,, | 174 |
| ,, ,, ,, | 182 |
| ,, ,, ,, | 199 |
| சசிவர்ணபோதம் | 28 |
| ,, ,, ,, | 63 |
| ,, ,, ,, | 78 |
| சச்சிதானந்தவிளக்கம் | 96 |
| ,, ,, ,, | 164 |
| ,, ,, ,, | 174 |
| ,, ,, ,, | 179 |
| ,, ,, ,, | 198 |
| சந்நிதிமுறை | 61 |
| ,, ,, ,, | 113 |
| ,, ,, ,, | 138 |
| ,, ,, ,, | 166 |
| ,, ,, ,, | 175 |
| ,, ,, ,, | 179 |
| சாந்தலிங்கசுவாமிகள். | 136 |
| ,, ,, ,, | 134 |
| ,, ,, ,, | 163 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| சிவஞான சித்தியார். | 32 |
| சிவஞானதீபம். | 77 |
| சிவநெறிப்பிரகாசம் | 196 |
| ,, ,, ,, | 252 |
| ,, ,, ,, | 254 |
| சிவப்பிரகாசம் | 54 |
| ,, ,, ,, | 112 |
| ,, ,, ,, | 170 |
| ,, ,, ,, | 235 |
| சிவபோகசாரம் | 85 |
| சிவவாக்கியம் | 114 |
| ,, ,, ,, | 170 |
| ,, ,, ,, | 183 |
| ,, ,, ,, | 204 |
| சிவானந்தமாலை | 31 |
| ,, ,, ,, | 64 |
| ,, ,, ,, | 135 |
| ,, ,, ,, | 234 |
| சிற்றம்பலநாடிகள னுபூதிவிளக்கம் | 177 |
| சிற்றம்பலநாடிகள் கலித்துறை | 63 |
| ,, ,, ,, | 97 |
| செல்காலத்திரங்கல் | 129 |
| சைவசமயநெறி | 251 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| சொரூபசாரம் | 32 |
| ,, ,, ,, | 140 |
| ,, ,, ,, | 198 |
| சொரூபத்தந்தாதி. | 131 |
| சௌந்தரியந்தாதி | 130 |
| ,, ,, ,, | 133 |
| ,, ,, ,, | 170 |
| ,, ,, ,, | 172 |
| ,, ,, ,, | 184 |
| சௌந்தரியலகரி | 130 |
| ,, ,, ,, | 175 |
| ஞானசுகாதீதவெண்பா | 31 |
| ,, ,, ,, | 61 |
| ,, ,, ,, | 96 |
| ஞானவாசிட்டம் | 30 |
| ,, ,, ,, | 98 |
| ,, ,, ,, | 103 |
| ,, ,, ,, | 105 |
| ,, ,, ,, | 111 |
| ,, ,, ,, | 111 |
| ,, ,, ,, | 112 |
| ,, ,, ,, | 119 |
| ,, ,, ,, | 121 |
| ,, ,, ,, | 124 |
| ,, ,, ,, | 133 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| ஞானவாசிட்டம் | 136 |
| ,, ,, ,, | 151 |
| ,, ,, ,, | 181 |
| ,, ,, ,, | 196 |
| ,, ,, ,, | 219 |
| ,, ,, ,, | 234 |
| ,, ,, ,, | 241 |
| ஞானிகணிலைமை | 59 |
| ,, ,, ,, | 110 |
| ,, ,, ,, | 153 |
| தத்துவராயசுவாமிகள் | 59 |
| ,, ,, ,, | 65 |
| ,, ,, ,, | 200 |
| தத்துவராயசுவாமி கலிமடல் | 168 |
| ,, ,, ,, | 245 |
| தாயுமானசுவாமிகள் | 29 |
| ,, ,, ,, | 60 |
| ,, ,, ,, | 62 |
| ,, ,, ,, | 62 |
| ,, ,, ,, | 77 |
| ,, ,, ,, | 84 |
| ,, ,, ,, | 84 |
| ,, ,, ,, | 97 |
| ,, ,, ,, | 100 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| ,, ,, ,, | 106 |
| ,, ,, ,, | 121 |
| ,, ,, ,, | 126 |
| ,, ,, ,, | 127 |
| ,, ,, ,, | 130 |
| ,, ,, ,, | 134 |
| ,, ,, ,, | 141 |
| ,, ,, ,, | 154 |
| ,, ,, ,, | 157 |
| ,, ,, ,, | 169 |
| ,, ,, ,, | 172 |
| ,, ,, ,, | 179 |
| ,, ,, ,, | 194 |
| ,, ,, ,, | 210 |
| ,, ,, ,, | 247 |
| திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | 147 |
| ,, ,, ,, | 165 |
| திருக்களிற்றுப்படியார் | 120 |
| திருநாவுக்கரையர் | 203 |
| திருப்புகழ் | 100 |
| ,, ,, ,, | 183 |
| ,, ,, ,, | 200 |
| திருமந்திரம் | 58 |
| ,, ,, ,, | 77 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| திருமந்திரம் | 99 |
| ,, ,, ,, | 114 |
| ,, ,, ,, | 118 |
| ,, ,, ,, | 168 |
| ,, ,, ,, | 209 |
| ,, ,, ,, | 209 |
| ,, ,, ,, | 213 |
| ,, ,, ,, | 242 |
| திருவம்மானை | 200 |
| திருவருட்பயன் | 112 |
| ,, ,, ,, | 133 |
| ,, ,, ,, | 205 |
| ,, ,, ,, | 210 |
| ,, ,, ,, | 244 |
| ,, ,, ,, | 246 |
| திருவள்ளுவர் | 218 |
| திருவாசகம் | 31 |
| ,, ,, ,, | 58 |
| ,, ,, ,, | 79 |
| ,, ,, ,, | 79 |
| ,, ,, ,, | 83 |
| ,, ,, ,, | 120 |
| ,, ,, ,, | 124 |
| ,, ,, ,, | 129 |
| ,, ,, ,, | 147 |
| ,, ,, ,, | 154 |
| ,, ,, ,, | 163 |
| ,, ,, ,, | 172 |
| ,, ,, ,, | 177 |
| ,, ,, ,, | 195 |
| ,, ,, ,, | 203 |
| ,, ,, ,, | 205 |
| ,, ,, ,, | 212 |
| ,, ,, ,, | 242 |
| திருவாய்மொழி | 28 |
| ,, ,, ,, | 120 |
| ,, ,, ,, | 167 |
| ,, ,, ,, | 178 |
| ,, ,, ,, | 243 |
| திருவிளையாடல் | 27 |
| ,, ,, ,, | 98 |
| ,, ,, ,, | 197 |
| ,, ,, ,, | 205 |
| தேவாரம் | 64 |
| ,, ,, ,, | 118 |
| ,, ,, ,, | 167 |
| ,, ,, ,, | 184 |
| தேவிகாலோத்திரம் | 115 |
| ,, ,, ,, | 118 |
| ,, ,, ,, | 123 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| தேவிகாலோத்திரம் | 127 |
| ,, ,, ,, | 219 |
| நாலடியார் | 218 |
| நிகழ்காலத்திரங்கல் | 59 |
| ,, ,, ,, | 177 |
| ,, ,, ,, | 197 |
| ,, ,, ,, | 243 |
| நெஞ்சொடுமகிழ்தல் | 200 |
| பகவத்கீதை | 29 |
| ,, ,, ,, | 110 |
| பசுபதிபாசவிளக்கம் | 151 |
| ,, ,, ,, | 234 |
| பஞ்சாக்ஷரப்பசுபதி பாசவிளக்கம் | 58 |
| பஞ்சாக்ஷரப்பதிபசு பாசவில்க்கம் | 145 |
| ,, ,, ,, | 178 |
| ,, ,, ,, | 204 |
| ,, ,, ,, | 205 |
| ,, ,, ,, | 210 |
| பட்டினத்துப்பிள்ளையார் | 33 |
| ,, ,, ,, | 59 |
| ,, ,, ,, | 62 |
| ,, ,, ,, | 83 |
| ,, ,, ,, | 100 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| ,, ,, ,, | 132 |
| ,, ,, ,, | 151 |
| ,, ,, ,, | 176 |
| பதசாரம் | 24 |
| பதார்த்ததீபிகை | 97 |
| பத்ரகிரியார் | 33 |
| ,, ,, ,, | 131 |
| ,, ,, ,, | 132 |
| ,, ,, ,, | 160 |
| ,, ,, ,, | 176 |
| ,, ,, ,, | 177 |
| ,, ,, ,, | 193 |
| பரணதேவரந்தாதி | 119 |
| பாடுதுறை | 243 |
| பாரதம் | 167 |
| பாலையானந்தசுவாமிகள் | 97 |
| ,, ,, ,, | 164 |
| ,, ,, ,, | 175 |
| ,, ,, ,, | 198 |
| பிர்மகீதை | 76 |
| ,, ,, ,, | 110 |
| பிரபுலிங்கலீலை | 77 |
| ,, ,, ,, | 115 |
| ,, ,, ,, | 119 |
| ,, ,, ,, | 196 |

| பெயர் | பக்கம். | பெயர் | பக்கம். |
| --- | --- | --- | --- |
| பிரபோத்திரகாண்டம் | 45 | ,, ,, ,, | 184 |
| பிண்டாண்ட பிரமாண்டத்திற்சொல்லிய பூதபஞ்சீகரணம் | 91 | மோகவதைபரணி | 120 |
| | | ,, ,, ,, | 131 |
| | | ரிபுகீதை | 157 |
| பெரியபுராணம் | 180 | வருங்காலத்திரங்கல் | 255 |
| போற்றிப்பஃறொடை | 247 | வாதவூரர்புராணம் | 104 |
| மகாவாக்கியம் | 28 | ,, ,, ,, | 155 |
| ,, ,, ,, | 64 | ,, ,, ,, | 166 |
| மனுதரிசனம் | 136 | ,, ,, ,, | 204 |
| ,, ,, ,, | 171 | ,, ,, ,, | 245 |
| ,, ,, ,, | 176 | வீராகமம் | 266 |


உதாரணசெய்யுள்களின் பெயரகராதி

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41